
முத்துலட்சுமி ராகவன்
ஏழு ஸ்வரங்கள்...
இரண்டாம் ஸ்வரம்...
ரிதம் அற்ற ஸ்வரம்

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ஏழு ஸ்வரங்கள்...

## இரண்டாம் ஸ்வரம்

## 'ரிதம் அற்ற ஸ்வரம்...'



# 1

*உன்னோடு நான் கழித்த*
*மணித்துளிகள்.. என் உயிர்த்துளிகள்..!*

ஆற்றங்கரையோரமாக அந்தப் புரவி விரைந்து கொண்டிருந்தது.. சுழித்து ஓடும் வைகையாற்றின் அழகை கண்ணுற்றபடி புரவியில் ஆரோகணித்திருந்த ஆதித்த கரிகாலன் பேராண்மையின் பிம்பமாக.. அரசர் குலத்துக்கேயுரிய அதிகம்பீர வதனத்தோடு.. கரம் தேர்ந்த சிற்பியொருவன் செதுக்கி வைத்த சிலையைப் போன்ற எழிலோடு இருந்தான்..

அந்தி மயங்கிய அவ்வேளையில்.. வைகையாற்றின் படித்துறையில் நீராடிக் கொண்டிருந்த கன்னியரின் மீது அவனது கடைக்கண் பார்வை செல்லவில்லை.. நீர்த்திவலைகள் நனைத்த மேனியோடு.. நீரில் நனைந்ததினால் தேகத்தோடு ஒட்டி.. அங்கு லாவண்யங்களின்

எழிலை வெளிப்படுத்திய ஆடைகளோடு இருந்த அந்த பருவ மங்கையரின் பார்வை அவன்மீது பதிந்தாலும்.. அவன் பார்வை பிறளவில்லை.. அவர்கள் மீது பதியவும் இல்லை.. அதில் அந்த மங்கையரின் வதனங்கள் கூம்பின..

அவன் அப்படித்தான்.. குழந்தைப் பிராயத்திலேயே வாள் பிடித்துச் சுழற்றி போர்க்களம் புகுந்தவன்.. சேவூர் பெரும் போரில் கரிகாலன் பங்கு பெற்ற போது அவனுக்கு பதினாறு வயதுப் பிராயம்கூட ஆகியிருக்கவில்லை.. அவ்வயதிலேயே அவன் வீரபாண்டியனைத் துரத்தியடித் தான்.. மறைவிடத்தில் பதுங்கிக் கொண்டான் வீரபாண்டியன்..

அத்தகைய வீராதி வீரன் அவன்..! சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியான சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மூத்த புதல்வன்.. அவனுக்குப் பின்னர் பிறந்த குந்தவைக்கும்.. அருள்மொழிவர்மனுக்கும் தமையன்.. ஆதித்த கரிகால சோழன்..!

அவன் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசனாக வரவிருப்பன்.. அரியணையின் மீது மோகம் கொள்ளாமல்.. சதா சர்வகாலமும் யுத்தத்தைப் பற்றிய நினைவுடனே காலம் கழிப்பவன்..

நீராடிய பெண்கள் கரையில் பயணித்த அவனைப் பராக்குப் பார்த்தபடி தங்களுக்குள் அந்தரங்கமாக ஏதோ உரைத்து நகைத்துக் கொண்டார்கள்.. அந்த நகைப்பொலி அவன் காதை எட்டியதும் லேசான சீற்றத்துடன் அவர்களை

முறைத்துப் பார்த்தான்.. சப்த நாடியும் ஒடுங்கியவர்களாக அவர்கள் நகைப்பைத் துறந்தனர்..

'அந்தப் பெண்கள் என்னவென்று எண்ணியிருக்கக் கூடும்..' ஆதித்த கரிகாலன் சிந்தித்தான்..

'இவனுக்கு மங்கையின் யௌவனத்தை ரசிக்கும் மனம் இல்லையென்று பரிகசித்து உரையாடிப்பார்களோ..?' அவன் இதழ்கள் சுழித்தன..

அவனா மங்கையின் யௌவனத்தில் மயங்காதவன்..?

அவன் மயங்கியிருக்கிறான்.. எழிலே வடிவான ஒரு மங்கையின் திரு வதனத்தை தமது இதயத்தில் பதித்திருக்கிறான்.. அம்மாதைத் தவிர வேறு ஒரு மாதின் எழிலை அவன் ஏறெடுத்தும் நோக்கியதில்லை..

அவனறிந்த மங்கையின் யௌனவம் அத்தகைய பேரெழிலைக் கொண்டது.. அது போன்ற எழில் வதனம்.. வேறு ஒரு மங்கைக்கு வாய்த்திடும் வாய்ப்பே இல்லை.. அத்தகைய எழில் வதனத்தைக் கண்டு களித்த அவன் விழிகள் இன்னொரு மங்கையின் நிழலைக்கூட திரும்பிப் பார்த்ததில்லை..

"நந்தினி...!"

அவனையுமறியாமல் அவனது அதரங்கள் அவள் பெயரை உச்சரித்தன..

அந்த நந்தினி மனம் மயக்கும் பேரெழிலைக் கொண்டவள்தான்.. அவளை முதன் முறையாக சந்தித்த சுபயோக சுபதினத்தை.. அனுதினமும் ஆதித்தன் மறந்த தில்லை..

அவனுடைய பனிரெண்டு வயதுப் பிராயத்தில்தான் அவளை முதன் முதலாக அவன் சந்தித்தான்.. அந்தத் தருணத்தை எப்போது நினைவு கூர்ந்தாலும் ஆதித்தனின் கடினம் விரவிய வதனத்தில் மென்மை படர்ந்து விடும்.. அவனது அகத்தில் கனிவு குடி கொண்டு விடும்..

பௌர்ணமியின் முழுநிலவைப் போன்ற வட்ட வடிவமான வதனமும்.. அகன்ற காவிரியில் துள்ளி விளையாடும் மீன்களைப் போன்ற விழிகளும்.. கோவைப் பழங்களைப் போன்ற அதரங்களும்.. பிறைவடிவ நெற்றியும் கொண்ட அந்தச் சிறுமி.. அவனை முதல் பார்வையிலேயே வசீகரித்து தன்வயத்தில் இழுத்துச் சிறை பிடித்து விட்டாள்..

'சிறைதான் அது.. மாயச்சிறை..!' ஆதித்தன் நெடுமூச்சை வெளியேற்றினான்..

அவனைப் போன்ற மாவீரனை.. புவியில் யாராலும் வெல்ல இயலாத அசகாய சூரனை.. தன் கடைக்கண் பார்வையிலே சிறை பிடித்து விட்டாள் அந்தச் சிறுமி..

எவராலும் அணுக முடியாத சூறாவளி சுழல்காற்றைப் போன்ற ஆதித்த கரிகாலனை தன் ஓர் பார்வையிலே நிலை நிறுத்தி விட்டாள் அவள்..

அப்போது சுந்தரசோழ சக்கரவர்த்தி பழையாறை அரண்மனையை தமது வாசஸ்தலமாக கொண்டிருந்தார்.. சோழர்குலத் தலைநகரமாகவும் பழையாறையே இருந்த காலம் அது..

அரண்மனையின் பின்புறத்தில் எழிலான பூஞ்சோலை ஒன்று இருந்தது.. அதையொட்டி ஓடிக் கொண்டிருக்கும் நீரோடையில் ஆதித்த கரிகாலனும், அவனுடைய தம்பி, தங்கையும் ஓடம் ஏறி விளையாடி மகிழ்வார்கள்.. அன்றும் அதுபோல அவனும், குந்தையும், அருள்மொழி வர்மனும் நீரோடையில் ஓடம் விட்டு விளையாடி மகிழ்ந்த பின்னர் அரண்மனைக்கு திரும்பினர்..

அரண்மனைக்கும், நீரோடைக்கும் இடையிலிருந்த பூஞ்சோலையை அவர்கள் கடந்தபோது.. அவர்களின் பாட்டியான செம்பியன் மாதேவியின் கொடி இல்லத்தருகே அந்தச் சிறுமியைக் கண்டனர்.. சுந்தரசோழரின் பெரிய தந்தையான கண்டராதித்த சோழரின் மனையாட்டியே செம்பியன் மாதேவி..!

செம்பியன் மாதேவி அக்கொடி இல்லத்தில் ஓய்வெடுக்க வந்து போவதுண்டு.. பாட்டிக்குச் சொந்தமான கொடி இல்லத்தில்... உரிமை கொண்டவள் போல உலாவந்து கொண்டிருந்த அந்த சின்னஞ் சிறு பெண்ணைக் கண்டதும் குந்தவை வெகுண்டாள்.. அவளது வதனத்தில் பிரதிபலித்த அசூசையில் ஆதித்தன் வியப்படைந்தான்..

அவனறிந்த குந்தவையின் காருண்ய வதனம் எங்கே காணாமல் போனது..?

"யார் நீ..? அரச குலத்தவர்க்கு சொந்தமான பூஞ்சோலைக்குள் நீ எப்படி அனுமதியின்றி பிரவேசித் தாய்..? இதற்கான தண்டனை யாதென்று அறிவாயா..?"

குந்தவையின் வெடுவெடுப்பில் அந்த சின்னஞ்சிறு பெண்ணின் விழிகளில் மிரட்சி வந்து அமர்ந்தது..

"யாம் இந்த இல்லத்தில் தான் உள்ளோம்..?" அவள் தடுமாறினாள்..

"இவ்வில்லத்திலா..? இது எவர்க்கு உரியதென்று அறிவாயா..?"

"அறிவேன்.. மகாராணி செம்பியன் மாதேவியின் கொடி இல்லமல்லவா இது.. அறிந்தே வந்தேன் இளவரசி..!"

"எத்துணை துணிச்சல்..! எத்துணை இறுமாப்பு..! நீ எவருடன் உரையாடிக் கொண்டிருக்கிறாய் என்பதனையும் அறிவாயா..?"

"அறிந்ததினால்தான் தம்மை இளவரசியென்று அழைத்தேன் இளவரசி.."

வினயமான அந்த மறுமொழியில் குந்தவையின் வதனம் கோபச் சிவப்பை பூசிக்கொண்டது.. ஆதித்த கரிகாலன் உரக்க நகைத்தான்.. அந்த நகைப்பில் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் இமைகள் படபடத்ததை ரசனையுடன் அவன் நோக்கினான்.. குந்தவையோ கோபம் கொண்டாள்..

"அரசர் குலத்தில் பிறந்த அரசிளங்குமரனுக்கு இத்தகைய நகைப்பு தேவையற்றது அண்ணா.." அவள் சீறினாள்..

"யாது இது குந்தவை..? மன்னர் குலத்தில் பிறந்தவன் நகைக்கக் கூடாதென்ற நியதி ஏதும் உள்ளதாக இதுவரை யாம் அறியவில்லையே.."

"நன்றாக உள்ளது.. என் உரைக்கு எதிர் உரையை உரைக்கிறாய்.."

"யாம் தமது தமையனல்லவா குந்தவை..? தாம் எமது தங்கை..! தமையனின் உரைக்கு எதிர் உரையை தங்கைதான் உரைக்கக் கூடாது.. நீ கட்டுப்படுத்த முனைந்தால் அருள்மொழிவர்மனைத்தான் கட்டுப்படுத்த இயலும்.. அவன்தான் உமக்கு இளையவன்.. உமது உரைக்கு எதிர் உரையை உரைக்காதவன்.. யாம் அவ்வாறல்ல.."

ஆதித்த கரிகாலனின் உரையில் அருகிலிருந்த அருள்மொழிவர்மனை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டாள் குந்தவை.. தமக்கையின் உரையை மீறாத தம்பியிடம் அவள் கொண்டுள்ள எல்லையற்ற வாத்சல்யம் அவள் விழிகளில் பிரதிபலித்தது..

"மெய்யே உரைத்தாய்.. அருள்மொழிவர்மன் தம்மைப் போல் தமக்கையின் உரையைத் தட்டி நடக்காதவன்.."

"தாம் அவனுக்குத் தமக்கைதானே குந்தவை.. எமக்குத்தான் தங்கை..! மறந்து போனதா.." ஆதித்தன் அதற்கும் நகைத்தான்..

கடினமான சூழலின் கடினத்தை தளர்த்தி விட்ட அவனது நகைப்பில் வசீகரிக்கப்பட்டாள் அந்தச் சிறுமி.. கன்னக் கதுப்புகளில் குழி விழ ஆதித்த கரிகாலனை ஏறிட்டு மெலிதாக புன்னகை செய்யவும் முனைந்தாள்..

அதைச் சிறிதளவும் விரும்பவில்லை குந்தவை..!

"என்ன நகைப்பு வேண்டியிருக்கிறது..? இவன் யாரென்று அறிவாயா..? எந்தத் துணிவில் நகைத்தாய்..?" அதட்டினாள்..

"இவர் தங்களது தமையன்தானே இளவரசி..!"

"அத்துடன் வரும் காலத்தில் பட்டத்து இளவரசனாகப் போவதும் இவன்தான்.. இன்றைய இளவரசன்..! அதை மறந்து பிதற்றாதே.."

"அவ்வண்ணமே செய்கிறேன் இளவரசி.."

அந்தச்சிறுமியின் பணிந்த வார்த்தைகளும்.. மருண்ட பார்வையும் ஆதித்த கரிகாலனை ஏதோ செய்தன..

"அஞ்சாதே.." அவன் புன்னகைத்தான்..

"இளவரசி குந்தவை இனிய சுபாவம் கொண்டவளே.. ஏனென்று யாமறியோம்.. இன்றைய தினத்தில் கடும் தொனியில் உரையாடுகிறாள்.. அதைக் குறித்து கவலை கொள்ள வேண்டாம்.." பரிவுடன் உரையாடினான்..

"ஆகட்டும் இளவரசே.." அவள் முகம் தெளிந்தது..

"இந்த கொடி இல்லம் எமது பாட்டியாருக்கு உரியது.. இங்கே எவ்வாறு வந்தாய்..? தம்மை எமது பாட்டி அறிவார்களா..?"

"அறிவார் அரசே..! அவர் உரைத்தே இவ்வில்லத்தை தூய்மைப் படுத்தும் பணிக்கு யாம் வருகை தந்தோம்.."

"ஓ.." இகழ்ச்சியுடன் அதரங்களைக் குவித்தாள் குந்தவை..

அந்தச் செய்கையில் பாதிப்படைந்தாள் அந்தச்சிறுமி.

"இல்லத்தை தூய்மைப் படுத்தும் பணிக்கு வருகை தந்தாயா..? இதனை ஆரம்பத்திலேயே உரைத்திருக் கலாமே.. எமது பொழுதை வீணடித்து விட்டாயே.. என்னவோ எமது பாட்டியின் விருந்தினராக வருகை தந்தவளைப் போல இறுமாப்புடன் விடையளித்தாயே.. இதுதான் தாமா..?"

அந்தப் பெண்ணின் கன்றிச் சிவந்த வதனத்தைத் காணச் சகியாமல்..

"குந்தவை.." என அதட்டினான் ஆதித்தன்..

"சொல் அண்ணா.."

"நாழிகையாகிறது.. நாம் அரண்மனைக்குத் திரும்பலாம்.."

"யாமும் இதையே உரைக்க எண்ணினோம்.. நமக்குச் சமதையில்லாத இப்பெண்ணிடம் வெட்டிமொழி மொழிந்து பொழுதைக் கழித்து விட்டோம்.. இனியாவது விரைந்து அரண்மனைக்குத் திரும்பலாம்.."

"ம்த்சு.." அதிருப்தியுடன் சப்தம் எழுப்பினான் ஆதித்தன்..

"யாது அண்ணா..?" யாதுமறியாதவள் போல வினவினாள் குந்தவை..

"யாமென்ன உரைத்தோம்..? நீயென்ன மொழிகிறாய்..? மாற்றாரின் மனம் வருந்தப் பேசுவது எமது தங்கையான குந்தவைதானா..?"

குந்தவை மௌனித்தாள்.. தமையனின் கடுமை கலந்த கண்டிப்பான மொழிகளை செவியுறச் செய்து விட்ட அந்தச் சின்னஞ்சிறு பொண்ணின் மீது அவள் மனதில் வன்மம் பொங்கியது.. உடன் பிறந்த மூவரும் அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.. செல்லும் மார்க்கத்தில் ஆதித்த கரிகாலன்மட்டும் திரும்பி அந்தச் சிறுமியைப் பார்த்தான். அதற்கெனவே காத்திருந்ததைப் போல.. அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த சிறுமியின் வதனம் மலர்ந்து விட்டது.. ஆதித்த கரிகாலனின் மனதில் ரகசிய சந்தோசம் உதித்தது..

"அந்தப் பெண்ணின் வதனத்தைக் கண்டாயா அண்ணா..?"

குந்தவையின் வினாவில் ஆதித்தனுக்கு தூக்கி வாரிப் போட்டது.. அவன் அப்பெண்ணின் வதனத்தைக் கண்டதை அவன்தங்கை கண்டு விட்டாளா..?

அல்ல என்பதை அடுத்ததாக குந்தவை உரைத்த வார்த்தைகள் மெய்ப்பித்தன..

"அவள் வதனம் கோட்டானின் வதனம் போலவே உள்ளதல்லவா..?"

குந்தவையின் உரையில் தொனித்த பொறாமையில் உரக்க நகைத்தான் கரிகாலன்.. குந்தவையின் வதனம் சிவந்து விட்டது.. அதைக் கண்ணுற்ற அருள்மொழிவர்மன் தமக்கைக்கு ஆதரவாக..

"ஆம் அக்கா..?" எனப் பகன்றான்..

"நீ அல்ல எனப் பகன்றால்தான் வியப்பு.." அதற்கும் நகைத்தான் ஆதித்த கரிகாலன்..

"குந்தவையின் எந்த உரையை நீ மறுத்திருக்கிறாய் அருள்மொழி..? இவள் எதைப் பகன்றாலும் 'ஆம் அக்கா..!' என்று அவ்விதமே ஏற்றுக் கொள்வதுதானே உனது வழக்கம்..?"

குந்தவை பெருமையுடன் இளைய சகோதரனின் தோளின் மீது கரத்தைப் படிய விட்டாள்.. தாழ்ந்த குரலில் அவள் ஏதோ வினவ.. அதற்கு மறுமொழி உரைத்தான் அருள்மொழிவர்மன்.. அவர்களுக்குள் நிலவிய அலாதியான அந்தப் பாசப்பிணைப்பு ஆதித்தகரிகாலனின் மனதைக் கவர்ந்தது..

அவர்கள் மூவரும் செம்பியனின் மாதேவியின் அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள்..

ஈசான பட்டருடன் சிவன் கோவிலின் அபிசேக ஆராதனைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த செம்பியன் மாதேவி இவர்களைக் கண்டதும் இருகரம் விரித்து அழைத்தாள்...

"யாம் விடைபெறுகிறோம் மகாராணி.." ஈசானபட்டர் கரம் குவித்து விடை பெற்றார்..

அவர் சென்றதும் செம்பியன் மாதேவி பிள்ளைகளை அரண்மனையின் மேல மாடத்திற்கு அழைத்துச் சென்றாள். பணிப்பெண்ணை அழைத்து சுவையான பலகாரங்களை எடுத்து வரும்படி ஆணையிட்டாள்..

குந்தவை செம்பியன் மாதேவியின் மடிசாய்ந்து மெலிதான குரலில் உரையாடிக் கொண்டிருந்தாள்.. சிறுமி என அலட்சியம் செய்யாமல் அவள் சொல்வதைக் கூர்ந்து கவனித்து மறுமொழி பகன்றாள் செம்பியன் மாதேவி..

குந்தவையின் மதிநுட்பம் அத்தகைய புகழ் வாய்ந்தது.. சுந்தர சோழ சக்கரவர்த்தியிலிருந்து.. செம்பியன் மாதேவி வரை.. குந்தவையின் வாய்மொழி உதிர்க்கும் ஒவ்வொரு வார்த்தைகளையும் உன்னிப்பாக கவனித்து ஆய்ந்து விடையளிப்பார்கள்.. நுண்மையான அறிவுத்திறன் கொண்டவள் குந்தவை என்பது சோழ நாடு முழுவதும் பிரசித்தமான செய்தி..!

அவர்களின் அந்தரங்க உரையாடலில் ஆதித்த கரிகாலனுக்கு எவ்விதமான சுவராஸ்யமும் ஏற்படவில்லை. அவன் அறிய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.. அதை அவன் வினவினான்..

"தங்களின் கொடி இல்லத்தை தூய்மைபடுத்தும் பணியிலிருந்த சிறுமி யார் பாட்டி..?"

செம்பியன் மாதேவி குந்தவையுடனான உரையாடலை நிறுத்திவிட்டு ஆதித்த கரிகாலனை அன்பு ததும்பும் விழிகளுடன் பார்த்தாள்..

"குழந்தாய்..! அந்தச் சிறுமியை நீ கண்டாயா..?"

"ஆம் பாட்டி.. யாம் மூவருமே அவளைக் கண்டோம்.."

"நல்லது..! அந்தக் குழந்தையின் நாமம் நந்தினி என்பதாகும்.."

இதை உரைத்த செம்பியன் மாதேவியின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. அவை எதன் பொருட்டு எனும் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தான் ஆதித்த கரிகாலன்..

நந்தினியைப் பற்றி மொழியும் போது செம்பியன் மாதேவியின் வதனத்தில் இனம் விளங்காத நுட்பமான நுண்ணிய உணர்வலைகள் தோன்றி மறைவதன் மாயமென்ன..? எதன் பொருட்டு அச்சிறுமியின் மீது செம்பியன் மாதேவி பிரியம் கொள்கிறாள்..?

'யாதாக இருப்பினும் அவள் செம்பியன் மாதேவியின் அக்கறையையும் கவனிப்பையும் பெற்றவள்..' ஆதித்தன் நினைத்துக் கொண்டான்..

"அவளுக்கு பெற்றவர்கள் என யாரும் இல்லையா பாட்டி..?" அசூசையுடன் வினவினாள் குந்தவை..

நந்தினியிடம் அவளுக்கு இருந்த ஒவ்வாமையை அவளது வினா தெள்ளத் தெளிவாக உணர்த்தியது.. செம்பியன் மாதேவியின் வதனத்தில் மாறுதல் நிலவியது.. எதையோ மொழியா இயலாத சங்கடம் கொண்டவளைப் போல அவள் புன்னகைத்தாள்..

"உள்ளார்கள் குழந்தாய்.. அவர்கள் ஈசானபட்டரின் இல்லத்தில்தான் உள்ளனர்.."

"ஒ.." அதரங்களைக் குவித்தாள் குந்தவை..

"இவர்கள் எந்த ஊரிலிருந்து வருகை புரிந்துள்ளார்கள் பாட்டி..?"

"ஊரென்று வினவுவதைவிட நாடு என்று வினவுவதே சாலச் சிறந்தது குழந்தாய்.. ஏனெனில் இவர்கள் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள்.."

"ஓ..!" மறுபடியும் அதரங்களைக் குவித்த குந்தவை..

"நமது எதிரியின் நாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் எனக் கூறுங்கள்.. அதனால்தான் எமக்கு அப்பெண்ணைக் கண்டதும் ஒவ்வாமல் போனதோ..?" தலை சாய்த்து வினவினாள்..

அல்லாமல் போனால் மட்டும் குந்தவைக்கு நந்தினியைக் கண்டதும் பிடித்து விடுமோ என்ற நினைவில் ஆதித்தனுக்கு நகைப்பு வந்தது..

ஆதித்த கரிகாலனின் நகைப்பில் செம்பியன் மாதேவியின் வதனத்திலும் புன்னகை படர்ந்தது.. அதில் குந்தவையின் உள்ளம் கோபமுற்றது..

"எதன்பொருட்டு நகைக்கிறாய் குழந்தாய்..?" செம்பியன் மாதேவி மிக்க அன்புடன் வினவினாள்..

அவள் அவ்வாறுதான்.. அன்பே சிவம் என்று சிவ தொண்டாற்றும் கண்டராதித்தரின் தர்ம பத்தினி அவள்.. ஈசனுக்குத் தொண்டு புரிவதில் மிக்க ஆர்வமுள்ளவள்.. அத்தகைய சதிபதிகளுக்குப் பிறந்த புதல்வனான மதுராந்தகனையும் அவர்களைப் போலவே சிவபெருமானின் கைங்கர்யத்தில் நாட்டமுள்ளவனாக.. பக்திமானாக வளர்த்து வாலிபனாக்கியவள்... சிறிய பழுவேட்டரையாரின் புதல்வியை மதுராந்தனுக்குத் திருமணம் புரிந்து வைத்த பின்பு அவன் சிந்தையிலே சில

மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதால் சமீப காலமாக சஞ்சலம் கொண்டிருந்தாலும் செம்பியன் மாதேவி புதல்வனிடம் அது குறித்த தர்க்கத்தில் இறங்கியதில்லை..

அன்பே வடிவான செம்பியன் மாதேவி கண்டராதித்தரின் மறைவுக்குப் பின்னால் முழுதாக பக்தி மார்க்கத்தில் தன் மனதை செழுத்தி விட்டிருந்தாள்.. அவள்மீது பெருத்த நன்மதிப்பை கொண்டிருந்த சுந்தர சோழ சக்கரவர்த்தி.. நாட்டின் நலன்களுக்காக வகுக்கப் படும் திட்டங்களையும்.. அதி முக்கியமான நிகழ்வுகளையும் குடும்பம் சார்ந்த விவகாரங்களையும்.. செம்பியன் மாதேவின் கவனத்திற்கு கொண்டு வந்து அவரின் ஆலோசனையைக் கேட்டபின்பே முடிவெடுப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்..

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் குழந்தைகளை தனது குழந்தைகள் போல நேசிப்பவள் செம்பியன் மாதேவி.. சாம்ராஜ்யத்தில் தமது குடும்பத்திற்கு உள்ள உரிமையைப் பற்றி கணப்பொழுதும் அவள் நினைத்ததில்லை... பெருந்தன்மையே வடிவான பெருமாட்டி..! குந்தவை அவளது வளர்ப்பில் தான் வளர்ந்து வந்தாள்.. அரசியல் சார்ந்த நுண்ணறிவு செம்பியன் மாதேவியிடம் இருந்து குந்தவைக்கு இடம் பெயர்ந்ததாக சொல்வோரும் உண்டு.. அன்பைப் பொழிவதில் அவளுக்கு நிகர் அவள்தான்..

செம்பியன் மாதேவியின் வினாவிற்கு விடையளிப் பதற்கு பதிலாக இன்னமும் உரத்த குரலில் நகைத்து வைத்தான் ஆதித்த கரிகாலன்..

“யாதென்று இயம்பாமல் நகைப்பை அதிகரித்தால் யாதென்று பொருள் கொள்வது ஆதித்தா..? எங்களுக்கும் இயம்பினால் யாமும் தமது நகைப்பை பகிர்ந்து இணைந்து கொள்வோமல்லவா..?” செம்பியன் மாதேவி புன்னகை மாறா வதனத்துடன் கூறினாள்..

“ஏதேனும் இருந்தால் அல்லவா இயம்புவதற்கு..?” ஆதித்தன் குந்தவையைப் பார்த்தபடி குறும்புடன் சொன்னான்..

“ஏதும் இல்லாமலே இத்துனை நகைப்பா..?” வினவினாள் செம்பியன்மாதேவி..

“அல்ல பாட்டி... தமையன் எனைக் குறித்து பரிகாசம் செய்கிறான்.. அதன் பொருட்டே நகைக்கிறான்..” இடையில் புகுந்தாள் குந்தவை..

“அவ்வாறா ஆதித்தா..?”

“அல்ல பாட்டி.. தங்களின் முன்னிலையில் தங்களின் செல்லப் பேத்தியை பரிகாசம் புரியும் துணிவு எனக்கு வருமா பாட்டி..?”

“பொய்யுரைக்கிறான் பாட்டி.. இவன் எனைக் குறித்தே நகைத்தான்..”

“இருக்காது குழந்தாய்..! இந்தச் சோழப் பேரரசில்.. சுந்தரசோழ சக்கரவர்த்தியின் செல்வப்புதல்வி குந்தவையை நோக்கி பரிகாசம் புரியும் துணிவு எவர்க்கு வரும்..?”

“தங்களின் செல்லப் பேரன் ஆதித்த கரிகாலனுக்கு வரும்...”

குந்தவை கோபத்துடன் அமர்ந்திருந்த ஆசனத்தை விட்டுக் குதித்து இறங்கினாள்... வதனத்தை கடினமாக்கிக் கொண்டு.. அரண்மனையின் மேல்மாட உப்பரிகைக்குச் சென்றாள்.. அங்கிருந்த மலர்கொடி படர்ந்த ஊஞ்சலில் அமர்ந்து ஒய்யாரமாக ஆடியவளைக் கனிவுடன் பார்த்த செம்பியன் மாதேவியின் வதனத்தில் குந்தவையைக் குறித்த பெருமிதம் வந்தது..

"இவள் சோழ நாட்டின் பொக்கிசப் பேழை ஆதித்தா..!" என்றாள்..

"மெய்தான் பாட்டி.."

"இவளின் மதி நுட்பத்தில் சில தருணங்களில் யாமே வியந்திருக்கிறோம்.. இவளின் மனம் நோக பரிகசிக்காதே.."

"பரிகாசமா..? நானா..? குந்தவையையா..? அந்தத் துணிவு எனக்கு வருமா..?"

நகைத்த ஆதித்தனின் கண்களில் மின்னிய கள்ளத்தனத்தில் அவனுடன் இணைந்து நகைத்தாள் செம்பியன் மாதேவி..

"கள்வனே..! தமக்கா துணிவு கிடையாது..? தமது துணிவைப் பற்றி அண்டைய ராஜ்யங்கள் உரைக்குமே.. நாள் முழுதும் உரைத்தாலும் உன் துணிவைப் பற்றிய முழு விவரங்களையும் உரைக்க /இயலுமோ..? யார் நீ..? இந்தப் பனிரெண்டு அகவையிலேயே போர்க்களம் புகும் துணிவைக் கொண்ட உமது வீரத்திற்கு நிகர் இப்புவியிலுண்டோ..?"

செம்பியன் மாதேவியின் புகழுரையில் ஆதித்த கரிகாலன் செருக்குக் கொள்ளவில்லை.. இறுமாப்பு அற்றவனே சுத்த வீரன் எனும் கொள்கையை உடையவன் அவன்.. எனவே தனது தோள்களைக் குலுக்கினான்..

உப்பரிகையில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்த குந்தவை ஊஞ்சலை விட்டுக் குதித்து.. உப்பரிகையின் விளிம்புக்குச் சென்று எட்டிப் பார்த்தாள்..

• "எவரை நோக்குகிறாள்..?"

செம்பியன் மாதேவியின் வினாவில்..

"உரையாடல் இங்கு.. பார்வை அங்கா..? குந்தவை அருகிலிருந்தால் ஆதித்த கரிகாலனும், அருள்மொழி வர்மனும் தங்களுக்கு இரண்டாம் பட்சம்தானா பாட்டி..?" என்று போலி சினத்துடன் சிரத்தை ஆட்டிவிட்டு எழுந்து சென்றான் கரிகாலன்.. அங்கே.. அவன் கண்ட காட்சியில் அவன் மனம் மலர்ந்தது..

---

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 1

## *நிழலோடு நிழலாக... நீ கரைந்து போனதெங்கே..?*

என்னவோ அங்கே ஃபிலிம் பெஸ்டிவல் நடப்பதைப் போல படு ஆர்வத்துடன் கன்னத்தில் கையை வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்..

வயலட்டின் முன்னாலும்.. மற்ற மாதர்குல மாணிக்கங்களின் முன்னாலும் புலியாக வலம் வருபவன் நீரஜாவின் முன்னால் எலியாக வாலை அசைக்கும் விந்தையை ரசித்து சிரிக்க வேறு செய்தான்..

'எத்தை'த் தின்றால் பித்தம் தெளியும் என்பதைப் போல எதைச் சொன்னால் நீரஜா மனம் இரங்குவாள் என்று முடியைப் போட்டுப் பிய்த்துக் கொண்டிருந்த தாமோதரன் தாடையைச் சொரிந்தபடி திரும்பினான்.. சித்தார்த்தன் சிரிப்பதை பார்த்து விட்டான்..

"என் பிழைப்பைப் பார்த்தா உனக்குச் சிரிப்பாய் இருக்கா..?" அவன் மேல் பாய்ந்தான்..

"பாரு.. இதுக்கும் எனக்கும் யாதொரு கனெக்சனும் இல்ல.. நான் போன் போட்டா நீரஜாவை வரச் சொன்னேன்..? இந்த டெலிபதி இருக்கில்ல.. டெலிபதி.."

"இப்ப எதுக்காகடா அக்கவுண்ட்ஸில இருக்கிற சபாபதியை வம்புக்கு இழுக்கிற..?"

"சபாபதியா..? சரியாப்போச்சு போ.. டெலிபதிடா மச்சான்.."

"டெலிபதியா..?"

தாமோதரன் விளக்கெண்ணையைக் குடித்தவனைப் போல முகத்தை வைத்துக் கொள்ள.. சித்தார்த்தன் அதற்கும் நீரஜாவிடம் போட்டுக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டான்...

"பாரு நீரு.."

'என்ன ஒரு எதுகை மோனை...!' என்று தாமோதரனுக்கு இடம், பொருள், ஏவல், காவல், சேவல் எல்லாம் புரியாமல் தோன்றி வைத்துத் தொலைத்தது..

நல்லவேளையாக அதை வாய் விட்டுச் சொல்லாமல் மனதுக்குள் புதைத்து வைத்துக் கொண்டான்..

'அவ்வளவுதான்.. நீரஜா.. கீரு.. கீருன்னு.. கீறி எறிஞ்சுருவா.. வாயை வைத்துக்கிட்டு வனவாசம் போயித் தொலையாதேடா தாமு.. அடக்கி வாசி.. உனக்கு வினை பிரண்டுங்கிற ரூபத்தில பக்கத்திலேயே மையம் கொண்டிருக்கு.. பார்த்துப் பேசித் தொலைடா..!'

அவனது மாண்புமிகு மனச்சாட்சி அவனை எச்சரித்து வைத்தது.. தாமோதரன் வாயை பசை போட்டதைப் போல இறுக்கி மூடிக் கொண்டான்..

"என்னத்தை பார்க்கச் சொல்ற...?" நீரஜா சித்தார்த்தனிடம் எரிந்து விழுந்தாள்..

எவளோ ஒரு பெண்ணிற்கு வேலை கொடுக்கும்படி தாமோதரன் சித்தார்த்தனிடம் மல்லுக் கட்டிக் கொண்டிருந்ததை மன்னிக்க அவளுக்கு மனம் வரவில்லை.. கோபத்தில் அவள் மனம் கொதித்துக் கொண்டிருந்தது.. அத்தனை கோபத்தையும் விழிகளில் தேக்கி தாமோதரனை முறைத்துப் பார்த்தாள்.. அவன் தான் வரும் முன் காப்பவனாக அவள் பார்வையைச் சந்திக்காமல் விட்டத்தை அண்ணாந்து பார்த்து ஆராய்ந்து கொண்டிருந்தானே.. அதனால்.. அவள் பார்வையினால் பஸ்பமாகாமல் தப்பித்தான்..

"உன் கோபம் நியாயமானதுதான்.."

சித்தார்த்தன் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நீராஜாவின் பொறாமையெனும் பெருந்தீயில் பெட்ரோல் கிணறைக் கொட்டிக் கவிழ்த்தான்..

'அடப்பாவி சித்தார்த்தா..! என்ன நியாயத்தைடா போதி மரத்துக்கு அடியில உக்காந்து கண்டு பிடிச்சிட்ட..?'

தாமோதரன் இப்பேற்பட்ட நண்பனைப் பெற என்ன தவம் செய்தானோ என்று பூரித்துப் போய் விட்டான்..

"இப்போக் கூடப் பாரேன்.. இவன் எவனோ ஒரு பொண்ணுகிட்ட மெரசலாயிட்டான்னு உன் மனசுக்குள்ள மணியடிச்சுருக்கு.." சித்தார்த்தன் தாமோதரனைப் பார்த்து நீரஜாவுக்குத் தெரியாமல் இமை சிமிட்டி வைத்தான்..

'எதுக்குத்தான் மெரசலாகிறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லையாடா மச்சான்..?' தாமோதரன் புழுங்கினான்..

"அந்த டெலிபதியோட பவர்தான் உன்ன இங்கே இழுத்துக்கிட்டு வந்து நிறுத்தியிருக்குன்னு சொன்னா.. இவன் டெலிபதியை சபாபதியான்னு கேட்டு வைக்கிறான்.. இதுதான் இவன் காதல்.."

'வேண்டாம்டா டேய்.. எதுக்காகடா டெலிபதியைக் கொண்டு வந்து இங்க கனெக்ட் பண்ற.. விட்டுருடா.. தாங்க மாட்டேன்..'

தாமோதரன் நீரஜாவை பரிதாபமாக பார்த்தான்.. அவளோ டெலிபதியைத் தெரியாத உன்னோடு எனக்கென்ன பேச்சு..? உன் பேச்சு காய் என்பதைப் போல முகத்தை திருப்பிக் கொண்டு தாமோதரனை சோதித்து வைத்தாள்..



## 2

### சுழல்காற்றில் எனை ஆழ்த்தும் சூறாவளி உனது பார்வை..!

செம்பியன் மாதேவியின் அரண்மனை வாயிலில் நந்தினி என்று செம்பியன் மாதேவி உரைத்த அந்தச் சிறுமி நின்றிருந்தாள்.. அண்ணாந்து அரண்மனையின் உப்பரிகையை நோக்கிய அவளது மலர் வதனத்தை உற்று நோக்கிய ஆதித்த கரிகாலனின் உள்ளத்தில் கள்ளூரும் போதை ஏற்பட்டதை அந்த பனிரெண்டு வயதுப் பிராயத்தில் அவனால் இனம் கண்டு கொள்ள இயலவில்லை..

"இவள் எதற்காக இங்கு வருகை தந்தாள்..?" முகம் சுளித்தாள் குந்தவை..

"பாட்டியைக் காண வந்திருப்பாள்.. இவளுடைய குடும்பம் பாட்டியின் பாதுகாவலில் உள்ளது என்பதை மறந்துவிட வேண்டாம் குந்தவை.." என்றான் ஆதித்தன்..

"நான் மறந்தாலும்.. நினைவுறுத்த நீ என்னருகிலேயே உள்ளாயே அண்ணா.." குந்தவை நொடித்தாள்..

அவளது பிணக்கைக் கண்டு கொள்ளாமல்.. அரண்மனை வாயிலில் நின்ற நந்தினியை மேல் மாடத்திற்கு வருமாறு சைகை செய்து அழைத்தான்

கரிகாலன்.. வதனம் மலர ஓடி வந்த நந்தினியின் குதூகலத்தில் அவன் மனம் ததும்பியது.. அன்புக்கும், நட்புக்கும்.. அந்தச் சிறுமியின் உள்ளம் ஏங்கிக் கிடப்பதை அவனால் இனம் காண முடிந்தது..

"வந்தனம் தேவியாரே.."

நந்தினி மேல் மாடத்திற்கு வந்து விட்டாள்.. செம்பியன் மாதேவியின் முகம் கனிந்தது..

"வா குழந்தாய்.. கொடி இல்லத்தை தூய்மைப் படுத்தி விட்டாயா..?"

"தாங்கள் இட்ட பணியை நிறைவேற்றி விட்டேன் தேவியாரே.."

"நன்று.. அருகில் வா.."

செம்பியன் மாதேவி அன்புடன் நந்தினியை சிறிய ஆசனத்தில் அமரச் செய்தாள்.. அவளது கண்பார்வையில் சேடிப் பெண் நந்தினியின் கரங்களில் பலகாரங்கள் நிரம்பிய பாத்திரத்தை கொடுத்தாள்.. ஆர்வத்துடன் வாங்கி.. அதிலிருந்த பலகாரங்களை அதி வேகத்தில் காலி செய்த நந்தினியை பரிவுடன் பார்த்தான் ஆதித்தன்..

'பாவம்..! பசியுடன் இருந்திருக்கிறாள்..'

அவனது எண்ணத்தை வேறு வகையில் வெளிப் படுத்தினாள் குந்தவை.. இகழ்ச்சியுடன் நந்தினி உண்ணுவதைப் பார்த்தபடி..

"இவளது வாழ்நாளில் இதுபோன்ற பலகார வகைகளை கண்ணுற்று.. சுவைத்திருக்க மாட்டாள் போல

தெரிகிறது அண்ணா.. அவள் உண்ணும் வேகத்தைக் கண்டாயா..?" என்று கேலியாக நகைத்தாள்..

தங்கையின் உரையும், நகைப்பும் நந்தினியின் செவிகளை எட்டி விடக் கூடாதே என்று கவலை கொண்டான் கரிகாலன்.. வேகத்துடன் திரும்பிப் பார்த்தான்.. சற்றுத் தொலைவிலிருந்த நந்தினியின் செவிகளை குந்தவையின் இகழ்மொழி எட்டி விடவில்லை..

"ஏன் இவ்வாறு இயம்புகிறாய் குந்தவை..? இதுபோல நீ மொழிபவள் அல்ல.. இன்று தமக்கு என்னவாயிற்று..?"

குந்தவையிடம் சினம் காட்டி கடிந்து கொண்டான்.. குந்தவையின் விழிகளில் நீர் நிரம்பி விட்டது..

"எவள் பொருட்டோ உனது தங்கையை கடிந்து கொள்கிறாயா..? நீ எனக்கு நியாயம் செய்யவில்லை அண்ணா.." விசும்பினாள்..

ஆதித்தனுக்கு குற்ற உணர்வு மேலிட்டது.. அவனா அவனது அன்புத்தங்கையை கடிந்து கொண்டான்..?

"மன்னிப்பாய் குந்தவை..! மக்களை ரட்சிக்க வேண்டிய மன்னர் குலத்தில் பிறந்தவர்கள் நாம்... ஒரு ஏழைச் சிறுமியை இகழ்ச்சியாகப் பேசி எள்ளி நகையாடலாமா..? இதை எவர் செய்யினும்.. மன்னரின் செல்வப் புதல்வியான நீ செய்யக்கூடாதே குந்தவை.."

குந்தவை மறுமொழி பகரவில்லை.. எனினும் அவளது கண்ணீர் நின்று விட்டது.. நந்தினி மன்னரின் பிள்ளைகளை அடிக்கடி பார்த்துக் கொண்டாள்..

குந்தவையின் வெறுப்பு நிரம்பிய பார்வையில் விதிர்த்து திரும்பினாள்.. அருள்மொழிவர்மனோ.. தமக்கை எவ்வழி.. தாமும் அவ்வழி என்ற வளர்பவன்.. குந்தவை கோபத்துடன் பார்த்த நந்தினியை அவன் ஒட்டாத பார்வை பார்த்தான்.. நந்தினியின் மனதில் தாழ்வுணர்வு எழுந்தது.. ஆதித்த கரிகாலன் மட்டும் அவளையும் சக மனித ஜீவனாக பாவித்து.. நேசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.. நந்தினியின் மனம் ஆலோலம் பாடியது..

அடுத்து வந்த தினங்களில் ஆதித்த கரிகாலன் நந்தினியைத் தேடிவந்துப் பேசிப் பழகினான்.. அவள் மீது அவன் கொண்டிருக்கும் பிரியத்தை அவன் விழிகள் உணர்த்தியதில் நந்தினியின் உள்ளத்தாமரை மலர்ந்தது.. அனுதினமும் அவளைச் சந்திக்க வந்த ஆதித்த கரிகாலன் ஓர்தினம்கூட அவளுடன் உரையாடாமல் சென்றதில்லை.. எத்தினத்தையும் அவன் தவற விட்டதில்லை..

அவன் வரவுக்காக காத்திருக்க ஆரம்பித்தாள் நந்தினி.. கதிரவனின் வரவுக்காக காத்திருக்கும் சூரியகாந்தி மலரைப்போல.. அதித்த கரிகாலனின் வரவுக்காக அவளது உள்ளமலர் காத்திருக்க ஆரம்பித்தது..

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் புதல்வன்.. பட்டத்துக் குரிய இளவரசன் என்னும் கர்வம் துளிக்கூட இல்லாமல் எவ்வாறு நந்தினியுடன் அவனால் வெகு இயல்பாக பேசிப்பழக இயன்றது என்று அனுதினமும் பிரமித்துப் போனாள் அந்த பேதை..

"எதன் பொருட்டு தனிமையிலேயே பொழுதைக் கழிக்கிறாய் நந்தினி..?"

நீரோடையில் கால் பதித்து.. ஆழ்ந்த சிந்தனையுடன் படித்துறையில் அமர்ந்திருந்த நந்தினியின் அருகில் அமர்ந்து ஓர்நாள் வினவினான் ஆதித்த கரிகாலன்..

சிந்தனை கலைந்த நந்தினி முகம் மலர அவன் வதனம் பார்த்து நகைத்தாள்.. மேகங்கள் அற்ற நீலவானில் உலாவரும் முழுநிலவைப் போல ஒளிர்ந்தது அவள் வதனம்..

"தனிமை மனம் கொண்டவளுக்கு தனிமைதானே பிடித்தமானதாக இருக்கும் இளவரசே..?"

இவ்வாறு இயம்பியவளை விசித்திரமாக நோக்கினான் ஆதித்த கரிகாலன்.. சின்னஞ்சிறு சிறுமி அவள்..! முதிர்ந்த மூதாட்டியைப் போன்ற வேதாந்தப் பேச்சைப் பேசுவது என்பது எவ்வகையில் சாத்தியம்..?

"உன் வயதுக்குத் தகுந்த பேச்சைப் பேச நீ கற்றுக் கொள்வது உசிதமானது நந்தினி..! இது போன்ற உரைகளை வயதில் முதிர்ந்தவர்கள்தான் உரைப்பார்கள்.. நீ இவ்விதம் பேசலாகாது.."

பரிவுடன் பேசிய கரிகாலனின் பேச்சில் கண்கலங்க நகைத்தாள் அந்த ஏழைச் சிறுமி..!

"சின்னஞ்சிறு வயதா..? அல்ல இளவரசே..! ஆயிரம் வருடத்தைய முதுமையை என் மனதில் சுமக்கிறேன்.. அண்ணன் என்ற ஒருவன் எனக்கு உண்டு.. அவன் பெயர் ஆழ்வார்க்கடியான்.."

"ஆழ்வார்க்கடியானா..? அவர் ஈசான பட்டரின் இளையசகோதரர் அல்லவா..?"

"ஆம்.."

"அவ்வாறெனில்.. தாம் ஈசானபட்டரின் இளைய சகோதரியா..? தமது பெற்றோர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என பாட்டி சொன்னாரே.."

"சிரம் குழம்புகிறதா இளவசர் பெருமானே..! ஓர் உறவு முறையை உரைத்ததிற்கே தாம்.. தலையால் நீர் குடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்டீரே.. இந்தச் சுழலான உறவுமுறையில் நான் யார் எனத் தெரியாமல் வளர்ந்து வருபவள் நான்..! எமக்கு எப்படி இருக்கும்..?"

ஆதித்த கரிகாலனின் புருவங்கள் மேலேறின.. அந்தச் சிறுமியின் வதனத்தில் நிறைந்திருந்த அனாதரவான.. நிர்க்கதியான உணர்வை அவன் உணர்ந்தான்.. ஆற்றுதல் இன்றி தனிமைத் துயரில் மூழ்கும் அந்தச் சிறுமியின் மீது பரிதாபம் கொண்டான்..

"தாம் யார் எனத் தமக்குத் தெரியாதா..?"

"தெரியாது.. ஆழ்வார்க்கடியான் எமது தமையன் தான்... ஆனால் என்னுடன் பிறந்தவனல்ல.. ஈசான பட்டருடன் பிறந்தவன்.. எம்முடன் இருப்பது எனது பெற்றோரும் அல்ல.. வளர்ப்பவர்கள்.. அந்த வளர்ப்பையும் பொருளுக்காக செய்பவர்கள்.. எமை வளர்ப்பதற்காக அவர்களுக்கு சில தினங்களுக்கு ஓர்முறையென பொற்காசுகள் ஊதியமாக அளிக்கப் படுகின்றன.."

"அளிப்பது யார்..?"

"நான் அறியேன்.."

"எதன் பொருட்டு அளிக்கிறார்கள்..?"

"அதையும் அறியேன்.."

"அவர்களுக்கும்.. உனக்கும் உள்ள சம்பந்தம் யாது..?"

"இத்தனையையும் அறியாதவள் இதை மட்டும் அறிவேனா..?"

நந்தினியின் கலக்கத்தில் கரிகாலனின் மனம் துயர் கொண்டது.. இவ்வுலகில் எவ்வித அடையாளமுமின்றி.. தான் யார்..? தனது வேர் எது என அறியாமல் வாழ நேர்வது எத்துனை கொடுமையானது..

அந்தக் கொடுமைக்கு ஆட்பட்டு விட்ட அச்சிறுமியின் தனிமைத் துயரில் மனம் கரைந்தான் ஆதித் கரிகாலன்..

"இதுவரை தாம் கடந்து வந்ததை மறக்க முனைய வேண்டும் நந்தினி.. தற்போது வாழும் காலத்தை மட்டும் நினைவில் கொள்.."

"எதிர்காலத்தில் என்னவாக ஆவேன் இளவரசே..? அடையாளமின்றி துகள்.. துகளாக சிதறிப் போவேனா..?"

"அல்ல நந்தினி..! என் அருகமர்ந்து இவ்வுலக வாழ்வை இன்பமுடன் வாழ்வாய்.."

அறியாப் பிராயத்தில் செவியுற்ற அவ்வார்த்தைகளில் பொருள் புரியாத போதும்.. ஆதித்த கரிகாலனின் தோழமை

மனதிற்கு இதத்தையும்.. பாதுகாவல் உணர்வையும் தந்ததில் தைரியம் வரப் பெற்றவளாக மனம் விட்டு நகைத்தாள் நந்தினி..

காதல் என்பதை புரிந்தும் புரியாத பனிரெண்டு வயதில்தான் அவளுக்கான அந்த வார்த்தைகளை அவளிடம் பகன்றான் ஆதித்த கரிகாலன்... அவ்வார்த்தைகள் அவனது ஆன்மாவிலிருந்து எழும்பி வந்தன.. அகப்பூர்வமாக அவ்வாய்மொழி வார்த்தைகளை உதிர்த்தான் அவன்.. நந்தினியின் மனதில் முதன் முதலாக உருவான நேசம் முழுவதும் ஆதித்த கரிகாலனிடம் சென்று சேர்ந்து சமர்ப்பணமானது..

அவளுக்கான கொடிமலர்களை சேகரித்து வந்து அளிப்பான் கரிகாலன்.. அவற்றை தனது நீண்ட கூந்தலில் சூடிக் கொள்ளும் நந்தினியின் பேரெழிலைக் கண்டு ரசிப்பான்.. உயர்வகை பழங்களையும்.. பலகாரங்களையும் கொணர்ந்து வந்து அவன் அளிப்பதுண்டு.. அதை உண்ணும் போது நந்தினியின் வதனத்தில் வந்து போகும் உணர்வலைகளைப் பார்ப்பதில் ஓர் தனித்த நிறைவு அவனுக்கிருந்தது..

குந்தவையும் அருள்மொழிவர்மனும் காவிரியாற்றங் கரையில் பிரிந்து விளையாடும் போது ஆதித்த கரிகாலன் மட்டும் நந்தினியுடன் சேர்ந்து விளையாடினான்..

ஆற்றோரத்தில் மணலெடுத்து அதில் அழகழகான மாளிகைகளை வடிவமைப்பதில் விருப்பம் காட்டுவாள் நந்தினி.. அதில் இகழ்ச்சியாக அதரங்களைச் சுழிப்பாள் குந்தவை..

"இவளுக்கு அரண்மனை வாழ்வின் மீது மோகம் அண்ணா.." என்பாள்..

அதை ஓர்முறை செவி மடுத்து விட்ட நந்தினி..

"ஏன் இளவரசே..? அம்மோகம் எமக்கிருக்கக் கூடாதா..? அரண்மனை வாழ்வுக்கு நான் தகுதியற்றவளா..?" என்று சினத்துடன் கேட்டாள்..

"இதன் பொருட்டு மனம் நோகலாமா நந்தினி..? குந்தவை விளையாட்டாய் பேசியதை நீ வினயமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.." ஆதித்தன் நந்தினிக்கு சமாதானம் கூறினான்..

நந்தினியின் மனம் எளிதில் சமாதானமடைந்து விடவில்லை.. அவள் விழிகள் சற்றுத் தொலைவிலிருந்த சோழர்குல அரண்மனைகளை உற்று நோக்கின.. உத்வேகத்துடன் அவள் உரைத்தாள்..

"சொர்ண ஓலையில் பொறித்து வைத்துக் கொள்ளுங்கள் இளவரசே..! ஓர்தினம் அந்த அரண்மனை வாழ்வு எனக்கும் கிட்டும்.. நானும் ஓர் ராணியாவேன்.. இதைச் சாதிக்கவில்லையெனில் நான் நந்தினி அல்ல.."

குந்தவையின் இகழ்ச்சிப் பார்வையிலும்.. மனம் நோகடிக்கும் வார்த்தைகளிலும்.. எனக்கு நீ சமமா என்ற உதாசீனத்திலும் வெகுண்டு சின்னஞ்சிறுமியாக இருந்த போது நந்தினி உரைத்த வார்த்தைகளை பிற்காலத்தில் சபதம் என்று அருவெறுத்தான் ஆதித்த கரிகாலன்..

அப்படியொரு காலம் வரப்போகிறது என்பதை அறியாதவனாக அவன் அப்போதும் நந்தினிக்கு சமாதானம் சொன்னான்..

"அவ்வாறே ஆகட்டும்.. அரண்மனை வாழ்வு என்பது அரசர் குலத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல நந்தினி..! அரசர் குலத்தில் பிறந்தவர்களை மணப்பவர்க்கும் உரித்தானது.."

ஆதித்த கரிகாலன் மனதில் கொண்ட நினைவே வேறு.. அந்நினைவை அப்போது நந்தினி அறியாள்.. இருந்த போதிலும் அரிதிலும் அரிதாக.. வறியவளுக்குக் கிடைத்திருக்கும் பொற்களஞ்சியமான ஆதித்த கரிகாலனின் தோழமையை அவள் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. அவன் எதை உரைத்தாலும் ஏற்றுக் கொள்ளும் விதமாக அவள் உரைக்கும்.

"ஆகட்டும் இளவரசே.." என்ற வார்த்தையினை அப்போதும் உதிர்த்து வைத்தாள்..

நந்தினியின் சோர்வுற்ற மனநிலையை மாற்றும் பொருட்டு.. ஆதித்த கரிகாலன் பாடலைப் பாடினான்..

*"ஆற்றோரம் மணலெடுத்து..*
*அழகழகாய் இல்லம் அமைத்து..*
*பூஞ்சோலை.. செடி வளர்த்து..*
*பூரிப்பாக வசித்திருப்போம்.."*

நந்தினியின் விழிகள் விரிந்தன.. அவளைப் போன்ற நாடோடி வாழ்க்கை வாழும் ஏழைச் சிறுமியுடன் இணைந்து பாட விழைந்த அந்த அரசிளங்குமரனின் அன்பு அவளைக்

கட்டிப் போட்டு காவலில் வைத்தது.. அந்த அன்புச் சிறையில் அடைபட்டாள் நந்தினி.. ஆதித்த கரிகாலனின் பாடலுடன் இசைந்து இவளும் பாடினாள்..

*"ஆதித்தன் கதிர்களில் குளிர்ந்திருக்கும்..*
*அழகுசோலையில் மலர் மலரும்..*
*கரம் கொள்ளா கதலிருக்கும்..*
*காற்றுவர வழியிருக்கும்..*
*வடிவழகு மாளிகையில்..*
*வருபவர்கெல்லாம் விருந்திருக்கும்.."*

அவர்களின் உற்சாகப் பாடலின் ஒலியில் குந்தவையும், அருள்மொழிவர்மனும் திரும்பிப் பார்த்தார்கள்.. அவர்களின் உற்சாகம் அருள்மொழிவர் மனையும் தொற்றிக் கொண்டதில் அவன் அதரங்கள் விரிய லேசாக நகைத்தான்.. அந்நகைப்பை விரும்பாத குந்தவை சினத்துடன் இளைய சகோதரனை முறைத்ததில் அந்நகைப்பை அந்தரத்தில் விட்டுவிட்டு தமக்கையின் புறம்.. அவனது சிரம் திரும்பிக் கொண்டது..

ஆர்ப்பரித்து ஓடும் காவிரியாறு அவர்களின் இன்னிசையை செவி மடுத்ததில் அலாதி உற்சாகம் பெற்றதைப் போல அலைகளால் கரைகளை ஓங்கி அடித்து ஓடியது.. பொன்னி நதியின் உல்லாச ஓட்டத்தில் கரையிலிருந்த நந்தினியின் குழந்தைமனம் சிறடிகத்தது.. இருகரங்களையும் தட்டி ஆர்ப்பரித்து குதித்தாள் அவள்..

கள்ளங்கபடமில்லாத அந்த குழந்தைப் பருவத்தைத் தொலைத்து கன்னிகைப் பருவத்தில் அவள் கால் பதிக்கும் போது எண்ணற்ற சுழல்களில் அவள் சிக்கப் போகிறாள்

என்பதை வகுத்து வைத்திருந்த காலம் வருத்தத்துடன் அவளது உற்சாகத்தைப் பார்த்தபடி நகர மறந்து உறைந்தது..

மனம் விட்டு நகைக்கும் அந்த நகைப்பு வரும் காலத்தில் அவளுக்கு காணக் கிடைக்காத அரிதான ஒன்றாக மாறப் போகிறது என்பதை அறிந்து வைத்திருந்த வாழ்க்கை மௌனமாக பொன்னி நதியின் சுழல்களில் மையம் கொண்டு அவள் நகைப்பை வேதனையுடன் பார்த்தபடி நகர மறந்து உறைத்தது..

அரசகுல வாழ்வின் மீது மோகம் கொண்டவள் என்று அநியாயமாக பழிக்கப்பட்ட அந்தச் சிறுமி ஒரு அரசனுக்கு மகளாகப் பிறந்தவள்தான் என்பதை அவளின் இறுதிவரை இவ்வுலகம் அறியக் கூடாது என்று அவள் தலையில் குரூரமாக எழுதி வைத்திருந்த விதி.. தனது விதியை நொந்தபடி.. அவளது உற்சாகத்தில் பங்குபெற இயலாமல் அந்த மணித்துளிகளில் மறைந்து உறைந்து நின்றது.. அவளுக்காக ஆதித்தன் பாடினான்..

*"மாளிகை வாசம் உமக்காக..*
*மன்னவன் பரிசும் உமக்காக..*
*உப்பரிகை ஊஞ்சலும் உமக்காக..*
*உயர்ந்த வைரமும் உமக்காக..*
*பட்டினிலே உமை அலங்கரிப்போம்..*
*பேரெழில் பெண்ணென இயம்பிடுவோம்."*

நந்தினி மகிழ்ந்தாள்.. ஆதித்த கரிகாலனுடன் இணைந்து பாடிய அத்தருணத்தின் உற்சாகம் மறுபடியும் கிடைக்கப் போவதில்லை என்பதை அறியாமல் நகைத்தாள்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 2

## சொல்லி விட்டுப் போய் விட்டாய்.. சொன்ன சொல்லை எங்கே விட்டாய்..?

நீரஜாவின் கோபத்தை தாமோதரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவனுடைய விளக்கத்தை கேட்க விரும்பாத நீரஜா எழுந்து கொள்ள முயன்றாள்.. தாமோதரன் சட்டென சரிந்து அவள் கை பற்றித் தடுத்தான்.. நீரஜா உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வுக்கு ஆளானாள்..

இயல்பாக தாமோதரன் நீரஜாவைத் தொட்டுப் பேசியதில்லை.. ஓர் பார்வையிலேயே மற்றவர்களை எட்ட நிறுத்தி விடும் ஆற்றலும் ஸ்டேட்டஸும் கொண்ட நீரஜா.. அப்படிப்பட்ட பார்வையை தாமோதரனை நோக்கி வீசவில்லை என்றாலும் தாமோதரன் அவளிடம் எப்போதுமே தள்ளி நின்றுதான் பேசுவான்..

அப்போது அந்த வழக்கத்தை மறந்து எப்போதும் இல்லாத விதமாக அவள் கரத்தை அவன் பற்றி விட்டதில் நீரஜாவின் முகம் சிவந்து விட்டது..

அது கோபச் சிகப்பா.. நாணச் சிகப்பா என்று ஆராய்ந்து கண்டறிய தாமோதரனிடம் நேரமில்லை.. இருந்தாலும்.. அவள் கையைப் பிடித்திருந்த தனது கையை விலக்கிக் கொண்டு..

"ஸாரி.." என்றான்..

மூக்கின் நுனி சிவந்திருந்த நீரஜா பரவாயில்லை என்று பதில் சொல்லவில்லை.. பேசாமல் வேறு திக்கில் பார்த்தாள்..

"கண்ணால் காண்பதும் பொய்.. காதால் கேட்பதும் பொய்ன்னு பெரியவங்க சொல்லுவாங்க.. மறந்துட்டிங்களா..?" தாமோதரன் அழ மாட்டாத குறையாய் ஆரம்பிக்க..

"எதுக்குடா மொட்டைத் தலைக்கும், முழங் காலுக்கும் முடிச்சைப் போடற..?" என்று ஊடே புகுந்தான் சித்தார்த்தன்..

"வேண்டாம் சித்தார்த்.. இதில நீ இன்டர்பியர் ஆகாதே.." என்றான் சித்தார்த்தன்..

"நல்ல கதையாய் இருக்கே.. நீரஜா என் தங்கைடா..?"

"இல்லைன்னா நான் சொன்னேன்..? இவங்க உன் தங்கைதான்.. நீ பாசப்பயிறை வளத்து பாட்டுப் பாடிக்க.. யாரு வேணாம்ன்னு சொன்னது..?"

"நீ இதை ஏண்டா வேண்டாம்ன்னு சொல்லப் போற..? நீ வேலை கொடுக்கச் சொன்ன அந்தப் பொண்ணுக்கு வேலை கொடுக்கிறதை வேணும்ன்னா வேண்டாம்ன்னு சொல்லிப்பாரு.. சொல்ல மாட்டியே.. அதை மட்டும் சொல்லவே மாட்டியே.. இந்த வேண்டாம்கிற வெர்டுஸெல்லாம் இங்கதான்.. அந்தப் பொண்ணு விசயத்தில இல்ல.. இத ஏன்னு கேளு நீரு.."

"கேளு.. கேளுன்னு சொல்லாட்டி உன் தங்கைக்கு கேள்வி கேட்கவே தெரியாதா..? நீயும் ஏண்டா ஏத்தி விடற..?"

"நீ ஜொள்ளினதைச் சொன்னா அது போட்டுக் கொடுக்கிறதும்.. ஏத்தி விடறதுமா ஆகிருமா..? நீரு.. இத என்னன்னு கேளு.."

"அவன்தான் கேளு.. கேளுன்னு சொல்றானில்ல.. நான் சொல்லவர்றத நீங்க காது கொடுத்துக் கேட்டாத்தான் என்னங்க..?"

தாமோதரனின் அங்கலாய்ப்பில் அவனையே தீர்க்கமாக பார்த்து வைத்தாள் நீரஜா.. அவள் பார்வையை நேருக்குநேர் சந்தித்த தாமோதரனின் பார்வையிலிருந்த நேர்மை அவள் மனதை அசைத்தது.. ஆனாலும்.. வேறு ஒரு பெண்ணிற்காக அவன் சிபாரிசு செய்ததை அவள் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை..

"சொல்லுங்க.. கேட்கிறேன்.. என்ன சொல்லப் போகிறிங்க..? அந்தப் பெண்ணுக்கும் உங்களுக்கும் தெய்வீக காதல்.. அதனால அந்தப் பெண்ணுக்கு நீங்க வேலை பார்க்கிற ஆபிசிலேயே வேலை போட்டுக் கொடுன்னு உங்க பிரண்டு கிட்ட நீங்க ஜொள்ளினதைச் சொல்லப் போறிங்களா..?"

நீரஜாவின் கேள்வியில் அவளையே இமைக்காமல் பார்த்து வைத்தான் தாமோதரன்.. அவள் பார்வை தழைந்தது..

"நீங்க எனக்கு நியாயம் செய்யலைங்க.." என்றான் தாமோதரன்..

"நீங்க செய்கிறது மட்டும் நியாயமா..?" என்றாள் நீரஜா..

"நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டுங்க.. என்பக்கம் என்னன்னு கேட்காம நீங்களா எதையாவது சொல்லக்கூடாது.."

"நீங்க ஜெள்ளினதை விடவா... நான் சொல்லிட்டேன்.."

"கடவுளே..!"

"அவரை எதுக்கு டிஸ்டர்ப் பண்றீங்க.. இதுக்கெல்லாம் பஞ்சாயத்துப் பண்ண அவர் வர மாட்டார்.."

நீரஜாவின் பிடிவாதமான கோபத்தை உடைக்க வழி தேடி சோர்ந்தான் தாமோதரன்..



## 3

*துரத்தும் சாபங்களால்*
*துன்பம் கொண்டது பேதை மனம்..*

சாபங்களின் மத்தியில் வாழ்ந்திட வேண்டிய வரம் வாங்கிப்பிறந்து விட்ட நந்தினிக்கு ஆதித்த கரிகாலனின் நிழலில் நிலைத்து நிற்கும் பாக்கியம் நீடிக்கவில்லை.. அவன் யுத்தங்களில் விருப்பமுள்ள வீரனாக இருந்தான்.. யுத்தங்களில் பங்கு பெற வேண்டிய நிர்பந்தங்களை உடைய அரசிளங்குமரனாக இருந்தான்.. வேலையும்..

வாளையும் விருப்பத்துடன் கையாண்டான்.. இளமைப் பிராயத்திலேயே போர்களம் புகுந்து விட்டான்..

சேவூர் பெரும் போரில் ஆதித்த கரிகாலன் பங்கு பெற்ற போது அவனுக்கு பதினாறு வயதுப் பிராயம்கூட ஆகியிருக்கவில்லை.. அப்போரில் அவன் செயற்கரிய யுத்தம் புரிந்து அனைவராலும் பாராட்டிப் புகழப் பெற்றான்.. பாண்டியனுடன் நடந்த யுத்தத்தில் அவன் வீரபாண்டியனை வென்று திரும்பினாலும்.. வீரபாண்டியனை உயிருடன் சிறை பிடிக்க அவனால் இயலவில்லை.. ஒளிந்து மறைந்து கொண்ட வீரபாண்டியனைத் தேடிப் பார்த்து விட்டு அவன் அகப்படாததினால் பழையாறைக்கு வெற்றி முழக்கத்தோடு திரும்பி வந்தான்..

அவனுக்கான வரவேற்பு பலமாக இருந்தது.. எங்கும் அவனுக்கான ஜெய கோஷம் ஒலித்தது.. குலதெய்வத்தை கோவிலுக்குச் சென்று வணங்கி விட்டுத் திரும்பிய ஆதித்த கரிகாலன் ஆலயப்பிரவேசத்திற்குப் பின்பான அரண்மனை பிரவேசத்தை செய்தான்.. அந்தப் புரத்தில் அவனுக்காக தீபஒளித் தட்டுக்களுடன் காத்திருந்த அன்னையிடமும், அன்னையரிடமும், குந்தவையிடமும் ஆசிர்வாதங்களையும், வாழ்த்தையும் பெற்றுக் கொண்டவனின் மனதில் ஈசானபட்டரின் இல்லத்தில் வசித்த அவனது பால்யகால சிநேகிதி நந்தினிதேவி எவ்விதம் உள்ளாள் என்பதை அறியும் ஆவல் மிகுந்தது..

அதைப்பற்றி எவரிடம் வினவுவது..? செம்பியன் மாதேவியிடம் வினவலாமா என யோசனை புரிந்தபடி அவன் அரண்மனையின் உப்பரிகையில் உலவிக் கொண்டிருந்த

போது அவனைத் தேடி அங்குவந்த குந்தவை பாசத்துடன் அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்..

சிறுமிப் பருவத்திலிருந்து.. மங்கைப் பருவத்துக்கு வந்துவிட்ட தங்கையை வியப்புடன் நோக்கினான் ஆதித்த கரிகாலன்..

"வளர்ந்து விட்டாய் குந்தவை..! யாம் பிரிந்து செல்லும் போது பார்த்த சின்னஞ்சிறு குந்தவை எங்கே சென்று மறைந்து கொண்டாள் அம்மா..? என் கண்முன் நிற்கும் மங்கையர்குலதிலகம் யார்..?"

"போ அண்ணா.." வெட்கத்துடன் சிணுங்கினாள் குந்தவை..

"உனது தங்கை எங்கேயும் சென்று விடவில்லை.. உனக்காக இந்தப் பழையாறை அரண்மனையில் காத்திருக்கிறேன்.. நீ யுத்த களம் புகுந்து வெற்றிகளோடு திரும்பி வரும்போது வாழ்த்துக்கூறும் ஆரத்தித்தட்டோடு உன்முன் வந்து நிற்பேன் போதுமா..?"

"எப்போதும் அது இயலுமா குந்தவை..? தாம் மணம் முடித்து தம் கணவர் இல்லத்திற்கு சென்று விட்டால் எமக்கு வெற்றித்திலகமிட என் தங்கை எவ்விதம் என் அருகிலிருப்பாள்..?"

கரிகாலனின் பரிகாசத்தில் குந்தவையின் விழிகள் சிவந்து விட்டன.. கண்ணீர் திரையின் இடையே ஆதித்தனைப் பார்த்தவள்..

"ஒருபோதும் நான் பிறந்து வளர்ந்த எனது சோழ நாட்டை நான் பிரிய மாட்டேன் அண்ணா.. எமை மணம்

புரிபவர் சோழ நாட்டின் நன்மையை நாடுபவராக.. என்னுடன் இங்கிருக்கும் அரண்மனைகளில் ஒன்றில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.."

"அவ்வாறு எந்த அரசர் குலத்தவன் கிட்டுவான் குந்தவை..?"

"கிட்டாவிடில் இந்தக் குந்தவை கன்னியாகவே தன் காலத்தைக் கழிப்பாள்.. மணம் என்ற பெயரில் சோழநாட்டை விட்டுப் பிரிந்து செல்ல மாட்டாள்.."

"நீ என்ன பொன்னி நதியா..? சோழ தேசத்திலேயே வசித்திருப்பேன் என்று அடம் பிடிக்கிறாயே அம்மா.. பொன்னி நதிதான் சோழ தேசத்தை விட்டுப் பிரியாதது.."

"யாமும் பொன்னி நதிதான்.. சுந்தரசோழ சக்கரவர்த்தி பெற்ற பெண் நதி..!"

"அப்பப்பா..! அன்றைய குந்தவை அடியோடு மாறி விடவில்லை.. அந்த வாயாடல் அவ்விதமே உறைந்துள்ளது.. உன்னுடன் சொற்போரிட்டு வெல்வது யார்..?"

"இதைப் பகர்வது வாள் போரில் வல்லவனான ஆதித்த கரிகாலனா..?"

"யாம் வாள்போரில்தான் வல்லவன்.. சொற்போரில் அல்ல.."

"போதும் அண்ணா கேலி.."

குந்தவை அங்கிருந்த ஹம்சதூளிகா மஞ்சத்தில் அமர்ந்து யாழை சிறு மகவைப் போல மடியில் கிடத்தி

இனிமையாக மீட்டினாள்.. அதன் ஸ்வரத்தில் ஈர்க்கப்பட்ட கரிகாலன் அங்கிருந்த மஞ்சம் போன்ற ஆசனத்தில் அமர்ந்து தங்கை மீட்டிய யாழிசையின் இனிமையில் மனதைச் செழுத்தினான்..

*"யாழின் இசைதரும்*
*நுகர்வினை அளித்திட்ட..*
*யாழ்மகள்..! யாரிவள்..?*
*நிலவின் பிறவியோ..?"*

குந்தவையின் பாடலில் அவன் மனம் லயித்தது.. தமையனைக் கண்ட மகிழ்வில் தன்னிலை மறந்து கானத்தில் நுழைந்து.. மோனத்தில் ஆழ்ந்திட்ட தங்கையின் பாசத்தில் நெகிழ்ந்தான் ஆதித்த கரிகாலன்.. அவள் பாடலில் உரைத்திட்ட யாழ்மகள் யாராக இருக்கக்கூடும் என்று சிந்தித்தவனுக்கு வேறு எவரையும் உரைத்திட குந்தவை அனுமதியாள் என்ற கணிப்பில் நகைப்பு வந்தது.

அவளைத்தவிர வேறு எவரையும் எழிலாள் என அவன் தங்கை அழையாளே..

இருப்பினும் நிலவின் பிறவியாய் அவன் நெஞ்சினில் தோன்றினாள் பேரெழில் வடிவோடு ஓர்மாது..!

"நன்றாகப் பாடினாய் குந்தவை..! உனது யாழிசையும் கானமும் தேனிசை விருந்தாக இருந்தது தங்காய்..!"

"தமது கேலியை நானறியாதவளா அண்ணா..?"

"மெய்யே குந்தவை..! தம்மிடம் நான் பொய்யுரைப் பேனா..?"

குந்தவையின் வதனம் மலர்ந்தது.. தமையனின் புகழ்ச்சியுரையில் மகிழ்ந்து போனாள்.. யாழை அதனிடத்தில் வெகுபத்திரமாக கிடத்திவிட்டு தமையனின் அருகே வந்து.. கொடி முல்லை படர்ந்த உப்பரிகையின் சுற்றுச் சுவரில் சாய்ந்து நின்றாள்.. அவளது கூந்தலில் கரம் விட்டு பரிவாக கோதிய ஆதித்த கரிகாலனின் பாசத்தில் அவளது விழிகள் பனித்தன..

"சொல் குந்தவை.."

"எவற்றை அண்ணா..?"

"நான் பழையாறையை விட்டு நீங்கியிருந்த காலங்களில் இங்கே நிகழ்ந்திருக்கும் மாற்றமென்ன..?"

"ஒன்றா..? இரண்டா..? ஓராயிரம் அண்ணா..? எவற்றை உரைப்பேன்..? எவற்றை விடுப்பேன்..?"

"அனைத்தையும் உரைத்தால் குழப்பமில்லையே.."

"அவ்வாறா உரைக்கிறாய்..?"

தலையை சரித்து அவனை நோக்கிய குந்தவை யௌவன மங்கையாய் எழிலுடன் விளங்கினாள்..

'சிறுமியாக இருந்தபோது பார்த்தது..' கனிவுடன் தங்கையை பார்த்தான் கரிகாலன்..

அரசர்குலத்தில் பிறந்தவர்கள் இவ்விதம்தான் தம்வாழ்வில் பெரும்பகுதியை யுத்த களத்தில் கழிக்க வேண்டுமோ..?

"தமது பின்னலை பிடித்தபடி பின்னாலே சுற்றும் அருள்மொழிவர்மன் தற்போது எங்கே சென்றுள்ளான்..?

யாம் வருகை தந்ததிலிருந்து அவனைக் காண இயல வில்லையே.."

இளைய சகோதரனைப் பற்றிய வினாவை செவி மடுத்ததும் குந்தவையின் விழிகள் மலர்ந்தன.. குதூகலத்துடன் அவள் பேசினாள்..

"அருள்மொழிவர்மன் தற்போது என் பின்னலைப் பிடித்தபடி எமக்குப் பின்னால் சுற்றுவதில்லை அண்ணா..! வாளைச் சுழற்றுகிறான்.. சதா புரவியில் சவாரி செய்தபடி நகர்வலம் வருகிறான்.. மக்களுடன் மக்களாக கலந்து பழகி அவர்தம் குறைகளை செவி மடுத்து அவற்றை நிவர்த்தி செய்கிறான்.. சோழநாட்டு மக்கள் அவனை உயிரினும் மேலாக நேசிக்கிறார்கள் என்பதை அறிவாயா..?"

"அவ்வாறா..?" என்று இயம்பிய ஆதித்த கரிகாலனின் நெஞ்சத்தில் தமது இளைய சகோதரனின் புகழைப் பற்றிய பொறாமை துளியளவும் தோன்றவில்லை.. மாறாக..

"அவன் எம்மைப்போல முரட்டு சுபாவியல்ல.. இனிமையான சுபாவம் கொண்டவன்.. அவன் வதனம் எமது வதனத்தைப் போல கடினத்தன்மையுடன் தென்படாது.. கனிவுடன் காணப்படும்.. அவனை சோழதேசத்தின் மக்கள் நேசிப்பதில் வியப்பேதும் இல்லை தங்காய்.." என்றான்..

"நன்றே உரைத்தாய்.."

தமையனின் பெருந்தன்மையான குணத்தை மெச்சிய புன்முறுவல் குந்தவையின் அதரங்களில் உதித்தது.. அவள் பிரியத்துடன் தனது தமையனை நோக்கினாள்.. ஓர் மயிலிறகைப் போல அவன் மனம் வருடியது அவள் பார்வை..

"நீயா முரட்டு சுபாவி..? எவர் அண்ணா அவ்வாறு உரைத்தது..? உன் வதனத்தில் தெரியும் கடினம் உனது அகத்தில் இல்லையென்பதை நானறிவேன்.. எளிதில் அன்புக்கும்.. பாசத்துக்கும் அடிமையாகிவிடும் எளிமையான சித்தம் கொண்டவன் நீ.. ஒன்றில் மனதைச் செழுத்தினால் இறுதிவரை அதிலிருந்து மாற மாட்டாய் என்பதையும் நானறிவேன்.. அதைக் குறித்த அச்சம் என் மனதில் எப்போதும் உண்டு அண்ணா..."

"தேவையற்ற அச்சம்.."

"ஆயினும்.. இந்த சோழ குலத்திற்கு தேவையான அச்சம் அண்ணா அது.. நீ பட்டத்து இளவரசனாக பதவியேற்கப் போகிறவன்.. உனக்குத் தெரியுமா..? சிவ தொண்டிலே சிந்தையைச் செழுத்தி வந்த நமது மதுராந்தகச் சித்தப்பா.. சிறிய பழுவேட்டரையரின் புதல்வியை மணம் புரிந்த பின்பு அடியோடு மாறிப் போனார். தற்போது சோழ சிங்காதனத்தில் அவருக்குள்ள உரிமையைப்பற்றி அடிக்கடி பேசுவதாக கேள்வி.."

"ஓ..? இதுபற்றி பாட்டி அறிவார்களா..?"

"தெரியவில்லை அண்ணா.. எவர் அவரிடம் இதுபற்றி வினா எழுப்புவது..? ஆயினும் அண்ணா.. அவரறியாத செய்தியும் இந்த சோழதேசத்தில் இருக்கக் கூடுமோ..?"

"நன்றாகச் சொன்னாய் குந்தவை..! செம்பியன் மாதேவி அறியாத புதிர் இவ்வுலகிலேயே இருக்க முடியாது எனும்போது.. சோழ தேசத்திலே எவ்விதம் இருக்கக்

கூடும்..? அவ்வாறெனில் நான் சிங்காதனத்தை எமது சித்தப்பாவிற்கே விட்டுக் கொடுப்பேன்.. என் வாள் முனையால் நாடுகளை வென்று அவற்றுக்கு அரசனாக முடி சூட்டிக் கொள்வேன்.."

ஒரு வீரனுக்குரிய உரையை உரைத்த தமையனை பெருமிதத்துடன் நோக்கினாள் குந்தவை.. அத்தகைய வீராதி விரன் அவளுடைய தமையன் என்பதில் அவள் உள்ளம் பெருமிதம் கொண்டது..

"நீ சாதிக்கப் பிறந்தவன்..! அதில் எமக்கோ.. மற்றவர்க்கோ யாதொரு சம்சயமும் இருந்ததில்லை.. என்னவென்று நான் உரைக்க...? சோழதேசத்தின் காவலர்கள் என நாம் நம்புகிறவர்கள் மனதில் வேறுபல எண்ணங்கள் தோன்றியுள்ளனவே.."

"தோன்றினால் தோன்றட்டும்.. வாள் முனையில் வெல்லத்தான் எமக்குத் தெரியும்.. இதுபோல சதிச் செயல் புரிபவர்களை எவ்விதம்தான் அழிக்க முடியும்..?"

"அதைச் சொல்.. எமது உள்ளம் கவலையில் ஆழ்ந்துள்ளது.. பகிர்ந்து கொள்ள நீயும் அருகில் இல்லை.. அருள்மொழிவர்மனும் வளர்ந்து வாலிபனாகிக் கொண்டிருக் கிறான்.. வாள் பயிற்சியில் ஈடுபடுகிறவனுக்கு என்னுடன் உரையாட பொழுதிருப்பதில்லை.. சக்கரவர்த்தியின் திருமக்கள்தான் நாம்.. எனினும் மூவரும் மூன்று திசைகளில் பிரிந்து நிற்கிறோமே அண்ணா.. நந்தவனத்திலும்.. பூஞ்சோலையிலும்.. அதையொட்டிய நீரோடையிலும் நாம் கழித்த தினங்கள் திரும்பவும் நமக்கு

என்று கிட்டும்..? நீரோடையில் ஓடம் விட்ட பொழுதுகள் மறுபடியும் எப்போது கரம் கூடி வரும்..?"

விசனத்துடன் வினவிய குந்தவையின் கரங்களை பரிவுடன் பற்றிக் கொண்டான் ஆதித்த கரிகாலன்..

"இதன் பொருட்டு ஏக்கம் கொள்வதா..? சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வப் புதல்விக்கு ஏக்கம் என்பது இருக்கக் கூடாத ஒன்று தங்கையே.. வா.. இத்தருணமே நாம் நீரோடைக்குச் செல்லலாம்.."

"சென்று..?"

"ஓடம் ஏறித் திரும்பலாம்.."

"மெய்யாகவா அண்ணா..?"

"உன் தமையன் பொய்யுரைப்பதில்லை.."

அவள் கரம் பற்றி இழுத்த ஆதித்த கரிகாலனை குதூகலத்துடன் பின்பற்றினாள் குந்தவை.. அவர்கள் பூஞ்சோலையைக் கடந்து நீரோடையை அணுகியபோது.. எழிலே வடிவாக ஓர் மங்கை எதிர்வந்தாள்.. அவளை எங்கோ பார்த்த ஞாபகம் ஆதித்த கரிகாலனின் நெஞ்சத்தில் வந்ததில் அவன் அவளை உற்று நோக்க முற்பட்டான்.. அவள் வதனம் நாணத்தில் செம்மை கொண்டது..

"இம்மங்கை எவராக இருக்கக் கூடும் குந்தவை..?"

அம்மங்கையைப் பார்த்தபடி தங்கையிடம் அவன் வினவினான்..

"என்ன அண்ணா இது..? தமது தோழியை தமக்கு அடையாளம் தெரியவில்லையா..?" குந்தவை கரம் கொட்டி நகைத்தாள்..

"எமது தோழியா..?"

கரிகாலன் விழிகள் மின்ன அவளை உற்று நோக்கினான்.. அவளை இனம் கண்டு கொண்டான்..

"நந்தினி..! தாமா..?" வியப்புடன் வினவினான்..

"இவளேதான்.. உனது தங்கை பருவ மங்கையாக நிற்கும் போது.. நந்தினி மட்டும்.. அன்று நீ கண்டதைப் போல சிறுமிப் பருவத்திலேயே இருந்து விடுவாளா என்ன..? அரசிளங்குமரனாய் இருந்தும் இத்தகைய வினாவை வினவுகிறாயே.. வெளியில் உரைத்து விடாதே.. நகைத்து விடுவார்கள்.." குந்தவை நகைத்தாள்..

ஆதித்த கரிகாலனின் செவிகளில் குந்தவையின் நகைப்பும், பேச்சும் நுழையவே இல்லை.. அவன் விழிகள் எதிரில் நின்ற நந்தினியின் பேரெழிலில் மயங்கிப் போயிருந்தன.. உச்சி முதல் பாதம் வரை அங்குலம்.. அங்குலமாக அவளது மேனியெழிலை மோகித்து நகர்ந்த அவனது பார்வையில் வெட்கிப் போனாள் நந்தினி.. அவளால் ஆதித்த கரிகாலனை ஏறெடுத்துப் பார்க்கவும் இயலவில்லை...

'இத்துனை நாணமா..?'

நந்தினியின் நாணம் ஆதித்த கரிகாலனுக்கு உவப்பானதாகவே இருந்தது.. அவனை ஆர்வத்துடன் நோக்குவதும்.. அவனது பார்வையைச் சந்தித்து விட்டால் படபடத்து தாழ்ந்து கொள்வதுமாக இருந்த அவளது பார்வையில் அவன் கிளர்ச்சியுற்றான்.. மோக லாவண்யம் ததும்பிய அவளது அங்கங்களின் எழிலில் அவன் உள்ளம்

கிறக்கம் கொண்டது.. அவளிடம் பால்ய காலத்தில் அவன் கொண்ட இனம் புரியாத ஆழ்ந்த நேசம்.. அன்று.. அத்தருணத்தில் இனம் புரிந்த காதலாக உருமாறியது..

குந்தவை நந்தினியின் கரங்களைப் பிடித்து தோழமையுடன் உரையாடியதில் கரிகாலன் இமை கொட்ட மறந்து தனது கரத்தைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டான்..

'ஏதடா இது..? கிழக்கும் மேற்கும்.. நட்பு பாராட்டுகின்றனவா..?'

அவன் கரம் வலித்ததில் அது சொப்பனமில்லை எனத் தெளிந்தான்.. அதிசயங்கள் புவியில் நிகழ்வது உண்மைதான் போல.. இல்லையெனில் அவன் தங்கை குந்தவை நந்தினியுடன் சமதையாகப் பேசிப் பழகுவாளா..?

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 3

*போகும் பாதை எங்கே என்பதை..*
*போகும் வழியிலாவது சொல்லிவிடு..*

'என்னடா வாழ்க்கை இது..' வெறுத்துப் போய் விட்டான் தாமோதரன்..

என்னதான் காலில் விழாத குறையாக கெஞ்சிக் கூத்தாடினாலும்.. மலையிறங்க மறுக்கும் மகராசியைக் காதலித்து விட்ட கொடுமையை எண்ணி நொந்து நூலானான்..

"ஒகேங்க.. நான் உங்க வழிக்கே வர்றேன்.." என்றான்.

"என்ன அலுப்பா சொல்றான் பாரு.." எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்தன்..

"ஏண்டா டேய்..! நீ அடங்கவே மாட்டியா..?" கொலைவெறி கொண்டான் தாமோதரன்..

"அண்ணாவை எதுக்கு முறைக்கறிங்க..?" நீரஜா முறைத்தாள்..

"நீங்க ஒருத்தர் முறைச்சாப் போதாதுங்களா..? கூடே இவனும் சேர்ந்து ஏன் முறைக்கிறான்..? அதான் நான் மட்டும் ஏன் பாக்கி வைக்கனும்ன்னு நானும் சேர்ந்து முறைச்சு வைக்கிறேன்.." அழ மாட்டாத குறையாக விளக்கம் சொன்னான் தாமோதரன்..

"ஆனாலும் உனக்கு அசாத்திய மனோ தைரியமடா தாமு..!"

"எனக்கு..? மனோ தைரியம்..? அதை நீ சொல்ற..?"

"நான் சொல்லாம வேற யாரு சொல்லுவாங்க..?"

"அதைச்சொல்லு.."

"நீரஜாவோட காது கேட்க இந்தப் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கொடுத்தால்தான் ஆச்சுன்னு அடம் பிடிச்சுட்டு.. அது எப்படிடா எதுவுமே சொல்லாத குட் பாய் போல இப்படி சீன் காட்ற..?"

"நான் 'பாய்' இல்ல..?"

"அது நிஜம்தான்.. முஸ்லீம்ஸ்ல தாமோதரன்ங்கிற பெயர் கிடையாதுதான்.. வெல்செட்.."

"நாங்க நல்லாத்தான் பேசுவோம்... 'பாய்'ன்னா முஸ்லீம் மட்டும் இல்ல.. பையன்னும் சொல்லுவாங்க.."

"ஓ..! யு மீன்ஸ் 'பையா..'?"

"புரிஞ்சாச்சரி.. அதுசரி உனக்கா புரியாது.. நீதான் தெளிவா சிக்கல்ல மாட்டி விட்றதுல கில்லாடி ஆச்சே.. நான் பக்கா ஜெண்டில் அன்ட் குட் மேன்.. இதை உன் தங்கையிடம் சொல்லு.."

"ஏன்..? அதை நீ சொல்லமாட்டியா..? நீ செஞ்ச தப்பைத் தட்டிக் கேட்டுட்டாங்கிற ஒரேயொரு ரீசனுக்காக நீரஜாகூட பேச்சு வார்த்தையையே முறிச்சுக்கிற அளவுக்கு போயிட்டியா..? அந்த அளவுக்கா அந்தப் பொண்ணு உன்னை அட்ராக்ட் பண்ணியிருக்கா..?"

"சித்தார்த்..! உனக்கே இது நியாயமாய் இருக்காடா..?"

தாமோதரன் கவலையுடன் நீரஜாவைப் பார்த்தான்.. அவளோ சித்தார்த்தின் டேபிளின் மேலிருந்த ஃபைலின் திறந்த பக்கத்தில் ஒட்டப் பட்டிருந்த அந்தப் பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் தெரிந்த தவிப்பு.. அந்தப் பெண்ணின் புகைப்படம் தாமோதரனை ஈர்க்கும் அளவிற்கு வசீகரம் நிறைந்ததா என்று அவள் அறியத் துடிப்பதை இனம் காட்டியதில் தாமோதரன் துடித்துப் போனான்..

"என்னை யாரும் அட்ராக்ட் பண்ணல.." என்றான் வேகத்துடன்..

"நோட் திஸ் பாயிண்ட் நீரு.." என்றான் சித்தார்த்தன்..

"அதைத்தானே அண்ணா செய்துக்கிட்டு இருக்கேன்..?" துக்கத்துடன் சொன்னாள் நீரஜா..

"இவ எதைச் சொல்றா..?" தாமோதரனுக்கு விளங்கவில்லை..

"அதைத்தாண்டா சொல்றா.." சித்தார்த்தன் மிகத் தெளிவாக (?) விளக்கம் கொடுத்தான்..

"அடேய் நண்பா..! ஏண்டா இந்தப்பாடுபடுத்தற..?"

"நானா படுத்தறேன்..? நீதாண்டா நீருவோட மனசை ஹார்ட் பண்ற.."

"அவங்க மனசை ஹார்ட்பண்ண வேண்டி வந்தா.. நான் என் உயிரைக்கூட விட்டிருவேன்.. பட்.. அவங்க மனசை ஹார்ட் பண்ண மாட்டேன்.."

இந்த வாக்கியத்தில் நீரஜாவின் மனதை டச் பண்ணி விட்டான் தாமோதரன் அவள் முகத்தில் பரவிய வெளிச்சத்தில் உஷாரானான் சித்தார்த்தன்..

"நீரு..! இவன் உன்னோட சாப்ட் நேச்சரை புரிஞ்சுக்கிட்டு எதைச் சொன்னா உன் மனசு இளகும்ங்கிற வீக் பாயிண்ட் பிடிச்சுக்கிட்டு உன்னை அட்டாக் பண்றான்.. மசிஞ்சுராதே சிஸ்டர்.." என்று தங்கையை உஷார் படுத்தினான்..

"நீ ஒரு முடிவோடதான் இருக்கேடா.." தாமோதரன் தலைமேல் கை வைத்தான்..

"யாரும் இங்கே டிராமா போட வேண்டாம்.. சீன் கிரியேட் பண்ண வேணாம்.. அதான் தெளிவா தெரிஞ்சு போச்சே.." நீரஜா நொடித்தாள்..

"எதுங்க தெளிவா தெரிஞ்சு போச்சு..?"

"வேற எது..? உன் துரோகம்தான்.."

"நான் உன்னைக் கேட்கலை சித்தார்த்..?"

"நானும் உனக்காக பதில் சொல்லலைடா தாமு.. என் தங்கைக்காக பதில் சொல்றேன்.. அவ என் தங்கை.."

"இதையே எத்தனை தரம்டா சொல்லுவா..?"

"கூடப்பிறந்தவன்டா.. காலம் முழுக்கச் சொல்வேன்.."

"சொல்லித்தொலை.. அதை உன் வீட்டில சொல்லிக்க.."

"வெளியில சொல்லக் கூடாதுன்னு சட்டம் ஏதும் இருக்கா..?"

சித்தார்த்தன் எகனைக்கு மொகனையாக கேட்டு வைத்தான்.. தாமோதரன் பற்களை நறநறத்தான்.. நீரஜாவின் முகம் அக்கினிப் பிழம்பாக மின்னியது..

இந்த ஆட்டத்திற்கு முடிவே இல்லையா என்று தாமோதரனுக்கு வெறுத்துப் போனது..



# 4

*மன்னவன் என்றா அவள் மனதினை அவனிடம் வைத்தாள்..?*

"நீயும் எங்களுடன் ஓடத்தில் வரலாமே நந்தினி.."

அன்புடன் அழைப்பது குந்தவையா என்ற வியப்பில் திக்கு முக்காடிப் போனான் ஆதித்த கரிகாலன்..

அவன் பழையாறையை விட்டு நீங்கியிருந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் இதுவே வியக்கத்தகு மாற்றம் என்று அவன் மனம் அதிசயித்தது..

அதைத் தங்கையிடம் பகிர்ந்து கொண்டால் அவன் நிலைமை என்னவாகும் என்ற நினைவு தோன்றியதில் அவன் இதழ்களில் சிறிதான புன்னகை விரிந்தது..

"என்ன அண்ணா.. பரிகாசம் செய்கிறாயா..?" குந்தவை சிணுங்கினாள்..

"பெண்களின் முன்னிலையில் அவர்களைப் பரிகசித்துவிட்டுத் தப்பிப் பிழைக்க இயலுமா குந்தவை..?" குறும்புடன் வினவினான் ஆதித்த கரிகாலன்..

"அவ்வாறா குந்தவை..? தமது தமையனின் வீரத்தைப்பற்றி நாடெங்கும் புகழ்கிறார்களே.. இவரா பெண்களின் கோபத்தைக் கண்டு அஞ்சுகிறவர்..? விந்தையாக உள்ளது..." நந்தினி ஓரவிழப் பார்வையுடன்

உரைத்ததில் ஆதித்த கரிகாலன் கள்ளூரும் போதை கொண்டான்..

"கன்னியின் கடைக்கண் பார்வை.. கணையின் கூர்மையை விட மேலானது குந்தவை..! அஞ்சித்தானே ஆக வேண்டும்..?" அவனும் குந்தவையை ஊடே வைத்து மறுமொழி பகன்றான்..

அன்று நந்தினியும் அவர்களுடன் ஓடத்தில் வந்தாள்.. ஆதித்த கரிகாலனின் பார்வையை நொடிக் கொருதரம் சந்தித்தபடி குந்தவையுடன் பேசிய வண்ணமிருந்தாள் நந்தினி.. அந்தப்பெண்கள் இருவருக்கும் இடையே நிலவிய பேதம் மறைந்திருந்ததில் ஆதித்த கரிகாலனின் மனதில் சொல்லவொண்ணாத நிம்மதி உண்டானது.. எதனால் அது என்ற ஆராய்வுக்குள் நுழையாமல்..

'குந்தவையின் காருண்ய மனம் திரும்பி விட்டதால் வந்த நிம்மதி இது..' என அவன் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டான்.. காரணம் அதுவல்ல என்பதை அவனது ஆழ்மனம் அறியும்..

கரைக்குத் திரும்பியதும் நந்தினி விடைபெற்று ஈசான பட்டரின் இல்லம் நோக்கி நடந்தாள்.. போவதற்கு முன்னால் அவள் திரும்பி ஆதித்த கரிகாலனை பார்த்த பார்வையில் சொந்தம் மறைந்திருந்தது.. அதை இனம் கண்டு கொண்ட கரிகாலனின் கண்கள் மின்னின.. அவனுக்கான பிரத்யேகப் பார்வையை அவள் அளித்ததில் அவன்மனம் உல்லாச ஊஞ்சலில் ஆடியது..

அன்றைய தினத்தின் யாமத்தில் அவன் அரண்மனை நந்தவனத்தை அடைந்தான்.. அவனும் நந்தினியும் பேசிப் பழகிய பொய்கையின் கரையில் அமர்ந்தான்.. யாமவதி அழகுற மிளர்ந்து கொண்டிருந்த அந்த நள்ளிரவுப் பொழுதின் நிசப்தம் அவன் மனதில் ஏதேதோ உணர்வுகளை விதைத்து வைத்தது.. பொய்கையின் நீர்ப்பசை சுமந்து வந்த குளிர்காற்று அவன் தேகத்தைத் தழுவி சூடேற்றியது..

'நந்தினி..'

இன்பப் பெருமூச்சுடன் நிமிர்ந்தவனின் பார்வையில் எதிரேயிருந்த மரத்தின் மறைவில் ஆடிய மேலாடை தென்பட்டு விட்டது..

'இந்த யாமத்தில் நந்தவனத்தில் உலவும் மங்கை எவராக இருக்கக் கூடும்..?'

எதிரி தேசத்தில் ஒற்று வேலைக்கு பெண்களையும் பணியில் அர்த்தி விட்டனரோ என்ற சந்தேகம் மனதில் தோன்ற.. ஆதித்த கரிகாலன் சப்தமின்றி எழுந்தான்.. பாத அடியோசை எழுப்பாமல் நடந்து மரத்தின் இந்தப் புறமாகச் சென்று சடுதியில் அந்த வளைக் கரத்தை பிடித்து இழுத்தான்..

நிலவின் ஒளியில் எதிரில் நின்றவளைக் கண்டதும் அவன் உள்ளம் விகசித்தது..

"நந்தினி..?" வினவினான்..

"இளவரசே.." அவள் குனிந்த தலையை நிமிரவில்லை..

"இந்த யாமத்தில் இங்கென்ன செய்கிறாய்..? உலவ உனக்கு வேறு பொழுது அகப்படவில்லையா..?"

"இல்லை இளவரசே..! இன்று மாலையில் தங்களைச் சந்திப்பேனென்று யாம் எண்ணியும் பார்க்கவில்லை.. சொப்பனம் போல தங்கள் கண்ணெதிரே வந்து நின்றீர்கள்.. இல்லம் திரும்பியும் என்னால் துயில் கொள்ள இயலவில்லை.. தாங்களும் நானும் விளையாடிய இடமான இப்பொய்கையின் கரையில் சிறிது நாழிகை வீற்றிருந்தபின் துயிலச் செல்லலாம் என்ற நினைவுடன் இங்கு வந்தேன்.. தாமும் இங்கு இருக்கிறீர்கள்.."

வெகு பிரியத்துடன் பேசினாள் அவள்.. ஆதித்த கரிகாலனின் மனதில் காதல் பொங்கித் ததும்பியது.. அவனைப்போலவே அவளும் நினைத்ததில் அவன் மனதில் சொல்லில் அடங்காத இன்பங்கள் ஏற்பட்டன..

நிலவின் மெல்லிய ஒளியிலும் அவன் வதனம் காண நாணம் கொண்டு தலை கவிழ்ந்தவளின் செய்கையில் அவனது ஆண்மை கர்வம் கொண்டது..

"என் வதனம் நோக்கிப் பேச என்ன தயக்கம் நந்தினி..? யாம் உனக்கு அன்னியனா..?"

அவனது வினாவில் துடித்து நிமிர்ந்தாள் நந்தினி.. அவளது இமையோரம் கண்ணீர் அரும்பு கட்டியிருந்தது..

"அல்ல இளவரசே...! இப்புவியில் என்மீது பரிவு கொள்ள ஓர் மனிதர் உண்டென்றால் அவர் தாங்கள் மட்டும்தான் இளவரசே...! தாங்கள் எனக்கு அன்னியரென்றால்.. நானே எனக்கு அன்னியளே.."

அவளது வேகத்தில் ஆதித்த கரிகாலனின் அகம் குளிர்ந்தது.. அவன் இதயத்தில் தென்றலின் இதம் பரவியது.. பொய்கையில் பூத்த புதுமலரின் நுனியிதழ்கள் அவன் தேகம் தொட்டு வருடியதைப் போல அவன் சிலிர்த்துப் போனான்..

"நந்தினி..! எனதன்பே..!"

அவன் உணர்ச்சிப் பெருக்குடன் அவள் கரம் பற்றினான்.. அவள் நாணத்துடன் பின்னே நகர்ந்தாள்.. அவனிடம் அவள் கொள்ளும் நாணத்தில் வசீகரிக்கப் பட்டான் ஆதித்த கரிகாலன்.. அவள்மீது காதல் கொண்டான்.

அவன் வதனம் பார்த்துப் பேச அவள் நாணம் கொண்டு வெட்கித் தடுமாறியதில் அவள் கரம் விட்டு விட்டான் ஆதித்த கரிகாலன்.. தயங்கினாலும்.. அவன் முன்னிலையில் நிற்க முடியாமல் ஓடி விட்டாள் நந்தினி..

மறுதினமும் யாமத்தில் பொய்கைக் கரைக்கு வந்தான் ஆதித்த கரிகாலன்.. அவன் எதிர்பார்த்தபடியே நந்தினியும் அங்கு வந்தாள்.. வாக்குத்தராத போதும்.. அவனுக்காக யாமம் என்றும் பாராமல் வருகை தந்தவளின் காதலில் நனைந்து திளைத்தான் ஆதித்த கரிகாலன்.. இப்போது அவள் கரம் பற்றியவனிடம் அவள் மறுத்து விலகி ஓடவில்லை.. மாறாக அவன் கரங்களுக்குள் அடங்கி அவன் மார்பில் தலை சாய்த்து முகம் புதைத்து நின்றாள்..

"நந்தினி.."

"ம்ம்ம்..."

"ஓடத்தில் சென்று வரலாமா..?"

"இந்த யாமத்திலா..?"

"வேறு பொழுதில் நீயும், நானும் இணைந்து ஓடத்தில் உலா வர இயலுமா தேவி..?"

"எப்படி இயலும்..?"

நந்தினியின் மனம் துயர் கொண்டது.. பிறர் பார்க்க தனிமையில் அவனுடன் அவள் ஓடத்தில் கூடச் செல்ல முடியாது எனும் போது.. வாழ்வில் இணைந்து பயணித்தல் என்பது கரம் கூடுமா..?

"கூடும்.." என்றான் ஆதித்த கரிகாலன்..

"என் வாள் முனையில் நாடுகளை வெல்வேன்.. வெற்றிப் பரிசாக சக்கரவர்த்தியிடம் உனை மணக்கும் அனுமதியினைக் கேட்பேன்.."

"ஆஹா..! அவர் அளித்து விட்டுத்தான் வேறு பணியை பார்ப்பார்.."

"அவ்வாறு மொழியாதே நந்தினி..! சக்கரவர்த்தியின் திருவுளத்தில் யாதிருக்கிறது என்பதனை நீயறியாய்.. அவர் காதலுக்கு பகைவரல்ல.."

"அவ்வாறா..?"

அவள் ஒயிலாக நகைத்தபடி அவனுடன் ஓடத்தில் ஏறினாள்.. அவனும்.. அவளும் மட்டுமாக பவனி வந்த அந்த ஏகாந்தப் பொழுதிற்கு.. வானத்தில் வலம் வந்த வட்ட நிலவு மட்டுமே சாட்சியாக இருந்தது..

*"ஆஹா..! இன்ப நிலாவினிலே..*
*ஓஹோ.. புவியும் ஆடிடுதே..*
*ஆடிடுதே.. விளையாடிடுதே.."*

இனிமையான குரலில் அவள் பாடினாள்.. அவளுடன் தனித்து ஓடத்தில் மிதந்து கொண்டிருந்த அவ்வேளையில்.. அவளின் இனிமையான கானம் அந்தத் தருணத்திற்கு அழகூட்டுவதை உணர்ந்து அனுபவித்தான் ஆதித்த கரிகாலன்..

எவரும் இல்லாத நிசப்த வேளையில்.. நீரில் படகின் துடுப்புக்கள் அளைந்ததில் எழும்பிய..

"சளக்... சளக்..." என்ற சப்தம் நந்தினியின் கானத்திற்கு தாளமிடுவதைப் போல அமைந்திருந்தது..

கரையோர மரங்களில் கூடு கட்டியிருந்த நாமம் தெரியாத பட்சிகளில் ஒன்று அந்த யாமத்தில் கூவியதில் அவ்வொலி பக்கவாத்தியம் போல ஒலித்து வைத்தது..

*"தாரா சந்திரிகை உலாவும் நிலையிலே..*
*தவழும் நிலவின் நடைதனிலே..*
*தேன்மலர் மதுவை சிந்திடும் வேளை..*
*தென்றல் பாடுது தாலேலோ.."*

நந்தினியின் தாலாட்டில் அவள் மடியினில் துயில விருப்பம் கொண்டான் ஆதித்த கரிகாலன்.. ஓடம் விட்டுக் கொண்டிருந்த அவ்வேளையில் அது இயலாது என்பதில் அவளது கரம் சாய்ந்தான்.. அவனது வதனம் தாங்கிய கரத்தினில் தனது அதரங்களைப் பதித்தான்.. நந்தினி சிலிர்த்துப் போனாள்..

முதல் பூ மலரும் தருணம் அற்புதமானது..

நந்தினி அந்த அற்புத தருணத்துக்குள் பிரவேசித் திருந்தாள்..

ஆதித்தனுடனான அவளது காதல் அப்பழுக்கற்றது.. அடுத்து வரப்போகும் வாழ்வின் நிகழ்வுகளில் அவள் அலை கடலின் துரும்பாக அலைக்கழிக்கப் படப் போகிறாள் என்பதை அறியாத அப்பேதை.. சாபங்கள் சூழ்ந்திருக்கும் தமது வாழ்வைப் பற்றி உணராமல் ஆதித்த கரிகாலனின் மீது மாசற்ற நேசத்தை வைத்தாள்..

*"அலையின் அசைவிலே..*
*ஆசை நினைவிலே..*
*நிலை மறந்தேங்கும் காலத்திலே..*
*கலைவான் மதிபோல்..*
*காதல் ஓடத்திலே..*
*காணும் இன்ப.. அனுராகத்திலே..*
*ஆஹா.. இன்ப் நிலாவினிலே..*
*ஓஹோ புவியும் ஆடிடுதே.."*

நந்தினியின் கரங்களைப் பற்றியிருந்த ஆதித்த கரிகாலனின் கரங்களை தம் கண்களில் ஒற்றிக் கொண்டாள் நந்தினி..

கரைக்கு அவர்கள் திரும்பியபோது.. உஷாக்காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தனர்..

"வைகறை வருகை தருகிறது இளவரசே.."

"வருகை தரட்டுமே.. நாம் வேண்டுமானால் விழாக்கோலம் பூண்டு அதை வரவேற்கலாமா..?"

"ஆஹா.. அப்படியே செய்வோம்.. நமைக் காணும் அரசரும், செம்பியன் மாதேவி பிராட்டியாரும் நமக்குத் திருவிழாவைக் கொண்டாடி விடுவார்கள்.. அந்த நினைவிருக்கட்டும்.."

"என் மனதில் உனைப் பற்றிய நினைவு மட்டும்தான் இருக்கிறது.."

அந்த உண்மையில் உறைந்து நின்றாள் நந்தினி..

சோழர்குல சக்கரவர்த்தியின் தவப்புதல்வன்.. பட்டத்து இளவரசனாகப் போகும் சக்கரவர்த்தித் திருமகன்... அவளைப் போன்ற தாய், தந்தை எவரென்று அறியாத அநாதைப் பெண்ணின் மீது உயிருக்குயிரான காதலை வைத்துள்ளான் என்பதில் அவள் எல்லையற்ற பிரமிப்பை அடைந்தாள்..

விடியல் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதில் அவர்கள் பிரிந்து சென்றார்கள்.. மீண்டும் யாமத்தில் பொய்கைக் கரையில் சந்தித்துக் கொண்டார்கள்... நாளொரு மேனியும்.. பொழுதொரு வண்ணமுமாக அந்தச் சந்திப்புகள் நீடித்தன.. அவனைக் காணும் பொழுதில் உயிர்த்து.. மற்ற பொழுதுகளில் மரித்தாள் நந்தினி..

கொடி இல்லத்தில் அவளைத் தழுவிக் கொள்பவனின் கரங்களில் அடங்கியிருக்கும் வேளைகளில் அவனை பிரிய நேரிடும் என்ற எண்ணமே அவளுக்கு வரவில்லை.. அவன் அவளைப் பிரிந்து போக மாட்டான்.. ஓர்நாளும் கரம் விடமாட்டான் எனும்போது எதன் பொருட்டு அவள் அஞ்ச வேண்டும்..?

"கேள் நந்தினி.. எனது ஆணையைக் கேள்.."

அவளைத் தழுவிய வேளையில் உன்மத்தம் பிடித்தவனாக அவளிடம் உறுமினான் ஆதித்த கரிகாலன்.. அந்த உறுமல்கூட அவளுக்கு இன்பத்தையே தந்தது.. அவன் மீது இழைந்தபடி..

"சொல்லுங்கள் இளவரசே..! தங்கள் சித்தப்படியே நடப்பேன்.." என்று உரைத்தாள்..

"உன் மனதில் என்னைத் தவிர வேறு எவருக்கும் இடமிருக்கக் கூடாது.."

"நான் ஏழை இளவரசே..! அரசக் குலத்தவரைப் போன்ற பரந்த மனம் எனக்கில்லை.. என் மனதில் மிகச் சிறிய இடமே உள்ளது.. அதையும் தாங்கள் ஆக்ரமித்து விட்டீர்கள்.. தாம்குடி புகுந்த மனதில் வேறொருவர் குடிவர இயலாது இளவரசே..!"

"உன் மனம் எனக்கு மட்டுமே.."

"தமையன்றி வேறு எவரையும் என் மனம் நாடாது.."

"வாக்குத் தருவாயா..?"

"வாக்குத் தருகிறேன்.. இந்த நந்தினியின் காதலும்.. மனமும்.. தேகமும்.. ஆதித்த கரிகாலனுக்கு மட்டுமே சொந்தமானது.."

நந்தினி வாக்குக் கொடுத்தாள்.. பிற்காலத்தில் அவள் சந்தித்த அத்தனை பூகம்பங்களிலும் அவள் ஆதித்த கரிகாலனுக்கு கொடுத்த வாக்கிலிருந்து தவறவே இல்லை.. அவள் மனதில் வேறு ஒரு ஆண் மகனுக்கு இடம் கொடுக்கவே இல்லை..

"நானும் தமக்கு வாக்களிக்கிறேன் என் காதலியே..!"

அவனது காதலில் மன நெகிழ்ச்சி கொண்ட நந்தினி..

"தங்களின் இந்த அழைப்பே போதுமானது இளவரசே..! வாக்கேதும் தர வேண்டாம்.." என்றாள்..

"இது காதலன் கடமை நந்தினி.. நான் கடமை தவறமாட்டேன்.. கேட்டுக்கொள்.. என் வாழ்வில் உனையன்றி வேறொரு பெண்வர முடியாது.. இது நான் உனக்குத் தரும் வாக்கு.."

கரிகாலனும் வாக்குத் தவறவில்லை.. அவன் காதலியை வேறு உறவு முறையில் அவன் சந்திக்க நேர்ந்த போதும் அவன் மனதில் அவள்தான் இருந்தாள்.. சோழ தேசத்தின் பட்டத்து இளவரசனாக அவன் ஆன பின்பும் அவன் நந்தினியை மட்டுமே காதலித்தான்..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 4

## *எங்கோ நீயும்.. எங்கோ நானும்.. பிறந்து ஏன் சந்தித்தோம்..?*

"என்ன ஒரு தைரியமிருந்தா இவனை யாராலேயும் அட்ராக்ட் பண்ண முடியாதுன்னு சொல்லுவான்..?"

சித்தார்த்தனின் கேள்விக்கு இறுகிய முகத்துடன் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்த நீரஜாவின்

கோபத்திற்கான காரணத்தை சட்டென்று புரிந்து கொண்டான் தாமோதரன்.. அவன் மனதில் இதம் பரவியது.. நீரஜாவின் விழிகளுக்குள் ஆழமாக பார்த்தான்.. அவன் பார்வையில் அவளது இமைகள் படபடத்தில் அவனுக்குள் ரகசிய சந்தோசம் பரவியது.. சித்தார்த்தனின் டேபிள் மீதிருந்த ஃபைலைத் தூக்கிப் போட்டான்..

"இந்த ஃபைலில் இருக்கிற எந்த முகரையும் என்னை அட்ராக்ட் பண்ணலைடா சித்தார்த்.. இதைத்தான் நான் சொன்னேன்.. உன் இஷ்டத்துக்கு வார்த்தையை விடாதே.." நீரஜாவின் முகத்தைப் பார்த்தபடி சித்தார்த் தனிடம் சொன்னான்..

"நான் இங்கே இருக்கேன்டா.." குரல் கொடுத்தான் சித்தார்த்தன்..

"இருந்துட்டுப் போ.."

"இல்ல.. நான்தான்னு நினைத்து நீ நீரஜாகிட்டப் பேசிக்கிட்டு இருக்கியோன்னு ஒரு டவுட்டு.."

"உனக்கெல்லாம் டவுட்டே வராதே... எதையும் கன்பர்மா போட்டுத் தாக்கறதில நீ கில்லாடியாச்சே.."

நீரஜாவைப் பார்த்துக் கொண்டான் தாமோதரன்.. அவள் முகத்தில் மென்மை திரும்பியிருந்தது.. தாமோதரனும் அவளுக்கு எதிராக திரும்பி அமர்ந்து அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்..

"தாமு.. ஐ ஆம் ஹியர்.." சித்தார்த்தன் குறுக்கிட்டான்

"உஸ்ஸ்.." வாயில் ஒற்றை விரலை வைத்து அவனை அடக்கினான் தாமோதரன்..

"உனக்கு நான் எம்.டியா..? இல்ல.. எனக்கு நீ எம்.டியா..?" போர்க்கொடி உயர்த்தினான் சித்தார்த்தன்..

"இதோ பார்.. இங்கே டெஸிக்னேசனைப் பத்தின பேச்சு நடக்கலை.. ஸோ.. கொஞ்ச நேரம் வாயை மூடிக்கிட்டு இரு.."

"அது எப்படி..? என் தங்கையின் மனம் ஹர்ட் ஆனா என்னால அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க முடியாது.."

"யாரும்.. யாரையும் ஹர்ட் பண்ணலை..."

"அந்த யாரும்.. யாரும்.. யாரு..?"

"யாரோ.. யாரையோ ஹர்ட் பண்றதைப் பத்தி இங்கே பேசலை.. நான் உன் தங்கையை ஹர்ட் பண்ணலை.. அதைப்பத்தி மட்டும்தான் பேசனும்.. பாருங்க நீரஜா.."

"யாரைடா பார்க்கச் சொல்ற..?"

"நிச்சயமா உன்னைப் பார்க்கச் சொல்லலை.. போதுமா..?"

"போதாது.. நீரஜா கோபத்தில் இருக்கிறா.."

"அந்த கோபத்தை குறைய விடாம பார்த்துக்க நீ இருக்கிற.."

"என் தங்கை கோபத்தில ஒரு நியாயம் இருக்கும்டா.."

"அதனாலதான் அவங்க கோபத்துக்கு நான் பயப்படறேன்.."

தாமோதரன் விடாமல் சிக்சர் அடித்தான்.. சித்தார்த்தன் பல்லைக் கடித்தான்.. நீரஜாவின் முகம் இளக்கமாகிக் கொண்டே இருந்ததில்..

'எப்படித்தான் பால் போட்டாலும் வளைச்சு ஆடிச்சுடறானே..' என்று யோசித்தான்..

"இந்தப் பெண்ணுக்கு ஏன் அப்பாயிண்ட் ஆர்டர் கொடுக்கனும்னு நான் சொன்னேன்னு உங்களுக்குத் தெரியுமாங்க..?" தாமோதரன் ஆரம்பித்தபோது..

"அது எங்களுக்கு எப்படிடா தெரியும்..? உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஆயிரம் இருக்கும்.." என்று சித்தார்த்தனும் ஆரம்பித்து வைத்தான்..

"நான் ஆர்கியுமெண்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரனும்னு பாடாய் படறேன்.. உங்க அண்ணன் அதை முடிக்க விடுவேனான்னு முதல்ல இருந்து ஆரம்பிச்சு வைக்கிறான்.. பிராப்ளம் என்னங்கிறதை நீங்க புரிஞ்சுக் கிறது அவசியம்ங்க.."

நீரஜாவின் முகத்தை நேருக்கு நேராக பார்த்துச் சொன்ன தாமோதரனின் குரலில் இருந்த உண்மையில் நீரஜாவின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவள் யோசனையுடன் தாமோதரனைப் பார்த்தாள்..

'ஆஹா..! இவயோசிக்க ஆரம்பிச்சுட்டாளே.. இவ யோசிக்கவே கூடாதே.. அது டேன்ஜராச்சே..' சித்தார்த்தன் இமைகளைச் சுருக்கித் தங்கையை பார்த்தான்..

"இப்போதைக்கு நீங்க அந்தப் பெண்ணுக்கு அப்பாயின்மெண்ட் ஆர்டர் கொடுக்கனும்னு லைக் பண்றீங்க.."

"நீ வேற நீரு.. இவன் அந்தப் பெண்ணையே லைக்பண்றான்.. மேரேஜ் எப்படா தாமு..! இப்பவே

சொல்லிட்டேன்.. உன் மேரேஜ் செலவு பூராவும் என்னோடதுதான்.. என்ன நீரு நான் சொல்றது..? எத்தனை வருச பிரண்ட்ஷிப்..!. இவனுக்கு நான் இதைக்கூடச் செய்யலைன்னா எப்படி நீரு..?"

"ஐயையோ..! அந்தப் பெண் யாரோ.. எவரோ.. எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் யாதொரு கனெக்சனும் இல்லைங்க.."

தாமோதரன் அலறியடித்துக் கொண்டு விளக்கம் சொல்வதை ஒன்றும் அறியாத சின்னக் கண்ணன் போல ரசித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்..



## 5

*மன்னவனே..! உன் மணிமகுடம்*
*நமைப் பிரிக்கும் முள் மகுடம்..*

ஆதித்த கரிகாலன் அரிதானவன்.. அவனது காதலோ அரிதிலும் அரிதானது.. தமிழகத்தில் சோழர்களின் சாம்ராஜ்யம் பரந்து விரிந்திருந்த அந்த காலகட்டத்தில் சோழர் குலச் சக்கரவர்த்தியாலும், மக்களாலும்.. 'பட்டத்து இளவரசன்..' என பட்டாபிஷேகம் செய்யப்பட்டு... 'பரகேசரி' என்ற சிறப்புப் பெயரையும் பெற்று.. அவன் பெயரால் கல்வெட்டு சாசனம் அளிக்கும் உரிமையைப் பெற்றிருந்த காலகட்டம் வந்த நாள்களிலும் அவன் மனம் நந்தினியையே உயிருக்குயிராக காதலித்தது..

அனுதினமும்.. இரவு பகலென்று பாராமல்.. பகலில் பணிகளைச் செய்ய விடாமலும்.. இரவில் துயில் கொள்ள விடாமலும்.. அவனைத் துரத்தி வதைத்த அவளது நினைவுகளிலிருந்து தப்ப கரிகாலன் போர் மேல் போராக யுத்தம் புரிந்த வண்ணம் இருந்தான்.. அந்தக் கொடிய காலகட்டத்திலும் அவள் நினைவை மறக்க அவன் வேறொரு பெண்ணின் துணையை நாடவே இல்லை..

வரும் காலத்தில் வதைக்கக் காத்திருக்கும் விதியின் சாபத்தை அறியாதவர்களாக அந்த இளம் காதலர்கள் இருவரும் பழையாறையின் பூஞ்சோலையிலும்... பொய்கைக் கரையிலும் யாமத்தின் நிசப்த வேளையில் ரகசியமாக சந்தித்த வண்ணம் இருந்தனர்..

மலர் மரத்தின் அடியினில்.. நந்தினியின் மடிசாய்ந்து கதைகள் பேசினான் ஆதித்தன்.. அவன் விரல் பற்றி.. கேசம் கோதி.. அவன் உரைத்த வீரக்கதைகளை செவி மடுத்தாள் நந்தினி.. மலர்மரத்திலிருந்து உதிர்ந்த மலர்கள் பூமாரி போல அவர்கள் மீது பொழிந்து மூடின.. அந்த நறுமணத்தின் கிளர்ச்சியில் நந்தினியுடன் கூடி விட கரிகாலனின் தேகம் துடித்த போதிலும்.. தனது காதலிக்கு அநீதி இழைத்துவிடக் கூடாது என்பதற்காக தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்..

தாய், தந்தை எவரென்று தெரியாமல் மாற்றோரின் வளர்ப்பு மகளாக வளர்ந்து வருபவளை மாலை சூடாமல் பெண்டாள எண்ணுவது அரசனுக்கான தர்மம் ஆகுமா..? அத்தகைய அநீதியை அவன் காதலிக்கு செய்தல் தகுமா..? புவியறிய அவளை அவனது மனையாட்டியென அறிவித்த

பின்பு அவளைத் தொட்டால் அது அவளுக்கு செய்யும் மாபெரும் கௌரவமாகும்.. அக்கௌரவத்தை அவன் கட்டாயம் அளிக்க வேண்டும்..

தன் காதலை கௌரவப் படுத்தினான் கரிகாலன்.. அவளது அருகாமையில் தேகம் தகித்த தருணங்களிலும் அவளைப் பழிச்சொல்லுக்கு ஆளாக்கும் கூடலை அவன் மேற்கொள்ளவே இல்லை..

'ஒருவேளை நான் அவளைக் கூடியிருந்தால்.. எனது புதல்வனை மடியிலிருத்திக் கொண்டு எனக்காக அவள் காத்திருந்திருப்பாளோ.. மாற்றானின் மனையாட்டியென என் முன் வராமல் இருந்திருப்பாளோ..'

பிற்காலத்தில் கரிகாலனின் மனம் குமுறியதுண்டு.. அவளைத் தொட்டுச் சுகிக்க முடியாத வெறியினைத் தணிக்க.. போர்க்களமே கதியாக காலம் கழித்ததுண்டு..

வரப்போகும் வாழ்க்கையினை முன் கூட்டியே அறிந்துவிட்டால் வாழ்வு வாழ்வாகுமா..? சிலர் வாழ்வில் இனிப்பான கனிகளை மட்டுமே நிறைத்திருக்கும் வாழ்வு.. சிலர் வாழ்வில் கத்திகளையும், யத்தங்களையும், நிற்காமல் கொட்டும் இதயக் குருதிகளையும், நெருப்பின் மத்தியில் வாழ நேரிடும் அவலங்களையுமல்லவா சாபங்களாக வழங்க காத்திருக்கிறது..?

இந்நியாயத்துக்கு ஆதித்த கரிகாலனும், நந்தினியும் மட்டும் அப்பாற்பட்டவர்களாக ஆகிவிட முடியுமா..?

அவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.. கூர்மையான அம்புகள், அவர்களின் இதயங்களைத் துளைத்துக்

கொண்டேயிருக்க வேண்டுமென்ற விதிவாங்கிப் பிறந்தவர்கள்.. உண்மையாகக் காதலித்தும் வாழ்வில் ஒன்று சேர முடியாமல் சதிச்செயல்களால் பிரிக்கப்படப் போகிறவர்கள்..

கரிகாலன் தன்னம்பிக்கை வாய்த்தவன்.. சோழகுல சக்கரவர்த்தியான சுந்தர சோழரின் மூத்த புதல்வனை கேள்வி கேட்கும் துணிவு எவருக்குண்டு என்ற இறுமாப்பு அவனுக்குண்டு..

அந்த இறுமாப்பில் அவன் நந்தினிக்கு அளப்பறிய வாக்குறுதிகளை அளித்தான்.. அவள்தான் அவன் மனையாட்டி என்ற நம்பிக்கை விதைகளை அவள் மனதில் ஊன்றினான்.. அவனுடைய அளவற்றக் காதல் மழையில் அவ்விதைகளை செடிகளாக்கி.. மரங்களாக்கி செழித்து வளரச் செய்தான்..

நந்தினி காதலித்தாள்.. ஓர் பிச்சியினைப் போன்று அவள் ஆதித்த கரிகாலனின் மீது மையல் கொண்டிருந்தாள்... அவன் அரசிளங்குமரன் என்ற எண்ணமே அவளுக்கு வரவில்லை.. அவனுடைய அனைத்து அடையாளங்களையும் மறந்து.. அவனை அவனுக்காகவே நேசித்தாள்.. ஆடை, ஆபரணங்களில் அவள் மோகம் கொண்டதில்லை.. ஆதித்த கரிகாலனை மணந்தால் பட்டத்துமகிஷியாகிவிடலாம் என அவள் பகல்சொப்பனம் காணவில்லை..

அவளுக்குத் தெரிந்ததெல்லாம்.. வாளேந்தும் போர் வீரனான ஆதித்த கரிகாலன் மட்டுமே.. அவனது வீரத்தையும்.. ஆண்மைத்திறத்தையும் அவள்

காதலித்தாள்.. அனைவரும் அவளின் நிலை குறித்து அவளிடம் பரிதாபம் காட்டிய வேளையில்.. ஆதித்தன் மட்டும் அவளையும் ஒரு பொருட்டாக நினைத்து.. மதித்து.. அவளுடன் தோழமை பூண்டான்.. பருவம் எய்திய பொழுதினில் காதல் சொன்னான்.. மற்றவர்களின் ஆட்சேபத்தையும், நினைவையும் பற்றி கவலை கொள்ளாமல் அவளுடன் பழையாறையைச் சுற்றி வலம் வந்தான்.. யாமத்தில் அவளை சந்தித்து சல்லாபித்தான்..

பாலைவனமான நந்தினியின் வாழ்வில் பாலைவனப் பூஞ்சோலையாக வந்தவன் ஆதித்த கரிகாலன் ஒருவனே..!

இப்புவியில் அவள் பிறந்து வளர்ந்ததிற்கான அர்த்தத்தை அவனே அவளுக்கு அளித்தான்..

அடிக்கடி யுத்தம் என்று அவளை அவன் பிரிந்து செல்லும் பொழுதுகளில் அவள் வாடி வதங்கிப் போய் விடுவாள்.. ஒவ்வொரு முறையும் அவன் கழுத்தை அவளது மலர்க்கரங்களால் வளைத்து.. பரிதவிப்புடன் இறைஞ்சுவாள்..

"இந்த யுத்தத்தைத் தவிர்க்க முடியாதா அன்பே..? என்னுடனே தாங்கள் இருந்து விடலாகாதா..?"

அவள் விழிகள் யாசிக்கும்.. அந்த யாசிப்பில் கரிகாலனின் மனம் தவித்துப் போய்விடும்..

எதன் பொருட்டு அவள் அவனிடம் யாசிக்கிறாள்..? அவன் ஆணையிட்டால் அதை சிரமேற்கொள்ள அவன் சித்தமாக இருக்கிறானே.. இருந்தும் ஏன் அவள் யாசிக்கிறாள்..?

"விரைவில் திரும்பி விடுவேன் கண்மணி.."

"தற்போது விரைந்தேகுவதை தவிர்த்தலாகாதா..?"

"போர் புரியச் செல்வது மன்னர் குலத் தோன்றலின் கடமை நந்தினி.. அதிலிருந்து தப்பிக்க நினைப்பவன் சுத்த வீரன் அல்லன்.."

"அறிவேன் அன்பே..! இருப்பினும் என் மனது அச்சம் கொள்கிறது.. தாங்கள் யுத்த நிமித்தம் எனை நீங்கிச் செல்லும் ஒவ்வொரு தருணத்திலும் தாம் திரும்பி வரும் பொழுதினில் நான் இருப்பேனோ, இல்லாமல் காற்றில் கரைந்து விடும் கற்பூரம் போல காணாமல் போய் விடுவேனோ என என் மனம் பதைக்கிறது இளவரசே..!"

நடுங்கும் நந்தினியின் குரலில் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டான் ஆதித்த கரிகாலன்.. அவனை இறுக்கிப் பிணைத்து தன்னுடன் பிணைத்துக் கொண்டன நந்தினியின் கரங்கள்.. அவளின் அந்தச் செய்கையில் அவனை விட்டு விடக் கூடாதென்ற தவிப்பும், துடிப்பும் இருந்தன.. ஆதித்தன் துணுக்குற்றான்..

அவனது காதலி எதன் பொருட்டு அச்சம் கொள்கிறாள்..?

"கலங்காதே கண்மணி.."

"இயலவில்லை இளவரசே..!"

"எமது காதலின் மீது சந்தேகமா..?"

"அல்ல இளவரசே.. தம் தேகம் எனக்கானது.. எள் அளவும் இதில் சந்தேகம் கொள்ளேன்.. எமது சந்தேகம் விதியின் மீது.."

நந்தினியின் சஞ்சலம் கொண்ட விழிகள் உரைக்க விரும்பியது எவற்றை..? உரைக்க வந்தும் உரைக்காமல் ஏன் அவள் மௌனித்தாள்..? அவள் மனதிலிருந்த அவளைக் கொன்று உண்ணும் இடையூறுகள்தான் எவை..? அச்சேதியை அவள் சொன்னால் ஆகாதா..?

*"சுந்தரீ..! கண்ணால் ஒரு சேதி..*
*சொல்லடி.. இந்நாள் நல்ல தேதி.."*

ஆதித்த கரிகாலன் ஒற்றை விரலால் அவளது வதனம் உயர்த்தி விழிகளுக்குள் உற்று நோக்கிப் பாடினான்.. அவன் பாடலில் அவளது வதனத்தில் காதலுடன் கூடிய மென்மை படர்ந்தது.. கலக்கம் மறையாத விழிகளுடன் கண்ணீர் திரையிட அவள் நைந்த குரலில் பதில் பாடலைப் பாடினாள்.. அப்பாடல் வரிகளில் அவளது அச்சம் கலந்த காதல் விரவியிருந்தது.. அது ஆதித்த கரிகாலனின் மனதை அசைத்தது..

*"என்னையே தந்தேன் உனக்காக..*
*ஜென்மமே கொண்டேன் அதற்காக.."*

ஆதித்தனின் உடலில் கதிரவனின் ஒட்டு மொத்த கதிர்களும் பாய்ந்தன.. அவளின் காதலில் அவன் மெய்யுருகிப் போனான்.. கலக்கம் கொண்ட அவள் விழிகளின் கண்ணீர் துடைத்து வாக்குக் கொடுக்கும் விதத்தில் இசைத்தான்..

*"நானுனை நீங்க மாட்டேன்..*
*நீங்கினால் தூங்க மாட்டேன்..*
*சேர்ந்ததே நம் ஜீவனே..*
*சுந்தரீ கண்ணால் ஒரு சேதி..*
*சொல்லடி.. இந்நாள் நல்ல தேதி.."*

அவன் விழிகளும்.. அவள் விழிகளும் கலந்தன.. தவிப்புடன் கூடிய அவள் விழிகள்.. அவனது கரத்தில் இருந்த வாளின் மீதும்.. அவன் ஏறுவதற்காக காத்து நின்ற புரவியின் மீதும் அர்த்தத்துடன் படிந்தன.. எதை உரைத்து அவனைத் தடுப்பது என்ற துயருடன் அவள் பாடினாள்..

*"வாய் மொழிந்த வார்த்தை யாவும்*
*காற்றில் போனால் நியாயமோ..?*
*பாய் விரித்துப் பாவை பார்த்த..*
*காதல் இன்பம் மாயமோ..?"*

அவளின் வினாவில் ஆதித்த கரிகாலனின் தேகம் தகித்தது.. அவளது தேகமெங்கும் அவன் கரங்கள் படர்ந்து படிந்து ஊர்ந்தன... சேர முடியாத தவிப்பினில்.. அத்தகிப்பை வெல்ல முடியாத அக்காதலர்களின் தேகங்கள் கொதித்தன..

*"வாள் பிடித்து நின்றால் கூட*
*நெஞ்சில் உந்தன் ஊர்வலம்..*
*போர்க்களத்தில் சாய்ந்தால் கூட*
*ஜீவன் உன்னைச் சேர்ந்திடும்.."*

அவன் மனதை அவன் உரைத்து விட்டான்.. அதில் நந்தினியின் நெஞ்சம் விம்மியது.. இத்தகைய காதலை அடைந்தும் ஏன் அவளைத் துன்பம் துரத்துகிறது.. அவனோடு கூடும் நாள் வரக் கூடுமோ..?

*"தேநிலவில் நான் வாட..*
*ஏன் இந்தச் சோதனை..?"*

அவள் கண்ணீரில் கரைந்தாள்.. ஆதித்தன் அவள் வதனத்தை தன்னிரு கரங்களால் அழுந்தப் பற்றி..

*"வான் நிலவை நீ கேளு..*
*கூறும் என் வேதனை.."*

என்று விழிகள் சிவந்தான்.. அவளது விழிகள் பரிதவித்தன..

*"எனைத்தான் அன்பே..!*
*மறப்பாயோ..?"*

அவள் பதறினாள்... அவனது கரங்களின் இறுக்கத்தில் அவளது கன்னங்கள் வலித்தாலும் அந்த வலியில் தெரிந்த அவனது காதலின் உறுதியில் அவள் இன்பமே கொண்டாள்..

*"மறப்பேன் என்றே*
*நினைத்தாயோ..?"*

அவன் முரட்டுத்தனமாக அவளது அதரங்களைத் தேடிக் குனிந்தான்.. அவளது அதரங்களில் பதிந்த அவனது அதரங்களின் அழுத்தமான ஸ்பரிசத்தில் அவள் தேகம் நடுங்கி கண்களை மூடினாள்.. இதழோடு இதழ் சேர்ந்த அந்த இனிய முத்தத்தின் கால அளவு நீடிக்க வேண்டும் என்று இருவருமே விருப்பம் கொண்டனர்.. சேரத் துடிக்கும் அவர்களின் தேகங்களும்.. சேர்ந்திடமுடியாத சூழலும் சேர்ந்து அந்தக் காதலர்களை உன்மத்தமாக்கி.. சூறாவளிக் காற்றில் சுழன்றடித்தன.. நந்தினியை விட்டு விலகி புரவியின் அருகே செல்ல முனைந்தான் கரிகாலன்.. தடுத்த நந்தினி அவன் மார்பில் சரிந்தாள்.. அவளைத் தழுவிக் கொண்டவன் தயங்கி நின்றான்.. அவளை மீறிச் செல்ல அவனது கால்கள் யத்தனிக்கவில்லை..

*"சோலையாவும் முட்கள் தோன்றும்..*
*நானும்.. நீயும்.. நீங்கினால்..*
*பாலை எங்கும் பூக்கள் ஆடும்..*
*நான் உன் மார்பில் தூங்கினால்.."*

கண்ணீருடன் அவன் கழுத்தைக் கரங்களால் வளைத்து அவள் விம்மினாள்.. அவளைத் தேற்றும் வகையறியாது திகைத்துப் போன ஆதித்த கரிகாலன்.. அவளது கேசத்தைக் கோதி ஆறுதல் படுத்தியபடியே..

*"மாதங்களும் வாரம் ஆகும்..*
*நானும்.. நீயும்.. கூடினால்..*
*வாரங்களும் மாதம் ஆகும்..*
*பாதை மாறி ஓடினால்..."*

என்று புரவியைச் சுட்டிக் காட்டிப் பிரிய வேண்டிய கட்டாயத்தை உணர்த்தியபடியே பாடினான்..

அவளது தேகத்தை வருடிக் கொடுத்த அவன் கரம் தந்த ஸ்பரிசசுகத்தில் திளைத்தவளுக்கு அதை இழக்க மனம் வரவில்லை..

*"கோடி சுகம் வாராதோ..*
*நீயும் எனைத் தீண்டினால்.."*

ஏக்கத்துடன் பாடியவளின் பிறைநுதலான நெற்றியில் மெலிதான முத்தம் பதித்து மோகித்த ஆதித்த கரிகாலன்..

*"காயங்களும் ஆறாதோ..*
*நீயும் எதிர் தோன்றினால்.."*

என்று யுத்தம் முடிந்து வரும் பொழுதை நினைவூட்டிப் பாடினான்..

அன்று செல்பவன் என்று திரும்புவான் என்று மனம் பதைத்தாள் நந்தினி.. அவன் வரும் நாளில் அவள் இருப்பாளோ.. இல்லை மறைவாளோ என்ற கண்ணீரை அவளது கண்கள் சொரிந்தன..

*"உடனே வந்தால்..*
*உயிர் வாழும்..."*

சடுதியில் அவனைத் திரும்பி விடச் சொல்லி அவள் இறைஞ்சினாள்..

*"வருவேன்.. அந்நாள்..*
*வரக் கூடும்.."*

கரிகாலன் அவளைப் பிரிந்து புரவியில் ஏறினான்.. விரைந்து பறந்தோடிய புரவியின் குளம்புகள் எழுப்பிய புழுதியின் தூசிப் படலத்தில் அவள் விழிகளின் பார்வையிலிருந்து மறைந்தோடிப் போனான்.. நந்தினி தனித்து துணையின்றி நின்றாள்..

---

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



## 5

## *சுட்டும் விழிச் சுடர் சொன்ன சொந்தத்தினை நீ அறிவாயா..?*

சித்தார்த்தன் நம்பியாரைப் போல கைகளை பிசைந்தபடி தாமோதரனைப் பார்த்து வில்லன் சிரிப்பொன்றை உதிர்த்து வைத்தான்..

"எல்லாம் இவனாலே வந்ததுங்க.." தாமோதரன் சித்தார்த்தனைக் காட்டிக் கொடுத்து விட முடிவு செய்து விட்டான்..

"நிங்க செய்கிற அழிச்சாட்டியத்துக்கு என் அண்ணனை எதுக்காக கை காட்டறிங்க..? அவரென்ன உங்களுக்கு இந்தப் பெண்ணை இன்ட்ரொடுயூஸ் செய்து வைத்தாரா..?"

"ஒருவகையில் அப்படித்தாங்க.."

"என்னது..?!"

"யெஸ்.. மிஸ் நீரஜா..! உங்க அண்ணனோட செக்கரட்டரி வேலைக்கு அப்ளை பண்ணின பெண் என்கிற விதத்திலதான் எனக்கு அவங்களைத் தெரியும்.. இந்தப் போட்டோவில பார்த்ததுதான்.. நேரில இந்த இண்டர்வியூவிலதாங்க பார்த்தேன்.."

"அட..! பர்ஸ்ட் சைட்லேயே லவ்வா..? கேட்டுக்கிட்டியா நீரு..! இது காதல்..!"

"அடிவாங்கப் போறடா சித்தார்த்.."

"எதுக்கு..?"

"ஊடே இன்டர்பியர் ஆகிறதுக்கு.. நீரஜா.. நீங்க இவன் பேசறதை கவனிக்காதீங்க.. இவன் உங்ககிட்ட உண்மை என்னன்னு சொல்லவிட மாட்டான்.. அதுக்குத்தான் டிராமா பண்ணிக்கிட்டு இருக்கான்.."

"யார்..? நான்..? டிராமா பண்றேன்..?"

"நீ.. நீ.. நீ.. நீதான் டிராம பண்ற.. போதுமா..?"

"அண்ணா ப்ளீஸ்.. அவர் பேச வந்ததை பேசவிடு.."

"யு டூ நீரு..?"

"யெஸ்.. ஐ டூ.. கொஞ்ச நேரம் வேற வேலை இருந்தாப் பாரேன்.. நான் இவர் என்னதான் சொல்றாருன்னு கேட்டுப் பார்க்கிறேன்.."

"நீ புத்திசாலி நீரு.."

"இப்ப எதுக்காக ஐஸ் வைக்கிற..?"

"இவன் ஜெகஜால கில்லாடி.."

"உன்னை விடவா..?"

"பேச்சிலேயே மயக்கிருவான்.."

"நான் மயங்க மாட்டேன்.."

"உண்மை போல பொய் பேசுவான்.."

"பேசித்தான் பார்க்கட்டுமே.. அதைக் கண்டு பிடிக்கலைன்னா நான் நீரஜா இல்ல.. என்னிடமே பிளே பண்ணுவாரா..?"

"டைம்தான் வேஸ்டாகும்.."

"வேஸ்டாகிறது என்னோட டைம்.. ஸோ, யு டோன்ட் வொர்ரி.."

நீரஜா பிடிவாதமாக இருந்ததில் சித்தார்த்தன் அடுத்து என்ன செய்வது என்று யோசித்தான்.. அவனுக்குத் தெரியும்.. என்னதான் கண் முன்பு ஆதாரங்கள் குவிந்து கிடந்தாலும் நீரஜா தாமோதரனின் மீது அவ்வளவு எளிதாக சந்தேகப்பட்டு விட மாட்டாள்.. அவன் மீதான அவளது மதிப்பீடு அப்பேற்பட்டது..

"தாமு பொய் சொல்லிட்டான் நீரு.." என்று கோள் சொன்னால்..

"எதுக்காக பொய் சொன்னார்..? யாரைக் காப்பாற்ற பொய் சொன்னார்..?" என்று கேட்டு வைப்பாள்..

அவ்வளவு நம்பிக்கை அவன்மீது..

யாரோ ஒரு பெண்ணிற்கு வேலை கொடுக்கும்படி அவன் சிபாரிசு செய்தாலும் அதில் அவன் தரப்பு நியாயம் என்னவாக இருக்கக்கூடும் என்று தான் அவள் யோசிப்பாள்.. அதுவரை அவள் முறைத்துக் கொண்டு இருந்ததே பெரிய விசயம்.. அந்த முறைப்பும் பெண்மைக்கே இயல்பான உரிமை உணர்வில் வந்தது..

"பாரு நீரு.."

"உன்னைப் பார்த்த வரைக்கும் போதும்.. நீ வொர்க்கைக் கவனி.. நீங்க சொல்லுங்க மிஸ்டர் தாமோதரன்.."

அவளின் மிஸ்டர் என்ற அழைப்பில் தாமோதரன் இமைக்காமல் அவளைப் பார்த்து வைத்தான்.. நீரஜாவின் இதழ்கள் வளைந்து சுழித்தன..

'அம்மணி பழிவாங்கறாங்களாக்கும்.. இவங்களை நாங்க மிஸ் நீரஜான்னு சொல்லிட்டோமாம்.. அதனால மிஸ்டர் தாமோதரன்னு இந்தப் போடு போடறாங்க..'

தாமோதரன் உதட்டை வளைத்தபடி அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் நீரஜாவின் கன்னத்தில் ரோஜாக்கள் பூத்தன.. அவன் பூந்தோட்டக் காவல்காரனாகி விட்ட போதை கொண்டான்..

"ஆக்சுவலா எனக்கு இந்தப் பெண்ணுக்கு வேலை வாங்கிக் கொடுக்கனும்னு இன்டென்சன் இல்லைங்க.. என் எய்மே வேற.."

"என்ன எய்மாம்..?"

"வேற ஒரு பெண்ணுக்கு இந்த வேலையைக் கொடுக்கனுமுன்னு உங்க அண்ணன் டிசைட் பண்ணினான்.. அதைத் தடுக்க எனக்கு வேற வழி தெரியலைங்க.. அந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கிறதை தடுத்து நிறுத்தனும்னா அந்த வேலையை வேறொரு பெண்ணுக்கு கொடுக்கனும்.. அதனால இந்தப் பொண்ணு வேண்டப்பட்ட பொண்ணுன்னு உங்க அண்ணன்கிட்ட உடான்ஸ் விட்டேன்ங்க.. இதுதாங்க உண்மை.."

தாமோதரன் சொல்லச் சொல்ல நீரஜாவின் முகம் மாறியது.. அவள் தாமோதரனை விடுவித்து விட்டு சித்தார்த்தனை முறைத்தாள்..



## 6

*போர் புரியச் சென்றவனால்*
*போர்க்களமானது பேதை மனது..*

வருவேன்.. அந்நாள் வரக்கூடும் என்று வாக்குக் கொடுத்து விட்டுப் போன ஆதித்த கரிகாலனால் சடுதியில் பழையாறைக்குத் திரும்பிவிட முடியவில்லை..

அவனில்லாத தினங்களில் நந்தினி குந்தவையின் கோபத்திற்கு ஆளானாள்..

மலர் வாசத்தை மறைத்து வைத்திட இயலாது.. காதலும் அத்தகையதுதான்.. என்னதான் யாமத்தில் பொய்கைக் கரையிலும்.. பூஞ்சோலையிலும்.. நீரோடையிலும் மறைந்து மறைந்து சந்தித்து சல்லா பித்தாலும்.. மன்னர்மகன்.. தாய், தந்தை யாரென்று தெரியாத ஓர் அநாதைப் பெண்ணைக் காதலிப்பதை அரண்மனையின் சுவர்கள் அறியாமல் விட்டு விடுமா..?

குந்தவையின் செவிகளுக்கு விவரம் எட்டியது.. அவள் சுந்தரசோழ சக்கரவர்த்திக்கு அவ்விவரம் எட்டி விடாமல் தடுத்து விட்டாள்.. நந்தினியின் வதனத்திலிருந்த மந்தஹாசமும்.. ஆதித்த கரிகாலனைக் குறித்த பேச்சு வந்தால் அவளது விழிகளில் சுடர்விடும் பிரகாசமும் அவள் மனதைக் குந்தவைக்கு காட்டிக் கொடுத்து விட்டன..

குந்தவை வெகுண்டாள்.. ஆதித்த கரிகாலனின் எதிர்காலம் குறித்த கவலை அவளது கோபத்தை அதிகரித்தது.. கரிகாலன் இல்லாத தனிமையில் அவள் நந்தினியை வரவழைத்தாள்.. தோழியைக் காணப் போகும் உற்சாகத்துடன் வருகை தந்தவளை வரவேற்காமல்.. அவள் அமர ஆசனமும் தராமல் நிற்கு வைத்து நிமிர்வாக சீறினாள் குந்தவை..

"யார்.. நீ..?"

இந்த வினாவில் திகைத்துப்போனாள் நந்தினி.. அவள் யாரென்று குந்தவை அறிய மாட்டாளா..?

"யாதென்று உரைத்திடு குந்தவை.. நான் யாரென்று நீ அறிய மாட்டாயா..? எதன் பொருட்டு இவ்வினாவை எழுப்புகிறாய் தோழி..?"

நந்தினியின் அழைப்பில் வதனம் சுளித்தாள் குந்தவை..

"தோழியா..? எவருக்கு எவர் தோழி..? எமக்கு நீ இணையா..? உன் தாய், தந்தை எவர் என்று கூட அறியாதவள் நீ..! உன்னை வளர்ப்பவர்களுக்குக்கூட நீ யாருக்கு மகளாகப் பிறந்தாய் என்று தெரியாது.. அவ்விதமிருக்க.. எவ்வாறு நீ என்னைத் தோழியென்று அழைக்கலாம்..? எவர் அளித்த துணிவு இது..?"

"குந்தவை..!"

"பெயரை உரைக்காதே.. அதற்கான தகுதி உனக்கில்லை.. சோழர் குலதிலகம் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வியை பெயர் உரைத்து அழைப்பாயா..?"

"அவ்விதம்தானே.. இத்தினம் வரை அழைத்து வந்திருக்கிறேன்..?"

"வழக்கத்தை மாற்று.. 'இளவரசி..' என அழைத்துப் பழகு.. அது மட்டுமல்ல.. பழகக்கூடாத பழக்கத்தையெல்லாம் இத்துடன் நீ நிறுத்திக் கொண்டாக வேண்டும்.. புரிந்ததா..?"

"புரியவில்லை இளவரசி.."

"ஹ..! உனக்காப் புரியாது..? உலகுக்கே புரிய வைப்பவளல்லவா நீ..! பட்டத்து இளவரசனாகப் போகும்

என் தமையனை உன் கடைக்கண் பார்வையில் வலை வீசிப் பிடித்தவளல்லவா.. நீ..!"

"இளவரசி..!"

நந்தினி கூவினாள்.. அவளது தேகம் நடுங்கியது.. குந்தவையின் கடுமையில் அவள் விழிகளில் இருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்தது..

"இது கூத்து மேடையல்ல.. உனது நவரச நடிப்பை கண்டு களிக்க இங்கே மக்கள் கூட்டமில்லை.. எனக்கோ கூத்துப் பார்ப்பதில் விருப்பமிருந்ததில்லை.. எனவே.. உனது நடிப்பை வேறு எங்கேனும் கூத்து மேடை போட்டு நடித்துக் காட்டு.. உன் கண்ணீர் கண்டு ஏமாற நான் ஒன்றும் ஆதித்த கரிகாலனில்லை.."

நந்தினியைத் துச்சமாக பார்த்தபடி பேசினாள் குந்தவை.. அவளது வார்த்தைகளில் நந்தினியின் மனம் ரணமானது.. அவள் துடித்துப் போனாள்.. அவளது பிறப்பையும், ஏழ்மையையும் குந்தவை குத்திக் காட்டிப் பேசியதில் நந்தினியின் உள்ளம் நைந்தது..

"ஆதித்த கரிகாலன் ஒன்றும் நீ விளையாட விரும்பும் மரப்பாச்சி பொம்மையல்ல.. அவன் மாமன்னனாகப் போகிறவன்.. வருங்கால சோழ சக்கரவர்த்தி..! அவன் நிழலைத் தீண்டக் கூட தகுதியில்லாதவள் நீ.. அவனருகில் அரியணையில் அமர ஆசை கொள்கிறாயா..? ச்சீ.. இதைக் குறித்த நாணம் உனக்குள் வரவில்லையா..? நீ என்ன செய்வாய்.. கற்றுத்தரத்தான் உனக்குப் பெற்ற தாய் இல்லையே.."

நந்தினியின் இதயத்தில் கூர் அம்பென குந்தவையின் வார்த்தைகள் பாய்ந்து, பாய்ந்து காயப் படுத்தின.. கொட்ட ஆரம்பித்த குருதிப் புனலில் அவள் காதல் குற்றுயிராய் நனைந்தது..

"மற்றவற்றை எங்கு கற்றாய்..?"

"எதனைக் குறித்து வினவுகிறீர்கள் இளவரசி..?"

"ஆஹா..! உனக்கு ஒன்றும் தெரியாது பார்.. நீ பச்சிளங்குழந்தைதான்.. கள்ளி..! எனது தமையனை மயக்கி உன் கூந்தலின் நுனியில் முடிச்சிட்டுக் கொள்ளும் வித்தை உனக்குக் கரம் வந்த கலையல்லவா..? அருமை.. உன்னுடன் தோழமை பூண்ட பாவத்திற்கு.. சோழர் குலத்திற்கு தீராத தலைவேதனையை உண்டு பண்ணி விட்டாய்.. நீ எல்லாம் நன்றாகவே வருவாய்.."

"போதும் இளவரசி..! நான் என்ன குற்றம் இழைத்தேன்..? எதன் பொருட்டு இத்தகைய கடும் வார்த்தைகளை தாம் உரைக்க வேண்டும்..?"

"ஊம்..? உன்னை இவ்விதமாக தூற்ற வேண்டுமென்று எனக்கு பெருத்த ஆசை என்று எண்ணிக் கொள்.. அல்லாது போனால்.. எனக்கு இவ்விதமான நேர்த்திக்கடன் உண்டென்றும் நினைத்துக் கொள்.. எல்லாம் எமது தலைவிதி.. உன்னிடம் இவ்விதமாக போராட எமக்கு மட்டும் விருப்பமா..? சோழர்குல இளவரசனிடம் இழைந்து சல்லாபித்துவிட்டு என்ன குற்றம் இழைத்தேனென்று வினவுகிறாய்.. உனது மனத் துணிவு எவருக்கு வரும்..?"

"இளவரசி.."

நந்தினிக்கு உரையாட நா எழவில்லை.. அவளுக்கும்.. ஆதித்தகரிகாலனுக்குமான அந்தரங்கக் காதல் எவ்வாறு பகிரங்கமானது என அவள் அதிர்ந்தாள்..

"சொல்.. இப்போது உனது வார்த்தைகள் எங்கே காற்றாடப் போயின..? என்ன குற்றம் இழைத்தேனென்று வினவினாயே.. இதுதான் நீ இழைத்த குற்றம்.."

"காதலிப்பது குற்றமாகுமா இளவரசி..?"

"உன்னைப் போன்ற ஒருத்தி.. என் தமையனைப் போன்ற பட்டத்து இளவரசனைக் காதலித்தால் அது குற்றம்தான்.."

நந்தினியின் இதயம் சூட்டுக் கோலின் தீண்டலை உணர்ந்து துடித்தது.. குந்தவையின் குற்றச்சாட்டில் குன்றிப் போனாள் நந்தினி..

"அடைக்கலம் என்று வந்தவளுக்கு அடைக்கலம் அளித்தோமே.. அது நாங்கள் செய்த தவறா..? அரசகுலம் என்று விலகி நிற்காமல் உன்னுடன் இணையாக உரையாடிப் பழகினோமே.. அதுவும் நாங்கள் செய்த தவறா..? உண்ட இல்லத்திற்கே நீ இரண்டகம் எண்ணுவாயா..? உணவிட்டரின் குலத்தோன்றலின் மனம் சலனப்படும்படி நீ சதிராடலாமா..?"

"நான் நடன மங்கையல்ல இளவரசி.."

"அவர்கள் உன்னைவிடவும் உயர்ந்தவர்கள்... அவர்களுக்கு நீ இணையா..?"

குந்தவை பேசப்பேச... 'நான் எவருக்குமே இணையில்லையா..?' என்ற துக்கம் நந்தினியின் மனதில் பொங்கியது.. அவள் பொருமினாள்..

"இத்தனை சீற்றம் ஆகாது குந்தவை.. உனது தமையன் மீது நான் காதல் கொண்டேன்தான்.. அவர் பட்டத்து இளவரசராகப் போகிறவர் என்பதற்காக அல்ல.. அவரின் காதலால் அவர்மீது காதல் கொண்டேன்.. அவரின் வீரத்தால் அவர் மீது ஆசை கொண்டேன்.. உங்களது குலப் பெருமை எமக்கெதற்கு..? இந்த நந்தினி ஆதித்த கரிகாலனைத்தான் காதலிக்கிறாள்.. அரசிளங்குமாரரைக் காதலிக்கவில்லை.." ஆக்ரோசத்துடன் கூறினாள் நந்தினி..

"ஓ.." குந்தவை அதரங்களைக் குவித்தாள்..

"இவ்விதம் பேசித்தான் எனது தமையனை மயக்கினாயா..?"

"இளவரசி.." நந்தினி அலறினாள்..

"ஸ்ஸ்ஸ்.." குந்தவை அதரங்களின் மீது விரல் வைத்து எச்சரித்தாள்..

"சப்தம் எழுப்பாதே.. இந்த விவகாரம் சோழ தேசத்தில் பரவ வேண்டும் என்பதுதான் உனது சித்தமா..?"

"அல்ல இளவரசி.."

"நீ எவ்விதமாக மாற்றி.. மாற்றி.. உரைத்தாலும் மெய் என்பது ஒன்றுதான் நந்தினி.. என் தமையன்மீது காதல் கொள்ளும் தகுதி உனக்கில்லை.. உனது ஆசை எத்தினத்திலும் நிறைவேறாது.."

"வேண்டாம் இளவரசி.. இரக்கமின்றி உரைக்காதீர்கள்.."

குந்தவையின் வதனத்தில் கடுமைபரவியது.. அவள் எரித்து விடுவதைப் போல நந்தினியைப் பார்த்து வைத்தாள்..

"நீயென்ன பிச்சியா..?"

"காதல் கொண்டவர்கள் அனைவரும் பிச்சிதான் இளவரசி.."

"காதல்..! அதற்கும் ஓர் தகுதி வேண்டாமா..? குப்பை மேட்டின் தூசியானது கோபுரத்தை அண்ணாந்து கூடப் பார்க்கக் கூடாது.. விலகிப் போய்விட வேண்டும்.."

'நான் தூசியா..?'

நந்தினி துவண்டு போனாள்.. குந்தவையின் உதாசீனம் அவளை அகல பாதாள துக்கப் படுகுழிக்குள் தள்ளி விட்டது..

"என் தமையன் விண்..! நீ மண்..! விண்ணுக்கும், மண்ணுக்கும் பாதையிட்டவர் இப்புவியில் இல்லை.. புரிந்து.. பிரிந்து போய்விடு.."

சொல்ல வேண்டிய அறிவுரைகளை சொல்லியாகி விட்டது என்ற விதத்தில் குந்தவை ஒற்றை விரலை அசைத்து நந்தினிக்கு அரண்மனையின் வாயிலைக் காண்பித்தாள்..

அவமானத்தில் வதனம் சிறுத்துப் போனவளாக நந்தினி அரண்மனைவாயிலை நோக்கி நடந்தாள்.. மறுதினம் அவளுக்கு செம்பியன் மாதேவியிடமிருந்து அழைப்பு வந்துவிட்டது..

ஈசான பட்டரின் இல்லத்தின் முன்பாக இருந்த தோட்டத்தில் காய்கறி பாத்தியிட்டுக் கொண்டிருந்த நந்தினியிடம் ஆழ்வார்கடியான் வந்து நின்றான்.. அவனுக்கு பெற்றோர் இட்ட நாமம் 'திருமலை' என்பதாகும்..

"சொல்.. திருமலை அண்ணா.. உனக்கேதும் பணி புரிய வேண்டுமா..?"

நந்தினி நிமிராமல் காய்கறிப் பாத்திகளுக்கிடையே இருந்த களைகளை அகற்றிய வண்ணம் வினவினாள்..

"நீ எனக்குப் பணி புரியத் தேவையில்லை சகோதரி.. நான் வணங்கும் நாராயணனுக்கு சேவை செய்.. அவன் நினைவாக பாசுரம் பாடி.. பக்தையாக உன் காலத்தைக் கழி நந்தினி.. நீ தேடும் அமைதி உனக்குக் கிட்டக்கூடும்.."

"அவ்விதமே ஆகட்டும்.."

நந்தினி மெலிதாக நகைக்க முயன்றாள்.. குந்தவையின் சொல்லம்புகள் தைத்த மன ரணங்கள் ஆறாத நிலையில் அவளால் புன்கைக்க முடியவில்லை..

"நீ எனது சகோதரன்தானே திருமலை அண்ணா..?"

"இதிலென்ன சந்தேகம் நந்தினி..? யாம் தமது தமையன்தான்.."

"எந்தத் தமையனாவது.. திருமணம் புரியும் அகவையில் இருக்கும் தங்கையிடம் வந்து சன்யாசினிக் கோலம் பூணச் சொல்வானா..? தாம் மட்டும் எவ்விதம்.. அவ்விதம் உரைக்கின்றீர்கள்..?"

ஆழ்வார்க்கடியான் நந்தினியை இமைக்காமல் பார்த்து வைத்தான்.. அவன் பார்வையில் தன் பார்வையைத் தழைத்துக் கொண்டாள் நந்தினி..

"அதற்கென்ன தங்காய்..! நாளைய தினமே.. உனக்கு ஏற்றவொரு மணமகனைத் தேர்ந்தெடுத்து அழைத்து வருகிறேன்.. நீ மறுமொழி உரைக்காமல் அவனுக்கு மாலை சூடுவாயா..?"

"என்னால் இயலாது.."

நந்தினி பதறிப்போய் சடுதியில் அதை மறுத்தாள்.. ஆழ்வார்க்கடியானின் பார்வை அவளைத் துளைத்தது..

"உன்னால் இயலாது அல்லவா..? ஏன் இயலாது என்பதனை நான் வினவ மாட்டேன்.. அதற்கான விடையை அறிந்தவன் நான்.. நீ நினைக்கும் எண்ணம் நிறைவேறாது சகோதரி.. வேறு எவர்க்கும் நீ மணமாலையை சூடவும் மாட்டாய.. அதன் பொருட்டுத்தான் நான் உன்னை இறையருளில் மனதைச் செழுத்தச் சொன்னேன்.. தங்காய்..! உன் உள்ளத்தில் சாந்தி நிலவ வேண்டுமானால் நீ அந்தப் பரந்தாமனின் தாள் பணிந்து இறை தொண்டாற்றுவது அவசியம் சகோதரி.. இறையருள் ஒன்றே உமைக் காக்க வல்லது.."

இவ்விதம் உரைக்கும் ஆழ்வார்கடியானிடம் ஊருக்குத்தான் உபதேசமா..? உமக்கில்லையா எனச் சீற நந்தினியால் இயலாது.. ஏனெனில் அவன் அந்த மாயக் கண்ணின் ஆழ்ந்த பக்தன்.. திருமணம் என்பதை மறந்து.. திருமலையெனும் நாமத்தையும் துறந்து..

'ஆழ்வார்க்கடியன்' ஆக மாறிப் போனவன்.. எடுத்துக் காட்டாக திகழ்பவனிடம் எவ்விதம் சீறுவது..?

ஈசனின் சேவைக்கு தனது வாழ்நாளை அர்ப்பணித்த ஈசான பட்டரின் இளையசகோதரன் விஷ்ணு பக்தனாக மாறிப் போனது விந்தையிலும் விந்தை..! தமையன்..

*"பித்தா..! பிறைசூடி..!*
*பெருமானே..! அருளாளா...!"*

என்று பாட ஆரம்பித்தால்... அவரது இளைய சகோதரன்..

*"குறையொன்றுமில்லை..*
*மறைமூர்த்திக் கண்ணா..!*
*குறையொன்றுமில்லை கண்ணா...!*
*குறையொன்றுமில்லை கோவிந்தா..!"*

என்று பாடி வைப்பான்.. அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையே அடிக்கடி சிவன் பெரியவரா.. விஷ்ணு பெரியவரா என்ற வாக்குவாதம் நிகழும்.. கட்டிப் புரளாத குறையாக இருவரும் எம்பி.. எம்பி சொற்போர் புரிவார்கள்.. வாக்குவாதத்தை நிறுத்தாவிட்டால்.. அடுப்படியில் இருந்து வெளிநடப்பு செய்து விடுவதாக ஈசானபட்டரின் மனைவி அச்சுறுத்தினால் மட்டுமே இருவரும் வயிற்றுக்கான உணவிற்கு வகை செய்து கொள்ள வேண்டும் என்ற தீர்க்கத் தரிசனத்தோடு ஒன்று படுவார்கள்.. இல்லையெனில் ஈசான பட்டரின் இல்லத்தரசி.. வெறும் பாத்திரத்தை உருட்டி.. வெறும் அகப்பையைக் கண்களில் காண்பித்து விட்டு சென்று கொண்டே இருப்பாளே.. அதன்

பொருட்டு இருவரும் எதற்கு வம்பு என்று.. அவள் கண்களில் தென்படும் போதெல்லாம்..

*"அரியும் சிவனும் ஒன்று..*
*அதை அறிந்து வாழ்வது நன்று.."*

என்று ஒருமித்த குரலில் பாடி வைப்பார்கள்..

இவ்வாறு அகப்பையைக் காண்பித்து மிரட்டியே.. சைவத்தையும், வைணவத்தையும் சமரசம் செய்து வைத்த பெருமை ஈசானபட்டரின் மனைவியையே சாரும்.. செம்பியன் மாதேவி இதுகுறித்து அடிக்கடி..

"வாள்முனை சாதிக்காததை.. உமது மனைவியின் கரத்திலிருக்கும் அகப்பை சாதித்திருக்கிறதே.." என்று ஈசான பட்டரிடம் உரைத்து வியந்து போவாள்..

இப்பேற்பட்ட வைஷ்ணவன்தான் ஆழ்வார்க்கடியான்.

---

## *ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 6

*எங்கேயோ உனைப் பார்த்தேன் – அது*
*எங்கேயெனும் தேடுதலில் என் நாள்களைத்*
*தொலைத்தேன்..*

"இதை ஏன் நீ முதலிலேயே சொல்லலை அண்ணா.." கடுமையாக கேட்டாள் நீரஜா..

இருந்திருந்து எப்போதாவது ஓர் முறைதான் அவளால் தாமோதரனைப் பார்க்க முடிகிறது.. அப்பேற்பட்ட

அரிய சூழல்களையும் சித்தார்த்தன் இப்படி வெடி வைத்து நாசமாக்க வேண்டுமா என்ற கடுங்கோபத்துடன் அவள் பல்லைக் கடித்தாள்.

“ஹேய்..! வாட்'ஸ் ராங் வித் யு மை டியர் சிஸ்டர்..? அவன் எதைச் சொன்னாலும் நீ நம்பிருவியா..? என்னோட செகரட்டரி போஸ்டுக்கு யாரை செலக்ட் பண்ணணும்கிறது என்னோட டிசிசன்.. அதில இவன் எதுக்கு இன்டர்பியர் ஆகிறான்..? அதைக் கேட்பியா அதை விட்டுட்டு என்னை கிராஸ் கொஸ்டின் பண்ண வர்றயே..”

“நீ எதுக்காக தாமு அப்ஜெக்ட் பண்ற கேண்டிடேட்டை செலக்ட் பண்ணனும்..?” கண்கள் இடுங்க கேட்டு வைத்தாள் நீரஜா..

“குட் கொஸ்டின்..” சித்தார்த்தனுக்கு கோபம் வந்து விட்டது..

“இந்த சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டிக்கு அவனோட செகரட்டரியா வருகிற கேண்டிடேட்டை செலக்ட் பண்ணக்கூட ரைட்ஸ் இல்லையா..? நீரு.. திஸ் இஸ் மை ஆபிஸ்..! மைண்ட் இட்.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனியில நான் மூக்கை நுழைச்சா அப்ப நீ ஏன்னு கேளு..”

“ஓகே..!”

கோபத்துடன் எழுந்து கொள்ள முயன்றாள் நீரஜா.. மீண்டும் அவள் கைபிடித்து தடுத்தான் தாமோதரன்..

“அட என்னங்க நீங்க..! இப்படி ரோசப்பட்டு நீங்க கிளம்பிப் போயிரணும்.. இவனை எந்த விதமான

கொஸ்டினும் கேட்கக் கூடாதுங்கிறதுக்காகத்தானே அவன் உங்க ரோசத்தைக் கிளப்பி விடறதைப் போல பேசி வைக்கிறான்..? அது புரியாம நீங்க வெளிநடப்புப் பண்ணிட்டா உண்மை எப்படிங்க வெளியில வரும்..?"

"அப்படி என்ன உண்மையை கண்டுட்ட தாமு.. அடி வாங்கத்தான் போற.. அவதான் கிளம்பறால்ள..? ஏன் தடுத்து நிப்பாட்டற..? நீரு.. யு கேன் கோ.."

"போகாதீங்க.. இருங்க.. ஹலோ பிரண்ட்..! இத்தனை நேரமும் இவங்க என்னைக் காய்ச்சு.. காய்ச்சுன்னு காய்ச்சினப்ப போகச் சொல்ல உங்களுக்கு மனசு வரலை.. இப்ப உங்களைப் பத்தின கொஸ்டினைக் கேட்டதும்.. 'யு கேன் கோ'வா..? அராஜகமாடா பண்ற...? இது பெருத்த அட்டூழியமால்ல இருக்கு... பர்ஸ்ட் இவங்க கேட்ட கொஸ்டினுக்கு ஆன்சர் பண்ணு.. நெக்ஸ்ட் இவங்க இங்கேயிருந்து கிளம்பறதைப் பத்தி யோசிக்கலாம்.."

"டேய்.. உனக்கு என்னதாண்டா வேணும்..? நீ கேட்டுக்கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைப் போட்டுத் தொலைக்கனுமா..?"

"அது அப்ப.."

"இப்ப..?"

"நீரஜாவோட கொஸ்டினுக்குப் பதில் வேணும்.."

தாமோதரனின் கண்டிப்பில் நீரஜா மனம் கனிந்தாள்.. அவனைப் பற்றி சித்தார்த்தன் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தபோது காட்டாத கண்டிப்பை.. நீரஜாவின்

மனம் புண்பட சித்தார்த்தன் பேசியவுடன் அவன் காட்டியதில் அவள் மனம் சிறகடித்தது..

"விடுங்க தாமு.. அவன் பெர்சனலிலே நான் தலையிடக் கூடாதுதான்.. பட்.. ஒரு செகரட்டரி விசயத்தில் இந்த அளவுக்கு பொசஸிவ்வா இவன் இருக்கனும்னா மிஸ்டேக் இவன்கிட்ட இல்ல.. இவன் செலக்ட் பண்ண நினைக்கிற அந்தப் பெண்கிட்ட இருக்கு.."

தான் புத்திசாலி என்பதை புரூவ் பண்ணி விட்டாள் நீரஜா..

"சபாஷ்..!" என்றான் தாமோதரன்..

"இப்ப என்ன இவ புரூ காபியா உனக்குப் போட்டுக் கொடுத்திட்டா..? இப்படி சபாஷ் போடற..?" எரித்து விடுவதைப் போல நண்பனைப் பார்த்தான் சித்தார்த்தன்..

"இது அதுக்கும் மேலே.." என்று சொல்லி சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் தாமோதரன்..

"இம்சையைக் கிளப்பாதேடா.." வெறுத்துப் போனவனாக லேப்டாப்பை உற்றுப் பார்த்தான் சித்தார்த்தன்..

"அந்தக் கருமத்தைத்தான் பார்த்துத் தொலைக் காதேன்னு காலையிலே இருந்தே அடிச்சுக்கிறேனா இல்லையா..?"

தாமோதரன் சித்தார்த்தனிடமிருந்து லேப் டாப்பை பறிக்க முற்பட்டான்.. அந்த இழுபறி போராட்டத்தில் நீரஜாவின் பக்கமாக லேப்-டாப் திரும்பிப் பார்த்து

வைத்தது.. அதன் திரையை யதேச்சையாகப் பார்த்த நீரஜா.. அதில் தெரிந்த புகை வடிவத்தில் புருவங்களை உயர்த்தினாள்..

"வாட் இஸ் திஸ்..?" தாமோதரனிடம் கேட்டு வைத்தாள்..

சித்தார்த்தன் எரிச்சலுடன் தாமோதரனைப் பார்த்த பார்வையில் 'இதைத்தானேடா எதிர்பார்த்தாய் தாமோதரா..?' என்ற கேள்வி இருந்து..



## 7

*அரசகுல மகள்தான் எனினும்—மற்றவரிடம் அடைக்கலம் புக வைத்தது எவரிட்ட சாபம்-?*

"உனைக் காண வேண்டுமென செம்பியன் மாதேவி அழைத்தார்கள்.."

ஆழ்வார்க்கடியானின் ஊடுறுவும் பார்வையின் வீச்சில் நந்தினியின் இதயம் நடுங்கிப் பதறியது..

'இவன் அனைத்தையும் அறிந்த்வன்..' அவள் விழிகளை மூடிக்கொண்டாள்..

'இவனறியாத நிகழ்வென்று சோழதேசத்தில் எதுவும் கிடையாது.. பக்தி மார்க்கத்தில் திளைப்பவனின் உடலெங்கும் விழிகள் உண்டு.. வதனமெங்கும் செவிகள் உண்டு.. ஒற்று வேலையில் திறம்படத் தேர்ந்தவன்.. அல்லாமலா முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர்

இவனைத் தமது அந்தரங்க ஒற்றனாக நியமித்திருப்பார்..? சோழதேசத்தின் ஒற்றர் படையின் தலைமை ஒற்றன்கூட இவனுக்கு நிகராக இயலாதே..!'

"எதன்பொருட்டு அழைக்கிறார்கள் என்பதை அறிவாயா தங்காய்..?" ஊசிமுனையின் கூர்மையுடன் வினவினான் ஆழ்வார்க்கடியான்..

"அறியேன்.." துக்கத்துடன் பொய்யுரைத்தாள் நந்தினி..

"பொய்யுரைக்கவும் கற்றுக் கொண்டாய் அல்லவா..? மெய்யைத் தவிர பொய்யை யாம் தமக்கு அறிமுகம் செய்து வைத்ததில்லையே நந்தினி..?"

"அண்ணா.." நந்தினி விம்மினாள்..

"யாம் தமது தமையன்தான் நந்தினி.. உடன் பிறந்தவனை விட மேலானவன்.. உனது தாய், தந்தைக்கு நிகரானவன்.."

"எனது தாய், தந்தை எவெரன்று தாம் அறிவீர்கள் அல்லவா..? எமக்கு அவர்களைப் பற்றி உரையுங்கள்.. பெற்றவர் எவரெனத் தெரியாத பிறப்பு எனது பிறப்பு என இளவரசி குந்தவை என்னை இகழ்ந்தார்.."

ஆழ்வார்க்கடியன் துயரத்துடன் நந்தினியை நோக்கினான்.. அவனது விழிகளில் தெரிந்த எல்லையற்ற பச்சாதாபத்தில் நொறுங்கிப் போனாள் நந்தினி.. வாழ்நாள் முழுவதும் மற்றவர்களின் காருண்யப் பார்வைகளின் நிழல்களில்.. கரம் ஏந்தி யாசித்துத்தான் அவள் வாழ்க்கையை நடத்தியாக வேண்டுமா..? இது எவரிட்ட சாபம்..?

"நீ அறிவாய் அண்ணா.. எனது தாய், தந்தை எவர் என்பதை நீ அறிவாய்.. நீ அறியாத உண்மையும் இப்புவியில் உண்டோ..? இருப்பினும் என்னிடம் அதை உரைக்க மாட்டாய்.."

நந்தினி குமுறினாள்.. ஆழ்வார்க்கடியான் மௌனத்தை அரணாகக் கொண்டு.. அவன் வளர்த்த சகோதரியின் ஆற்றாமையைத் தாங்கிக் கொண்டான்..

"ஒன்றை மட்டுமே என்னால் உரைக்க இயலும் சகோதரி.. நீ பிறந்தவுடன் மகவாக எனது கரங்களில் உன்னை அளித்தார்கள்.."

"எவர் அளித்தது..?"

"அதை உரைக்க இயலாது.. உன்னை வளர்க்கும்படி ஆணை வந்தது.. ஏற்றுக்கொண்டு உன்னுடன் பாண்டிய தேசத்திற்குச் சென்று விட்டேன்.. தனியனாக உன்னை வளர்க்க இயலாது என்பதினால்.. குழந்தைப் பேரற்ற தம்பதியரை பணிக்கு அமர்த்திக் கொண்டேன்.."

"அத்தகு நிலையிலும் அவர்கள் பாசத்தில் என்னை வளர்க்கவில்லை.. ஊதியத்திற்காகவே என்னை வளர்த்திருக்கிறார்கள்.. இல்லையா அண்ணா..? நான் எப்பெரும் பேறு பெற்றவள்.. இதற்குப் பதிலாக நான் இறந்தே பிறந்திருக்கலாமே.."

நந்தினி தனது கரங்களால் வதனத்தில் அறைந்து கொண்டாள்.. தடுத்து நிறுத்திய ஆழ்வார்க்கடியானின் மனதில் துயரம் பொங்கியது.. அவள் பிறந்தபோது அவளுடைய தாய் எவர் என்பதை அவன் அறிவான்..

தந்தையாக அவனும், முதன் மந்திரி அநிருத்த பிரம்ம ராயரும் எண்ணியிருந்தது ஒருவரை.. அதன் பொருட்டே அவளை வளர்க்கும் பொறுப்பை ஆழ்வார்க்கடியானிடம் ஒப்படைத்தார் முதலமைச்சர்..

நந்தினி வளர.. வளர.. அவளைச் சுற்றி ரகசியங்களும் வளர்ந்தன.. ஆழ்வார்க்கடியான் பாண்டிய தேசத்திலிருந்த போது அவனறிந்த விவரங்கள் நந்தினியின் தந்தை எவரென்பதை அடையாளம் காட்டி விட்டன.. முதலமைச்சரிடம் செய்தி போனபோது.. அவர் துரிதமாக நந்தினியுடன் சோழ தேசத்திற்கு திரும்பி விடும்படி ஆணை பிறப்பித்து விட்டார்... ஆழ்வார்க்கடியானும், நந்தினியையும் அவளை வளர்ப்பவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து ஈசானபட்டரின் இல்லத்தில் தங்கச் செய்து விட்டான்..

நந்தினியின் நலன் குறித்த ஆழ்ந்த அக்கறை செம்பியன் மாதேவியிடம் இருந்தது.. எதன் பொருட்டு அந்த அக்கறை உருவானது என்பதை அறிந்து வைத்திருந்த ஆழ்வார்க்கடியான் நந்தினியின் வாழ்வில் நிகழ்கின்ற நிகழ்வுகளை மௌனச்சாட்சியாக கரம்கட்டி நின்று கவனித்துக் கொண்டிருந்தான்..

"பிறப்பும்.. இறப்பும்.. நம் கரங்களில் இல்லை.. விதியின் கரங்களில் உள்ளன சகோதரி.."

"அந்த விதி எதன் பொருட்டு என்னை வஞ்சித்தது..? நான் அதற்கு என்ன தீங்கிழைத்தேன்..?"

"இதற்கான விடைதேடி துறவறம் பூண்டவர்கள் நிலத்தில் காலம் கழிக்கின்றனர் தங்காய்..! அவர்களுக்கே

இதற்கான விடை கிடைக்கவில்லையெனும் போது.. தமக்கு மட்டும் எப்படிக் கிட்டும் சகோதரி..? இறையருளில் மனதை செழுத்து.. நிம்மதி காண்பாய்.."

'ஏன்..?' நந்தினி வெஞ்சினம் கொண்டாள்..

இல்லறத்தில் அவள் மனதை செழுத்தி இன்பம் காணக் கூடாதா..? அவளது ஆதித்த கரிகாலன் அவளுக்காக எதையும் செய்வான்.. அரச பதவியைத் துறப்பான்.. அவள் அழைத்தால்.. அவள் கரம்பற்றி கண்காணாத தேசத்திற்கும் வருவான்.. 'ஆள், அரவமற்ற தீவுகளில் வசிக்கலாம்.. வா..' என்றாலும் மகிழ்வாக அவனது ஒப்புதலைத் தருவான்.. அவனது காதல் இருக்கும் வரையில் எவர் சொல்லுக்கும் ஏன் அவள் அஞ்ச வேண்டும்..?

"தாம் எண்ணுவது போல எதுவும் அத்துனை சுலபத்தில் கரம் கூடி விடாது நந்தினி.." தீட்சண்யமான பார்வையுடன உரைத்தான் ஆழ்வார்க்கடியான்..

'நான் எதை எண்ணினாலும் இவன் அப்படியே என் அகத்தை வாசித்து விடுவானா..?' அதற்கும் சினம் கொண்டாள் நந்தினி..

"உயரப் பறக்கும் பருந்தின் மீது, ஊர்க்குருவி ஆசை கொள்ளல் ஆகாது சகோதரி.." வருத்தத்துடன் உரைத்தான் ஆழ்வார்க்கடியான்..

"ஏன் கூடாது அண்ணா..?"

"பருந்தின் உயரத்துக்கு குருவியால் சிறகடிக்க இயலாது சகோதரி.."

"பருந்து அதன் முதுகில் குருவியை ஏற்றிச் செல்லும்.."

நந்தினியின் திடமான உரையில் ஆழ்வார்க்கடியான் மௌனம் கொண்டான்.. கொந்தளிக்கும் உள்ளத்தோடு.. செம்பியன் மாதேவியின் மாளிகைக்குச் சென்றாள் நந்தினி.. அடிக்கடி அங்கே வருகை புரிபவள் என்பதில் அங்கிருந்த சேடிப் பெண்கள் அவளிடம் சிநேகிதமாக புன்னகைத்து வைத்தார்கள்.. தூய்மையுடன் அலங்கரிக்கப் பட்டிருந்த முன் மண்டபத்தில் அழகுற ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.. அதில் அமர முனைந்த நந்தினி தயங்கித் தேங்கினாள்.. குந்தவை அவளை சிறுமை படுத்திய நினைவில் அமராமல் அப்படியே செதுக்கி வைத்த சிலை போல நின்றாள்..

"ஏன் அமரவில்லை நந்தினி..?"

செம்பியன் மாதேவியின் குரலில் திரும்பிப் பார்த்தாள்.. மாளிகையின் மேன்மாடப் படிகளில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் செம்பியன் மாதேவி..

"அழைத்தீர்களாமே.. அண்ணன் உரைத்தான்.."

"ஆம்.. திருமலையிடம் நான்தான் உரைத்தேன்.. உனைக் காண வேண்டுமென்று கூறினேன்.. அமர்வாய் மகளே.."

செம்பியன் மாதேவி அகன்றதொரு அழகான ஆசனத்தில் அமர்ந்தாள்.. அவளுக்கு அருகாமையிலிருந்த சிறிய ஆசனமொன்றில் பயபக்தியுடன் அமர்ந்து அவள்து வதனம் நோக்கினாள் நந்தினி.. அவளது இதயம் படபடவென அடித்துக் கொண்டது..

குந்தவையிடம் முறைத்துக் கொள்வதைப் போல.. செம்பியன்மாதேவியிடம் முறைக்க அவளால் இயலாது..

அவள் அறிந்தவரையில் செம்பியன்மாதேவி நந்தினியின் அன்னைக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறாள்.. செம்பியன் மாதேவியின் பாதுகாவலில்தான் நந்தினியின் அன்னை அவளைப் பெற்றெடுத்திருக்கிறாள்.. அத்தகைய ராஜமாதா விடம் அவள் என்றுமே நிமிர்வாகப் பேசிய தில்லை.. அவளையுமறியாத பணிவு செம்பியன் மாதேவியைக் கண்ட மாத்திரத்தில் அவளிடம் குடி கொண்டுவிடும்.. தழைந்துதான் பேசுவாள்..

நந்தினியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த செம்பியன் மாதேவியின் வதனத்தில் இறுக்கம் நிலவியது.

"நீ எழிலே வடிவானவள் நந்தினி.. உனது அன்னையின் எழில் அப்படியே உன்னிடம் குடி கொண்டுள்ளது.."

செம்பியன் மாதேவியின் வார்த்தைகளில் உடல் தூக்கிப் போட நிமிர்ந்தாள் நந்தினி.. அவளது தேகம் பதறியது..

"எமது அன்னையை அறிவீர்கள்தானே பிராட்டியாரே.."

"அறியாமலலா அவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன்..?"

"எவர் அவரென என்னிடம் உரைப்பீர்களா தேவி..?"

செம்பியன் மாதேவியின் வதனத்தில் இறுக்கம் தளர்ந்து.. காருண்யம் குடி கொண்டது.. அவளது விழிகளில் பரிதாபம் நிரம்பியது..

"அறிந்து யாது செய்யப் போகிறாய் குழந்தாய்..?"

"இப்புவியில் பிறக்கும் மழலைகள் அனைவரும் தமை ஈன்ற தாய், தந்தையை அறிந்து கொள்வது.. யாதும் செய்யத்தானா தேவி..?"

நந்தினியின் வினாவில் செம்பியன் மாதேவியின் விழிகளில் மெச்சுதல் வருகை தந்தது.. மனம் விட்டு பாரட்டினாள்..

"நீ நுண்மதியைப் பெற்றவள்.. மதி நுட்பத்தில் குந்தவைக்கு இணையானவள்.."

"இந்தப் புகழுரை வேண்டாம் பிராட்டியாரே..! நான் அதற்கு அருகதையற்றவள்.. சோழர் குலச் சக்கரவர்த்தியின் செல்வப் புதல்விக்கு நான் இணையாவேனோ என்ற வினாவை இருதினங்களுக்கு முன்னர்தான் இளவரசி என்னிடம் எழுப்பினார்.." நந்தினி துயரத்துடன் உரைத்தாள்..

செம்பியன் மாதேவி நெடு மூச்சை விட்டாள்.. அவள் வதனத்தில் துயரத்தின் சாயல் படிந்தது..

"எனக்கு உன்மீது இரக்கம் இல்லையென்றா எண்ணுகிறாய் குழந்தாய்..? உன் எழிலும்.. மதிநுட்பமும்.. அரசகுமாரிகளிடம் இருக்கத் தக்கவை.. அதை நான் அறியேன் என்றா நினைக்கிறாய்..?"

"அவ்வாறெனில்.. இயல்பாக எனக்குக் கைகூடி வந்த இவற்றை நான் விட்டுவிட வேண்டும் என்று கட்டளையிடுகிறீர்களா தேவி..? எனது எழிலும், மதிநுட்பமும் தெய்வம் தந்த வரப்பிரசாதங்கள்.. அரசகுமாரிகளுக்கு உரிய இவை என்னிடம் வாய்க்கப் பெற்றதில் எனது தவறென்று ஏதும் உள்ளதா தாயே..!"

நந்தினியின் விழிகளில் இருந்து பொழிந்த கண்ணீரில் கரைந்து போனாள் செம்பியன் மாதேவி..

"கலங்காதே குழந்தாய்.." நந்தினியைத் தேற்றினாள்..

"இவ்வுலகில் உதித்த அனைத்து ஜீவன்களும் விதியின் கரங்களில் விளையாடப்படும் பொம்மைகளே..! இதற்கு நாம் மட்டும் விதிவிலக்காகி விட இயலுமா மகளே..?"

சோழர்குல சிங்காதனத்தில் உரிமை பெற்ற கண்டராதித்த சோழரின் மனையாட்டி, தன்னை நந்தினியுடன் இணைகூட்டித் துயரப் படுவதில் வியப்புக் கொண்டாள் நந்தினி..

"நான் தாய், தந்தையின் விலாசம் அறியாத அபலைப்பெண் தாயே..! தாங்களோ மகாராணி..! எமக்கு இணையாக தம்மை உரைக்க வேண்டாம் மகாராணி.. இதை செவிமடுக்க எனக்குத் துயரமாக உள்ளது.."

"அவ்வாறா உரைக்கிறாய்..? தாம் அறிந்தது சிறிது மகளே..! நாடாளும் ராணிக்கும் அந்தரங்க மனதின் அடியாழத்தில் துயரிருக்கும்.. மற்ற மாந்தர் அறியாவண்ணம் மனதிலே கவலையிருக்கும்.."

துயரம் அப்பிய வதனத்துடன் மொழிந்த செம்பியன் மாதேவியை விசித்திரமாக பார்த்தாள் நந்தினி..

"எனது கவலையை விடுத்து உனது கவலைக்கு வருவோம் மகளே..! உனக்கு நான் அறிவுரை பகர வேண்டுமென்ற அவசியம் ஏதும் இல்லையென எண்ணுகிறேன் நந்தினி.. மதிநுட்பம் வாய்ந்த நீ.. நான் உரைக்க எண்ணுவதை எளிதில் புரிந்து கொள்வாய்.."

'ஏன் புரியாது மகாராணி..? தங்களின் செல்லப் பேத்தி குந்தவை நாவில் விசம் தடவி உரைத்த மொழிகளை தாங்கள் தேன் தடவி உரைக்கப் போகிறீர்கள்.. உரைக்கும் விதம்தான் வேறு.. உரை ஒன்றுதானே மகாராணி..!'

"சோழர்குலத்தின் நிழல் அண்டியவரை பாதுகாக்கும் காருண்யம் கொண்டது மகளே..! எவரையும் விரட்ட முனையாது.."

'இதன் பொருள் என்ன மகாராணி..? தாங்கள் விரட்டும் முன்னர் நானாக வெளியேறிவிட வேண்டும் என்று பொருள் கொள்ளவா..?'

"வந்தோரை வாழவைக்கும் வளநாடுதான் எங்கள் சோழர்திருநாடு..!"

'அப்படியெனில் என்னையும் வாழ வைக்கலாமே..'

"அரசர் குலத்திற்கென்று சில நியதிகளும்... மரபுகளும் உண்டு மகளே..! அரசர் குலத்தில் பிறந்த அனைவரும் அவற்றை கடை பிடித்தே தீர வேண்டும்.."

'நல்லது.. சிறுத்தைப்புலி குகையை விட்டு வெளியே வந்து விட்டது.. இதை உரைக்கத்தானே.. இவ்விதமாக சுற்றி வளைத்து நாசியை.. ஸ்பரிசித்தீர்கள்..?'

"நீ எழிலே வடிவானவளாக இருக்கலாம் நந்தினி.."

'நன்றி தாயே..! இந்த அனுமதி வழங்கியமைக்கு எனது மனமார்ந்த நன்றி..! எங்கே.. தங்களின் திருப்பேத்தி மட்டுமே எழிலுடன் இருக்க வேண்டும்.. அதன் பொருட்டு நான் எனது எழிலை அழித்து விடவேண்டும் என்று தாங்கள் ஆணை பிறப்பித்து விடுவீர்களோ என்று அஞ்சி

விட்டேன்.. எவர் கண்டது..? சோழர் திருநாட்டில் எது வேண்டுமானாலும் நிகழலாம்..'

"மதி நுட்பம் வாய்ந்தவள்.."

'அதற்கு யாம் என்ன செய்வோம் மகாராணி..! அறிவிலியாக பிறந்திருக்க எனக்கும் ஆசைதான்.. இவ்வாறு மற்றவர்களின் மனதை அறியும் வித்தையை கற்காமல் இருந்திருக்கலாமே.. அறிவிலியாக பிறந்தவர்கள் பாக்கியசாலிகள்..!'

"நன்மை, தீமையை அறிந்தவள்.."

'அதாவது.. சோழநாட்டின் அரசகுலத்தவரின் நன்மையையும்.. எனக்கான தீமையையும் அறிந்தவள் என்று உரைக்கின்றீர்கள்..'

"எவரிடம் விலக வேண்டும்.. எவருடன் உறவாட வேண்டும் என்ற நியதியை நான் உரைத்தா நீ அறிந்து கொள்ள வேண்டும்..?"

'அல்ல மகாராணி..! தாம் உரைக்கும் முன்னரே.. இதை உரைப்பீர்கள் என்பதனை நான் அறிவேன்.. ஆதித்த கரிகாலனை விட்டு நான் விலக வேண்டும்.. இறையருளுடன் துறவறத்தை பூண்டு.. பக்தி மார்க்கத்துடன் உறவாட வேண்டும் என்ற பாதையை எமக்காக வகுத்து வைத்திருப்பவர்கள் அல்லவா தாங்கள்..?'

"வானில் உதிக்கும் சூரியனின் கதிர்களை எட்டி நின்று கரம் கூப்பி வணங்கலாம்.. தொட்டுப் பார்க்க விழையலாமா..?"

'கூடாதுதான் மகாராணி..! உதிக்கும் சூரியனின் கதிர்கள் என் இல்லம் தேடி வந்து உதித்தால்.. அதைத்

தொட்டுப்பார்க்க விழையாமல் எவ்விதம் நான் எட்டி நின்று கரம் கூப்பி வணங்குவேன்..? அவை எனக்கான ஒளிச்சுடர்கள் மகாராணி..'

"ஆண்கள் சபலச்சித்தம் படைத்தவர்கள்.. சலன மனம் கொண்டவர்கள்.."

'என் ஆதித்தன் அப்படியல்ல.. என்மேல் அவன் கொண்டிருப்பது சபலமல்ல.. ஆவேசமான காதல்..! அதன் வேகத்தை தாங்கள் அறிய மாட்டீர்கள்.. என்னை விட்டு ஆதித்தனை விலக்கி விட்டால் அவன் வெறி கொண்ட வேங்கையாகி விடுவான்.. அந்த விபரீத விளையாட்டில் ஈடுபட்டுவிட வேண்டாம் மகாராணி.. ஏனெனில் கரிகாலனின் மனம் சலனங்களைக் கொண்டதல்ல.. என்மீதான வேட்கைகளைக் கொண்டது..'

நந்தினியின் மனம் உரைத்ததை எவர் செவி மடுத்தார்..?

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 7

*தொடராமல் தொடரும்..*
*நிழல் போன்ற நம் உறவு...*

"இந்தக் கொஸ்டின என்கிட்டக் கேட்டா..? நான் என்னத்தைன்னு ஆன்சர் பண்ணுவேன்..? லேப்-டாப்பும் என்னதில்ல.. அதில பார்க்கிற ஆவிக்கும் எனக்கும் எந்தவொரு கனெக்சனும் இல்ல.. ஆவிக்கும் எனக்கும்

ஆகாதுங்க.. ஆவின்னாலே எனக்கு அலர்ஜி.. நான் ஆவி பறக்கிற காபி, டீயைக்கூட திரும்பிப் பார்க்க மாட்டேன்.. ஆவியில்லாம அது இதமான சூட்டோடே இருந்தாத்தான் தொட்டே பார்பேன்ங்க.. எங்கிட்டப் போய் ஆவியப் பத்தி கேட்டு வைக்கறிங்களே.. உங்களுக்கே இது நியாயமாய் இருக்கா..?"

தாமோதரனின் நீண்ட கேள்வியில் சித்தார்த்தன் அவனையே இமைக்காமல் பார்த்து விட்டு தண்ணீர் பாட்டிலை தாமோதரனின் பக்கமாக நகர்த்தி வைத்தான்..

"உன்கிட்ட தண்ணி காட்டச் சொல்லி நான் கேட்டேனா..?"

"தண்ணி காட்டறதில என்னை விட நீ கில்லாடி..! தொண்டையில் தண்ணியை சரிச்சுக்க.. போட்டுக் கொடுக்கற ஆர்வத்தில கேப் விடாம பேசினியில்ல.. தொண்டை வறண்டிருக்கும்.. தண்ணி இல்லாம காய்ஞ்சிருக்கும்.. வத்திப்போன தொண்டைத் தண்ணியை ஈக்குவல் பண்ணியாகனுமில்ல.. டேக் இட்.."

"பரவாயில்லையே.. டேக் இட் ஈஸின்னு உன் தங்கைகிட்டச் சொல்லாம.. டேக் திஸ் வாட்டர்ன்னு என்கிட்ட பின்னிப் பிணையறயே.."

"விதிடா.. உன்னப் போல பிரண்ட் கிடைக்க நான் போன ஜென்மத்தில புண்ணியம் செஞ்சிருக்கனும்.. நீ எனக்கு பிரண்டா..? இல்ல இவளுக்குப் பிரண்டா..? எந்த பிரண்டாவது பிரண்டோட சிஸ்டர்கிட்ட பிரண்டைப் போட்டுக் கொடுக்கிற புண்ணியத்தைச் செய்வானாடா..?"

"நான் செய்வேன்... அந்த பிரண்ட் மட்டும் தன்னோட சிஸ்டர்கிட்ட அவனோட பிரண்டப் பத்தி பத்த வைப்பானாடா..?"

"உன்னைப் போல பிரண்ட் கிடைச்சா எந்தப் பிரண்டும் இதத்தான் செய்வாண்டா.. பிரண்டுக்கு லாயலா இருக்க மாட்டானாம்.. பிரண்டோட தங்கைகிட்ட லாயலா இருப்பானாம்.. கொடுமைடா சாமி.."

சித்தார்த்தன் தலையில் அடித்துக் கொள்ள.. தாமோதரன் அரைப் பார்வையாய் நீரஜாவை பார்த்து வைத்தான்.. அவளும் அப்போது அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொண்டதில் அங்கே மின்னல் வெட்டியது..

நீரஜாவின் விழிகளில் கர்வம் வந்தது.. அது அண்ணனின் நண்பன் அண்ணன்காரனுக்கு உண்மையாக இருக்காமல்.. அவளுக்கு உண்மையாக இருப்பதில் உருவான கர்வம்..

சித்தார்த்தன்தான் தாமோதரனுக்கு படிப்பையும்.. உயர்தர வாழ்க்கைத்தரத்தையும் கொடுத்தவன்.. ஆனால், சித்தார்த்தனைவிட நீரஜாவின் கட்டளைக்குத்தான் தாமோதரன் கட்டுப்படுவான்.. அது எதனால் என்று அவனுக்கே தெரியாது..

நீரஜாவின் கண் வீச்சிற்கு தாமோதரன் அடிமை..!

"அன்னெஸசரியா எதையும் பேச வேணாம்ன்னு சொல்லுங்க தாமு.."

"யார்கிட்டங்க..?"

"வேற யார்கிட்டச் சொல்லச் சொல்லுவா..? எல்லாம் கூடப் பிறந்த அண்ணன்காரனான என்கிட்டதான் சொல்லச் சொல்லுவா.. இப்படி கூடப்பிறந்தவங்க மத்தியில சிசர் போட்டு வெட்டி விடறயேடா தாமு.. நீயெல்லாம் நல்லா வருவேடா.."

"இப்பவும் நீங்க நல்லாத்தான் இருக்கீங்க தாமு.. உண்மையைச் சொல்கிறீங்கன்னு யாரும் உங்களுக்கு சாபம் கொடுக்க வேணாம்.."

நீரஜா கடுமையாக எச்சரித்தாள்.. சித்தார்த்தன் தங்கையை இமைக்காமல் பார்த்தான்.. அவளோ 'யாரடா நீ..?' என்ற ஓர் அறிமுகமற்ற பார்வையை பார்த்து வைத்தாள்..

"நீரு...!"

"யாரும் என்கிட்டப் பேச டிரை பண்ண வேணாம் தாமு.."

"சைல்டிஷா பிஹேவ் பண்ணாதே.. நான் உன் அண்ணன்..!"

"ஹ..! அது இப்பத்தான் உனக்கு நினைவில வந்துச்சா..? உன் கம்பெனி விவகாரத்தில நான் மூக்கை நுழைக்கக் கூடாதுன்னு சொல்லி 'யு கேன் கோ..'ன்ன சொன்னியே.. அப்ப இந்தப் பாசம் எங்கே போயிருந்துச்சு..?" நீரஜாவின் கேள்விக்கு..

"மெரினா பீச்சில காத்து வாங்கப் போயிருக்குமோ.." என்று கேட்டு சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் தாமோதரன்..

"ஏண்டா இப்படி இருக்க..?" ஆற்றாமையுடன கேட்டான் சித்தார்த்தன்..

"என்னவோ இருக்கேன்.. ஆமாம்.. தெரியாமத்தான் கேட்கிறேன்.. என்னவோ போட்டுக் கொடுக்கிற வேலையையும்.. கோள் சொல்கிற வேலையையும் நான் மட்டுமே பாக்கிறதைப் போல பொஙகலா பொங்கறயே.. இந்த வேலையைத்தானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே நீயும் பார்த்துக்கிட்டு இருந்த..?"

தாமோதரன் சித்தார்த்தனை மடக்கினான்.



## 8

*வாழ்க்கை வகுக்கும் சக்கர வியூகங்களை வாளேந்தி எதிர்கொள்ள இயலாது..*

செம்பியன் மாதேவி மீண்டும், மீண்டும் உரைத்தது இதைத்தான்..

ஆதித்த கரிகாலனே அவளைத்தேடி வந்தாலும் நந்தினி அவன் காதலை மறுத்து விலகி விடவேண்டும்.. அவன் சோழர் குல இளவரசன்..! அரியணை ஏற வேண்டியவன்.. நந்தினியைப் போன்ற பிறப்பில் ரகசியம் கொண்ட மாதை அவன் மணத்தல் கூடாது..

நந்தனியின் மனம் நொறுங்கியது.. இவ்வுலகில் அவள்மீது உண்மையான காதலை வைத்திருக்கும் ஒரே ஒரு ஜீவனை அவள் பிரிய வேண்டும்..

எவர் அளித்த சாபம் இது..?

ஆதித்த கரிகாலன் யுத்த களத்திலிருந்து திரும்பி வந்து விட்டான்.. பழையாறையின் அரண்மனைக்குக்கூடச் செல்லாமல் நந்தினியைத் தேடி வந்து விட்டவனின் காதலில் நந்தினியின் மனம் விம்மியது..

இத்தகைய காதலனை அவள் பிரிவதா..?

உயிர்துடிக்க நின்றிருந்த அவள் விழிகளில் எதைக் கண்டானோ.. ஆதித்த கரிகாலன் அசைவற்று நின்று அவளையே உற்றுப் பார்த்தான்..

"யாது நேர்ந்தது நந்தினி..?"

"இளவரசே..!" நந்தினி விம்மினாள்..

"கூடாது நந்தினி.. நானிருக்க நீ கண்ணீர் விடக் கூடாது.. இதைக் காண்பதற்காகவா நான் யுத்த களத்திலிருந்து ஓடோடி வந்தேன்..? என்மீது உனக்கு நம்பிக்கையில்லையா..?"

"என் விதியின் மீதுதான் நம்பிக்கை இல்லை.."

"உன் விதி என்னுடன்தான் உன்னைப் பிணைக்கும்.."

அதீத நம்பிக்கையுடன் அவ்வார்த்தைகளை உச்சரித்தான் ஆதித்தன்.. விதி அவனுடன் நந்தினியைப் பிணைக்கத்தான் செய்தது.. அது எவ்வகையான பிணைப்பு என்பதில்தான் விதி வகுத்த சூட்சுமம் மறைந்திருந்து ஆட்சி செய்தது.. ஆதித்த கரிகாலன் அவனது இறுதிவரை நந்தினியின் மீது வற்றாத காதலைக் கொண்டிருந்தான்.. நந்தினி..?

அது குறித்த குமுறலை அவளது ஆருயிர்க் காதலனின் மனதில் விதைக்கும் கட்டாயத்திற்கு அவள் ஆளானாளே.. அந்த அவலம் ஏன் அவளுக்கு நேர்ந்தது..?

"சொல் நந்தினி.. இவ்விடம் நான் இல்லாத தருணத்தில் எவரேனும் உன் மனம் புண்பட கடிந்து கொண்டார்களா..?"

'ஆம்' என்று உரைக்க முடியாமல் மௌனமானாள் நந்தினி..

உரைத்து என்ன பலன் நேர்ந்து விடப் போகிறது..? உலகமே புகழும் குந்தவை தேவியை ஆதித்த கரிகாலனால் கடிந்து பேசிவிட இயலுமா..? அவன் தெய்வமாக வணங்கிப் போற்றும் செம்பியன்மாதேவியிடம் மறுத்து ஒரு சொல் உதிர்க்க இயலுமா..?

நந்தினியின் கண்ணீர் நிற்கவில்லை.. அவளைத் தேற்றும் வகையறியாது திகைத்து நின்றான் ஆதித்த கரிகாலன்.. அதிக நாழிகை அவளுடன் இருக்க இயலாமல் அவன் பிரிந்து நடந்தபோது அவள் மனம் பதறியது.. திரும்பி அதைக் கவனித்து விட்டவனின் புருவங்கள் மேலேறின.. புரவியில் தாவி ஏறி அரண்மனையை நோக்கிப் புறப்பட்டு விட்டான்..

"வெற்றி திலகத்திற்கு வதனம் காட்டக்கூட பொழுதில்லாமல் எங்கே சென்று விட்டாய் அண்ணா..?"

குற்றம் சாட்டும் விதத்தில் வினா எழுப்பிய தங்கையின் வதனத்தை கூர்ந்து பார்த்தான் ஆதித்த கரிகாலன்.. நேர் கொண்ட பார்வையுடன் நின்ற தங்கையை கடிந்து கொள்ள அவனால் இயலவில்லை..

"நந்தினியிடம் யாதுரைத்தாய்..?"

குந்தவை வதனம் கடுத்தாள்.. சுற்றிலும் நின்ற சேடிப் பெண்களை ஓர்முறை நோக்கி விட்டு தமையனையும் கடுமையாக நோக்கினாள்..

"உப்பரிகைக்கு வா அண்ணா.."

விரைந்து அரண்மனையின் மேன்மாடப் படிகளில் ஏறியவளைத் தொடர்ந்தான் கரிகாலன்.. உப்பரிகைக்கு வந்தவனின் வதனம் பார்த்த குந்தவையின் வதனத்தில் கோபச் சிவப்பிருந்தது..

"நீ இந்த சோழர் குலத்தின் இளவரசன்.. நினைவில் உள்ளதா..?"

"யாம் மறந்தாலும் அதை நினைவுபடுத்த தாமும், செம்பியன் மாதேவியும் உள்ளீர்களே குந்தவை.."

"நன்றாக இருக்கிறது உனது பேச்சு.. நகைப்புக்கு இடம் தரும் செயல்களைச் செய்கிறாய்.. எனக்கும், அருள்மொழிக்கும் மூத்தவன் நீ..."

"அவ்வாறா இயம்புகிறாய்..?"

ஆதித்த கரிகாலன் இடக்காக வினவி விட்டு நகைத்தான்..

"இங்குதான் எவர் மூத்தவர், எவர் இளையவர் என்ற வரைமுறை அற்றுப் போய் விட்டதே.."

"இளையவர்களுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய நிலையிலிருக்கும் மூத்தவனே நிலை தவறி நின்றால் இவ்விதம்தான் ஆகும்.. குலப்பெருமையை பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை உனக்கு உள்ளது அண்ணா.. கடமை தவறாதே.."

"என் கடமையை எனது வாளின் முனை அறியும்.."

ஆதித்த கரிகாலனின் கோபத்தில் குந்தவையின் வதனம் விகசித்தது..

"உன் வீரத்துக்கு நிகராக இப்புவியில் எவருண்டு..? வாள் முனையில் சரித்திரங்கள் பல படைப்பவன் நீ.. உனக்கு நிகர் நீ மட்டும்தான்.. நீ வீராதி வீரன்.. என்ன ஒன்று.. கணைகளால் வெல்ல முடியாத உன்னைக் காரிகையின் கடைக்கண் பார்வை வெல்கிறது.. அதை என் மனம் தாங்க இயலாமல் தவிக்கின்றது.. நாடு இருக்கும் நிலைமையில் நம்பிக்கை நட்சத்திரமான நீ.. எவராலும் அசைக்க இயலாத மனோதிடத்துடன் இருந்திட வேண்டாமா..? சோழர் குல இளவரசன் கேள்விகளுக்கு அப்பாற்பட்டு இருத்தல் வேண்டும் அண்ணா.. நீயே மனம் இட்ட கட்டளைக்கு அடி பணிந்து நடக்க முற்பட்டால்.. மற்றவர்களை எவ்விதம் வழி நடத்துவாய்..?"

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் புதல்வியாக.. வினவ வேண்டிய வினாக்களை நேரடியாக வினவினாள் குந்தவை.

ஆதித்த கரிகாலன் விடை சொல்லாமல் வெளியேறி விட்டான்.. குந்தவையின் தரப்பில் உள்ள நியாயம் அவன் வாயைக் கட்டிப் போட்டது.. அடுத்து அவனுக்கும் செம்பியன் மாதேவியிடமிருந்து அழைப்பு வந்து விட்டது..

செம்பியன் மாதேவியின் அழைப்புக்கு மறுப்பைச் சொல்லும் மனோதிடம் சுந்திரசோழச் சக்கரவர்த்தியின் பிள்ளைகளுக்கு என்றுமே இருந்ததில்லை..

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் தந்தை முறையிலிருந்த கண்டராதித்த சோழர், நாட்டின் அரியணையில் உரிமை

கொண்டவராக இருந்தும் அதைப்பற்றி பிரக்ஞை துளியும் இன்றி மகன் மதுராந்தகனை சிவவழிபாட்டில் ஈடுபடுத்திய பெருந்தன்மையான மனம் கொண்டவர்.. கண்டராதித்த சோழரின் மனையாட்டி செம்பியன் மாதேவி.. பட்டத்து மகிஷியாக விளங்க வேண்டியவள், மகாராணி பட்டத்துடன் ஒதுங்கி வாழ்ந்தாள்.. இறையருளில் மனம் செழுத்தும் இவள் சொல்லை வேதமெனக் கருதும் சுந்தரசோழ சக்கரவர்த்தி.. தமது பிள்ளைகளையும் அவ்விதமே வளர்த்திருந்தார்..

செம்பியன் மாதேவியின் மாளிகைக்குள் ஆதித்த கரிகாலன் பிரவேசித்தபோது அவள் பூஜை மாடத்தில் விளக்கேற்றப்படுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்... ஆதித்த கரிகாலனின் வரவை சேடிப் பெண்கள் அறிவுறுத்தியதில் திரும்பிப் பார்த்து புன்னகை செய்தாள்..

"அருகில் வா குழந்தாய்..! உன் புகழை சோழ தேசமே பெருமிதத்துடன் உரைக்கிறது.. அதை செவி மடுக்கும் போது என் இதயம் குளிர்கிறது.. உன்னால் இந்த சோழ தேசத்தின் புகழ் ஓங்கும் என்பதில் எள் அளவும் எனக்குச் சந்தேகமில்லை.."

"பணிகிறேன் பாட்டி.."

கரிகாலன் குனிந்து செம்பியன் மாதேவியின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"வாழ்க பல்லாண்டு.."

ஆதித்த கரிகாலனின் சிரத்தைத் தொட்டு ஆசிர்வதித்தாள் செம்பியன்மாதேவி..

"அமர்வாய் ஆதித்தா.."

ஆசனத்தில் அமர்ந்தவனின் வதனத்தை உற்று நோக்கிய செம்பியன் மாதேவி எதைப்பற்றி உரையாட விழைகிறாள் என்பதனை ஆதித்த கரிகாலனால் யூகிக்க முடிந்தது..

'குந்தவை நந்தினிக்கும் எனக்குமான காதலைப் பற்றி பாட்டியிடம் எடுத்து உரைத்திருப்பாள்.. அதைப்பற்றி உரையாடவே பாட்டியார் என்னை அழைத்திருக்க வேண்டும்.. குந்தவை..! என்னருமை தங்காய்..! வாழ்க உனது சேவை..! நீ நன்றாக வருவாய் தாயே..!'

பற்களை நறநறத்தபடி தங்கையை துவம்சம் பண்ண இயலாத கோபத்தை அமர்ந்திருந்த ஆசனத்தின் கரப் பகுதியில் காட்ட முயன்றபடி அதை இறுக்கிப் பிடித்த ஆதித்த கரிகாலனை தீர்க்கமாக பார்த்து வைத்தாள் செம்பியன் மாதேவி..

'இது வேறா..?' ஆதித்தன் நைந்து போய் விட்டான்..

செம்பியன் மாதேவி இயல்பாக நோக்கினாலே அவனுக்கு யோசனையாக இருக்கும்.. என்ன தவறு இழைத்தோமோ.. பாட்டி எவ்விதமாக கடிந்து கொள்ளப் போகிறார்களோ என பதட்டம் கொள்வான்.. இப்படியிருக்க.. செம்பியன் மாதேவி தீர்க்கமாக பார்த்து வைத்தால் அவன் என் செய்வான்..?

"ஆதித்தா..!"

"பாட்டி..?"

"நீ நல்லவன்.."

"அதை தற்போதுதான் தாங்கள் அறிந்தீர்களா பாட்டி..? இதுவரை எம்மைக் கெடுதல் புரிபவன் என்றே எண்ணியிருந்தீர்களா.?"

கரிகாலன் இவ்வாறுதான்.. இடக்கு மடக்காக வினவி வைப்பதில் அவனுக்கு நிகர் அவன்தான்.. அவனது அந்த குணாதிசியத்தில் செம்பியன் மாதேவியின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.. அவனது இடக்குப் பேச்சை அவள் ரசித்தாள..

"குறும்புக்காரா..!"

"நானா பாட்டி..?"

"நீயேதான்.. அருள்மொழிவர்மனிடம் இந்தக் குறும்பைக் காண இயலாது.. அவன் வேறு விதம்.."

"குந்தவையின் இளைய சகோதரன்.. அவ்விதம் தான் இருப்பான் பாட்டி.."

"நீ மட்டும் குந்தவையின் சகோதரனில்லையா..?"

"மூத்த சகோதரன் ஆயிற்றே.."

"அதனால்தான் அவளின் அறிவுரைகளை செவி மடுக்க மறுக்கிறாயா..? இது நற்குணமல்ல ஆதித்தா..!"

"துர்குணமாகவே இருந்து விட்டுப் போகட்டும்.. அதனால் எவருக்கும் இழப்பு வரப் போவதில்லை பாட்டி.. குந்தவையின் அறிவுரைகளை செவி மடுத்தால்தான் நான் நற்குணம் கொண்டவனாக ஆவேனா..? பேஷ்..! பேஷ்..! இந்தக் கூற்று நன்றாகவே உள்ளது.."

"உனது இந்த விவேகமற்ற உரை நாட்டுக்கு நல்லதல்ல.."

"எமது இல்லத்துக்கு உகந்ததல்லவா..?"

"இளவரசனாகப் பட்டவன் இல்லத்தைவிட.. தேசத்திற்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.."

"அவனும் மனிதன்தானே பாட்டி..? மற்றவர்க்கு இருக்கும் மனமும், உணர்வுகளும் அவனுக்கும் உண்டுதானே..?"

"அல்ல குழந்தாய்..! புலனடக்கம் கொள்வதே சாலச்சிறந்தது.."

"அது துறவிகளுக்கு உகந்தது.. அரசகுமாரனுக்கல்ல.. பட்டும், வைர ஆபரணங்களும், ஹம்சதூளிகா மஞ்சமுமாக வாழ்பவனை புலனடக்கம் கொள்ளச் சொன்னால் நகைப்புத்தான் வருகின்றது.."

"அனைத்தையும் ஒரே பார்வையுடன் அணுகுதல் தவறானது ஆதித்த கரிகாலா.. அரசக் குலத்துக்கென சில மரபுகள் உள்ளன.."

"இருந்து விட்டுப் போகட்டும.. அதில் எமக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லையே.."

"ஆமாமாம்.. உனது அனுமதிக்காகத்தானே அந்த மரபுகள் காத்திருக்கின்றன..?"

"அல்லவென்றால் எதன் பொருட்டு அம்மரபுகளை கட்டி இழுத்து தாங்கள் என் முன் நிறுத்த வேண்டும்..? அவைகளை இடையூறு செய்யாமல் வழியனுப்பி வைத்து விடலாமே.."

"மகிழ்ந்து விட்டேன் ஆதித்தா..! மன்னர்குல மரபுகளை வழியனுப்பி வைக்கத்தான் நீ இளவரசனாக பிறந்து வந்தாயா..?"

"எனைக் கேட்டு இப்பிறப்பு வாய்க்கவில்லை.. எனக்கான பணிகளை நிறைவேற்றவும் நான் தயங்கிய தில்லை.."

"அவ்வாறெனில் ஆதித்தா.. நந்தினியை நீ மறந்துவிடு.."

"பாட்டி..?"

"ஆம் குழந்தாய்..! அவளுடனான உன் காதல் நாட்டு நலனுக்கு உகந்ததல்ல கரிகாலா..! அவள் பிறப்பு மர்மம் நிறைந்தது.."

"இவ்விதம் சொல்லிச் சொல்லியே.. அவளையும் மர்மம் நிறைந்தவளாக மாற்றப் போகிறீர்கள் பாட்டி.. இதைத்தான நான் உரைப்பேன்.. உங்களது நிழலில் வளர்ந்தவளுக்கு இன்னல் விளைவிக்க முற்பட வேண்டாம்.."

"எமது நோக்கம் அதுவல்ல.. நந்தினியால் ஒரு போதும் மணமேடையில் உன்னருகில் அமர இயலாது.."

"அவளுக்கென்ன பாதவலியா பாட்டி..? ஆரோக்கிய மான தேக நலனைக் கொண்டவளால் கால்களை மடித்து என்னருகில் அமர இயலுமே பாட்டி.."

"பிடிவாதம் கூடாது ஆதித்தா.."

"தங்களுக்கா பாட்டி..? அல்லவெனில்.. குந்தவைக்கா..?"

"ஆதித்தா..!"

"இது எமது வாழ்வு..! எமது மனையாட்டியாக எவள் வர இயலுமென்பதை நானே தீர்மானிப்பேன்.. தாங்களும்.. குந்தவையும் அத்தீர்மானதனை எடுத்தல் கூடாது.."

"நந்தினியை விட்டு விலகி நில் ஆதித்தா.."

"இணைந்து நிற்கிறேன் பாட்டி.. தாங்கள் ஆசிர்வாதம் அளியுங்கள்.. அதை என்றுமே நாங்கள் வேண்டி விரும்புவோம்.."

"அவளை சந்திக்காதே.."

"சந்திப்பேன்.. தற்போது மட்டுமல்ல.. எப்போதும்..!"

ஆதித்தகரிகாலன் சினம் கொண்ட மனதுடன் செம்பியன் மாதேவியின் மாளிகையை விட்டு வெளியேறினான்.. நந்தினியைச் சந்திக்கச் சென்றான்.. அவன் உரைத்த காதல் மொழிகளில் மனம் லயிக்காமல் நந்தினி வெறிச்சோடிய பார்வையுடன் வலம் வந்தாள்.. எதன் பொருட்டு அத்துயரம் கொண்டாள் என்பதனை ஆதித்தன் சிலதினங்களில் அறிந்து கொண்டான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 8

*ஏகாந்த மாலையிலே.. எதைச்சொல்ல.. எனைத் தேடிவந்தாய்..?*

"இது ஸில்லி மேட்டர் தாமு..! தேவையில்லாமல் இதுக்கு இம்பார்டன்ஸ் கொடுத்து எக்ஸ்போஸ் பண்றேன்னு சொல்லுவேன்.."

"நீ என்னத்தையோ சொல்லிக்க.. ஐ டோன்ட் கேர்.."

"கேர் பண்ணலைன்னா எதுக்காகடா இம்சை பண்ற..? விட்டுத் தள்ளிட்டு போய்கிட்டே இருக்க வேண்டியதுதானே..?"

கோபத்துடன் கேட்ட சித்தார்த்தனை ஏறிட்டுப் பார்த்தான் தாமோதரன்.. அவன் முகத்தில் இறுக்கம் வந்தது..

"ஸோ.. நீ வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போகச் சொல்ற..?"

இப்போது இமைக்காமல் தாமோதரனைப் பார்த்து வைப்பது சித்தார்த்தனின் முறையாயிற்ற.. அவன் முகத்தில் கோபம் அதிகரித்தது..

"மிரட்டறியா..?" என்றான்..

"என்ன தேவைக்கு..?" என்றான் தாமோதரன்..

"எதுக்கெடுத்தாலும் இதை ஒன்னைச் சொல்லி வைக்கிற..?"

"நீ சொல்றதைப் போல வைக்கிற.."

"வேண்டாம் தாமு.. இதைச் சொல்லியே என்னைக் கார்னர் பண்ணாதே.. நீ என் சுதந்தரத்தில் தலையிடற.."

"இல்லைன்னு நான் சொல்ல மாட்டேன்.. பட்.. அது என்னோட டியூட்டின்னு நான் நினைக்கிறேன்.."

"இது எப்படிடா உன் டியூட்டியாகும்..?"

"என் டியூட்டிதான் சித்தார்த்... நீ ஷேஃபா இருக்கனும்னு நான் பாடுபடறது என் டியூட்டிதான்.."

"இப்ப ஷேஃபா இல்லாம எப்படி இருக்கேன்..? என்னவோ அமேசான் காடுகளில அகப்பட்டுக்கிட்டவனைப் பேசறதைப் போல இல்ல பேசி வைக்கிற..?"

"எனக்கென்னவோ அப்படியேதான் தோணி வைக்குதுடா.. மகாபலிபுரத்துக்குப் போய் வந்ததில இருந்து நீ நீயாவே இல்லை.. ஆபிஸ் டயத்தில அன்னெசஸரியா பேசக்கூட மாட்ட.. இப்ப என்னடான்னா லேப்டாப்பில அமானுஷ்யங்களைப் பத்தி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்க.. இட்ஸ் நாட் பெய்ர்.. யூசுவலா நீ இப்படிச் செய்யற ஆளில்லை.. உன்னை நினைச்சு நான் படற கவலையைப் பத்தி உனக்குக் கவலையில்லை.. இந்த லட்சணத்தில உன்னைப் பித்துப் பிடிக்க வைத்த பெண்ணே உனக்குச் செகரட்டரியா வரனும்னு அடம் பிடிச்சு வைக்கிற.. அவ உனக்கு செகரட்டரியா வந்தா வேற வினையே வேணாம்.. ஆயுசுக்கும் உன்னை காட்டு, மேட்டில உண்மையைத் தேடிப் போறேன்னு அலைய வைச்சுட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பா.."

"இட்ஸ் நாட் பெய்ர்ன்னு என்னைச் சொல்லிட்டு நீ பேசற விதம்தான் நாட் பெயர் தாமு.. உனக்குத் தெரியாத பெண்ணைப் பற்றி நீ பழி போட்டுப் பேசக்கூடாது.."

"ரீசனில்லாம நான் பேசலை சித்தார்த்.. இது உன் மனச்சாட்சிக்கே நல்லாத் தெரியும்.."

நண்பர்கள் இருவரும் அனல் பறக்கும் விவாதத்தில் ஈடுபட..

"ஸ்டாப் திஸ் ஆர்கியுமெண்ட்.." என்று சப்தம் எழுப்பினாள் நீரஜா..

சித்தார்தனும், தாமோதரனும் சண்டைக் சேவல் களைப் போல மூச்சிறைக்க ஒருவரை ஒருவர் முறைத்தபடி முகங்களைத் திருப்பிக் கொள்ள..

"வாட் இஸ் திஸ் கைஸ்..?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் நீரஜா..

"உங்க அண்ணனிடமே கேளுங்க.." என்றான் தாமோதரன்..

"ஏன்..? இவனுக்கு வாய் இல்லையா..? இவன் கிட்டேயே கேட்டுக்க.." என்று சொல்லி விட்டான் சித்தார்த்தன்..

"ஹேய்..! என்னப்பா ஆச்சு..? இரண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் விட்டுக் கொடுத்துக்க மாட்டிங்க.. இன்னைக்கு என்னன்னா கட்டி உருளாத குறையா சண்டை போட்டுக்கறிங்க..? ஏன்..? யாராலே இந்தச் சண்டை..?"

"ஒரு மோகினியாலே..."

சித்தார்த்தனை முறைத்தபடி தாமோதரன் சொன்னான்.. சித்தார்த்தனுக்கு கோபம் வந்து விட்டது..

"மைண்ட் யுவர் டங் தாமு..! உனக்குத் தெரியாத பெண்ணைப் பத்தி இப்படிக் கமெண்ட் பண்ணலாமா..?"

"ஏய்ய்..! நான் அப்படித்தாண்டா சொல்வேன்.. மோகினியை மோகினின்னு சொல்லாம வேற எப்படிச் சொல்கிறதாம்..?"

"தாமு.."

"உனக்கெதுக்கு கோபம் வருது..?"

"அவள் எனக்குத் தெரிந்தவள்.. அவளைப் பற்றி நீ மோகினின்னு கமெண்ட் பண்ணக்கூடாது.."

"கேட்டுக்கங்க.."

என்னவோ நோட்திஸ் பாயிண்ட் யுவர் ஆனர் என்று சொல்வதைப் போல தாமோதரன் கை விரிக்க.. நீரஜா புருவங்களை முடிச்சிட சித்தார்த்தனை உற்றுப் பார்த்தாள்..

"அண்ணா..? ஹீ இஸ் ஷி..?"

நீரஜாவின் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்தான் சித்தார்த்தன்..



# 9

## கொந்தளிக்கும் கடலலையில்.. கன்னிமனம்.. எவ்விதம் கரையேறும்..?

நந்தினி துயரத்துடன் இருந்தாள்.. செம்பியன் மாதேவியின் இடைவிடாத உபதேசம் அவளைச் சுற்றிச் சுற்றித்தாக்கியது.. அவள் பிறந்ததிலிருந்து அடைக்கலம் கொடுத்து காத்தவள் என்பதில் அவளிடம் எதையும் உரைக்க இயலாமல் நந்தினி மௌனத்தையே அரணாகக் கொண்டு அசைவற்று நின்றாள்...

குந்தவை நந்தினியுடன் உரையாடுவதை நிறுத்தி விட்டாள்.. அவளது உதாசீனப் பேச்சுக்களில் மனம் புண்பட்டிருந்த நந்தினிக்கு அது உகந்ததாகவே இருந்தது..

ஆதித்த கரிகாலன் அவளை அனுதினமும் சந்திக்க வந்து சென்றான்.. ஓர்தினம் அவன் வரவில்லை.. அவனைச் சந்திப்பதற்காக யாமம் முழுதும் பொய்கைக் கரையில் காத்திருந்து ஒய்ந்து போனவளாக ஈசானபட்டரின் இல்லத்திற்கு திரும்பினாள் நந்தினி..

விளக்குகள் அனைந்த இருளை எதிர்பார்த்து வந்தவளுக்கு.. அங்கே நிலவிய சூழல்.. அதிர்ச்சியை அளித்தது..

ஈசானபட்டரின் இல்லத்தில் என்னை விளக்கு எரிந்து கொண்டிருந்தது.. போதாக்குறைக்கு வாசலில் தீப்பந்தத்தோடு நின்றிருந்தான் ஆழ்வார்க்கடியான்.. காளைகள் பூட்டப்பட்ட மாட்டு வண்டியொன்று பயணப்பட சித்தமாக இருந்தது.. அந்த வண்டிக்குள் நந்தினியை வளர்த்துக் கொண்டிருந்தவர்கள் அமர்ந்திருந் தார்கள்..

எவரும் அறியாமல் இருளின் மறைவில் பொய்கைக்கு சென்றிருந்த நந்தினி அச்சத்துடன் நின்றாள்.. தீப்பந்தத்துடன் நின்றிருந்த ஆழ்வார்க்கடியான் என்னவெல்லாம் உரைக்கப் போகிறானோ.. எவ்வா றெல்லாம் கடிந்து கொள்ளப் போகிறானோ என்ற திகிலில் அவளது இதயம் மத்தளம் கொட்டியது..

அவள் அச்சப்பட்டதைப் போல ஆழ்வார்க்கடியான் அவளைக் கடிந்து கொள்ளவில்லை.. மாறாக..

"வா நந்தினி.." என்று வெறுமையான குரலில் அழைத்தார்..

ஏன் இவ்விதமாக உணர்வுகள் மரத்துப்போன குரலில் அழைக்கிறான் என்று துணுக்குற்றாள் நந்தினி.. புறப்பட ஆயத்தமாக இருந்த மாட்டு வண்டியைப் பார்த்தாள்.. அதனுள் கட்டி வைக்கப்பட்டிருந்த துணிவகைகளையும்.. பொருள்களையும் பார்த்தாள்.. அவளுக்கு ஏதோ புரிவதைப் போல இருந்தது..

"அண்ணா..?" நடுங்கும் குரலில் அழைத்தாள்..

"போய் வா.. தங்காய்.." ஆழ்வார்க்கடியான் விடை கொடுத்தான்..

"போகவா..? எங்கே..?"

"விதி உன்னை எங்கே அழைத்துச் செல்கிறதோ அங்கே செல்.. பலமுறை நான் உன்னை எச்சரித்தேன்.. நீ அலட்சியம் செய்தாய்.. அதன் பலனை தற்போது எதிர் கொள்ளப் போகிறாய்.. இனி சோழதேசம் உனக்கு இடமளிக்காது நந்தினி..."

"என்ன..?"

நந்தினியின் தன்மானம் பெருத்த சேதத்திற்கு ஆளானது.. அவளை சோழதேசம் நாடு கடத்துகிறதா..? அந்த தேசத்தில் அவளுக்கு இடமில்லையா..?

"செல் நந்தினி.. இனி வரும் காலத்திலாவது.. கண்ணனின் திருப்பணியில் உன் மனதைச் செழுத்து.."

கணப்பொழுதும் தாமதிக்காமல் வண்டியில் ஏறி அமர்ந்தாள் நந்தினி.. அவளை வெளியேற்ற நினைக்கும் நிலத்தில் அவள் நொடிப் பொழுதுகூட நிற்கக் கூடாது..

நிலவின் ஒளியில் உயர்ந்து நின்ற பழையாறையின் அரண்மனை மேன் மாடக் கோபுரங்களை உற்று நோக்கினாள்.. அவள் மனதில் சங்கல்பம் எழுந்தது..

'ஓர்தினம் நான் திரும்பி வருவேன்.. இந்த மாளிகைகளின் ராணியாக வாழ்ந்து காட்டுவேன்.. எந்த சோழதேசம் என்னை வெளியேற்றுகிறதோ.. அந்த சோழதேசத்தின் அதிகார மையத்தை என் கரங்களில் கைப்பற்றியிருப்பேன்..'

ஆதித்த கரிகாலனை மனதில் கொண்டே இந்த சபதத்தை அவள் எடுத்தாள்.. அவள் எங்கு மறைந்தாலும்.. அவன் அங்கு அவளைத் தேடிவருவான்.. மாலை சூட்டுவான் என்பதில் அவள் நிச்சயமாக இருந்தாள்..

பாண்டிய தேசத்திற்கு மாட்டு வண்டி சென்றது.. வைகை ஆற்றின் மத்தியில் தீவு போல இருந்த மணல் திடலில் பெருமாள் கோவில் இருந்தது.. திருமால் குடி கொண்டிருந்த கோவிலை ஒட்டி அர்ச்சகர்களின் இல்லங்கள் இருந்தன.. கோவிலை ஒட்டி அழகான தாமரைக்குளம் இருந்தது.. அந்தக் கோவிலின் பட்டர் அவர்களை எதிர்கொண்டழைத்தார்..

"திருமலை செய்தி அனுப்பியுள்ளார்.. தாங்களும்.. தங்களுடைய புதல்வியும் கோவில் திருப்பணிகளில் பங்கு பெற்று.. இவ்விடமே வசிக்கலாம்.. கோவில் கைங்கர்யத்தில் கிடைக்கும் பொருளை வைத்து வாழ்க்கையை நடத்தலாம்.."

நந்தினியை வளர்ப்பவர்கள் அதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் சிரத்தை அசைத்தார்கள்.. இங்கும் பட்டரின் இல்லத்திலேயே அவர்கள் வசிக்க நேர்ந்தது.. நந்தினி பற்றற்றவள்போல வெறித்த விழிகளுடன் வலம் வந்தாள்.. ஆதித்தனின் வருகையை அனுதினமும் எதிர்பார்த்து ஏமாற்றம் கொண்டாள்.. தாமரை குளத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்தவளுக்கு பழையாறையின் பொய்கையும்.. அதன் அருகில் ஆதித்தன் அவள் கரம் பிடித்து அவளை ஓர்நாளும் கரம் விட மாட்டேனென்று வாக்களித்ததும் நினைவில் வந்து ஆடின..

*"எல்லாம் மாயைதானா..? - பேதை*
*எண்ணம் யாவும் வீணா..?*
*ஏழை எந்தன் வாழ்வில் - இனி*
*இன்பம் காண்பேனா..?"*

குமுறி அழுதாள்.. தாய், தந்தை எவரென்று அறியாமல் விதியோடு செல்லும் அவள் வாழ்வின் அவலம் குறித்து அவள் அழுதாள்.. இளவரசியான குந்தவையின் இகழ்ச்சியை நினைத்து அழுதாள்.. இளம் வயதிலேயே அவள்மீது பிரியம் காட்டிய ஆதித்த கரிகாலனின் நினைவில் அவள் அழுதாள்..

*"இணை பிரியாத..*
*ஸ்நேகம் மறந்தனையே..? - உனை*
*ஈன்றவர் சொல்லை..*
*மீறவும் பயந்தனையோ..?*
*என் ஏழ்மையினாலே பிரேமகபாடம்*
*தானே மாறியதோ..?*

*விதிதான் விளையாடியதோ..?*
*எல்லாம் மாயைதானா..?*
*பேதை எண்ணம் யாவும் வீணா..?"*

நந்தினியின் துக்கம் கரையுடைந்ததாக இருந்தது.. அவளைத் தேற்றுவாரில்லை.. தனிமைத்துயரில் மூழ்கிப் புதைந்தவளுக்கு எதிர்காலத்தை எண்ணும் போது இருளே மிஞ்சியது..

இனி அவள் யாது செய்ய வேண்டும்..? அவளது எழிலை மோகித்து எவரேனும் மணம் புரிய விரும்பி வந்தால் அதை ஏற்றுக்கொண்டு அவனுக்கு மாலை சூடுவதோ..? அவளால் அது இயலுமா..?

'இயலாது..' என்று அவள் மனம் அலறியது..

*"கனவிலும் மறவா..*
*காதல் நினைவுடனே - முன்*
*கண்டறியாத ஒருவன் துணையுடனே*
*மனவேதனையென்னும் தீயதனால் நான்*
*வெந்தே மாய்வதா..?"*
*இது நன்றோ ஆதித்தா..?*
*எல்லாம் மாயைதானா..? - பேதை*
*எண்ணம் யாவும் வீணா..?"*

பெருகி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எழுந்து நடந்தாள் நந்தினி.. அழுது.. அழுது ஓய்ந்திருந்த அவள் மனது சமனப்பட்டிருந்தது.. இனி வரும் காலத்தில் ஆழ்வார்கடியான் கூறியதைப்போல கண்ணனின்

சேவையில் மனதைச் செழுத்த வேண்டும் என்ற தீர்மானம் அவள் மனதில் எழுந்தது..

மறுதினத்திலிருந்து அவளது நடையுடை பாவனைகள் மாறிப் போயின.. நீண்டு தொங்கிய கூந்தலை முடித்து.. ஆண்டாளைப் போலக் கொண்டையிட்டுக் கொண்டாள்.. வட்டத்திலகம் இருந்த நெற்றியில் நீண்ட செந்தூரம்.. அணிகலன் இருந்த கழுத்தில் பூமாலை.. கரங்களில் பூக்குடலை..

பொழுது முழுவதும் கோவிலிலே கழிப்பாள்.. மற்ற பொழுதுகளில் நந்தவனத்தில் கண்ணன் திருப்பணிக்கான மலர்களை கொய்தவண்ணம் இருப்பாள்.. தெளிந்த நீரோடை போல ஓட ஆரம்பித்த அவ்வாழ்வில் அவளது புயலடித்து ஓய்ந்த மனம் அமைதியைக் கொண்டது..

பழையாறைக்கு திரும்பி வந்த ஆதித்த கரிகாலன் அனைத்து இடங்களிலும் அவளைத் தேடினான்.. எங்கும் நந்தினி இல்லை.. ஈசானபட்டரின் இல்லத்தில் வினவிய போது.. அவள் எங்கிருந்து வந்தாளோ.. அங்கேயே சென்று விட்டாள் என்று விடையளித்தார்கள்..

"அவள் எங்கிருந்து வந்தாள் ஈசானபட்டரே..?"

"பாண்டிய தேசத்திலிருந்துதான் வருகை தந்தாள் இளவரசே.. அவளை வளர்ப்பவர்கள் அத்தேசத்தை சேர்ந்தவர்கள்தானே..?"

'இது பணிக்கு ஆகாது...'

சினத்துடன் செம்பியன் மாதேவியின் மாளிகைக்குச் சென்றான் ஆதித்த கரிகாலன்.. அவனது புயல் வேகத்தில்

அவள் பதட்டம் கொள்ளவில்லை.. அமைதி கலையாமல் அவன் வதனம் நோக்கி..

"வா.. கரிகாலா.." என வரவேற்றாள்..

"தங்களின் மாளிகையில் நான் விருந்துண்ண வரவில்லை பாட்டி.."

"ஏன் ஆதித்தா..? என் மாளிகையின் சமையல் காரர்களின் நளபாக கரத்திறனில் என்ன குறைவு கண்டாய்..? நீ விருந்துண்ண மறுக்கும்படியா எம் மாளிகையின் விருந்து உள்ளது..? சற்றுப்பொறு.. சமையல்காரர்களை உன் முன் நிறுத்தி விசாரணை மேற்கொள்கிறேன்.."

"எமது நிலையைக் கண்டு நகைக்கிறீர்களா பாட்டி..?"

"அல்ல குழந்தாய்..! உன்னைப் பார்த்து நான் நகைப்பதா..? ஒருபோதும் நான் அதைச் செய்ய மாட்டேன் கரிகாலா.."

"நந்தினி எங்கே..?"

"இதற்கா இத்துனை சினம் கொண்டாய்..? பாண்டிய தேசத்திலிருந்து வந்தவள்.. வந்த தேசத்திற்கே திரும்பிச் சென்று விட்டாள்.."

"நீங்கள் திருப்பி அனுப்பி விட்டீர்கள்.."

"அல்ல கரிகாலா..! அவளது பெற்றோர்கள் அவ்விதமாக முடிவெடுத்தால் தடுக்கும் அதிகாரம் நமக்குள்ளதா..?"

"ஹு..! தங்களின் அதிகாரமும்.. குந்தவையின் அதிகாரமும் சோழ தேசத்தில் கொடிகட்டி பறப்பதை தற்போதுதான் பிறந்திருக்கும் மழலைகூட உரைக்குமே.."

"என்னவோ கரிகாலா..! நீதான் எங்களிருவரின் அதிகாரத்தைக் குறித்து மெச்சிக் கொள்ள வேண்டும்.. எங்களால் நந்தினியின் பெற்றோரை தடுத்து நிறுத்த இயலவில்லை எனும்போது.. எங்களின் அதிகாரத்தைக் கொண்டு எவற்றை நாங்கள் சாதிக்க இயலும்..?"

செம்பியன் மாதேவியின் வினவுதலில் பல்லைக் கடித்த வண்ணம் புரவியேறி பறந்துவிட்டான் ஆதித்த கரிகாலன்..

அவனில்லாத தனிமையில் தேசத்தை விட்டே விரட்டப்பட்ட நந்தினியின் நிலையை நினைத்து அவன் மனம் கொதித்தது..

'நானெல்லாம் என்ன காதலன்..? எனை நம்பியிருந்தவளை நிர்கதியாக விட்டு விட்டு.. தேசங்களை வெற்றி கொண்ட தேசாந்திரியாக சுற்றிக்கொண்டு இருக்கிறேன்..'

நந்தினியை தேடியலைந்த கரிகாலனை போர் எதிர் கொண்டது.. அவனிடம் தோற்று மறைவிடத்தில் பதுங்கியிருந்த வீரபாண்டியன் மறைவிடத்திலிருந்து வெளிவந்து.. பாண்டியநாடு தனக்குரியது எனப் போர்ப் பிரகடனம் செய்ததில் ஆதித்த கரிகாலன் படையுடன் பாண்டியதேசத்தை நோக்கிப் புறப்பட்டான்..

'அங்கே அவள் இருப்பாளா..?'

போர்க்கோலம் பூண்டிருந்த அந்த வேளையிலும் அவன் மனதின் ஓரமாக மின்னல் போல இந்த எண்ணம்தான் எழுந்து நின்றது.. நந்தினியின் நினைவைத் துறக்க அவனால் இயலவில்லை..

பாண்டிய நாட்டில் பிரவேசித்தபோது அவனுக்கு பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைப் பற்றித் தெரியவந்தது..

சோழ நாட்டில் 'வேளக்காரர் படை' என்ற தனிப் படைப் பிரிவு உண்டு.. அந்த வேளக்காரப் படையினர் தங்களின் உயிரை சோழ நாட்டு அரியணைக்கு உடைமை யாக்கிய பிரதிக்ஞை எடுத்தவர்கள்.. அப்பேற்பட்ட வேளக்காரப் படைகளைவிடவும் பாண்டிய நாட்டின் 'ஆபத்துதவிகள்' ஒருபடி மேலானவர்களாக இருந்தனர்..

போரில் பாண்டிய மன்னனுக்கு ஆபத்து ஏற்பட்டால் பின் வாங்கி ஓடாமல் தங்களின் உயிரைக் கொடுத்தாவது.. பாண்டிய மன்னனைக் காக்கும் சபதம் பூண்டவர்கள்.. அது சாத்தியப்பட வில்லையென்றால் தங்களின் சிரங்களை தாங்களே துண்டித்து விடுவதாக பிரதிக்ஞை எடுத்தவர்கள்.. தங்களது வாழ்நாளை பாண்டிய மன்னனைக் காக்க என்று அர்ப்பணித்தவர்கள்..

அப்பேற்பட்ட பாண்டிய ஆபத்துதவிகளின் நடமாட்டம் இருப்பதாக படைவீரர்கள் கண்டு சொன்ன வைகை ஆற்றின் மத்தியில் தீவைப் போல அமைந்திருந்த அந்த மலைதிட்டுப் பகுதியை நோக்கிப் புரவியில் போய் கொண்டிருந்தான் ஆதித்த கரிகாலன்..

ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த மங்கையரின் எழில் வடிவில் மனதைச் செழுத்தாமல்.. அவன் மனதில் குடி

கொண்டிருந்த நந்தினியின் எழில் வடிவில் சோகப் பெருமூச்சு விட்டபடி மணல்திட்டை அடைந்தவனுக்கு ஆனந்தம் காத்திருந்தது..

பாண்டியனைத் தேடி வந்தவன் அருகிலிருந்த நந்தவனத்தில் பூக்களை கொய்து கொண்டிருந்த நந்தினியைப் பார்த்துவிட்டான்..

ஆண்டாளைப் போல கொண்டையிட்டு கழுத்தில் பூமாலையுடன் பக்திப் பிழம்பாய் நின்று கொண்டிருந்த வளின் அருகே புரவியை நடத்தியவன்.. புரவியை நிறுத்தி.. குதித்து இறங்கி வியப்பும், மகிழ்வும் ஒன்றுசேர அவளை அணுகினான்..

"நந்தினி.. நீதானா..? நான் காண்பது சொப்பனமா..? இல்லை நனவா..? நீ இங்கு என்ன செய்கிறாய்..?"

ஆதித்த கரிகாலனின் குரலில் அதிர்வுடன் திரும்பிப் பார்த்த நந்தினி சிலையாக நின்று விட்டாள்.. எவன் முகத்தை மறப்பதற்காக அவள் இறை வழிபாட்டில் மனம் செலுத்தினாளோ.. அவன் வதனம் முழுவதும் மகிழ்ச்சி பொங்க ஆனந்தப் பரவசத்துடன் அவளருகில் நின்று கொண்டிருந்தான்.. அவன் கண்களில் மின்னிய காதலில் நந்தினி தடுமாறிப் போனாள்..

எவளின் திருவுருவம் இரவும் பகலும் ஆதித்த கரிகாலனின் மனதில் வலம் வந்து அவனது நிம்மதியைத் துரத்திக் கொண்டிருந்ததோ.. அவளைக் கண்டுவிட்ட மகிழ்வுடன் ஆதித்தகரிகாலன் அவளை நோக்கி இரு கரங்களையும் நீட்டி அழைத்தான்..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 9

## முற்பிறப்பில் நீ சொன்ன..
## மொழிதன்னை நினைவில் கொள்...

'உன்னால்தானே இந்நிலை..?'

சித்தார்த்தன் வெறியுடன் தாமோதரனை முறைத்தான்.. நண்பனது சினத்தை லட்சியம் செய்யாமல் தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்தான் தாமோதரன்.

"உன் சிஸ்டர் கேட்கிறாங்கள்ல.. அவங்க கேள்விக்கு பதில் சொல்லு சித்தார்த்.."

சித்தார்த்தன் யோசனையுடன நீரஜாவைப் பார்த்தான்.. அவன் முகத்தில் கண்டிப்பு வந்தது..

"ஷி இஸ் ஜஸ்ட் எ பிரண்ட் நீரு.."

"பொய்.." என்றான் தாமோதரன்..

"இது பொய்ன்னா.. மெய் என்னன்னு நீயே சொல்லுடா.." பல்லைக் கடித்தான் சித்தார்த்தன்..

"நீரஜா..! ஒரே ஒரு நாள் ஈவினிங் டயத்தில மீட் பண்ற பெர்சனை நீங்க என்னன்னு சொல்லுவீங்க..?" என்ற தாமோதரனின் கேள்விக்கு..

"ஜஸ்ட் நோன் பெர்சன்னு சொல்லுவேன்.." என்றாள் நீரஜா..

"காதில விழுந்ததா..? ஜஸ்ட் நோன் பெர்சனாம்.." உரத்த குரலில் சித்தார்த்தனிடம் சொன்னான் தாமோதரன்..

"இதை எதுக்கு அண்ணாகிட்டச் சொல்கிறிங்க..?" நீரஜா குழம்பினாள்..

"வேற என்னத்தைச் செய்யச் சொல்கிறீங்க..? இவன் பிரண்டுன்னு சொன்னானே.. அந்தப் பெண்ணை ஒருநாள் மகாபலிபுரத்துக்குப் போயிருந்தப்ப ஈவினிங் டயத்தில மீட் பண்ணியிருக்கான்.. அவ என்னடான்னா இவன்கிட்ட அமானுஷ்யம் அது. இதுன்னு அள்ளி விட்டிருக்கா.. அவளுக்கு அங்கே இருக்கிற ஐந்துரதக் கோவில்களைப் பாத்தா ஒரு வைப்ரேசன் உண்டாகுமாம்.. அதைக் கேட்டவுடனே நம்ம ஆளுக்கும் அதே வைப்ரேசன் உண்டாகித் தொலைச்சிருக்கு.. திரும்பி வந்தவன் அந்தப் பெண்ணைத் துரத்தர அமானுஷ்யம் எதுன்னு கண்டுபிடிக்க லேப்-டாப்பில ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கான்... யு நோ நீரஜா.. இன்னைக்கு இண்டர்வியூங்கிற நியூஸைக் கூட இவன் மறந்து போயிட்டான்னா பார்த்துக்கங்க.. அந்த அளவுக்கு இதில இன்வால்வ் ஆகிட்டான்.."

"மை காட்..!" நீரஜா கவலையானாள்..

"நீயா அண்ணா இப்படியெல்லாம் செய்து வைக்கிற..? இதைத்தான் ஃபாரின் போய் படிச்சுட்டு வந்தயா..?"

"நீங்க வேற நீரஜா.. ஃபாரின்காரங்க நம்மள விட பைத்தியக்காரங்க.." என்றான் தாமோதரன்..

"உனக்குன்னு எப்படின்னா இதைப் போல விநோதமான கேஸ்களா வந்து மாட்டுது..?" முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு கேட்டுவைத்தாள் நீரஜா..

"நல்லாக் கேளுங்க.. இதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன்.. பதில் சொல்லாம சண்டைக்கு வர்றான்.." தூண்டி விட்டான் தாமோதரன்..

"ஏண்டா..?" அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"உன்னாலே நான் பட்ட தலை வேதனையை உன் சிஸ்டரும் படட்டும்.. அப்பத் தெரியும்.. என் பாடு என்னன்னு.. ஏங்க.. நீங்களே சொல்லுங்க.. மகாபலி புரத்திலே இவனைக் கண்டவ.. அப்படியே போய் தொலைக்காம இவனோட செகரட்டரி வேலைக்கான இண்டர்வியூவில கேண்டிடேட்டா வந்து நிற்கிறா.."

"ஓ..! ஐ ஸீ..!"

இப்போதுதான் நீரஜாவுக்கு அனைத்தும் புரிந்தது.. அவள் மெச்சுதலும் நன்றியும் கலந்த பார்வையினை தாமோதரனை நோக்கிப் பார்த்து வைத்தாள்..

"கேட்ச் பிடிச்சுக்க.." எரிந்து விழுந்தான் சித்தார்த்தன்..

"இதைப் போல இவ பார்த்து வைக்கனும்னுதான என்னைப்பத்தி போட்டுக்குடுத்த..? நீயெல்லாம் ஒரு பிரண்டாடா..?"

"இவர் பிரண்ட் இல்லேன்னா வேற யாருக்கும் அந்தத் தகுதி கிடையாது.. பிரண்டுன்னா இவர்தான் பிரண்ட்.." சர்டிபிகேட் கொடுத்தாள் நீரஜா..

"ஏன் சொல்ல மாட்ட..? போட்டுக் கொடுக்கிற புண்ணியவான் கிட்ட மாட்டிக்கிட்டு நான் துடிக்கிறேன்.. நீ என்னடான்னா அவனைப் பத்தி புகழாரம் சூட்டறே.. ம்ஹூம்.. விதி..!"

"நீயே சொல்லுண்ணா.. உன்னைக் காம்ளிகேட்டா ஆக்கிற பெண்ணை சந்திச்சு வைச்சிருக்கிற.. அவளை மீட் பண்ணின நாளில இருந்து ஒரு மார்க்கமா இருந்து வைக்கிற.."

"ஒரு மார்க்கமாவா..? நீங்க வேற.. இவன் பல மார்க்கமா இருந்து தொலைக்கிறாங்க.." தாமோதரன் ஸ்குரு கொடுத்தான்..

"என்னை ஒருவழி பண்றதுக்கு நீ ஒருத்தன் போதும்டா.." மனமார வயிறெரிந்தான் சித்தார்த்தன்..

நீரஜா சட்டமாக அமர்ந்து கொண்டு சித்தார்த்தனை குடைய ஆரம்பித்தாள்..



## 10

எங்கிருந்தோ வந்த சொந்தம்..
எடுத்துச் சொல்ல இயலாத பந்தம்..

நந்தினியின் பூவுடல் நடுங்கியது.. அலைகடலாய் பொங்கிய மனதை.. அமைதிப் படுத்தும் முயற்சியில் தற்போதுதான் வெற்றி கண்டிருக்கிறாள்.. அனைத்தையும் மறந்து ஆண்டவனின் தாள்களில் சரண்புகுந்தவளுக்கு புதிதான சோதனையா..?

'கண்ணா..! இதுவும் உனது விளையாடலா..?' நந்தினி மனதுக்குள் புலம்பித் தவித்தாள்..

"ஏன் தயக்கம் நந்தினி..? நான்தான் உனது ஆதித்த கரிகாலன்.. உனைத் தேடி வந்திருக்கிறேன் அன்பே..! அருகே வா.." ஆதித்தன் உருக்கமான குரலில் அழைத்தபடி அருகில் நெருங்கினான்..

பின்னடைய இயலாமல் நந்தினியின் கால்கள் பின்னின.. அவளது கரத்திலிருந்த பூக்குடலை நழுவியது.. தேகத்தில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டதைப் போல தொய்வுற்று அவள் சரிந்தாள்..

"நந்தினி..! எனதன்பே..! பிரியத்துக்குரியவளே..! உனக்கு என்ன நேர்ந்தது...?" மூர்ச்சையுற்று சரிந்த நந்தினியை தனது கரங்களில் ஏந்திக் கொண்டான் கரிகாலன்..

தாமரைக் குளத்திலிருந்த தண்ணீரை.. தாமரை இலையை குவளை போல மடித்து முகர்ந்து கொண்டு கரையேறியவன்.. புல் தரையில் இருந்த நந்தினியைத் தூக்கி தன் மடியில் கிடத்திக்கொண்டு அவள் வதனத்தில் நீர் தெளித்து எழுப்பினான்..

"கண் விழிப்பாய் நந்தினி.. உனது கரிகாலன் வந்திருக்கிறேன்.."

எங்கேயோ ஒலிப்பதைப் போல அவன் குரல் ஒலித்தில் நந்தினி மெதுவாக இமைகளைத் திறந்து பார்த்தாள்.. அவளது வதனத்திற்கு வெகு அருகே கரிகாலனின் ஆண்மையும், கம்பீரமும் நிரம்பிய அழகிய

வதனம் தென்பட்டது.. அவன் விழிகளில் பிரதிபலித்த மயக்கத்தை கண்ணுற்றவள்..

'இன்னும் இவன் மனம் மாறவில்லை..' என தெளிந்தாள்..

அவன் மடியிலிருந்து எழுந்து கொள்ள முற்பட்டவளை அவன் தடுத்தான்..

"இவ்விதமே இருந்தால் என்ன குறைவு நேர்ந்து விடும்..?"

"தங்களுக்கு ஏதும் குறைவு நேராது இளவரசே..! எனக்குத்தான் நேரும்.."

சோழதேசத்தை விட்டு துரத்தியடிக்கப்பட்ட நினைவில் தொண்டை கம்ம உரைத்தாள் நந்தினி..

"நான் அருகிலிருக்கும்வரை உனக்கு ஒரு குறைவும் நேராது கண்மணி..! குறைவு நேர நான் அனுமதிக்க மாட்டேன்.."

"அனைத்துப் பொழுதும் தாங்கள் என்னருகிலேயே இருக்க இயலமா இளவரசே..? தாங்கள் அருகில் இல்லாத பொழுதுகளில் ஏற்படும் குறைவுகளை தங்களால் நிவர்த்தி செய்யத்தான் இயலுமா..?"

நிர்க்கதியாக சோழ தேசத்தை விட்டு அகன்ற மனத்துயரில் வேதனை ததும்பும் குரலில் வினவினாள் நந்தினி..

"கடந்தவை.. கடந்தவையாகவே இருக்கட்டும்.. இனி எதிர்கொள்ளப் போகும் வருங்காலத்தில் நீ

எனது அருகிலிருப்பாய்.. பட்டத்து இளவரசனாக நான் பதவியேற்கும் போது எனது தேவியாக.. சோழர்குல ராணியாக என் அருகில் வீற்றிருப்பாய்.."

"சொப்பனத்தில்தான் இவை சாத்தியமாகும் இளவரசே..!"

விரக்தியுடன் இயம்பியனாள் நந்தினி.. ஆண்கள் எதிர் கொள்ளும் உலகும்.. பெண்கள் எதிர் கொள்ளும் உலகும்.. வேறு வேறானவை.. நந்தினியின் இதயம் சல்லடைக் கண்களாக துளைக்கப்பட்டு விட்ட கொடுமையை ஆதித்த கரிகாலன் அறிய மாட்டான்.. அவளிதயத்தைக் துளைத்த கணைகளின் கூர்மையைப் பற்றியும் அவன் அறியமாட்டான்.. அவனறிந்த உலகில் அவனுக்கு எந்த விதமான எதிர்ப்பும் இருந்ததில்லை.. இனி இருக்கப் போவதுமில்லை.. அப்படியே அவன் எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தாலும் வாள் முனையில் அதைத் தோற்கடிப்பான்..

நந்தினி என்ன செய்வாள்..?

"நனவிலும் இவை சாத்தியமாகும் நந்தினி.. நான் சாத்தியமாக்கிக் காட்டுவேன்.. என்மீது நம்பிக்கை கொள்.."

அவளது கேசம் விலக்கி வதனம் வருடியவனின் பார்வை அவளது சங்குக் கழுத்தில் கிடந்த பூமாலையின் மீது படிந்தது..

"இது என்ன கோலம் நந்தினி..? நீ என்ன சன்யாசினியா..?"

"ஆகக் கூடாதா..? துறவறத்தை ஆண்கள்தான் மேற்கொள்ள வேண்டுமா..? விரக்தியின் விளிம்பிலிருக்கும் பெண்களும் மேற்கொள்ளலாம் இளவரசே..!"

"கெடுத்தாயே காரியத்தை.."

"ஏன் இளவரசே..?"

"எனது தேவி துறவறம் மேற்கொண்டால் இல்லறம் நடத்த நான் எங்கு செல்வேன்..? அதை ஆலோசனை செய்தாயா..?"

"இளவரசே..!"

நந்தினியின் வதனம் குங்குமமானது.. அதை ரசனையுடன் பார்த்த கரிகாலனின் மடியிலிருந்து எழுந்து அமர்ந்தாள் அவள்.. எழிலே வடிவானவளை இமைக்காமல் அள்ளிப் பருகுவதைப் போலப் பார்த்து வைத்தான் ஆதித்த கரிகாலன்..

"இவ்விதம் பார்க்காதீர்கள்.." நாணம் கொண்டாள் நந்தினி..

"எதற்காக நந்தினி..? உரிமையுள்ளவன் நான்.."

"உலகறிய அவ்வுரிமையை தாங்கள் தரவுமில்லை.. நான் பெறவுமில்லை இளவரசே.."

"அது உலகத்துக்கு.. என் இதயத்துக்கு என்றுமே நீ மட்டும்தான் எனது தேவி.. நான் மட்டும்தான் உனது சுவாமி.."

"அன்பே..!"

"ஆம் நந்தினி.. ஆதித்த கரிகாலனைப் பற்றி நீ யாது நினைத்தாய்..? கண் மறைந்தால் அவன் எண்ணத்திலிருந்தும் மறைந்து விடுவோம் என்றா..?" சினம் கொண்டான் அவன்..

"அல்லவா..?" ஆனந்தத்துடன் அவள் வினவினாள்..

"அல்ல தேவி..! இன்றைய தினத்தில் நான் உன்னைக் காணாமல் இருந்திருந்தாலும்.. என்றுமே உனை மறவாமலே வாழ்ந்திருப்பேன்.. உன்னைத் தேடுவதில் காலம் கழித்திருப்பேன்.."

"இளவரசே..!"

நந்தினி அவன் தோள் சாய்ந்தாள்.. வெகு நாழிகை அவர்கள் உரையாடினார்கள்.. பூமாலையைச் சுட்டிக் காட்டி..

"இக்கோலத்தில் உன்னைக் காணக்கூடும் என நான் எண்ணியதே இல்லை.. இது என்ன கோலம் நந்தினி..?" என்றான்..

"வேறு எக்கோலத்தைப் பூணுவேன்..? இப்பிறவியில் தங்களையன்றி வேறொருவரின் விரல் நுனிகூட என் தேகத்தில் படலாகாது.. அதற்கான மார்க்கம் துறவறம் ஒன்றுதான் என்ற முடிவிற்கு நான் வந்தேன்.. இப்பிறவியில் த:ங்களைத்தவிர வேறு எவரையும் என்னால் மணக்க இயலாது.. எனவே கண்ணனுக்கு தொண்டு செய்து காலம் கழிக்க இக்கோலம் பூண்டேன்.. மானிடர் எவரையும் மணக்காது இறுதிவரை இருந்துவிட வேண்டும் என உத்தேசித்தேன்.. இந்தத் திருமால் கோவிலில் புஷ்ப

வைங்கர்யம் செய்து வாழ்கிறேன்.." நந்தினியின் விழிகளில் கண்ணீர் மல்கியது..

"நானே உனது கண்ணன்.."

ஆதித்த கரிகாலன் அவள் கழுத்திலிருந்த மலர் மாலையை கழற்றித் தன் கழுத்தில் அனிந்து காட்டினான்.. அவன் கழுத்திலிருந்த பொன் ஆபரணத்தை கழற்றி அவள் கழுத்தில் அணிவித்தான்..

"இப்போரில் நான் வெல்வேன்.. வீரபாண்டியனின் சிரத்தைக் கொய்வேன்.. என்தந்தையிடம் வெற்றிப்பரிசாக உனை எனக்கு மணம் முடித்துக் கொள்ளும் வரத்தை வினவுவேன்.. உன்னை எனது ராணியாக்கிக் கொள்வேன்.. அதுவரை இந்த ஆபரணம் எனது வாக்குறுதியை உனக்கு நினைவு படுத்திக் கொண்டே இருக்கும்.." நந்தினியின் கன்னத்தை ஸ்பரிசித்து கிறங்கிய குரலில் பகன்றான் கரிகாலன்..

இருள் சூழ்ந்ததில் அவர்கள் எழுந்து நின்றார்கள்..

"விடை கொடு நந்தினி.." என்றான் கரிகாலன்..

"மறுபடியும் சந்திப்போமா..?" கலங்கிய குரலில் அவள் வினவினாள்..

"அதிலென்ன சந்தேகம்..? அடிக்கடி வருகை தருவேன்.. உன்னுடன் அளவளாவுவேன்.. உனை விட்டு சோழ தேசம் திரும்ப மாட்டேன்.."

உறுதி அளித்து விட்டு.. புரவியில்தாவி ஏறினான் ஆதித்த கரிகாலன்.. கரம் அசைத்து விடை கொடுத்தாள் நந்தினி..

புழுதி பறக்க புரவி பறந்ததும் திரும்பியவள் அரண்டு போய்

"வீல்.." என வாயில் வலக்கரத்தை வைத்து அலறினாள்..

அவளுக்கு அருகில் நின்றிருந்தான் அந்த மனிதன்.. அழுக்குப் படிந்த உடையாக இருந்தாலும்.. அரச உடையில் இருந்தான்.. நடுத்தர வயதைக் கடந்து ஐம்பது வயதை அணுகிக் கொண்டிருந்தாலும் நிமிர்வாக நின்றான்.. அவன் விழிகளில் வியப்பும், பாசமும் கலந்திருந்தன..

"யார்..? யார்..?" நந்தினி பதறினாள்..

"அச்சம் கொள்ளாதே மகளே..! நான் உனக்குத் தீங்கிழைக்க வருகை தரவில்லை.. உன் தோற்றம் எனக்குள் வினாவை எழுப்பியுள்ளது.. அதற்கு விடை பெறும் பொருட்டே தேங்கி நின்றேன்.." என்றான் அந்தப் புதியவன்..

"தாங்கள் யார்..?"

"அதையறியு முன்பு நீ யார் என்பதை உரைப்பாய் குழந்தாய்.."

பரிவாகப் பேசிய அந்த மனிதனின்மீது ஏனோ நந்தினிக்குள் இனம் விளங்காத பாசம் சுரந்தது.. அவனுடன் உரையாடிக் கொண்டே இருக்க வேண்டும் போல மனதின் ஓர் மூலையில் ஆவல் எழுவதை வியப்புடன் அவள் உணர்ந்தாள்..

"எனது நாமம் நந்தினி என்பதாகும்.. நான் தாய், தந்தை அற்றவள்.. எனது வளர்ப்புத் தாய், தந்தையர் பட்டரின் இல்லத்தில் வசிக்கிறார்கள்.."

"தம்மை இதற்கு முன்பாக இப்பகுதியில் நான் காணவில்லையே.."

"ஐயா..! நான் சோழ தேசத்தில்தான் பிறந்தேனாம்.. எனது பிறப்பில் ஏதோ மர்மம் அடங்கியுள்ளதாம்.. நான் பிறந்தவுடன் பாண்டியநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டேனாம்.. எனது வளர்ப்புத் தாய்.. தந்தையரும் நானும் எனது சிறுமிப் பிராயத்தில் சோழ தேசத்திற்குத் திரும்பினோம்.. அங்கே செம்பியன் மாதேவியின் பாது காவலில் நான் வளர்ந்தேன்.. பழையாறையின் ஈசான பட்டரின் இல்லத்தில் நாங்கள் தங்கியிருந்தோம்.. சற்று தினங்கள் முன்புதான் பாண்டிய நாட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டோம்.."

"அவ்வாறெனில்.. எனது சந்தேகம் ஊர்ஜிதமாகி விட்டது..."

"என்ன சந்தேகம் ஐயா..?"

"ஐயா அல்ல மகளே..! தந்தையே என்று அழை.. நான் உனது தந்தையாவேன்.. நீ எனக்குப் பிறந்த புதல்வியாவாய்.."

'இது என்ன புதிய புதினம்..?' நந்தினி திகைத்து நின்று விட்டாள்..

அவள் செவிகள் உள்வாங்கியதை அவளால் நம்பவே இயலவில்லை.. தாய், தந்தை எவரென்று அறியாதவளின் முன்னிலையில் நான்தான் உனது தந்தை என்று ஒருவன் வந்து நிற்கிறான்..

'இதை நம்புவதா..? கூடாதா..?' நந்தினிக்கு குழப்பம் மிகுந்தது.. அவள் தலை வேதனைக்கு ஆளானாள்..

"எதன்பொருட்டு பிரமித்து நிற்கிறாய் மகளே..? எவ்விதம் இவன் நமை இனம் கண்டு கொண்டான் என சந்தேகிக்கிறாயா..?" அம்மனிதன் இதமாக வினவினான்..

'ஆம்..! என்று கூற தயக்கமாக இருந்தது நந்தினிக்கு.. அவளது சந்தேகத்தை அவன் கண்டு உரைத்ததில் அவள் மனதின் ஓரமாக சிறிதளவு நம்பிக்கை துளிர் விட்டது..'

'மெய்யாகவே இம்மனிதர் எனது தந்தையாக இருக்கக் கூடுமோ..?'

"தமது சந்தேகம் தவறல்ல மகளே..! உனை நான் இனம் கண்டு கொண்டது உனது தோற்றத்தை வைத்துத்தான்.."

"எனது தோற்றமா..? எமக்கேதும் புரியவில்லையே.."

"தமக்குப் புரியாதுதான்.. குழந்தாய்..! தமது தோற்றம் அப்படியே தமது தாயின் தோற்றத்தைப் பிரதிபலிப்பதை நீ அறிவாயா..?"

"மெய்யாகவா..?" நந்தினி பரபரத்தாள்..

"ஆம் மகளே..!" என்றான் அவன்..

"அவ்வாறெனில் எனது தாயை தாங்கள் அறிவீர்களா..?"

தனது வினாவில் இருந்த அபத்தத்தை அறியாமல் பரபரத்தாள் நந்தினி.. தந்தை என்று அவள்முன் வந்து நிற்பவன்.. அவளது தாயை அறியாமல் அவளுக்கு தந்தையாகி இருப்பானா..?

கூர்மையான மதிநுட்பம் வாய்க்கப் பெற்ற நந்தினிக்கு இந்த அதிமுக்கிய விவரம்கூட பிடிபடவில்லை.. அத்தகைய பரபரப்பிற்கு அவள் ஆளாகி இருந்தாள்..

அதை உணர்ந்த அம்மனிதன் புன்முறுவல் பூத்தான்.

"அறிவேன் மகளே..! உனது தாய் தோற்றத்தில் உன்னைப் போலவே இருப்பாள்.. ஆயினும்.."

"ஆயினும்.. என்ன ஐயா..?"

"அவள் ஒரு பிறவி ஊமை மகளே.. செவிமடுக்கும் திறனும் இல்லாதவள்.."

"என்ன..?"

நந்தினியின் முன்னால் உலகமே சுழன்றது.. அவளது தாய் வடிவழகில் நந்தினியைப் போலவே இருப்பாள்.. ஆனினும் அவள் வாய்பேச இயலாத ஊமை.. செவி மடுக்க இயலாத செவிடு..

எந்தவிதமான குறைகளும் இல்லாத மங்கையரை மணப்பதற்கே மணாளன்கள் கிடைப்பதில்லை எனும் போது.. செவிட்டூமையான மங்கையை அந்த மனிதர் எவ்வாறு மணந்து கொண்டார்..?

"அது பெரிய புதினம் அம்மா.. அதை உரைக்க ஆரம்பித்தால் இன்றைய பொழுது போதாது.. பின்னொரு நாளில் அவற்றைப் பற்றி நான் தமக்கு உரைக்கிறேன்.." என்றான் அவன்..

அம்மனிதன் உரைத்த அந்த 'பின்னொரு நாள்..' வந்து சேரும் போது என்ன விதமான இன்னல்களை நந்தினி

எதிர்கொள்ளப் போகிறாள் என்பதை அறியாதவளாக அவள் கரம் குவித்தாள்.. அம்மனிதன் முன் மண்டியிட்டாள்..

"தங்களிடம் இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்.. தாய், தந்தையர் எவரென்று அறியாமல் இத்தினம் வரை வாழ்ந்து விட்டேன்.. இனியும் அவ்வாறே இருந்து விட்டுப் போகட்டும்.. தயைகூர்ந்து தாம் பொய்யுரைக்க வேண்டாம்.. தங்களின் வார்த்தைகளில் நான் நம்பிக்கை கொண்டு.. இறுதியில் அவை பொய்யென்று ஆகிவிட்டால்.. அதைத் தாங்கும் சக்தி எனக்குக் கிடையாது ஐயா.."

அவளின் கண்ணீரில் அவன் துயரம் கொண்டான்..

"அல்ல மகளே.." என்று அவள் சிரத்தில் தன் கரம் வைத்து ஆசிர்வதித்தான்..

"எதில் பொய்யுரைக்க வேண்டும்.. என்ற நியதி இருக்கிறது மகளே..! இதுபோன்ற பொய்யை எந்த ஆண்மகனாவது உரைப்பானா..? நானே உனது தந்தை..! இன்னொரு ரகசியத்தையும் உரைக்கிறேன் கேள்.. நீ தனித்துப் பிறந்தவளல்ல.. மற்றொரு ஆண்மகவுடன் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவி நீ.."

"ஐயா..?"

நந்தினி, மூர்ச்சையாகிவிடுவோமோ என அஞ்சி விட்டாள்.. தாயின் அடையாளமும்.. தந்தையின் உறவும் கிடைக்கப் பெற்றவளுக்கு.. அவருடன் பிறந்த சகோதரன் ஒருவனும் உள்ளான் என்பதில் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி வந்தது..

"ஆம் மகளே..! உனது தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.. அக்குழந்தைகளும் செம்பியன் மாதேவியின் பாதுகாவலில்தான் பிறந்தன.. இருவரில் ஆண் மகவை அவள் வளர்க்கிறாள்.. பெண்மகவான உன்னை பாண்டிய தேசத்திற்கு அனுப்பி வளர்க்கச் சொல்லியிருக்கிறாள்.. இவை அத்தனைக்கும் அடிப்படையான காரணம் ஒன்று உண்டு மகளே.. அதைக் காலப் போக்கில் உரைக்கிறேன்.."

"என்ன உரைக்கிறீர்கள் ஐயா..? செம்பியன் மாதேவி பிராட்டியாரின் திருப்புதல்வர், மதுராந்தகச் சோழர் எமது சகோதரனா..?"

"ஆம் மகளே.."

அதுவரை அமைதியாகப் பேசிக் கொண்டிருந்த அம்மனிதன் மீசையை முறுக்கி இடி போல பயங்கரமாக நகைத்தான்.. நந்தினி அச்சத்துடன் விதிர்த்துப் போனாள்.. அம்மனிதன் நகைப்பை நிறுத்தவில்லை..

"சோழர்குல அரியணைக்கு உரிமை கோரும் நிலையில் உள்ள மதுராந்தகச் சோழன்... இந்த வீரபாண்டியனின் புதல்வன்தான்.. ஹா.. ஹா.."

"என்னது..?" நந்தினி மூர்ச்சையானாள்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 10

## உனைத் தேடித் தேடி..
## என் பாதம் நோகும்...

நீரஜாவின் விழிகளில் தெரிந்த கண்டிப்பில் சித்தார்த்தன் இருப்புக் கொள்ளாமல் டேபிளில் இருந்ததைக் கலைத்து வைத்தான்.. தாமோதரனுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது..

"ஹார்ஷா கேட்காதீங்க.. அவனே பாவம் குழம்பிப் போயிருக்கான்.." என்று நீரஜாவிடம் பரிந்துரை செய்தான்.

"நீ என்ன கேட்டகிரிடா..? இப்படியும் தூண்டி விடற.. அப்படியும் ரெகமென்டேசனுக்கு வர்ற.. உன்னை ரெகமன்ட் பண்ணுன்னு நான் வேண்டிக் கேட்டுக் கிட்டேனா..?" சித்தார்த்தன் எரிச்சல் பட்டான்..

"நான் என்ன கேட்டகிரின்னு உனக்குப் புரியாதா என்ன..?"

"நீதானே..? ரைட்டில இண்டிகேட்டர் போட்டுட்டு.. லெப்டில கையைக் காட்டிட்டு.. ஸ்ட்ரெயிட்டா வண்டியை ஓட்டி.. மத்த வண்டிகளக் கவிழ்க்கற ஆளாச்சே.. நீ ஸ்டடியாத்தான் இருப்ப.. உன்னை நம்பி உன் பின்னாலே வர்ற வண்டிகதான் பாவம்.. சேதாரத்துக்கு ஆளாகும்.."

"ஆஹா..! என்னைப் பத்தி எத்தனை தெளிவா புரிஞ்சு வைச்சிருக்கடா மச்சான்.. என் நெஞ்சத்தை டச் பண்ணிட்டடா.."

"கொலைவெறியை கிளப்பாதே தாமு... சொல்லிட்டேன்.."

நண்பர்கள் மோதிக் கொண்டிருக்க.. டேபிளின் மீதிருந்த ஃபைலை கையில் எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தாள் நீரஜா..

"இப்ப அதை எதுக்கு நோண்டற..?" என்று கடுப்பானான் சித்தார்த்தன்..

"இதில எந்தப் பெண்.. அந்தப் பெண்ணுனு தேடிப் பார்க்கறேன்.." நிதானமாகச் சொன்னாள் நீரஜா..

"உனக்கெதுக்கு இந்த வேலை..?" சித்தார்த்தன் நீரஜாவின் கையிலிருந்த ஃபைலை பறிக்க முயன்றான்..

நீரஜா அதை இறுக கைப்பற்றியவாறு தாமோதரனின் பக்கமாக சாய்ந்தாள்.. விரிந்திரிந்த அவளின் தலைமுடி தாமோதரனின் முழங்கையில் படிந்து அவனுக்குள் ரசாயன மாற்றத்தை உண்டு செய்தது.. அவள் கூந்தலின் மென்மைக்கு தன்னையே அவளுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்து விடத் தயாரானான் தாமோதரன்.. அந்தக் கூந்தலில் இருந்து வெளிப்பட்ட இதமான நறுமணம்..

'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் இல்லைன்னு யார் சொன்னது..?' என்று அவனை போர்முரசு கொட்டச் செய்தது..

'தாமோதரன் சொன்னாலும் குற்றம் குற்றமே..' என்று நக்கீரர் ஓலைச்சுவடியை கத்தியைப் போல கையில் பிடித்து தாமோதரனின் மார்புக்கு நேராக குறிபார்த்தபடி அவன் மனக்கண்ணில் தோன்றி வைத்தார்..

என்னதான் அவர் கீர்..கீரென கீறினாலும் நீரஜாவின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்று எட்டுத் திக்கையும் சாட்சி வைத்து சத்தியம் செய்யத் தயாராகி விட்டான் தாமோதரன்..

அவளது கூந்தலின் மென்மையை உணர்ந்த அவனது முழங்கை..

'தன்யன் ஆனாய் தாமோதரன்..' என்றது..

அவன் மனதுக்குள் மெல்லிசை எழுந்தது..

*'கூந்தல் மலரில் தேனைப் பருக..*
*காத்துக்கிடந்தேன் கால்கள் கடுக்க..*
*இதயம் துடிக்க..'*

அவன் மனம் பாடிய பாடலை அவனது விழிகள் உணர்த்தியதில் நீரஜா தடுமாறிப் போனாள்.. அருகில் சித்தார்த்தனை வைத்துக் கொண்டு அவன் விழிகளில் மயக்கத்தைப் பிரதிபலித்ததில் அவளுக்கு தர்ம சங்கடமாக இருந்தது..

"நீங்களே சொல்லுங்க.." அவள் பேச்சை ஆரம்பித்தாள்..

பேசினாலாவது அவன் மயக்கத்திலிருந்து வெளி வருவான் என்ற அவளின் கணிப்பு பொய்யானது..

அவளது வார்த்தைகளைக் கேட்டதும் இன்பத்தேன் காதினில் பாய்ந்ததைப் போன்ற ஆனந்தத்துக்கு ஆளான தாமோதரன்..

"எதைச் சொல்லச் சொல்கிறீங்க..?" என்று கிறங்கிப் போன குரலில் கேட்டு வைத்தான்..

அவன் விழிகளில் தெரிந்த மயக்கம்.. அவள், அவனை 'ஐ லவ் யு' சொல்லச் சொல்கிறாள் என்று யூகிக்க வைத்து விடும் அபாயம் இருந்ததில் நீரஜா நிமிர்ந்து அமர்ந்தாள்..

'அதுக்குள்ள விலகியாகனுமா..?' தாமோதரனின் விழிகளில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது..

'போதும், போதும்.. இதுக்கே இப்படின்னா.. இன்னும் கொஞ்சநேரம் நான் சாஞ்சிருந்தா நீங்க என்னென்னத் தையோ உளறி வைப்பீங்க..' நீரஜா அவனை விழிகளால் அதட்டினாள்..

"இதைக் கொஞ்சம் பாருங்களேன்.."

நீரஜா மீண்டும் தாமோதரனின் கவனத்தை திருப்ப முயன்றாள்.. இனிய கனவிலிருந்து விடுபட முடியாமல் இங்கும் அங்குமாக திண்டாடிக் கொண்டிருந்த தாமோதரன் அவள் முகத்தைப் பருகு.. பருகு என்று பார்த்து வைக்க ஆரம்பித்தான்..

"கிழிஞ்சது போ.." என்றான் சித்தார்த்தன்.



# 11

## மர்மங்களின் கரங்கமாக மங்கையை மாற்றியது வாழ்க்கை..

அன்றைய தினம்.. நந்தினிக்கு மூர்ச்சையடையும் தினமென்று இறைவன் விதித்து வைத்திருந்தார் போலும்.. எத்தினமும் போல அத்தினமும் கண் விழித்தவளுக்கு.. மாலைப் பொழுதுக்குள் அடுக்கடுக்காய் ஆச்சரியங்கள் அணி வகுத்து வருகை தந்து மீண்டும், மீண்டும் மூர்ச்சையுறச் செய்து கொண்டிருந்தன..

முதலில் அவள் வாழ்நாளில் இனிக் காணவே முடியாது என்று நினைத்திருந்த ஆதித்த கரிகாலன் வந்து மூர்ச்சையுற வைத்தான்.. ஒருவாறாய் மூர்ச்சை தெளிந்து எழுந்தவளின் முன்னால் நான் தான் உனது தந்தையென்று வீரபாண்டியன் வந்து நின்று மறுபடியும் அவளை மூர்ச்சையுற வைக்கிறான்..

'கண்ணா..!'

ஆழ்ந்த மயக்கத்திலிருந்து நந்தினி மனதுக்குள் அரற்றினாள்.. அவளது வதனத்தில் விழுந்த நீர்த்திவலைகள் அவளது நினைவலைகளைத் தட்டி எழுப்பி அவளை நனவுலகுக்கு மீட்டு வந்தன..

"கண்விழி மகளே.."

பாசத்துடன் கூடிய குரலில் கண் விழித்த நந்தினி பரபரப்புடன் எழுந்து அமர்ந்தாள்.. பரபரப்புக்கு பிறந்திருப்பவனைப் போல அவளை கண்ட நாழிகையில் இருந்து அவளுக்குள் பரபரப்பை செழுத்திக் கொண்டிருந்த வீரபாண்டியன் பரிவுடன் புன்னகைத்தான்..

"அதிர்ச்சி கொண்டாயா குழந்தாய்..?"

'அல்ல.. தாம் சொன்ன செய்திகளில் அகம் மகிழ்ந்து தம்முடன் விளையாடினேன்..' கடுப்புடன் எண்ணிக் கொண்டாள் நந்தினி..

மகவிலிருந்து.. மங்கைப் பருவம் வரை அநாதையாக வளரவிட்டு விட்டு.. திடிரென ஓர்தினத்தில் அவள் முன்பு தோன்றி.. ஒட்டுமொத்தமான மெய்களைக் கொட்டிப் பரத்திவிட்டால் அவளது பூஞ்சை மனம் தாங்குமா..?

"நானும் அரண்மனை வாழ்வில் சுகிக்கவில்லை மகளே.."

அவளது மனதை அறிந்தவனைப் போல வீரபாண்டிய மொழிந்தான்.. நந்தினி துயர் கொண்டாள்..

"மன்னனாக பிறந்தும காடு, மலை, தீவென்று மறைந்து வாழ்கிறேன்.. அதுபோன்ற ஓர் தருணத்தில்தான் உன் அன்னையை சந்தித்தேன்.. மாளிகையில் நான் வசித்து.. உன்னை நிர்கதியாக வளர விட்டிருந்தால் என்மீது நீ குறைகாணலாம்.. சோழர் தேசத்தில் வளர்ந்த உனக்கு வீரபாண்டியனின் நிலை எத்தகையதாக உள்ளது என்பதனை உரைக்கவும் வேண்டுமா..?"

"வேண்டாம் தந்தையே.. தங்களின் நிலையை நானறிவேன்.." கண்ணீருடன் கூறினாள் நந்தினி..

மறைந்து வாழ்ந்த வீரபாண்டியனைப் பற்றிய செவி வழிச்செய்திகளை அறிந்தவள் அல்லவா அவள்..?

முதன் முதலாக 'தந்தையே..' என்று அழைத்தவளை பிரியத்துடன் பார்த்தான் வீரபாண்டியன்..

"தாமும், தமது சகோதரனும் எழிலின் பிம்பங்களாக திகழ்கிறீர்கள் மகளே..! மதுராந்தகனை மறைந்திருந்து ஓர் தினத்தில் கண்ணுற்றேன்.. தம்மிருவரின் உருவ ஒற்றுமையை நீ உணர்ந்ததில்லையா குழந்தாய்.."

"அல்ல தந்தையே.."

மதுராந்தனின் வதனத்தை இயல்பாக நோக்கும் நிலையிலா நந்தினி இருக்கிறாள்..? எட்டாத உயரத்தி லிருக்கும் மதுராந்தகன் எங்கே..? அவள் எங்கே..? அவன் எழிலே உருவானவன் என்றும்.. அவன் எழிலில் மயங்கிய சின்னப் பழுவேட்டரையரின் புதல்வியை அவனுக்கு மணம் செய்து வைத்துள்ளனர் என்றும் அவள் செவி மடுத்திருக்கிறாள்..

ஆதித்த கரிகாலனின் அறிமுகமே வேறு விதமான தல்லவா..? அவனிடமிருந்து ஒதுங்கி விலகிய நந்தினியை இழுத்து வைத்து ஸ்நேகம் பாராட்டிய தயாள குணம் கொண்டவன் அவன்.. அதன்பின்பு நந்தினியின் மீது நேசம் கொண்டதில் அவளுக்கு இன்றியமையாதவனாக ஆகிப் போனவன் அவன்..

மதுராந்தகனைப் பற்றி அதிக அளவில் நந்தினி அறிந்ததில்லை.. அவன் கூச்ச சுபாவம் கொண்டவன் என்று குந்தவை உரைத்ததை செவி மடுத்திருக்கிறாள்..

"மதுராந்தகனின் சாயல் உன்னிம் உள்ளது மகளே.."

நந்தினியின் இதயத்தில் பாசம் பொங்கியது.. அவளுக்கு தாய் இருக்கிறாள்.. செவிட்டூமையாக இருந்தாலும் அவள் எழிலே வடிவானவள்.. அவளுடைய தந்தை அவளது கண்முன் வந்து நிற்கிறார்.. அவரோ பாண்டிய நாட்டின் மன்னன்.. அவளுக்கு சகோதரனும் இருக்கிறான்.. அவன் சோழ சாம்ராஜ்யத்தை உரிமை கொண்டாடும் சோழர்குல அரசரான கண்டராதித்த சோழரின் புதல்வனாக வளர்ந்திருப்பவன்..

உலகமே எழில்மயமானதாக மாறி விட்டதைப் போல இருந்தது நந்தினிக்கு.. அவள் தாமரைக் குளக்கரையில் அமர்ந்து வீரபாண்டியனுடன் வெகு பிரியமாக உரையாடினாள்.. அவனை அமரச் செய்து விட்டு.. இல்லம் தேடி ஓடி.. சமைத்திருந்த உணவு வகைகளுடன் விரைந்து திரும்பினாள்.. தாமரைக்குளத்தில் இறங்கி தாமரை இலையை பறித்து வந்து.. வீரபாண்டியனிடம் நீட்டி அதில் அமுது படைத்தாள்..

"உண்ணுங்கள் தந்தையே.."

அவளின் பாசத்தில் நெகிழ்ந்து போனன் வீரபாண்டியன்.. ஒளிந்து யுத்தம் புரியும் களைப்பில் இருந்தவனுக்கு அந்த அமுது தேவாமிர்தமாக இருந்தது.. சடுதியில் அவன் உணவை காலி செய்த விரைவில் அவளது கண்கள் கலங்கின..

அரசனாக இருந்தும் அவள் தந்தைக்கு இப்படியொரு நிலையா..?

"கலங்காதே மகளே.." வீரபாண்டியன் அவளுக்குத் தேறுதல் உரைத்தான்..

"காலம் இவ்வாறே கடந்து விடாது.. ஓர்தினத்தில் நான் இழந்த தேசத்தை மீண்டும் பெறுவேன்.. இலங்கையில் எனது சிநேகிதனிடம் கொடுத்து வைத்திருக்கும் மணி முடியையும், ரத்தின ஹாரத்தையும் பாண்டிய நாட்டுக்கு எடுத்து வருவேன்.. அரியணையில் உனது அன்னையை அருகிலமர்த்தி ஆட்சி பீடத்தில் அமர்வேன்.. உன்னை பாண்டிய நாட்டின் இளவரசியாக அறிவிப்பேன்.. அந்நாள் வரும் பொழுது வெகு தொலைவில் இல்லை குழந்தாய்.."

வீரபாண்டியன் சொல்லச் சொல்ல.. நந்தினியின் மனதில் சொப்பனம் விரிந்தது..

பாண்டியநாட்டின் இளவரசியாக பல்லக்கில் அவள் பவனி வருகிறாள்.. எதிர் படும் குந்தவையை கம்பீரத்துடன் நோக்குகிறாள்..

"உனக்கு நான் இணையா என்று வினவினாயே..? உனக்கு நான் இணைதான் குந்தவை..! நீ சோழதேசத்தின் இளவரசி என்றால் நான் பாண்டிய தேசத்தின் இளவரசி..! அறிந்து கொள்.." கர்வத்துடன் கூறுகிறாள்..

ஆஹா..! அதுபோன்ற ஓர் தினத்தை அவளது தந்தையான வீரபாண்டியன் அவளுக்கு அளிப்பானா..?

"கட்டாயம் அளிப்பேன் மகளே..! இது எமது வாக்குறுதியாகும்.. இதுவரை தாம் பட்ட துன்பமெல்லாம் போதும்.. எமது புதல்வியாக.. பாண்டியநாட்டின இளவரசியாக தமை நான் அறிவிக்கும் தினம் வரும் மகளே.."

நந்தினி உவகையுடன் அவன் உரைப்பதையெல்லாம் செவி மடுத்தாள்.. அவன் உணவுண்டு முடிந்தவுடன் காலியான கலயத்தை தாமரைக் குளத்தில் கழுவி வர இறங்கியவளின் அருகே கூர் முனையுள்ள கத்தி வந்து விழுந்தது..

"வீல்.." நந்தினி மறுபடியும் அலறினாள்..

அவளுக்கு அருகாமையில் குதித்த மனிதனின் வதனம் பயங்கரமாக இருந்தது.. அதுபோன்ற கொடூரமான வதனத்தை அதற்குமுன்பு அவள் கண்டதில்லை.. கோட்டானைப் போன்ற விழிகளும்.. குரங்கைப் போன்ற வதனமும் கொண்ட அந்த அதிரூபசுந்தரன் நந்தினியைப் பார்த்து கர்ண கடூரமான குரலில் அதட்டினான்..

"ஜாக்கிரதை.. இனி ஓர் அடி எடுத்து வைத்தாலும் உனது உயிர் உன்னிடம் தங்காது.." விழிகளை உருட்டினான்..

அவன் வெறுமனே வந்து நின்றாலே போதுமே.. அவன் வதனம் பார்ப்பவர்களின் குலை நடுங்கி உயிர் விடைபெற்று விடுமே.. கூடுதலாக இவன் அரட்டி வைத்தல் வேண்டுமா என்று எண்ணிக் கொண்டாள் நந்தினி.. அவளது நா உலர்ந்தது..

"நில் ரவிதாஸா.."

வீரபாண்டியனின் கட்டளையில் அவன் சிரம் தாழ்த்தி வணங்கினான்.. நந்தினி வியப்புற்றாள்.. அவன் அவளுடைய தந்தையின் பணியாளா..?

"இவளைப்பற்றித் தாங்கள் அறிய மாட்டீர்கள் அரசே.."

"அறிவேன் ரவிதாஸா.."

"மன்னரே..! இந்த மங்கை பழையாறை அரண்மனையில் செம்பியன் மாதேவியின் நிழலில் வளர்ந்தவள்.."

"அதையும் அறிவேன்.."

"இன்னும் ஒன்று உள்ளது அரசே..!"

"என்ன அது..?"

"இந்தப் பெண்மீது தங்களின் பகைவனான அந்த ஆதித்தகரிகாலன் மையல் கொண்டுள்ளான்.."

"அதனையும் அறிவேன்.."

"அரசே..!"

"தவறில்லை ரவிதாஸா..! பாண்டியநாட்டு இளவரசியின் மீது சோழநாட்டு இளவரசன் காதல் கொண்டால் அது பாண்டியநாட்டிற்கு பெருமைதானே..?"

"அரசே..?"

ரவிதாசன் வியப்புடன் நந்தினியைப் பார்த்த போது அவள் சிறகடித்து வானில் பறந்தாள்.. ரவிதாஸன் அவள் முன் பணிந்து..

"வந்தனம் தேவி.." என்றபோது அவளது மனதில் அரியணைவந்து நின்றது.. அதில் அத்தருணமே அவள் இளவரசியாக அமர்ந்தாள்..

"இவள் எனது புதல்வி.. செம்பியன் மாதேவியின் மாளிகையில் வளரும் மதுராந்தகனின் சகோதரி.. இரட்டைப் பிறவியாக இவர்கள் இருவரும் பிறந்தார்கள்.. மதுராந்தகன் மாளிகையில் வளர எனது செல்வப்புதல்வி அர்ச்சகரின் இல்லத்தில் வளர்கிறாள்.."

துயரத்துடன் மொழிந்தான் வீரபாண்டியன்.. அதற்குப் பின்பு அவனும் ரவிதாஸனும் யுத்தகத்தைப் பற்றிய திட்டங்களை தீட்டலானார்கள்.. ஏதோ எண்ணியவனாக ரவிதாஸன் நந்தினியிடம்..

"தேவி..! ஓர் விண்ணப்பம்.." என்றான்..

"சொல்லுங்கள்.." என்றாள் நந்தினி..

"எமக்குத் தாங்கள் மரியாதை அளிப்பதா..? சொல் என்றே சொல்லுங்கள் தேவி..! தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டிய பணியாள் நான்.."

ரவிதாஸனின் வார்த்தைகள் நந்தினியை மலைச் சிகரத்தின்மீது உயர்த்தி அமர வைத்தன.. அதுதினம் வரை மற்றவர்கள் இட்ட பணிகளைச் செய்து கொண்டிருந்த வளிடம்.. 'பணியாள்..' என ஒருவன் பணிந்து நின்றதில்.. அந்த உயர்வை அளித்த வீரபாண்டியனின் மீது அவளுக்குள் வாஞ்சை விரவியது..

'தங்களால்தான் இந்த உயர்வு கிட்டியுள்ளது தந்தையே..' நன்றிப்பெருக்குடன் வீரபாண்டியனை நோக்கினாள்..

"சொல்.." என்றாள் ரவிதாஸனிடம்..

"இந்த மணல்திடல் நாங்கள் மறைந்து வாழ்வதற்கு உகந்த இடமாக உள்ளது தேவி..! எனவே.."

"எனவே..?"

"தங்களின் காதலரான ஆதித்த கரிகாலரிடம் இந்தப் பகுதிக்குள் சோழ வீரர்கள் நுழைய வேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுங்கள் தேவி..! அது தங்களின் தந்தையைப் பாதுகாக்கும்.."

"அவ்விதமே கோருகிறேன்.."

கணப்பொழுதும் தாமதிக்காமல் வாக்களித்தாள் நந்தினி.. தந்தையென்று வந்து நிற்கும் வீரபாண்டியனை எப்பாடு பட்டும் காக்க வேண்டும் என்று அவளது உள்ளம் துடித்தது..

மறுதினம் அவளைக் காண ஆதித்த கரிகாலன் வந்தபோது அவளது விழிகளில் தெரிந்த யாசிப்பில் புருவங்களை உயர்த்தினான்..

"ஏதேனும் தேவையா நந்தினி..?"

அவ்வினாவில் அவனிடம் எதையும் வேண்டத் தோன்றவில்லை நந்தினிக்கு.. அவன் மார்பில் சாய்ந்து..

"தாங்கள்தான் தேவை.." என்றாள்..

அந்த விடையில் ஆதித்தனின் தேகம் தகித்தது.. விழிகள் மின்ன அவளது வளைக்கரத்தை இழுத்து அவன் மார்பில் வைத்து..

"என் இதயத்துடிப்பைக் கேள்.. நான் உன்னுடையவன் என்பதை அது உரைக்கும்.. என் மனமும், தேகமும்

உன்னுடையவை.. என் மனதை எடுத்துக் கொண்டாய்.. தேகத்தை எடுத்துக் கொள்ள மட்டும் ஏன் தயக்கம் கொள்கிறாய்..?" என்று வினவினான்..

நந்தினியின் தளிர் விரல்கள் நடுக்கம் கொண்டன.. அவனது மார்பினை ஸ்பரிசித்த அவளது வளைக் கரங்கள் துவாலையைச் சுமந்து அவளது தேகத்துக்குள் அனுப்பி வைத்தன..

நந்தினி நடுக்கத்துடன் கரத்தை விடுவித்துக் கொண்டாள்..

"ஏன்..?" உல்லாசமாக நகைத்தான் ஆதித்த கரிகாலன்..

"நீதானே எனைத் தேவையென்று வேண்டி நின்றாய்..? என் தேகம் தந்தால் எடுத்துக் கொள்ள ஏன் மறுக்கிறாய்..?"

"போதும் இளவரசே.."

"இன்னும் ஆரம்பமே ஆகவில்லையே.."

இருபொருள்பட ஆதித்தன் உரையாடியதில் நந்தினியின் கன்னங்கள் சிவந்து விட்டன.. தாளாத தாபத்தில் அவளது தேகம் கொதித்தது.. அவனுடன் கூடிவிட அவள் மனம் துடித்தது.. அதை அவள் விழிகளில் கண்ட ஆதித்த கரிகாலன்..

"காந்தர்வ மணம் என்ற ஒன்று உண்டு கண்ணே..!" என்றான்..

"அறிவேன் இளவரசே..! அது போன்ற ஓர் விவாஹத்தில்தானே.. எனது தாய் என்னை பிரசவித்தாள்..?" துயரத்துடன் மொழிந்தாள் நந்தினி..

"நந்தினி..?"

"தாங்கள் என்னுடையவர்தான்.. தங்களது தேகம் எனக்கு மட்டும் உரிமையானதுதான்.. எடுத்துக் கொள்ள தயங்க வேண்டாம்தான்.. ஆயினும் இளவரசே.. எனது அன்னையைப் போல உலகறியாத மணவாழ்வில் நான் கருத்தரிக்க வேண்டுமா..?"

"வேண்டாம் கண்மணி.. உலகறிய உனை மணப்பேன்.. எனது குழந்தைகள் உனது மணி வயிற்றில் சோழநாட்டின் அரசகுல வாரிசுகளாக எம்குலம் போற்ற பிறப்பார்கள்.."

அவன் மார்பில் சாய்ந்த நந்தினிக்கு தேறுதல் மொழிகளைக் கூறினான்.. சற்றுப் பொழுது கழிந்ததும் அவளைப் பிரிந்து புரவியில் ஏற முயன்றவனை அவளது இறைஞ்சல் பார்வை தடுத்து நிறுத்தியது..

"வேறென்ன தேவை நந்தினி..? தயக்கமின்றி கேள்.. அளிக்கிறேன்.." என்றான்..

"இந்தச் சோலையில் நான் அமைதியாக வசிக்க வேண்டும்.. ஆதலால், தங்களின் படைவீரர்கள் இச்சோலைக்குள் வரக்கூடாது என்ற கட்டளையை தாங்கள் பிறப்பிக்க வேண்டும்.." நந்தினி கேட்டுக் கொண்டாள்..

"அவ்விதமே ஆகட்டும்.. எனது படைவீரர்கள் இந்தச் சோலைக்குள் வரமாட்டார்கள்.. நான் ஆணை பிறப்பித்து விடுகிறேன்.."

ஆதித்த கரிகாலன் கொடுத்த வாக்கை காப்பாற்றினான்.. அன்றே அதற்கான ஆணையை பிறப்பித்தான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 11

## நான் செதுக்கும் சிற்பத்தில்.. உன் உருவம் எப்படி வந்தது..?

"என்னவோ லவ் ஸ்டோரி ஃபிலிம் பார்க்கிறதைப் போலவே இருக்கு.. நான் வேணும்னா வெளியில போயிரட்டுமா..?"

போலியான அக்கறையுடன் வினவி வைத்தான் சித்தார்த்தன்..

"டேய்.." என்ற தாமோதரனின் முகத்தில் குடம், குடமாக அசடு வழிந்தது..

அதைக் காணாததைப் போல கண்ட நீரஜாவுக்கு சிரிப்பு வந்தது.. உள்ளங்கையில் நாசுக்காக அந்த சிரிப்பை மறைத்தாள்..

"அவ பாருன்னு சொன்னது அவ கையில இருக்கிற ஃபைலை.. அவ முகத்தை இல்லை.." சித்தார்த்தனின் குரலில் கேலி இருந்தது..

"ஐ நோ.. ஐ நோ.. ஐ நோ.." தாமோதரன் எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக உளறிக் கொட்டினான்..

"நீயென்ன ரகுவரனா..?" என்று கேட்டு வைத்தான் சித்தார்த்தன்..

"நான் தாமோதரன்.."

"தெரியுதில்ல.. 'ஐ நோ..'வை விட்டு விடு.. அது பிழைத்து ஓடிப் போகட்டும்.."

"சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு போட்டுத் தாக்கறான் பாரு.. ஏங்க.. நீங்க எதைப் பார்க்கச் சொன்னீங்க..?"

தாமோதரன் ஒருவழியாக தன்னை சமாளித்துக் கொண்டு நீரஜாவின் கையில் இருந்த ஃபைலை வாங்கிக் கொண்டான்..

"எனக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கனும்.." என்றாள் நீரஜா..

"ஏங்க.. எனக்கும், அவளுக்கும்தான் யாதொரு கனெக்சனும் இல்லைன்னு கற்பூரம் ஏத்திச் சத்தியம் பண்ணாத குறையா சொல்லிட்டேனில்ல.. திரும்பவும் ஏங்க.. அந்தப் பேச்சை இழுக்கறீங்க..?"

"ம்ச்சு..! நான் அந்தப் பெண்ணுன்னு சொன்னது இந்தப் பெண்ணையில்ல.."

"வேற எந்தப் பெண்ணைங்க..?"

"சொல்றேன்.. சொல்றேன்.. ஆமாம்.. அது என்ன..? திரும்பத் திரும்ப இந்தப் பெண்கிட்டயே பேச்சைக் கொண்டு வந்து நிப்பாட்டறிங்க..? என்ன விசயம்..?"

"ஹைய்யோ..! ஒரு விசயமும் இல்லைங்க.."

"நம்பலாமா..?"

"தாராளமா நம்பலாம்.. அடியேன் ஒரு பாவமும் அறியாதவன்.. என் மூஞ்சியைப் பாருங்க.. இந்த விளையாட்டையெல்லாம் என்னால ஆட முடியாதுன்னு எழுதி ஒட்டியிருக்கும்.. கள்ளம், கபடு இல்லாத பச்சை மண்ணுங்க நானு.. உங்களுக்கு என்னைப் பார்த்தா பாவமாத் தோணலை..?"

"தோணலை.."

உதட்டைச் சுழித்த நீரஜாவுக்குள் சந்தோசம் குமிழிட்டது.. அவள் முன்னால் மண்டியிடாத குறையாக அவன் கெஞ்சுவது அவளுக்குப் பிடித்திருந்தது.. அவன் மீதான பிரியம் அவளுக்குள் அதிகரித்தது..

"அது என்னோட பேட் டைம்ங்க.."

"டயத்தைப் பத்தி அப்புறமா ஒருநாள் டைம் இருக்கிறப்ப பேசலாம்.. இப்ப இந்த ஃபைலில இருக்கிற போட்டாக்களில எந்தப் போட்டோ அந்தப் பெண்ணின் போட்டோன்னு காட்டுங்க.. இந்தத் தடவையாது சரியாக் காட்டனும்.. அத விட்டுட்டு பழையபடி அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் யாதொரு கனெக்சனும் இல்லைன்னு ஆரம்பிச்சு வைச்சீங்கன்னு வையுங்க..

கனெக்சன் கன்ஃபர்ம்ன்னு சொல்லிட்டு நான் பாட்டுக்கு போய்க்கிட்டே இருப்பேன்.. மைண்ட் இட்.."

"ஹைய்யோ..! என்னங்க நீங்க.. இடியைத் தூக்கி என் தலையில போடறிங்க..?"

"நான் செய்ய நினைச்சதை என் தங்கை உனக்குச் செய்கிறாடா தாமு.."

"குருப் ஃபார்ம் பண்ண வராதேண்ணா.. இவ்வளவு நேரமும் கம்முன்னு எங்க டிஸ்கசன வேடிக்கை பார்த்ததைப் போல இப்பவும் பாரு.. அண்டர்ஸ்டாண்ட்..?"

"இங்க நீ மூத்தவளா..? இல்ல நான் மூத்தவனா..?"

"நீ மூத்தவனா இருக்கிறதாலே எனக்கொன்னும் நீ பாஸில்ல.."

"அதையேதான் நானும் சொல்றேன்.. நீ எனக்குத் தங்கையா இருக்கிறதாலே எல்லாத்துக்கும் என்னை கமாண்ட் பண்ணனும்னு அவசியமில்ல.. யு மைண்ட் இட்.."

அண்ணனும் தங்கையும் அடித்துக் கொள்ளாத குறையாக மல்லுக்கட்டிக் கொண்டு இருக்க.. தாமோதரன் அவன் கையிலிருந்த ஃபைலைப் புரட்டிப் பார்த்து..

"இதோ.. இந்தப் பெண்தான்.." என்று நீரஜாவின் பக்கமாக சரிந்தான்..

இப்போது மயங்கித் தொலைப்பது நீரஜாவின் முறையாகப் போனது.. அவள் பக்கமாக சரிந்த தாமோதரனின் அண்மையை உணர்ந்தவளுக்கு மூச்சுத்

திணறிப் போனது.. தாமோதரனின் மீதிருந்து வந்த அவனை மட்டுமே நினைவுறுத்தும் பெர்ப்யூமின் நறுமணத்தில் அவள் கிறங்கிப் போனாள்..



# 12

## *சுழல்கின்ற விதியில்..*
## *சுழன்றாடியது சதியே...!*

'எது உனக்குத் தேவையோ.. அதை வினவு.. அளிக்கிறேன்..' என்று வாக்களித்தான் ஆதித்த கரிகாலன்..

எந்த வீரபாண்டியனை வேட்டையாட அவன் துடித்துக் கொண்டிருந்தானோ.. அந்த வீரபாண்டியனின் புதல்வியாக நந்தினி நின்று அவனை மறைத்து வைத்திருக்கும் சோலையில், சோழர் படை வீரர்களின் பாதங்கள் படக் கூடாதென்ற வரம் கேட்டாள்.. கணப் பொழுதும் யோசிக்காமல் அவனுடைய எதிரியைக் காக்கும் ஆணையை பிறப்பித்து விட்டான் கரிகாலன்.. நந்தினியும், அர்ச்சகர் குடும்பங்களும் வசித்து வந்த அந்தச் சோலைக்குள் சோழர் படையின் வீரர்கள் செல்லக் கூடாதென்று கட்டளையிட்டு விட்டான்..

அப்படியொரு ஆணையை அவன் பிறப்பிக்காமல் இருந்திருந்தால்.. அவனுக்கும், அவனுடைய ஆருயிர் காதலிக்கும் இடையே ஜென்மப்பகை தோன்றாமல் இருந்திருக்கும்.. அதுவரை மற்றவர்களின் கரங்களில்

விளையாட்டு பொம்மைபோல ஆடிகொண்டிருக்கும் வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்த பேதை நந்தினி.. வெஞ்சினத்துடன் சோழர் குல சாம்ராஜ்யத்தையே தன் கரங்களில் விளையாட்டு பொம்மை போல ஆட வைத்திருக்க மாட்டாள்.. கண்ணனுக்கு தொண்டு செய்யும் உத்தேசத்துடன் தலையில் ஆண்டாள் கொண்டையும்.. கழுத்தில் பூமாலையுமாக வாழ்ந்து வந்தவள்.. தனது கடைக்கண் பார்வையில் ஆண்களின் இதயங்களை பந்தாடியிருக்க மாட்டாள்..

அது விதி வகுத்த விளையாட்டு...!

காதலி கேட்டதை காதலனாக ஆதித்தன் அளித்து விட்டான்.. அந்த பாதுகாவல் தந்த சுதந்திரத்தில் வீரபாண்டியனை பேண ஆரம்பித்து விட்டாள் நந்தினி..

வீரபாண்டியனைச் சுற்றி 'ஆபத்துதவிகள்' எனப்படும் பாதுகாவல் படை இருந்தது.. வலிமையான சோழர் படையை தனித்து நின்று எதிர்த்த வீரபாண்டியனின் வீரத்தில் நந்தினி பெருமிதம் கொண்டாள்..

'இவர் எனது தந்தை..!'

இந்த நினைவே அவளைச் செழுத்தியது.. இல்லத்தில் சமைத்து வைத்திருக்கும் அனைத்து பதார்த்தங்களையும் அவனுக்காக எடுத்து வருவாள்.. தாமரைக் குளத்தின் அருகே இருக்கும் நெருக்கமான மரங்களின் மறைவில் வீரபாண்டியன் ஓர் ஓலைக் குடிசையொன்றை வேய்ந்திருந்தான்.. அக்குடிசையில்

அவனுக்காக கயிற்றுக் கட்டிலை பின்னிப் போட்டு வைத்தாள் நந்தினி.. அந்தக் குடிசைதான் வீரபாண்டியனின் அரண்மனையாக இருந்தது.. அங்கிருந்த படிதான் அவன் யுத்தத்திற்கான போர் முறைகளை வகுத்தான்.. நந்தினி எடுத்து வந்து பரிமாறும் பதார்த்தங்களை சுவைத்து உண்டான்..

"அரண்மனையின் அறுசுவை விருந்தில் கூட இத்தனை சுவை இருந்ததில்லை மகளே.." வாஞ்சையுடன் பாராட்டுவான்..

நந்தினிக்கு மகிழ்வாக இருந்தது.. அவள் வீர பாண்டியனின் தேவைகளை யூகித்து செயல்படுத்தினாள்..

"இந்த கனமான சீலையை போர்த்திக் கொள்ளுங்கள் தந்தையே.. குளிருக்கு இதமாக இருக்கும்.. மற்றொரு சீலையை கயிற்று கட்டிலில் விரித்துக் கொள்ளுங்கள். பஞ்சணையில் படுத்து துயில் கொண்ட தமது முதுகில் கயிற்றுக் கட்டிலின் கயிறுகள் அழுந்தி வேதனைப் படுத்தாமல் இது தடுக்கும்.."

"இவை புதியன போல தோன்றுகிறதே குழந்தாய்.."

"ஆம் தந்தையே..! அங்காடிக்குச் சென்று புதிய சீலைகளை விலை கொடுத்து பெற்று வந்தேன்.. இந்தப் பஞ்சுத் திண்டை தலைப் பகுதியில் வைத்துக் கொள்ளுங்கள்.. தங்களின் சிரம் புதைத்து துயில் கொள்ள வதுவாக இருக்கும்.."

"இதற்கான பொருள் உன்னிடம் இல்லையே மகளே.."

"ஆதித்த கரிகாலனின் அன்புப் பரிசுகளாக சில பொற்காசுகள் எம்மிடம் உள்ளன தந்தையே.. அவற்றைக் கொண்டே இவற்றைப் பெற்று வந்தேன்.. தாங்கள் அமைதி கொள்ளுங்கள்.."

அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் அந்தக் குடிசையின் மூலையில் அடுப்பை வைத்து உணவு சமைத்துத் தர ஆரம்பித்தாள் நந்தினி.. அதற்கான கலயங்களையும் அரிசி, பருப்பு வகையறாக்களையும் அங்காடிக்குச் சென்று விலை கொடுத்து பெற்று வந்தாள்.. சோலையில் இருந்த காய்கறித் தோட்டத்தின் பச்சிளங் காய்களும்.. கீரைகளும் நந்தினியின் கரங்களில் அகப்பட்டு உணவாக உருமாறின..

அந்தக் குடிசை.. அவளுக்கும், வீரபாண்டியனுக்கு மான அரண்மனையாக மாறியது.. சொந்தமென்று உரைக்க எவரும் இல்லாத அநாதையாக தனித்து நின்றவள்.. தந்தையென்ற உறவைக் கண்டதும்.. அனைத்தும் அவனாக மாறிவிட்டாள்..

அவளுடைய தந்தையை பராமரிப்பது மகளான அவளுடைய கடமை அல்லவா..? நாட்டை மீட்க போராடிக் கொண்டிருக்கும் வீரபாண்டிய மன்னனின் புதல்வியல்லவா அவள்..? போராடும் தந்தையின் அருகிலிருந்து அவனுடைய உடல் நலனை கண்ணும் கருத்துமாக அவள்தானே காத்தாக வேண்டும்..?

தந்தையும், மகளுமான அற்புத உறவில் பிணைந்திருந்தவளுக்கு ஆதித்த கரிகாலனைப் பற்றிய எண்ணம் கூட அணுகவில்லை.. வீரபாண்டியனின்

போராட்டத்திற்காக அவளால் ஆன சகாயங்களைச் செய்திட வேண்டுமென அவள் உள்ளம் துடித்தது..

"மன்னரைக் காத்து நிற்பதே மிகப் பெரும் சகாயம்தானே தேவி..." என்று அவளை ஆறுதல் படுத்தினான் ரவிதாஸன்...

அன்றைய தினத்திலும் அவ்விதமாய்.. யுத்தம் புரிய ஆயத்தமாகி புறப்பட்டவனுக்கு விடைகொடுத்து அனுப்பி வைத்தாள் நந்தினி.. ஏனோ.. அவள் மனதில் இனம் விளங்காத கவலை சூழ்ந்திருந்தது.. அன்று ஏதோ நிகழப் போகிறது என்று அவளது ஆழ்மனது அவளை அச்சுறுத்தியது..

'எனது தந்தைக்கு கெடுதல் நேர்ந்து விடக் கூடாது..'

அவள் மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்..

அவளது உள்ளுணர்வு காரணமின்றி அஞ்சி விடவில்லை.. அன்றைய போரில் வீரபாண்டியன் ஆதித்த கரிகாலனிடம் சிக்கி விட்டான்..

வீரபாண்டியனைக் கண்டுவிட்ட ஆதித்த கரிகாலனின் படைகள் அவனை சூழ்ந்து கொண்டன.. பாண்டியநாட்டின் 'ஆபத்துதவிகள்..' வீரபாண்டியனைச் சுற்றி வட்ட வடிவில் அரண்போல வளைத்து நின்று கொண்டு மூர்க்கமாக போரிட்டார்கள்.. அவர்கள் அனைவரும் வீரபாண்டியனுக்காக உயிரையும் கொடுப்போமென்ற பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர்கள்..

வீரபாண்டியனைக் காத்து நின்ற ஆபத்துதவிகளை வெட்டி வீழ்த்தி விட்டு வீரபாண்டியனை ஆதித்த கரிகாலன்

அணுகிய போது படுகாயத்துடன் இருந்த வீரபாண்டியன் புரவியில் ஏறி தப்பியோடி விட்டான்.. ஆதித்த கரிகாலனின் புரவி அவனை துரத்திச் சென்றது..

நந்தினி வசித்து வந்த சோலைக்குள் சென்ற ஒற்றைக்குதிரையின் காலடித் தடங்களை கண்டவனின் புருவங்கள் சுருங்கின..

'வீரபாண்டியன் இந்தச் சோலைக்குள் சென்றிருக்கக் கூடுமோ..? இது அர்ச்சகர்களின் குடும்பங்கள் வசிக்கும் இருப்பிடமல்லவா..? இங்கே அவன் சென்றிருக்க சாத்திய முண்டா..'

ஆழ்ந்த யோசனையுடன் அவன் சோலைக்கு வெளியே புரவியில் ஆரோகணித்து நின்றிருந்த வேளையில்.. படுகாயத்துடன் புரவியில் இருந்து குடிசையின் வாயிலில் வீழ்ந்த வீரபாண்டியனைக் கண்டதும் பதறி ஓடி வந்தாள் நந்தினி..

"தந்தையே..!" அலறினாள்..

உடலெங்கும் குருதி பெருக்கெடுக்க.. ரண காயங்களுடன் இருந்தவனுக்கு தோள் கொடுத்து அழைத்துச் சென்று குடிசைக்குள் இருந்த கயிற்று கட்டிலில் படுக்க வைத்தாள்.. சுடுநீரை கொதிக்க வைத்து அவனது காயங்களைத் துடைத்து கட்டுப் போட்டு விட்டாள்.. சூடான கஞ்சியை தயாரித்து அவனுக்கு புகட்டி விட்டாள்..

மகளின் சிசுருசைகளில் மனம் நெகிழ்ந்து விட்டான் வீரபாண்டியன்..

"உனக்கென்று நான் யாது செய்தேன் மகளே..? எதன் பொருட்டு எனை நீ காக்கிறாய்..? ஓர் தந்தை மகளுக்காற்ற வேண்டிய கடமை எதையும் நான் நிறைவேற்றி விடவில்லையே.. அப்படியிருந்தும் எனை ஆதரிக்கிறாயே.. உனது மனது பரந்தமனது மகளே.."

"தந்தை மகளுக்காற்ற வேண்டிய கடமை மட்டுமே இப்புவியில் உள்ளதா தந்தையே..? மகள் தந்தைக்காற்ற வேண்டிய கடமையென்று ஏதும் இல்லையா..? அவற்றையே நான் தங்களுக்கு செய்கிறேன்.. அமைதி கொள்ளுங்கள்.."

வீரபாண்டியன் குடிசையின் மேல் முகட்டை வெறித்துப் பார்த்தான்.. அவன் விழிகளில் வேதனை ததும்பியது..

"அமைதி..?" விரக்தியுடன் உரைத்தான்..

"அதற்கும் எனக்கும் பலகாத தூரங்கள் மகளே..! நான் அமைதியற்ற வாழ்வை வாழப் பிறந்தவன்.. அலைகடலில் மூடி ஒளிவதற்காக இலங்கைக்குச் செல்ல படகில் ஏறிய போது.. அந்தப் படகில் உன் தாயை சந்தித்தேன்.. செவிட்டூமையான அவளின் பேரெழிலில் வியப்புக் கொண்டேன்.. முழுநிலவின் ஒளியில் அலைகடலின் மீது படகில் மிதந்து போய் கொண்டிருந்த அந்த தருணத்தில்.. உன் தாயைப் பற்றி அவளை அழைத்துச் சென்ற 'கருத்திருமன்' என்பவன் ஓர் செய்தியை உரைத்தான்.. நந்தினி..! என் மகளே..! அந்தச் செய்தியை செவி

மடுத்ததும்.. உன் தாயை என்னுடையவளாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற தீவிரம் எனக்குள் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்து விட்டது.. அந்தச் செய்தி யாதென்று அறிவாயா குழந்தாய்..?"

அந்தத் தருணத்தில் உரைக்க முடியாவிட்டால் வேறு எந்தத் தருணத்திலும் உரைக்க இயலாது என்பதை உணர்ந்திருந்தானோ என்னவோ.. வீரபாண்டியன்.. நந்தினியின் பிறப்பைப் பற்றிய ரகசியங்களைத் தொகுத்து உரைக்க ஆரம்பித்து விட்டான்..

கயிற்று கட்டிலின் அருகே மண்டியிட்டு.. வீரபாண்டியனின் கரங்களை இறுக்கிப் பற்றி அவனுக்கான பரிவை உணர்த்தியபடி அவன் உரைத்தவற்றை ஒரு சிறு சொல்லைக்கூட விட்டு விடாமல் செவி மடுத்தாள் நந்தினி..

"அந்தச் செய்தி.. சுந்தரசோழரின் காதலியான மந்தாகினிதான் அந்தப் பெண் என்பது.."

வீரபாண்டியனின் உரையில் நந்தினி அதிர்ந்து விட்டாள்..

"தந்தையே..?"

"ஆம் மகளே..! பட்டத்துக்கு உரியவனாக அறிவிக்கப் படுவதற்கு முன்பு சுந்தரசோழன் ஒரு தீவுப் பகுதியில் சிலகாலம் இருந்தானாம்.. அப்போது மந்தாகினியைக் கண்டு மயங்கி விட்டானாம்.. மந்தாகினியும் அவன்மீது விருப்பம் கொண்டாளாம்.. மணமுடிக்க முடிவு செய்திருந்த

வேளையில் சுந்தரசோழனை அரியணைக்கு உரியவனாக அறிவித்து விட்டு சோழர்படை அவனைத் தேடி தீவுக்கு வந்து விட்டதாம்.. சோழ தேசத்தின் அரசனாகும் பேறு கிட்டியவுடன் அவன் உன் தாயை மறந்து.. திருகோவிலூர் மலையமானின் புதல்வியான வானமாதேவியை மணம் புரிந்து பட்டமகிஷியாக்கிக் கொண்டு அரியணை ஏறிவிட்டான்.."

"எத்தகைய துரோகம்..!"

நந்தினியின் மனம் கொதித்தது.. சுந்தரசோழரின் மீது அவள் மனதில் வன்மம் பிறந்தது.. காதலித்த பேதையை கரம் விடுத்த நயவஞ்சகர் அவர் என்ற பகைமை உணர்வு அவள் மனதில் எழுந்தது...

"இன்னும் உள்ளது.. கேள் மகளே..! உன் தாய் சுந்தர சோழனைத் தேடி பழையாறைக்குச் சென்றிருக்கிறாள்.. அங்கே அவன் மன்னனாக நின்றானாம்.. இவள் மனம் உடைந்து கோடிக்கரையின் கலங்கரை விளக்கத்திலிருந்து கடலில் குதித்து விட்டாளாம்.."

"அந்தோ.. இது என்ன அநீதி..?"

"அநீதிதான் மகளே..! அத்துடன் விட்டனரா அந்தச் சோழர்கள்..? தற்கொலை புரிந்து கொள்ள யத்தனித்தவளை காப்பாற்றி விட்டார்கள் என அறிந்ததும்.. 'கருத்திருமன்' என்பவனிடம் உன் தாயை ஒப்படைத்து இலங்கைக்கு அழைத்துச் செல்ல உத்தரவிட்டு விட்டானாம்.. அந்த முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயன்.."

"கொடுமை தந்தையே.."

"கொடுமைதான்.. அந்த நொடியில் நானும், உன் தாயும்.. சோழர்களால் வஞ்சிக்கப்பட்டு ஒரே படகில் மிதந்தோம் மகளே..! உன் தாயைக் காப்பாற்றி இலங்கைக்கு அழைத்துக் கொண்டு போன அந்தக் 'கருத்திருமன்' எனது தோழன் ஆனான்.. உன் தாயை இறக்கி விட்டத் தீவில் உன் தாயின் தந்தை இருந்தார்.. அவரின் அனுமதியுடன் மந்தாகினியை நான் காந்தர்வ முறையில் விவாஹம் செய்து கொண்டேன்.. ஆயினும் மகளே.. மந்தாகினி என்னை அவளின் காதலனாக ஏற்றுக் கொள்ள மறுத்தாள்.. எனது குழந்தைகளை கருத் தரித்தும் அவள் மனது முழுவதும் சுந்தரசோழனே இருந்தான்.. என் மனம் வேதனை கொண்டது.. இந்நிலையில் எனது நண்பனான இலங்கை அரசன் மகிந்தனைக் காண நான் சென்றிருந்த தருணத்தில் இவள் பூரண கர்ப்பிணியாக பழையாறையை நோக்கிக் கிளம்பி விட்டாள்.."

"தனித்தா தந்தையே..?"

"அவள் அச்சமற்றவள் குழந்தாய்..! அலை கடலின் ஓரத்திலே.. பிறந்து வளர்ந்தவள்.. இலங்கையிலும்.. அதைச் சூழ்ந்திருக்கும் அனைத்து தீவுகளிலும் சுற்றித் திரிந்தவள்.. அவள் அறியாத பிரதேசமென்று அங்கு எதுவும் இல்லை மகளே..! தன்னந்தனியளாக அவள் கட்டு மரத்தில் கூட மிதந்து சென்று விடுவாள்.."

நந்தனி விழிவிரிய அதுவரை அவள் கண்டறியாத அவளுடைய தாயைப் பற்றிய செய்திகளை செவி மடுத்துக் கொண்டிருந்தாள்..

"பழையாறையில் கண்டராதித்த சோழரின் மனைவி செம்பியன் மாதேவி கருவுற்றிருந்த சமயம் அது.. ஷேத்திராடனம் சென்ற செம்பியன் மாதேவி உனது தாயைக் கண்டதும் இரக்கம் கொண்டு தன்னுடன் அழைத்துக் கொண்டு போனதாக செய்தி.. உன் தாயின் உதவிக்கென்று.. மந்தாகினியின் தங்கையான வாணியை தஞ்சாவூரிலிருந்து அழைத்துக் கொண்டார்களாம்.."

"எவரை உரைக்கிறீர்கள் தந்தையே..? தஞ்சையின் கோவிலில் புஷ்ப கைங்கர்யம் செய்து வரும் வாணியம்மையைப் பற்றியா இயம்புகிறீர்கள்..? அவர்களும் பிறவியிலேயே செவிட்டூமை ஆயிற்றே.. அவர்களுக்கு வளர்ந்து வாலிபப் பருவத்தில் உள்ள மகன் ஒருவனும் உண்டே.. அவனது நாமம் சேந்தன் அமுதன் என்பதாகும்.."

"அந்த மகன் வேறு எவருமல்ல குழந்தாய்... அவன்தான் உண்மையான மதுராந்தகச் சோழன்.. உன் சகோதரன் வளரும் செம்பியன் மாதேவியின் மாளிகைக்கு உரிமையுடையவன் அவனே.."

"மெய்யாகவா தந்தையே..?"

"ஆம் மகளே..! செம்பியன் மாதேவியின் குழந்தைப் பேறு தருணத்தில் கண்டராதித்த சோழன்.. அயல் தேசத்திற்கு சென்று விட்டான்.. செம்பியன் மாதேவிக்கு பிறந்த குழந்தை உயிரில்லாததைப் போல கட்டையாக அசைவற்றுக் கிடந்ததாம்.. மனம் தாளாத செம்பியன் மாதேவி கதறியழுததைக் காணச் சகிக்காத முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர் ஏது செய்வதென்று

ஆலோசித்தானாம்.. யாத்திரைக்கு சென்றிருக்கும் கண்டராதித்த சோழன் வந்து பிறந்தமகவு எங்கேயெனக் கேட்டால் யாதென்று பதிலுரைப்பேன் என புலம்பிய செம்பியன் மாதேவியிடம் அநிருந்த பிரம்மராயன் அந்த ஆலோசனையை உரைத்தானாம்.."

"அந்த ஆலோசனைதான் யாது தந்தையே..?"

"உன் தாய்க்குப் பிறந்த ஆண், பெண் இரட்டைக் குழந்தைகளில் ஆண் குழந்தையை செம்பியன் மாதேவியிடம் ஒப்படைத்து விட்டு.. பெண் குழந்தையை ஆழ்வார்க்கடியானிடம் கொடுத்து பாண்டிய தேசத்துக்கு அனுப்பி விட்டானாம்.."

"அந்தக் குழந்தைதான் நான்..! அவ்வாறுதானே தந்தையே..?"

நந்தினி கசப்புடன் வினவினாள்.. ஒரு தாயின் வயிற்றில் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்று அரண்மனையிலும், மற்றொன்று அகதியுமாக வளர நேர்ந்தது கொடுமையல்லவா..?

இதைப் போன்ற பிறப்பெடுக்கும் விதியை இறைவன் எதற்காக அவளது சிரத்தில் எழுதினான்..?

மகளின் மனக் குமுறலை உணர்ந்தவனாக வீரபாண்டியன் அவனது கரத்தில் படிந்திருந்த அவளின் கரத்தை ஆறுதலாக வருடிக் கொடுத்தான்..

"நாடோடி வாழ்வை மேற்கொண்டது நீ மட்டும்மல்ல மகளே..! நானும் உன் தாயும் கூடத்தான் அதுபோன்று

அலைகின்றோம்.. அன்று கண்ட மந்தாகினியை இன்னமும் நான் காணவில்லை.. அவள் இலங்கையில் மூலை முடுக்குகளில் காணப்படுவதாக மகிந்தன் உரைத்தான். அவளைத் தேடிச் செல்லும் நிலையிலா நான் உள்ளேன்..? மலையிலும், காடுகளிலும் மறைந்து வாழ்கிறேன்.. நமக்கு இவ்வாறு நேர்ந்து விட்டதே என்று கவலை கொள்வதை விட.. நம்மில் ஒருவன் சோழ அரியணைக்கு உரிமை கொண்டாடும் உயரிய இடத்தில் வாரிசாக நிற்கிறான் என்று மகிழ்வு கொள்வோம் மகளே..! அதுநே நமக்கு உகந்தது.."

'மெய்தானே...'

நந்தினி தெளிவடைந்தாள்.. வீரபாண்டியனின் உரையில் அவளுக்கு புதிய மார்க்கம் புலப்பட்டது.. ரண காயங்களுடன் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் அந்த நிலைமையிலும் புத்தி கூர்மையுடன் அனைத்து விவரங்களையும் ஆய்ந்தறிந்து அவளுக்கு தெளிவு படுத்திய தந்தையின் அருகாமையில் அவள் தாய்ப் பறவையின் சிறகுக்கடியில் இருப்பதைப் போல உணர்ந்தாள்..

"எங்களைப் பெற்ற தாய் எவ்வாறு குழந்தைகளைப் பிரிய ஒப்புக்கொண்டாள் தந்தையே..?"

"மந்தாகினி குழந்தைகளைத் தர மறுத்தாளாம்.. பின் என்ன எண்ணினாளோ.. பிச்சியைப் போல அங்கேயே குழந்தைகளை விட்டுவிட்டு ஓடி விட்டாளாம்.. பல தருணங்களில் அவள் பிச்சியைப் போல்தான் தென்படுவாள் குழந்தாய்..! சுந்தர சோழனின் மீது இருந்த ஆழ்ந்த அன்பு அவளை பிச்சியாக்கி விட்டது.."

'அந்த சுந்தரசோழனை என்ன செய்தால் தகும்..?' குருதி கொதித்தது நந்தினிக்கு..

சொப்பனத்தில் காண்பதைப் போல அடிக்கடி இருள் சூழ்ந்த இரவில் அவள் வதனமருகே குனிந்து நோக்கும் வதனம் அவளது நினைவில் ஆடியது..

வந்து போனது எவர்..?

"உன் தாய்தான் மகளே.." என்றான் வீரபாண்டியன்..

"குழந்தைகளை விட்டுச் சென்றவள் அடிக்கடி ஒளிந்து மறைந்து வந்து உங்களைப் பார்த்துச் செல்வதுண்டாம்.."

"இவை அனைத்தும் தாம் எவ்விதம் அறிந்தீர்கள் தந்தையே..?"

அப்பாவியாக வினவிய மகளின் வதனம் நோக்கிய வீரபாண்டியன் துயரப் புன்முறுவல் பூத்தான்..

"நாடோடியாய் திரிந்தாலும் நான் பாண்டிய தேசத்தின் மன்னன் அல்லவா..? எனக்கென்று ஒற்றர் படை உண்டு மகளே..! சோழ தேசத்தில் நிகழும் நிகழ்வுகளை நான் அறிவேன்.."

தந்தையின் வீர பராக்கிரமத்தில் பெருமை கொண்டாள் நந்தினி.. அவளுடைய தந்தை ஓர் அரசன்.. அவளுக்கென்று இந்த உலகில் கிடைத்துள்ள உறவு..

"கவலை கொள்ள வேண்டாம் தந்தையே..! தாங்கள் உடல் நலம் பெற்றதும்.. பாண்டிய அரியணையில் அமரத்தான் போகிறீர்கள்.."

வீரபாண்டியனுக்கு நந்தினி தேறுதல் உரைகளை கூறிக்கொண்டிருந்த அதே வேளையில் ஆதித்த கரிகாலன் அச்சோலைக்குள் புகுந்தான்..

---

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



# 12

## நெடுந்தூரம் கடந்து வந்த பூங்கொடியே..! நீயாரோ..?

நீரஜா தனது மனச்சலனத்தை வெகுவாக போராடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாள்.. தாமோதரன் காட்டிய போட்டோவில் இருந்த பெண்ணை கவனித்தாள்.. அவள் முகம் மாறியது.. அவளுக்குள் இடம் பிடித்திருந்த இன்பமான உணர்வுகள் இருக்குமிடம் தெரியாமல் கலைந்து ஓடி விட்டன.. பார்த்த பார்வை மாறாமல் அவள் யாமினியின் போட்டோவையே உற்றுப் பார்த்தபடி இருந்தாள்..

"அதிக நேரம் இந்த போட்டோவைப் பார்க்காதீங்க.."

தாமோதரன் அவளை எச்சரித்தான்.. அவனை நிமிர்ந்து பார்த்த நீரஜாவின் முகத்தில் கலக்கம் இருந்தது.. அதில் தாமோதரன் கவலை கொண்டான்..

"இதுக்குத்தான் நான் சொன்னேன்..? எங்கே..? இவன் கேட்டாத்தானே..? பிடிவாதம் பிடிச்சு உங்களையும்

இந்த நிழலாட்ட யுத்தத்துக்குள்ள இழுத்து விடறான்.." என்று அலுத்துக் கொண்டான்..

"ஏன் அப்படிச் சொல்கிறீங்க..?"

"நீங்க ஏன் இந்த போட்டோவை உத்து உத்துப் பார்க்கறிங்க..?"

"இல்லை தாமோதரன்.. இந்தப் போட்டோவில இருக்கிற பெண்ணை எங்கேயோ பார்த்ததைப் போல நிழலாய் எனக்குள் தோணி வைக்குது.. ஏதோ ஓர் கோபம் இவள்மேல் எனக்கு வருது.. அது ஏன்னுதான் புரியலை.. இந்தப் பெண் யார்..?"

"யாரோ..? யாருக்குத் தெரியும்..? எனக்கும் இந்தப் பெண்ணின் போட்டோவைப் பார்த்தப்ப இதைப்போல தோணி வைச்சுச்சு.. வினைங்க.. இவன் மகாபலிபுரத்துக்கு தேடிப்போய் இழுத்துக்கிட்டு வந்து சேர்ந்திருக்கான்.. சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேன்கிறான்.."

நீரஜா பதில் சொல்லாமல் அந்த போட்டோவையே மீண்டும் பார்த்தாள்.. ஆழ்ந்த பார்வையுடன் இருந்த அந்த போட்டோ நீரஜாவை ஏதோ ஒரு சுழலுக்குள் இட்டுச் சென்றது..

"ஏங்க..? அந்த போட்டோவைப் பார்த்தாத்தான் இல்லாத கற்பனையெல்லாம் வந்து தொலைக்குதில்ல..? அப்புறமும் என்ன கழுதைக்கு அந்தப் போட்டோவை திரும்பவும் உத்துப் பாத்துக்கிட்டு உக்காந்துக்கிட்டு இருக்கீங்க.. கொடுங்க அந்த ஃபைலை.."

தாமோதரன் ஃபைலை வாங்கிக் கொள்ள முற்பட்டான்.. நீரஜா ஃபைலை இறுக்கிப் பிடித்தபடி கொடுக்க மறுத்தாள்..

"இருக்கட்டும்.."

"எதுக்குங்க..? எங்கேயோ பார்த்த மயக்கம்ன்னு பாட்டு பாடறதுக்கா..?" தாமோதரன் கேட்டான்..

"நைஸ் சாங்.." சித்தார்த்தன் பரவசப் பட்டான்..

"கேட்டுக்கிட்டிங்கள்ல.. இந்த விளையாட்டே வேணாங்க நீரஜா.. விட்டுத் தள்ளுங்க.. நாம வேற ஒரு பெண்ணுக்கு அப்பாயின்ட் மெண்ட் ஆர்டர் கொடுத்துட்டு கம்பெனி வேலைகளை பார்ப்போம்.."

தாமோதரனின் பேச்சில் விழிகளை உயர்த்தி அவனை ஓர்பார்வை பார்த்து வைத்தாள் நீரஜா.. அதற்கு என்ன அர்த்தம் என்று யோசித்தவன்.. அப்படியும் இருக்குமோ என்ற நினைவில்..

"ஊஹீம்.. நான் அந்த மீனிங்கில் சொல்லலைங்க.. நீங்க வேற தப்புத்தப்பா கால்குலேசன் போட்டு வைக்காதீங்க.. ஏங்க.. உங்களுக்கு என்னைப் பத்தி நல்ல அபிப்ராயமே தோணி வைக்காதா..?" என்று அழ மாட்டாத குறையாக வினவினான்..

"நான் எதுவும் சொல்லலையே.." என்றாள் நீரஜா..

"நீங்க சொன்னாத்தானா..? அதான் உங்க பார்வையே சொல்லுதே.. நீங்க வந்தப்ப நான் வேலை கொடுக்கனும்னு சொல்லிக்கிட்டு இருந்த பெண்ணுக்கு ஒன்னும்

அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பச் சொல்லலை.. வேற ஒரு பெண்ணுக்கு வேலை கொடுக்கலாம்ன்னுதான் சொன்னேன்.. அந்த மீனிங்கில் சொல்லலை.." அங்கலாய்த்தான் தாமோதரன்..

நீரஜாவுக்கு சிரிப்ப வந்தாலும் அவளால் மனம் விட்டுச் சிரிக்க முடியவில்லை.. சிலந்தி வலை போன்ற சிக்கலுக்குள் அவள் அமிழ்வதைப் போல உணர்ந்தாள்.. கடலின் அடி ஆழத்தில் மூச்சுத் திணற மூழ்குவதைப் போன்ற ஓர் உணர்வு..!

"யாமினி..!"

ஃபைலில் இருந்த பயோடேட்டாவில் இருந்த பெயரை வாய் விட்டுப் படித்தாள்.. யாமினியின் பார்வை நீரஜாவை காந்தம் போல கவர்ந்திழுத்தது.. அவளுக்குள் சிலிர்ப்பு ஓடியது..

"நீரஜா.." கவலையுடன் அழைத்தான் தாமோதரன்..

"இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கலைன்னா மட்டும் எல்லாம் சரியாகிருமா..?" கனவிலிருந்து பேசுவதைப் போல பேசி வைத்தாள் நீரஜா..

"நீரஜா..?"

தாமோதரன் அதிர்ச்சியுடன் வினவ.. சித்தார்த்தன் ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தான்.. நீரஜாவின் முடிச்சிட்ட புருவங்கள் சொல்லுவது எதை என்று அவர்கள் இருவருக்குமே புரியவில்லை..



# 13

## பகை முடிக்கும் வெஞ்சினத்தை காதலனே..! ஏன் கொடுத்தாய்..?

"ஆதித்த கரிகாலன் என்மீது அளவு கடந்த காதல் கொண்டுள்ளார் தந்தையே..! அவரிடம் நான் வேண்டிக் கொண்டால் யுத்தத்தை அவர் முடித்துக் கொள்வார்.. என் பொருட்டு தங்களின் ராஜ்யத்தையும் திருப்பி அளிப்பார்.."

நந்தினி நம்பிக்கையுடன் உரைத்தவைகளை நம்பிக்கையற்ற புன்னகையுடன் செவி மடுத்தான் வீரபாண்டியன்..

சோலைக்குள் சென்ற ஒற்றைப் புரவியின் குளம்படித் தடங்களில் நந்தினிக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று விதிர்த்துப் போனான் கரிகாலன்..

'இவ்விடத்தில் சோழர்களின் படை வீரர்கள் புக மாட்டார்களே..'

அவனுடைய கட்டளையை சோழநாட்டின் படைவீரர்கள் மீறுவார்களா..?

'அவ்வாறெனில்.. நந்தினிக்கு எவரோ ஆபத்து விளைவிக்க முற்பட்டு சோலைக்குள் புகுந்திருக்க வேண்டும்..'

இந்த எண்ணம் எழுந்த மாத்திரத்தில் ஆதித்த கரிகாலன் துடித்துப் போய் விட்டான்.. போர்.. போர்.. என்று

அவன் காதலியை அருகிலிருந்து பாதுகாக்க இயலாமல் தற்போதும் துன்பத்துக்கு ஆளாக்கி விட்டானா..?

"நந்தினி..!"

அவனது குரலில் புரவி சோலைக்குள் பாய்ந்தது..

அங்கே.. குடிசையிலே.. நெடுநேரம் மகளுடன் உரையாடியதால் தொண்டைவறண்டு போயிருந்த வீரபாண்டியனுக்கு நந்தினி கஞ்சியை சுட வைத்து கலயத்தில் ஊற்றிக் கொண்டிருந்தாள்..

சோலைக்குள் விரைந்து வந்த ஆதித்த கரிகாலன்.. அடர்ந்த மரங்களின் மறைவில் புரவி கட்டப்பட்டிருப்பதை கண்டு விட்டான்..

நந்தினி கலயத்தில் இருந்த கஞ்சியை வீரபாண்டியனுக்கு புகட்ட ஆரம்பித்தாள்.. கஞ்சி தொண்டைக்குள் இறங்கியதில் வீரபாண்டியனின் வதனத்தில் மீண்ட தெம்பில் நந்தினியின் வதனம் எல்லையற்ற அமைதி கொண்டது..

'அது.. நந்தினியின் இல்லமல்லவா..?'

ஆதித்த கரிகாலன் அக்குடிசையை இனம் கண்டு விட்டான்.. சில தருணங்களில் அவள் அக்குடிசையி லிருந்து வெளிப்படுவதை அவன் கண்டதுண்டு..

"பட்டரின் இல்லத்தில் அல்லவா உன் வளர்ப்புப் பெற்றோரும் நீயும் வசித்து வந்தீர்கள்..? இது எவர் இல்லம்..?" இயல்பாக அவன் வினவியபோது..

"எனது இல்லம்தான் இளவரசே.." என்று விடை தந்திருந்தாள் நந்தினி..

"உமது இல்லமா..? உமக்கென்று தனி இல்லம் எதற்கு..?"

"தங்களைப் பற்றிய நினைவலைகளில் தனிமையில் மூழ்வதற்கு.."

எவ்வாறு விடையளித்தால் அவன் அந்தக் குடிசையைப் பற்றிய வினாக்களை விடுப்பானோ.. அந்த விடையை அளித்தாள் நந்தினி.. அவளது எதிர்ப்பார்ப் பின்படி ஆதித்த கரிகாலன் விழிகள் மின்ன அக் குடிசையைப் பற்றிய வினாக்களை மறந்து விட்டான்..

அந்தக் குடிசையின் அருகே கட்டப் பட்டிருந்த புரவியைக் கண்டதும்.. தனது புரவியை விட்டுக் குதித்து உடை வாளை உருவிக் கொண்டவன்.. சினத்துடன் கூரை வேயப்பட்ட பர்ணசாலை போன்று தோற்றமளித்த அந்தக் குடிசைக்குள் விரைந்து நுழைந்தான்..

'எனது காதலிக்கு இடர் விளைவிக்கத் துணிவு கொண்ட அந்தக் கயவன் எங்கே..?'

ஆத்திரத்துடன் குடிசைக்குள் பார்த்தவன் அதிர்ச்சியுடன் ஸ்தம்பித்து நின்று விட்டான்..

'நான் காண்பது சொப்பனமா..?'

அவன் விழிகள் கண்ட காட்சியினை அவனால் நம்பவே இயலவில்லை.. அவனுடைய நந்தனியா.. அவனுடைய பரம விரோதியான வீரபாண்டியனின் அருகாமையில் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து அவனுக்கு மருந்திட்டுக் கொண்டிருக்கிறாள்..?

அவன் வந்து நிற்பதைக் கூட உணராமல் கண்ணீர் விட்டபடி.. கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த வீரபாண்டியனின் காயங்களை சுடுநீரால் துடைத்து அரைத்து வைத்திருந்த பச்சிலைக் கலவையினால் மருந்திட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி..

அவளது வதனத்தில் தெரிந்த பரிவும்.. பிரியமும்.. எல்லையற்ற வாத்சல்யமும் ஆதித்த கரிகாலனை மூர்க்கனாக்கியது..

இயல்பாகவே.. நந்தினி, ஆதித்த கரிகாலனை விடுத்து வேறொரு ஆண்மகனின் மீது மெலிதான பார்வையை படிய விடுவதைக்கூட ஆதித்த கரிகாலன் சகித்துக் கொள்ள மாட்டான்..

அங்கே என்னவென்றால்.. ஆதித்த கரிகாலனின் காதலி விழிகளில் பிரியத்தை தேக்கி.. வீரபாண்டியனுக்கு மருந்திட்டுக் கொண்டிருக்கிறாள்..

அதுபோன்ற பிரியத்தை ஆதித்த கரிகாலனின் காதலி ஆதித்தனின் பகைவனின் மீது எதற்காக பொழிகிறாள்..?

"நந்தினி.." கர்ஜித்தான் ஆதித்த கரிகாலன்..

அவனைத் திரும்பிப் பார்த்த நந்தினி.. அவனது வதனத்திலிருந்த சினத்தைக் கண்டதும் சட்டென்று அவன் முன்னிலையில் மண்டியிட்டு இரு கரங்களையும் விரித்து யாசித்தாள்..

"தங்களிடம் மண்டியிட்டு யாசிக்கிறேன் இளவரசே..! என் பொருட்டு வீரபாண்டியரை விட்டு விடுங்கள்.."

ஆதித்த கரிகாலனின் செவிகளில் இடி இறங்கியது.. அவள் பொருட்டு அவன் வீரபாண்டியனுக்கு உயிர் பிச்சைத் தர வேண்டுமெனில்.. வீரபாண்டியன் எவ்வகையில் நந்தினிக்கு இன்றியமையாதவனாக மாறிப் போனான்..?

"எப்பேற்பட்ட வார்த்தைகளை மொழிகிறோம் என்பதனை அறிந்துதான் மொழிகிறாயா..?" ஆதித்த கரிகாலனின் விழிகள் சிவந்தன..

"ஆம் இளவரசே..! அறிந்துதான் உரைக்கிறேன்.. என் வேண்டுகோளுக்கு தாங்கள் நிச்சயமாக செவி சாய்ப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் மன்றாடுகிறேன்.." தீர்க்கமாகவும் வேகமாகவும் கூறினாள் நந்தினி..

"மன்றாடுகிறாயா..?" ஆதித்தன் உன்மத்தம் பிடித்தவனைப் போல ஆகிவிட்டான்..

வீரபாண்டியனின் உயிருக்காக ஆதித்த கரிகாலனின் காதலி மன்றாடுகிறாளா..? யாது இது..? எவ்வாறு நிகழ்ந்தது..?

ஆதித்த கரிகாலனுக்குள் கொலைவெறி மிகுந்தது..

"ஆம் இளவரசே..! மன்றாடுகிறேன்.." அழுத்தமாக உரைத்தாள் நந்தினி..

"இவன் பொருட்டு மன்றாடுகிறாயா..?"

"ஆம்.. இவர் பொருட்டே மன்றாடுகிறேன்.."

"ஏனென்று உரைப்பாயா..?"

"இவர் எனக்கு உயிர் தந்தவர்.. என் பொருட்டு இவருக்கு உயிர்பிச்சை அளிக்க வேண்டும்.."

நந்தினி தெளிவாகத்தான் உரைத்தாள்.. இப்புவிக்கு அவள் வருகை தரக் காரணகர்த்தாவாக இருந்த தந்தைதான் வீரபாண்டியன் என்பதை 'எனக்கு உயிர் தந்தவர்..' என்று உரைத்து அறிமுகம் செய்வித்தாள்..

ஆனால்.. அதுபோன்ற பந்தம்.. அவளுக்கும், வீரபாண்டியனுக்கும் இடையில் இருக்கக் கூடும் என்பதனை சொப்பனத்தில் கூட எண்ணியிராத ஆதித்த கரிகாலன்.. வீரபாண்டியனை அவளுக்கு உயிரானவன் என்று நந்தினி அறிமுகம் செய்து வைப்பதாக எண்ணி விட்டான்..

அவனுக்குள் கோபாக்னி பொங்கியது.. அனைத்தும் அவளாக மாய்ந்து.. மாய்ந்து.. அவளை காதலித்த தினங்களை எண்ணிப் பார்த்தான்.. அவள் ஆதித்தனின் உடமையல்லவா..?

அந்த நந்தினியா இவ்விதம் மொழிகிறாள்..?

"இந்த வார்த்தைகளுக்குப் பொருள் யாது..?" பொங்கினான் கரிகாலன்..

"உறவென்று உரைத்திட எவருமில்லாத அநாதையாக இந்த வாழ்வு விரட்டிய திசைகளில் எல்லாம் ஓடி ஒளிந்து கொண்டிருப்பவள் நான்.. முதன் முதலாக எனக்கு உறவென்று இவர் வந்து நின்றார்.. இவர் அரியணையில் ஏறினால்.. நான் பாண்டிய நாட்டில் ராணி போல வாழ்வேன்.." நந்தினி கூறிக் கொண்டே போனாள்..

"அடி வஞ்சகி..! சோழ நாட்டின் அரசகுலம் உனக்கு விரோதமாக ஆலோசிக்கிறது என்பதற்காக இவன் விரித்த

வலையில் நீ சிக்கிக் கொண்டாயா..? எனது காதலை விட இவன் தேசத்தில் ராணியாக வாழ்வதுதான் உனது குறிக்கோளாக மாறி விட்டதா..?" ஆதித்த கரிகாலன் வெகுண்டான்..

"எனக்கு உரிமையானது பாண்டிய தேசத்தின் ராணி என்ற பட்டம்தான் இளவரசே.. இதைத் தட்டிப் பறிக்க எவராலும் இயலாது.. இவர் எனக்கு வாக்களித்திருக்கிறார்.."

"என்னவென்று..?"

"மகாராணியாக எமை வாழ வைப்பேனென்று.."

"துரோகி..! எனது பகைவனின் மாளிகையில் மகாராணியாக வாழப் போகிறாயா..?"

"ஆம் இளவரசே..!"

"அதையும் கண்டுவிடலாம்.. எனையன்றி வேறு எவரும் உனக்கு உயிராகி விட இயலாது.. அதை நான் ஒருபோதும் அனுமதியேன்.. நீ சோழ தேசத்தின் ராணிகளில் ஒருத்தியாக மட்டுமே வாழவேண்டும்.. அதைத் தவிர்த்து வேறொரு தேசத்தின் ராணியாக நீ மாற ஓர் தினமும் நான் அனுமதிக்க மாட்டேன்.."

"இந்த பந்தம் தங்களின் அனுமதிக்கு அப்பாற்பட்டது இளவரசே.. நான் பாண்டிய நாட்டின் அரியணையை காக்கக் கடமைப்பட்டவள்.."

"அடிப்பாவி..! உண்ட இல்லத்திற்கும்.. உனக்கு அடைக்கலமளித்த தேசத்திற்கும் இரண்டகம் நினைக்கும் அளவுக்கா உன் சித்தம் இவன் மீது சொந்தம் கொண்டிருக்கிறது..?"

"ஆம்.. இது சொந்தம்தான்.. நான் பிறப்பெடுத்தது முதல் உருவான சொந்தம் இது என்பதை இவரே எனக்கு உணர்த்தினார்.."

"துர்மதி கொண்டவளே..! நீ பிறப்பெடுத்ததே இவனுக்காக வென்றா என்னிடம் இயம்புகிறாய்..? என்ன துணிவடி உனக்கு..?"

"இதில் துணிவுக்கான இடமேது இளவரசே..? மெய்யை உரைக்கும் மனோதிடத்தை தாங்கள் துணிவென்ற நாமமிட்டு அழைப்பீர்களா..? நான் பிறப்பெடுத்தது இவரால்தான்.."

அப்போதும் நந்தினி தெளிவுபடத்தான் அவளுக்கும் வீரபாண்டியனுக்குமான உறவு முறையை விவரித்தாள்.. காமாலை நோய் கொண்டவனுக்கு காணுமிடமெல்லாம் மஞ்சள் வண்ணமாகவே தெரியும் என்ற கூற்றினை மெய்ப்பிப்பதைப் போல.. அவள் பிறப்பெடுத்ததே வீரபாண்டியனுக்காகத்தானா என்ற ஆதித்தனின் வினாவிற்கு 'ஆம்' என்று அவள் பதிலுரைத்து விட்டதாக ஆதித்தன் பொருள் கொண்டு விட்டான்..

பிறப்பெடுத்தது இவரால்தான் என்ற சொற்றொடருக்கும்.. பிறப்பெடுத்தது இவருக்காகத்தான்.. என்ற சொற்றொடருக்கும் நூலிழையே வித்தியாசம் உள்ளது..

அந்த நூலிழையைக் கண்டுணரும் நிலையிலா ஆதித்தன் இருந்தான்..?

நந்தினிக்காக அவனுடைய உடல், பொருள், இளவரசுப் பட்டம், ஆவி என்று அனைத்தையும் துறக்கச்

சித்தமாயிருப்பவனுக்கு.. அவள் அவனை விடுத்து அவனுடைய பகைவனிடம் பிரியம் காட்டி... அந்தப் பகைவனுக்கு உயிர்பிச்சை கேட்டு மன்றாடியதை பொறுத்துக் கொள்ள இயலவில்லை.. அவளுக்காக அவன் அனைத்தையும் துறக்க சித்தமாக இருந்தான்.. ஆனால்.. அவளைத் துறக்க சித்தமாயில்லை..

அவனுடைய நந்தினியை வீரபாண்டியனுக்கு அவன் விட்டுக் கொடுப்பதா..? அவன் காதலி வீரபாண்டியனின் மீது பிரியம் கொள்வதை சகித்துக் கொள்வதா..?

"இவற்றை உரைக்க உனக்கு நாத்தடுமாற வில்லையா..?"

"எதன்பொருட்டு நான் தடுமாற வேண்டும்..?"

"ஓ...! அந்த அளவுக்கு உன் சித்தம் கலங்கி விட்டதா..?"

"அல்ல இளவரசே..! கலங்கியிருந்த என் சித்தத்தை இவரே தெளிவு படுத்தினார்.. நான் கடந்து வந்த வாழ்வுப் பாதையை கலங்கரை விளக்கம் போல ஒளிவெள்ளம் பாய்ச்சி இனம் காட்டினார்.."

மந்தாகினி தற்கொலை செய்து கொள்ள வேண்டு மென்ற நினைவுடன் கலங்கரை விளக்கத்திலிருந்து குதித்ததை நந்தினி உரைக்க.. கரிகாலனின் மூர்க்கம் தலைக்கு ஏறியது..

'என்னைக் காதல் புரிந்ததினால் இவளது சித்தம் கலங்கியிருந்ததா..? அதை இவன் தெளிவு

படுத்தினானா..? இவள் கடந்து வந்த வாழ்வுப் பாதையில் என்னைக் காதல் புரிந்ததின் பொருட்டு குந்தவையாலும், செம்பியன் மாதேவி பிராட்டியாராலும் அடைந்த இன்னல்களை இவன் கலங்கரை விளக்கம் போல ஒளிவெள்ளம் பாய்ச்சி இனம் காட்டினானா..?'

வெறிகொண்ட ஆதித்த கரிகாலனின் விழிகளின் சிவப்பு வண்ணம் அதிகரித்துக் கொண்டே இருந்தது.. அதை உணராமல் அவளுடைய காதலன் அவளுக்கான நியாயத்தை அளித்து விடுவான் என்ற நம்பிக்கையுடன் மன்றாடிக் கொண்டிருந்தாள் நந்தினி..

"உனக்கு யாது தேவையென்று வினவினீர்கள் இளவரசே..! அதை மறந்து விட்டீர்களா..?"

"அல்ல நந்தினி..! அன்று உனக்கான தேவையாக என்னை மட்டுமே நீ உரைத்தாய்.."

"அது அன்றைய நிலை இளவரசே..!"

"இன்று அந்நிலை மாறிவிட்டதா..?"

"எனது தேவை மாறிவிட்டது.."

"ஹ..! எத்தகைய மகிழ்வான சேதியை உரைக்கிறாய்.. காலத்திற்கேற்ப உன் தேவைகளும் மாறுவதை நாத்தடுமாறாமல் உரைக்க உன்னால் மட்டுமே இயலும் நந்தினி.."

"தாம் சினம் கொள்ள வேண்டாம்.."

"அல்லாமல் தம்மீதும் இவன்மீதும் மலர்மாரி பொழியச் சொல்கிறாயா..? அது மாத்திரம் போதுமா..?"

"போதாது.. இவர் எனக்குத் தேவை.."

"பாதகி..! என்னிடமே இதை உரைக்கிறாயா..?"

ஆதித்த கரிகாலன் வாளை ஓங்கி விட்டான்.. நந்தினி மன்றாடினாள்.. அவள் விழிகளில் கண்ணீர் அருவியாக பொழிந்து கொண்டிருந்தது.. மடை திறந்த வெள்ளம் போலக் கொட்டும் கண்ணீரை தடுத்து நிறுத்தும் வகையறியாமல் அவள் கரம் குவித்து அவனிடம் யாசகம் கேட்டு அழுது புலம்பினாள்..

"இவரை விட்டுக் கொடுக்க வேண்டும் இளவரசே..! எனக்காக விட்டுக் கொடுக்க வேண்டும்.. இவர் எனக்கு உயிரினும் மேலானவர்.. இவருக்கு தாங்கள் துன்பம் விளைவித்தால்.. இவரைவிட பலமடங்கு அதிகமான ரணவேதனை எனக்குத்தான் உண்டாகும் இளவரசே.. இனிவரும் எம் வாழ்வுக்கு இவர் இன்றியமையாதவர்.. என்னை பாண்டிய நாட்டில் ராணி போல வாழ வைப்பதாக வாக்குக் கொடுத்திருப்பவர்.. கருணை காட்டுங்கள் சுவாமி.. வீரபாண்டியனுக்கு உயிர்ப்பிச்சை தாருங்கள்.."

நந்தினி வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருந்தாலாவது ஆதித்த கரிகாலன் மலையிறங்கி இருப்பான்.. தொடர்ந்த அவளது மன்றாடுதலில் அவனது வெறி அதிகமாகி ஓங்கிய வாளை வீரபாண்டியனின் கழுத்தில் இறக்கி விட்டான்..

## ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



# 13

## செல்வத்தில் பிறப்பெடுத்த..
## செருக்குடனே வதைக்கிறாயா..?

தாமோதரனுக்கு அவன் செவிகளையே நம்ப முடியவில்லை.. சித்தார்த்தனாவது மகாபலிபுரத்தில் யாமினியை பார்த்திருக்கிறான்.. அவளுடன் பேசியிருக்கிறான்.. அவள்மீது அவனுக்குள் இனம் புரியாத பரிவு உண்டாகியிருக்கிறத.. அவளது நிலைகுறித்த பரிதாபம் எழுந்துள்ளது.. அவளுக்கு ஏற்படும் வினோதமான அனுபவங்களுக்கு விடை தேட முற்படுகிறான்.. அவனிடம் அவளே வேலை கேட்டு வந்ததில் அவளுக்கே அந்த வேலையைக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறான்..

ஆனால் நீரஜா..?

அவள் மிகவும் கண்டிப்பானவளாயிற்றே.. சித்தார்த்தனின் நலன் மீது அக்கறை கொண்டவள்.. ஓர் மகாராணியைப் போன்ற கம்பீரம் கொண்டவள்.. எவரிடமும் சரிசமமாக நின்று பேசியறியாதவள்.. ஓர் வகையில் அவள் கர்வி..!

அவளா சித்தார்த்தனின் தெளிவான மனநிலையைக் குழப்பும் ஓர் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட்

ஆர்டரைக் கொடுக்கச் சொல்லுகிறாள்..? சித்தார்த் தனுக்குத்தான் புத்தி பிசகி விட்டது என்றால்.. நீரஜாவுக்குமா அப்படி..? அவள் எளிதில் தடுமாறிவிடும் குணம் படைத்தவளில்லையே..

"என்ன சொல்கிறீங்க நீரஜா..?"

"அவ சொன்னது என்னன்னு புரிஞ்சுக்காத அளவுக்கு ஃபூலா நீ..?"

"பொறு சித்தார்த்..."

"என்ன அலுவலுக்கு..?"

"நீரஜா என்ன சொல்ல வர்றாங்கன்னு முழுசாக் கேட்கவிடு.."

"அவ என்ன அரைகுறையாவா சொன்னா..?"

"பிளீஸ் நீரஜா.. இவன் ஏற்கனெவே என்னைப் படுத்திக்கிட்டு இருக்கான்.. நீங்களும் சேர்ந்து படுத்தாதீங்க.."

"படுத்தினது நீயா..? இல்லை நானா..?"

"காரணமில்லாம படுத்தலை சித்தார்த்..."

வழக்கடித்துக் கொண்டிருந்த தாமோதரனை பெருமூச்சுடன் ஏறிட்டுப் பார்த்தாள் நீரஜா.. அவள் முகத்தில் படர்ந்திருந்த உணர்வலைகளில் தாமோதரன் குழைக்குற்றான்...

"நீரஜா...?"

"நீங்க அண்ணன்கூட வழக்கடிக்க வேண்டாம் தாமோதரன்.. எனக்கென்னவோ இந்தப் பெண்ணை

அண்ணன் மீட் பண்ணனும்ங்கிறது விதின்னு தோணுது. அவனால் அந்தச் சந்திப்பை அவாய்டு பண்ணியிருக்க முடியாதுன்னு தோணுது.."

"என்னங்க நீங்க.. என்னென்னவோ சொல்கிறீங்க..?"

"நம்மைச் சுத்தி என்னென்னவோ நடக்குதே.. நான் பேசாமல் இருந்தால் மட்டும் எல்லாமும் மாறி விடுமா..?"

நீரஜா விரக்தியுடன் பேசுவதைப் போல தோன்றி வைத்ததில் தாமோதரன் குழம்பிப் போனான்.. இது போன்ற மனநிலையுடன் நீரஜா பேசி அவன் கேட்டதில்லை..

"புரிஞ்சுதான் பேசறிங்களா..?"

"நம்மளைச் சுத்தி புரியாத பல விசயங்கள் நடக்கப் போகுதுன்னு என் மனசுக்குள்ள ஏதோ ஒரு பட்சி சொல்லுது தாமோதரன்.."

நீரஜா சோர்வுடன் சித்தார்த்தனை ஏறிட்டாள்..

"உன் நல்லதுக்காகத்தான் சொல்கிறேன் அண்ணா.. இந்தப் பெண்ணிடம் இருந்து நீ தள்ளி நில்லு.."

அவள் வார்த்தையில் தாமோதரன் குதூகலித்து...

"நான் சொல்லலை..?" என்று சித்தார்த்தனிடம் சொன்னான்..

"ஏன்..?" சித்தார்த்தனின் புருவங்கள் மேலேறின..

"இவளால் உனக்குத் தேவையில்லாத பிரச்னைகள் வரும்.." நீரஜா கவலைப்பட்டாள்..

"நீ என் தங்கையா..? இல்லை.. ஜோசியம் சொல்கிறவளா..?"

"ரெண்டும்தான்.. இந்தப் பெண்ணை செகரட்டரியாய் அப்பாயிண்ட்மெண்ட் பண்ணாதே.."

"பண்ணலைன்னா இவளைத் தேடிப் போய் நான் பார்க்க மாட்டேனா..? எனக்கும் அவளுக்கும் இடையில் என்ன இருக்குன்னு ஆராய ஆரம்பிக்க மாட்டேனா..?"

நீரஜா பெருமூச்சுடன் தலையை ஆட்டி அதை ஆமோதித்தாள்..

"நீ செய்வ.. எனக்கு அது தெரியும்.. அதனாலதான் நான் சொன்னேன்.. இவளுக்கு வேலை கொடுக்காமல் இருந்தால் மட்டும் எல்லாம் சரியாகிருமான்னு.."

"நீரு ப்ளீஸ்.. டிரை டு அண்டர்ஸ்டாண்ட் மி..."

"டிரை பண்ணனும்ங்கிற அவசியமே இல்லை.. உன்னை நான் புரிஞ்சு வைச்சிருக்கிறேன்.."

"என்னால இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்காமல் இருக்க முடியாது.."

தாமோதரன் சித்தார்த்தனை ஆட்சேபித்து எதையோ பேசப் போனான்.. நீரஜா தலை அசைத்து அதை வேண்டாமென்று தடுத்து விட்டாள்.. ஓர் பெருமூச்சுடன் சித்தார்த்தனைப் பார்த்தாள்..

"உன் விருப்பம் போல செய்.."

"நீரஜா.."

"விடுங்க தாமு.. எது நடக்குமோ அதுதான் நடக்கும்.. நடக்கப் போகிறது நல்லதா நடக்கனும்.. அதுதான் என்னோட பிரார்த்தனை.."

நீரஜா வேகமாக அங்கிருந்து போய் விட்டாள்..



# 14

*நீ வெட்டியது உன் பகைவனையல்ல..*
*உனைக் காதலித்த என் இதயத்தை..*

"ஐயோ..."

நந்தினி அலறினாள்.. அவள் விழிகள் நம்ப முடியாத அதிர்ச்சியுடன் அகன்று விரிந்தன..

அவள் ஆதித்த கரிகாலனை பார்த்த அதிர்ந்த பார்வையிலிருந்த உணர்வுகளை வார்த்தைகளால் வடித்து விட இயலாது..

இரண்டு துண்டாகி.. வீரபாண்டியனின் உடலில் இருந்து விடுபட்டு குடிசையின் வாயிலில் போய் விழுந்த வீரபாண்டியனின் சிரத்தைக் கண்ணுற்ற ஆதித்த கரிகாலனின் வெறி இறங்கி விட்டது..

நந்தினியின் அதிர்ந்த பார்வையில் ஒளிந்திருந்த ஒரு கோடி உணர்வலைகள் அவனை நோக்கி விரல் நீட்டி குற்றம் சாட்டின.. அவன் தடுமாறினான்..

காதலாக அவனை நோக்கும் விழிகளில் தெரிந்த துவேசம் அவனை வதைத்தது.. நீ பாவி என்று அவனை விலக்கி வைத்த அவள் பார்வையில் அவன் இடிந்து போனான்..

"மன்னவரே..!"

நந்தினி கட்டிலில் கிடந்த வீரபாண்டியனின் உயிரற்ற உடலின் மீது வீழ்ந்து கதறினாள்.. அந்தத் துக்கத்தில் துக்கம் கொண்டான் ஆதித்த கரிகாலன்..

'என்ன காரியம் இழைத்து விட்டேன்..?'

அவன் காதலி.. அவனுடைய பகைவனுக்காக உயிர் பிச்சை கேட்டு மன்றாடினாளே.. அதை அளித்து அவளுக்கு மனச்சாந்தியை அளித்திருந்தால் அவனுக்கும் மனச்சாந்தி கிட்டியிருக்குமல்லவா..?

"தங்களுக்கு வாக்குக் கொடுத்தேனே.. தம் உயிரை எவ்விதத்திலும் நான் காத்து நிற்பேனென்று சங்கல்பம் அளித்தேனே.. அது இயலாமல் போய் விட்டதே.. தங்களை காக்க முடியாமல் என் கண்முன் உங்களது உயிர் போவதைக் காணும் கொடுமைக்கு ஆளாகி விட்டேனே.."

நந்தினி புலம்பினாள்.. ஆதித்த கரிகாலன் குனிந்து அவளின் கேசத்தை ஸ்பரிசிக்கப் போனான்.. சட்டென்று நிமிர்ந்து அவனை நோக்கிய நந்தினியின் கண்ணீர் விழிகளில் அனல் பறந்தது.. ஆதித்தன் அதிர்வு கொண்டான்..

'இவளை நான் ஸ்பரிசித்தல் கூடாதா..?'

அவனது வாழ்நாளில் அவளது தேகத்தை தொடுவதற்கு அவள் அனுமதிக்கப் போவதில்லை என்பதை அவளது வன்மம் நிரம்பிய விழிகள் உரைத்தன.. அதில் தெரிந்த நிஷ்டூரத்தையும், வெஞ்சினத்தையும் அடுத்து வந்த தினங்களில் மறக்க இயலாமல் கரிகாலன் அவதி கொண்டான்..

"வெற்றி மமதையில் என்னை ஸ்பரிசிக்க முற்பட்டீரோ.?"

"நந்தினி..!"

"என் நாமத்தை தாங்கள் உரைக்கக் கூடாது.. கேளுங்கள்.. தங்களின் படைவீரர்கள் ஜயகோசத்தோடு தங்களைச் சூழப் போகின்றனர்.. தாங்கள் மகாவீரராக போற்றிப் புகழப்படப் போகிறீர்கள்.. ஆனால் கரிகாலரே..! ஒரு போதும் இந்நிகழ்வை நான் மறந்து வாழ மாட்டேன்.. வாளேந்த முடியாத மரண காயங்களோடு நிராயுத பாணியாக தங்களை சரணடைந்தவனை தாங்கள் வெட்டிக் கொன்றீர்கள் என்பதை தமது நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.."

'இளவரசே..!' என்ற அழைப்பு மாறி 'கரிகாலரே..!' என்று அவனது நாமத்தை உரைத்து அவள் அழைத்த விதத்தில் தொனித்த விலகலில் மனம் விண்டு போனான் ஆதித்த கரிகாலன்..

இதுதான் விதி என்பதா..? காலம் வகுத்திருக்கும் கட்டளை இதுதானா..? இனி அவன் வாழ்வில் நிம்மதி என்பது அற்றுப் போய் விடுமா..? ரிதம் அற்ற ஸ்வரமாக அவன் வாழ்வு மறுகி.. மறுகி.. முடிந்து போய் விடுமா..?

நந்தினி மீண்டும் வீரபாண்டியனின் மீது வீழ்ந்து கதற ஆரம்பித்தாள்.. அவள் சொல்லிச் சொல்லி அழுத மொழிகள் எவையும் ஆதித்த கரிகாலனின் செவிகளை எட்டவில்லை.. நந்தினிக்கு மிகப்பெரும் தீங்கை இழைத்து விட்டதை அப்போதுதான் அவன் உணர்ந்தான்..

'சினத்தில் மூர்க்கனாகி விட்டேனே.. இவள் வரம் கேட்டாளே.. கேட்ட வரத்தை கொடுக்க மறந்து இவளது கண்முன்னால் மரணப் படுக்கையிலிருந்தவனை கொன்று விட்டேனே.. இந்நிகழ்வை இவள் மறந்து என்னை ஏற்பாளா..?'

நந்தினியின் கலைந்த கேசத்தை சீர்படுத்த இயலாமல் ஏக்கத்துடன் அவளைப் பார்த்தான்.. அவள் கதறிக் கொண்டிருந்தாள்..

"இத்தகைய துக்கத்தை எவ்விதம் நான் மறப்பேன்..? இறக்கப் போவதை அறிந்துதான் எனைத் தேடி வருகை தந்தீரா..? மரிக்கப் போகும் இறுதி நாள்களில் என்னுடன் சொந்தம் கொள்ள விழைந்தீரா..? சொற்ப நாள்கள்தான் எனினும்.. சொந்தமற்ற இந்த அநாதைக்கு அனைத்து சொந்தங்களையும் இனம் காட்டினீர்களே.. இன்று எனது கண் முன்பு கொலையுண்டீர்களே.. ஐயகோ..! தங்களை நான் அப்புறப்படுத்தியிருத்தல் வேண்டும்.. எவர் மீதும் நம்பிக்கை கொண்டிருத்தல் கூடாது.. நம்பி நான் மோசம் போனதுமல்லாமல் தங்களையும் இழந்து நிர்கதியாய் நிற்கிறேனே..."

அவளின் புலம்பல் மொழிகள் ஆதித்த கரிகாலனின் இதயத்தை கூரிய அம்பின் முனைகளாக துளைத்தன.. குடிசைக்கு வெளியே புரவிகளின் குளம்போசைகள் ஒலித்தன.. ஓங்கி ஒலித்த பேச்சுக் குரல்களின் கலவையொலி குடிசையை சமீபித்தது..

"அதோ.. அங்கே ஓர் இல்லம் தெரிகின்றது.. நமது இளவரசர் அங்கே இருக்கக் கூடும்.."

கரிகாலனின் தோழனான பார்த்திபேந்திரனின் குரலும்.. அதைத் தொடர்ந்த காலடியோசைகளும் கேட்டன.. குடிசை வாயிலில் கிடந்த வீரபாண்டியனின் சிரத்தைக் கண்டவர்கள் குதூகலத்துடன் ஜயகோஷம் இட்டார்கள்..

"இளவரசர் வாழ்க..! சோழர்குல இளவரசர் ஆதித்த கரிகாலர் வாழ்க..! வீரபாண்டியனின் சிரம் கொய்த வீராதி வீரர் வாழ்க...!"

அக்கோசங்களில் அழுது கொண்டிருந்த நந்தினி திரும்பி ஆதித்த கரிகாலனை வெறுப்புடன் நோக்கினாள்..

'இத்தகைய வெறுப்பை இவள் விழிகளில் காண்பதற்காகவா வீரபாண்டியனின் சிரத்தை நான் கொய்தேன்..?'

குடிசை வாசலில் நின்றிருக்கும் வீரர்கள் உள்ளே புகுந்து விடாமலிருக்கும் பொருட்டு.. விரைந்து வாயிலுக்கு சென்று நுழைவாயிலை மறித்தாற் போல நின்று கொண்டான் ஆதித்த கரிகாலன்..

"உள்ளே அழுகையொலி ஒலிக்கிறதே.. எவர் அது இளவரசே..?" பார்த்திபேந்திரன் வினவினான்..

"எவரோ.. அர்ச்சகர் இல்லத்துப் பெண்ணாம்.. அதைக் குறித்து நாம் எதற்காக கவலை கொள்ள வேண்டும்..? நம்வழியில் செல்வோம்.." அசட்டைபோல விடையளித்தபடி ஆதித்தகரிகாலன் அங்கிருந்த அகன்று விட்டான்..

"தங்கள் சித்தப்படியே... இளவரசே...! வீரபாண்டியனின் சிரம்தான் இங்கு உள்ளதே.. இதை எடுத்துக் கொண்டு நாம் சென்றுவிடலாம்.. நமக்கு இதுமட்டும் தானே முக்கியமானது..?"

படைவீரர்கள் வீரபாண்டியனின் சிரத்தை எடுத்துக் கொண்டு ஆதித்த கரிகாலனுடன் விரைந்து விட்டார்கள்.. வெற்றி முழக்கமிட்டுக் கொண்டிருந்த அவர்களின் வெற்றி விழாக் கொண்டாடங்களில் ஆதித்த கரிகாலனின் மனமானது லயிக்கவில்லை..

நந்தினி என்ன ஆனாளோ என்ற கவலையே அவனது இதயத்தை வியாபித்திருந்தது.. வீரபாண்டியனின் சிரம் வெட்டப்பட்ட போது அதிர்ச்சியுடன் அவள் அலறிய குரல் ஆதித்த கரிகாலனின் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.. வெறுப்பும், துவேசமும், அதிர்வும் கொண்ட அவளின் பார்வை அவன் இதயத்தை வாள் கொண்டு அறுத்தது.. இனி நிம்மதி என்பது அவன் வாழ்வில் சாத்தியமில்லை என்பதை கரிகாலன் கண்டு கொண்டான்..

'இனி எனை நந்தினி நினைவு கூர்வாளா..?'

நினைவு கூர்ந்தாள்.. மயானத்தில் எரிந்து கொண்டிருந்த வீரபாண்டியனின் சிதையின் மீது அவளது கரங்களையும் கால்களையும் கட்டி.. ரவிதாசனும், அவனுடைய உதவியாள்களும் எறிய முற்பட்ட அந்த கொடிய வேளையில் நந்தினி ஆதித்த கரிகாலனைத்தான் நினைவு கூர்ந்தாள்..

"எம் தந்தையுடன் மரிப்பதில் எமக்கு யாதொரு வருத்தமுமில்லை ரவிதாஸா..? எனினும், பகை முடிக்காமல் என் உயிரை மாய்க்கப் போகிறாயா..?"

அவளின் வார்த்தைகளில் ரவிதாஸன் தேங்கினான்..

"இதைப் போல உறுதிமொழியை அளித்துத்தானே.. வீரபாண்டிய மன்னரை உனது பராமரிப்பில் நிறுத்தி வைத்தாய்..? அவரைக் காக்க இயலாது என்பதை முன்னரே உரைத்திருந்தால் அவர் ஒளிந்து மறைந்து பிழைத்திருப்பாரே.. என்னவோ.. அந்த ஆதித்த கரிகாலன் உன் வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பான்.. வீரபாண்டியருக்கு உயிர் பிச்சை அளிப்பான் என்றெல்லாம் சரடு திரித்தாயே.. தற்போது என்னவானது...?"

"எனது கணிப்பு பிசகி விட்டது.."

"எவ்வளவு எளிதாக உரைக்கிறாய்..?"

"நான் வீரபாண்டியரின் புதல்வி என்பதை மறந்து போனாயா..?"

"ஹ..! தாம் மட்டும்தான் புதல்வியா..? எமது மன்னருக்கு இன்னும் பல ராணிகள் உண்டு.. அவர்களில் ஒரு ராணி பெற்றெடுத்த ஆண் மகவை நாங்கள் மறைவாக வளர்த்து வருகிறோம்.. அவன் சின்னஞ்சிறு பாலகன்.. அவன் வளர்ந்து வாலிபனாகும் போது பாண்டிய அரியணைக்காக போர் புரிய வருவான்.."

"அது நிகழ இன்னும் பல வருடங்கள் காத்திருக்க வேண்டுமல்லவா..? அந்தப் பாலகன் பாண்டிய அரியணையைக் கரம் பற்றட்டும்.. வீரபாண்டியரின்

புதல்வரும்.. எமது சகோதரனுமான மதுராந்தகப் பாண்டியனை மதுராந்தகச் சோழனாக சோழர்குல அரியணையில் அமர வைத்து விட்டால் இருதேசங்களின் அரியணைகளையும் வீரபாண்டியனின் புதல்வர்களே அலங்கரிப்பார்கள் அல்லவா..?"

நந்தினியின் வார்த்தைகளில் ரவிதாஸன் வியப்புக் கொண்டான்.. அவளது கட்டுக்களை அவிழ்த்து விட்டான்.. அவளது மதிநுட்பத்தில் அவள்மீது தனித்த மரியாதை அவனுக்குள் உதித்தது..

"தாங்கள் உரைத்தது..?"

"நிச்சயம் நடக்கும்.. நான் நடத்திக் காட்டுவேன்.. பாண்டிய நாட்டின் போராட்டத் திட்டங்களுக்குத் தேவையான நிதியை சோழர்குல பொக்கிசத்திலிருந்து நான் அள்ளித் தருவேன்.. எனது சகோதரனும், வீரபாண்டியனின் புதல்வனுமான மதுராந்தகனை சோழர்குல அரியணையில் அமர வைப்பேன்.. எந்த சுந்தரசோழரின் புதல்வன் என் தந்தையைக் கொன்றானோ.. அந்த சுந்தரசோழரையும்.. அவர் பெற்ற பிள்ளைகளையும் ஆளுக்கொரு திசையாக பிரித்து வைத்துப் பந்தாடுவேன்.. அவர்கள் அனைவரும் அனுதினமும் அவர்களைச் சூழும் சூழ்ச்சிவலைகளில் சிக்குண்டு போராடுவதைக் கண்டு இன்பமாக கரம் கொட்டி நகைக்கப் போகிறேன்.."

வீரபாண்டியனின் சிதையருகே சூளுரைத்தாள் நந்தினி.. அவளது வதனத்தில் இருந்த மென்மை மறைந்து அங்கே கடினம் பரவியிருந்தது.. மருண்டு விழித்த மான்

போன்ற அவள் விழிகளில் பெண் சிங்கத்தின் சீற்றம் நிறைந்திருந்தது.. புயலில் சிக்குண்ட தளிர்கொடி போல தொய்ந்து நிற்கும் அவளது தேகம்.. அசைக்க இயலாத ஆலம் விருட்சத்தைப் போல நிமிர்ந்து நின்றது..

மகாகாளியின் சொரூபமாக.. கோபம் கொண்ட செந்நிற வண்ணம் பூசிய வதனத்துடன் பகை முடிக்கப் போராளி போல நின்றிருந்தவளை பணிந்து வணங்கினான் ரவிதாஸன்..

"தாங்கள் உரைப்பதெல்லாம் சாத்தியப்படுமா தேவி.."

"நான் சாத்தியமாக்கிக் காட்டுகிறேன்.. இவ்வுலகம் இதுவரை கண்ட நந்தினி வேறு.. இனிமேல் காணப் போகும் நந்தனி வேறு.. வாழ்க்கையில் வஞ்சிக்கப்பட்டால் வஞ்சிக் கொடியும்.. கொடும் வாளாக மாறி.. பகைவரின் சிரமறுப்பாள் என்பதை இவ்வுலகிற்கு நிருபணம் செய்கிறேன்.. இது.. எமது தந்தையான வீரபாண்டியரின் வீர வாளின் மீது ஆணை.."

வீரபாண்டியனின் வாளின் மீது ஆணை வைத்தாள் நந்தினி.. அதே வேளையில் அவளைத் தேடி சோலையில் இருந்த குடிசைக்குப் போனான் ஆதித்த கரிகாலன்.. அங்கே அவள் காணப்படவில்லை...

பட்டரின் இல்லத்திலிருந்த நந்தினியின் வளர்ப்புப் பெற்றோரை அணுகி வினவினான்.. அவர்களோ கண்ணீர் விட்டபடி.. கரம் குவித்து அழுது வைத்தார்கள்..

"இளவரசே..! நாங்கள் இருவரும் சில தினங்களாக இங்கு இல்லை.."

"வேறு எங்கு சென்றிருந்தீர்கள்..?"

"உறவினரின் இல்லத்துக்கு சென்றிருந்தோம்.. திரும்பி வரும் மார்க்கத்தில் ஓர் கொடிய காட்சியினைக் கண்டோம்.."

"யாது அது..?"

"மயானத்தில் எரிந்து கொண்டிருந்த சிதையில் ஒரு பெண்ணின் கால்களையும், கரங்களையும் கட்டி வீசியெறிந்து கொண்டிருந்தார்கள்.. அவ்வுருவம் நந்தினியின் உருவத்தைப் போலவே இருந்தது.."

"என்னது..?" கரிகாலன் அதிர்ந்தான்..

"ஆம் அரசே..! எனினும் எங்களது மகள் பட்டரின் இல்லத்தில் அல்லவா இருப்பாள் என்ற எண்ணத்தில் நாங்கள் வந்துவிட்டோம்.. இங்கு வந்து வினவும் போதுதான் அவளை சிலர் புரவியில் வந்து கட்டித் தூக்கிக் கொண்டு போனதாக உரைக்கிறார்கள்.. அவர்கள் பாண்டிய நாட்டின் ஆபத்துதவிகளாம்.. அவ்வாறெனில் மயானத்தில் சிதையில் வீசியெறியப்பட்ட பெண் எங்களது புதல்வியாகத்தான் இருக்கக் கூடும்.."

மெலிதான துக்கத்துடன் கூறியவர்களின் மென்னியைப் பிடித்தால் என்ன என்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது..

"நீங்கள் பெற்ற பெண்ணாக இருந்தால்.. இது போன்ற போர் நிலவரம் கொண்ட சூழலில் அவளை தனித்து விட்டு விட்டு விருந்துண்ணச் செல்வீர்களா..?" கடிந்து வினவினான்..

அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.. கரிகாலன் திரும்பி விட்டான்..

'அவள் இறந்து விட்டாளா..?'

இதுபோன்ற ஓர் வெற்றியை ஈட்டியிருக்க வேண்டுமா என்ற துயரம் ஆதித்த கரிகாலனுக்குள் எழுந்தது.. அவனுடைய துயரத்தை அறியாமல் சோழ தேசம் மகிழ்ந்தது.. பல ஆண்டுகளாக ஒளிந்து மறைவதும்.. வெளியில் வந்து போரிடுவதுமாக இடர் விளைவித்துக் கொண்டிருந்த வீரபாண்டியனை ஆதித்த கரிகாலன் வெட்டி வீழ்த்தி விட்டதில் அவனது புகழ் சோழதேசமெங்கும் பரவியது..

ஆதித்த கரிகாலனை பழையாறை அரண்மனைக்குத் திரும்பச் சொல்லும் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் அரசாணையை ஓலையாக கொண்டு வந்தான் சோழர்குல படைவீரன்..

ஆதித்த கரிகாலன் நந்தினியை இழந்துவிட்ட வெறுமையான மனதுடன் சோழ நாட்டிற்கு திரும்பினான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*

# 14

## முன்னம் ஒரு காலத்திலே..
## முரசொலித்து வந்தாயோ...

"பஞ்ச பாண்டவர்கள் நாற்காலியோட கால்களைப் போல மூணு பேர்ன்னு ரெண்டு விரலைக் காட்டினானாம் ஒருத்தன்.. அந்தக் கதையைப் போல இல்ல இந்தக் கதை இருக்கு..?"

முகவாயில் கை வைத்து வியந்தபடி பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கதை பேசிக் கொண்டிருந்தாள் அனுராதா.. யாமினிக்கு அவளைப் பார்க்கையில் பெறாமையாக இருந்தது..

அனுராதா அப்படித்தான்.. எதைக் குறித்தும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ள மாட்டாள்.. ஆழ்ந்து சிந்திக்கவும் மாட்டாள்.. மேம்போக்காக யோசிப் பதைப் கூட கால விரயம் என்பாள்.. காலையில் எழுவது.. வாசல் கேட்டில் கட்டி விடப் பட்டிருக்கும் பையிலிருந்து பால் பாக்கெட்டை எடுத்து வந்து காபி போடுவது.. அதை வீட்டில் உள்ள அனைவரையும் அவரவர்க்குத் தக்கபடி சுப்ரபாதம் பாடி எழுப்பிக் கொடுப்பது என்று அனுராதாவின் ஓர் நாளின் பொழுது விடியும்..

அவள் பாடும் சுப்ரபாதம் அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்க்கு ஏற்ப உருமாறும்..

அந்தக் குடும்பத்தின் தலைவனும்.. யதுநந்தன், யாமினியின் தகப்பனுமான பிரதாப்பை எழுப்பி விடும் போது..

"என்னங்க.. இன்னைக்கு கடைக்குப் போகனும்ங்கிற நினைப்பு இருக்கா இல்லையா..? காலாகாலத்தில எழுந்திருச்சு தோட்டத்துச் செடிகளுக்கு தண்ணிகாட்டிட்டு.. மார்க்கெட்டுக்குப் போயி காய் வாங்கி வந்துட்டு.. குளிச்சுக் கிளம்பினாத்தானே கடையைத் திறக்கப் போக முடியும்..? இப்படி இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்திருந்தா.. வழியில் போகிறவங்களா வந்து செடிக்கு தண்ணி காட்டிட்டு.. காய்வாங்கிட்டு வந்து கொடுப் பாங்க.." என்று கேட்டு வைப்பாள்.

இது பிரதாப்புக்கான சுப்ரபாதம்..! இதைக் கேட்டவுடன் எழுந்து கொள்ளாவிட்டால்.. வழியில் போகிறவன் எவனாவது வந்து அவளுக்கே தண்ணி காட்டி விட்டால் என்ன செய்வது என்ற பதட்டத்துடன் பிரதாப் என்னதான் உறக்கம் வந்து இழுத்து அவரை படுக்கைக்குள் தள்ளினாலும் இமைகளைக் கொட்டி உறக்கத்தை விரட்டி விட்டு எழுந்து உட்கார்ந்து காபியை கைப்பற்றி விடுவார்..

'அஃது..'

வெற்றிப் பார்வையுடன் அடுத்ததாக யாமினிக்கு மூத்தவனாக பிறந்திருக்கும் யதுநந்தனை எழுப்பப் போவாள்.. அங்கே அவள் பாடும் சுப்ரபாதம் வேறுவிதமாக இருக்கும்..

யதுநந்தனின் முகத்தின் மீது தண்ணீர் துளிகளைத் தெளிப்பாள்..

"மழை..! மழை..! எங்கே என் கனவு தேவதை..?" என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்காருகிறவன் கையில் காபிக் கப்பைத் திணித்து விட்டு..

"ஊம்..? அவ கல்பாக்கம் அனல் மின் நிலையத்தில் உனக்காக காத்துக்கிட்டு இருப்பா.. காலாகாலத்தில குளிச்சுட்டு ஆபிசுக்கு கிளம்பிப் போய் தேடு.." என்று நொடிப்பாள்..

"ஏம்மா..? கனவில செமத்தியான ஒரு ஃபிகர் கூட டூயட் பாடிக்கிட்டு இருந்தேன்.. அதைக் கெடுக்கனும்னு கங்கணம் கட்டி என் மூஞ்சியிலே தண்ணியைத் தெளிச்சு எழுப்பி விட்டுட்டு வாய் பேசறிங்களா..? இப்ப காபி இல்லேன்னு யார் அழுதா..?" கொதிக்கும் யதுநந்தனிடம்..

"நீ அழுக மாட்டேடா மகனே..! மகாபலிபுரத்தில பிறந்து வளர்ந்திட்டு இன்னமும் கனவில டூயட் பாடிக்கிட்டு உக்காந்திருக்கிற காதல் மன்னன் நீ..! உன் டூயட் முடிஞ்சு நீ எழுந்திருக்கிறதுக்குள்ள விடிஞ்ச பொழுது முடிஞ்சு போயிரும்.. அதுக்கப்புறம் நீ ஆபிஸ் போனா பூட்டுத்தான் உன்னை 'வா மச்சான் வா'ன்னு வரவேற்கும்.. தேவையா..? உன் புத்தி தெரிஞ்சுதான் முகத்திலே தண்ணியடிச்சு எழுப்பி விட்டேன்.. டூயட் பாடறானாம் டூயட்..! வெறியேத்தாம பல்லைத் தேய்ச்சிட்டு குளிக்கப் போ.."

யதுநந்தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி பேஸ்டையும் பிரஷையும் தேடிப் போக.. அனுராதா யாமினியைத் தேடிப் போவாள்..

அது என்னவோ.. யாமினிக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அந்தக் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களுக்கு சுப்ரபாதம் பாடி எழுப்பி விடுவதைப் போல.. அவளுக்கும் சுப்ரபாதம் பாடி எழுப்பி விடும் வேலையை அனுராதாவுக்கு அவள் கொடுத்ததில்லை..

எப்போது அனுராதா போனாலும்.. அவள் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருப்பாள்..

'இவ தூங்கவே மாட்டாளா..?'

இந்த சந்தேகம் நெடும்காலமாய் அனுராதாவின் மனதில் உண்டு.. அதற்கேற்றாற்போல.. சில இரவு வேளைகளில் அவள் தண்ணீர் குடிக்க சமையலறைக்கு வரும் போது யாமினியின் அறையில் நடமாட்டம் இருப்பதைக் கவனித்திருக்கிறாள்..



## 15

*பட்டத்து இளவரசனுக்கு..*
*கிட்டியதோ மன அமைதி...?*

பழையாறையின் சோழர்குல அரண்மனை விழாக் கோலம் பூண்டிருந்தது.. வீரபாண்டியனை வென்று திரும்பிய ஆதித்த கரிகாலனை தீபஒளியுடன் வரவேற்றது.. அதன் ஒளியில் ஆதித்தனின் மனம் நிம்மதி பெறவில்லை.. அவன் உன்மத்தம் பிடித்தவனைப் போல ஆகி விட்டான்..

நந்தினியின் ஸ்தம்பித்த அதிர்ந்த முகத் தோற்றமே இரவும் பகலும் அவன் நினைவில் வந்து வதைத்தது.. அவள் யாசித்ததை அளிக்காமல் அவளுக்கு அநீதி இழைத்து விட்ட மன வேதனையின் அவன் உழன்றான்.. வெற்றி கோலாகலத்தில் சோழதேசம் இருக்க.. வெற்றி பெற்ற ஆதித்தனோ அவன் வாழ்வை தோற்று விட்ட மனநிலையுடன் இருந்தான்.. அவனால் நிம்மதியுடன் துயில் கொள்ள இயலவில்லை..

அவளைக் காண வேண்டுமென்று அவன் தேகத்தில் உள்ள நாடி நரம்புகள் துடித்தன.. அவனை விடுத்து வேறொருவன்மீது அவள் பிரியம் வைத்து விட்டாளே என்ற கோபம் ஒரு புறம்.. அந்த வேறொருவனுக்கு அவளது கரங்களினால் பணிவிடை செய்தாளே என்ற ஆத்திரம் மறுபுறம்.. அவள் கரம் நீட்டி, மண்டியிட்டு யாசகம் கேட்டும் அவள் கண் முன்னால் வீரபாண்டியனை வெட்டிக் கொன்று விட்டானே என்ற குற்ற உணர்வு இன்னொரு புறமுமாகச் சேர்ந்து அவனுக்குள் மாறி மாறி வந்து அலைக்கழித்து அவனைக் கொன்று தின்றன..

பழையாறை அரண்மனை அவனது பட்டாபிஷேக விழாவிற்கான ஆயத்தங்களோடு அவனுக்காக காத்திருந்தது.. அடுத்த பட்டத்துக்குரிய இளவரசன் எவர் என மக்களுக்கு இனம் காட்ட வேண்டிய நிர்பந்தத்தில் சுந்தரசோழரும், மற்றவர்களும் இருந்தார்கள்..

கண்டராதித்த சோழருக்கும்... செம்பியன் மாதேவிக்கும் பிறந்த மதுராந்தகனும் பட்டத்துக்கு

உரியவனே என்ற சலசலப்பு சிற்றரசர்களுக்கு மத்தியில் எழுந்து விட்ட சூழலில் மதுராந்தகனுக்கு எவரேனும் தூபம் போட்டு சர்ச்சையைக் கிளப்பி விட்டால் யாது செய்வது என்ற முன்னெச்சரிக்கையுடன் சுந்தரசோழ சக்கரவர்த்தியும், முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரும் ஆதித்த கரிகாலனுக்கு பட்டத்து இளவரசனுக்குரிய பட்டாபிஷேகத்தை நடத்திவிட சுபதினத்தை நிர்ணயித்து விட்டார்கள்..

பட்டத்துக்குரிய இளவரசன் எவர் என்ற சந்தேகம் மக்களுக்கும், மற்ற சிற்றரசர்களுக்கும் வந்து விடக் கூடாது என்பதில் சுந்தரசோழ சக்கரவர்த்தியும், முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரும் முனைப்பாக இருந்தனர்.. அதுகுறித்த அரசியல் சூழலைக் குறித்து அவர்கள் அனுதினமும் விவாதித்தார்கள்..

ஆதித்த கரிகாலனுக்கு பட்டாபிஷேகம் நடந்தது.. அவன் சோழகுல அரியணையின் பட்டத்து இளவரசன் என்று முறைப்படி அறிவிக்கப்பட்டான்.. அவனுக்கு 'பரகேசரி..' என்ற பட்டம் அளிக்கப் பட்டது.. அவன் பெயரால் கல்வெட்டு சாசனம் அளிக்கும் உரிமையும் வழங்கப்பட்டது..

சுந்தரசோழ சக்கரவர்த்தியின் தாள் பணிந்து அவன் வணங்கியபோது..

"இனி இந்த சோழ சாம்ராஜ்யத்தை ஆளும் பொறுப்பு முழுதும் உன்னைச் சார்ந்தது." என்று சுந்தர சோழர் மனமாரக் கூறினார்..

அதை மக்களும் மற்றவர்களும் ஏற்றுக் கொண்டு வெற்றி முழக்கமிட்டார்கள்.. பட்டாபிஷேக சடங்குகள் முடிந்த சற்றுப் பொழுதில்தான் அவனுக்கு அவன் வாழ்வில் மறக்க இயலாத மற்றுமோர் வேதனை கலந்த அதிர்ச்சி ஏற்பட்டது..

பழமையான சோழர்குலத்தின் மணிமகுடத்தைச் சூட்டியிருந்த கரிகாலனை சுந்தரசோழ சக்கரவர்த்தி அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றார்..

ஆதித்த கரிகாலனுடன், அருள்மொழிவர்மனும், முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரும், பழுவேட்டரையர்களும் சென்றார்கள்..

அந்தப்புரத்திலிருந்த பாட்டிகள், அன்னையர், மற்ற உறவுக்காரப் பெண்மணிகளிடம் பட்டத்து இளவரசனாக பதவியேற்றுள்ள ஆதித்த கரிகாலன் ஆசி வாங்க வேண்டியிருந்தது.. அரசகுலத்தின் சடங்கு சம்பிரதாயங்களில் அதி முக்கியமான சம்பிரதாயம் அது என்பதால்.. பட்டத்து இளவரசனை வரவேற்க அந்தப்புரமே விளக்குகள் ஏற்றப்பட்டு விழாக் கோலம் பூண்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது..

குந்தவையும், அவளது தோழிகளும்.. ஆடை ஆபரணங்களால் ஜொலித்தபடி ஆதித்த கரிகாலனின் வரவை எதிர்பார்த்து ஆவலுடன் நின்றிருந்தார்கள்.. அவனுடைய அன்னையான பட்டத்து மகிஷி வானமா தேவியின் பாதம் பணிந்து நிமிர்ந்த ஆதித்த கரிகாலனின் கண்முன்னால் அந்தப்புறம் சுழன்றது..

அங்கிருந்த சோழர்குல ராணிகளின் மத்தியில் நந்தினியின் வதனம் மட்டுமே அவன் விழிகளுக்குத் தெரிந்தது..

சோழ நாட்டு ராணிகளின் மத்தியில் நடுநாயகமான மகாராணியாக அவள் நின்றாள்..

'இது எவ்வாறு நிகழ்ந்திருக்கக் கூடும்..? ஒருவேளை.. எனது காதலை எவ்விதமோ அறிந்து கொண்ட எனது தந்தை.. எனது வெற்றிக்குப் பரிசாக நந்தினியை எனக்கு ராணியாக்க அழைத்து வந்து அந்தப்புரத்தில் நிறுத்தி வைத்திருக்கிறாரா..?'

நிகழாமலே போய் விடுமோ என்ற ஆசையை நிகழ்வாக்கிக் கொள்ள முனையும் மனித மனத்தின் பேராவலுடன் அவன் சுந்தர சோழ சக்கரவர்த்தியை ஆனந்தத்துடன் நோக்கினான்..

அதே தருணத்தில் நந்தினியைக் கண்ட சுந்தர சோழர்.. ஆதித்த கரிகாலனை விட அதிகமான அதிர்ச்சியை வதனத்தில் பிரதிபலித்து..

"ஆ..." என்று கூச்சலிட்டபடி தரையில் சுருண்டு விழுந்து மூர்ச்சையாகி விட்டார்..

அரண்மனையின் வைத்தியரை அழைக்க சேவகர்கள் ஓடினார்கள்.. ஆதித்த கரிகாலன் திகைப்புடன் நந்தினியைப் பார்த்தான்.. அவள் இதழ்களில் குடி கொண்டிருந்த மர்மச் சிரிப்புக்கான காரணம் அவனுக்குப் புரியவில்லை.. எப்படிப் புரியும்..?

நந்தினியோ உருவத்தில் அவளுடைய தாய் மந்தாகினியைப் போலவே தோற்றமுள்ளவள்.. மந்தாகினியோ சுந்தரசோழரால் முன்னம் ஒரு காலத்திலே காதலிக்கப்பட்டவள்.. அரசருடைய பட்டாபிஷேகத் தினத்தன்று அவரைத் தேடி வந்து ஓடிப் போனவள் கலங்கரை விளக்கத்திலிருந்து கடலில் குதித்து இறந்து விட்டதாக முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர் சுந்தர சோழரிடம் உரைத்து வைத்திருந்தார்.. இந்நிலையில் மந்தாகினியைப் போன்ற தோற்றமுள்ள நந்தினியைக் கண்டதும் அவள் 'மந்தாகினியின் ஆவி' என நினைத்து சுந்தரசோழர் மூர்ச்சை கொள்ள மாட்டாரா..?

பழையாறையில் செம்பியன் மாதேவியின் பாதுகாவலில் வளர்ந்த சிறுமிதான் அவள் என்பதை சக்கரவர்த்தியான அவர் அறிவாரா என்ன..?

செம்பியன் மாதேவியின் குமாரன் என்று அறியப்பட்ட மதுராந்தகனையே நந்தினி கண்டதில்லை எனும் போது.. சக்கரவர்த்தியை அவள் காண்பதென்பது ஏது..?

அனைவரும் பரபரப்புடன் சக்கரவர்த்தியின் உடல் நிலையைப் பற்றிய கவலையுடன் அவரை.. சூழ்ந்து கொண்ட வேளையில் நந்தினி அங்கிருந்து மாயமாய் மறைந்து விட்டாள்..

மறுதினம் அந்தப் புரத்திற்கு குந்தவையைக் காணச்சென்ற கரிகாலனின் விழிகள் அவளைத் தேடித் துழாவி தோல்வி கண்டன..

"குந்தவை.."

"சொல் அண்ணா.."

"உன்னிடம் ஒன்றை வினவ வேண்டும்.."

"அதற்கு என் அனுமதி உனக்கு வேண்டுமா..? வினவ நினைப்பதை வினவு.. எனக்கு விடைதெரிந்தால் நானும் உரைக்கிறேன்.."

"நேற்றைய தினத்தில்.. அந்தப் புரத்திற்கு நான் ஆசி வாங்க வந்த போது அவளை இங்கே கண்டதைப் போல இருந்ததே.."

"எவளை..?"

"நந்தினியை.."

"நினைத்தேன்.. இதுவரை இல்லையெனினும்.. இனியாவது அவளை நீ மறந்து விடுவதே உசிதமானது அண்ணா..! உனது நன்மைக்காவும்.. சோழ அரசகுலத்தின் பாரம்பரியப் பெருமைகளையும், பண்பாடுகளையும், மரபுகளையும் நீ கடைபிடிக்க வேண்டும் என்ற கண்ணியத்தின் பொருட்டும் இதை உனக்கு உரைக்கிறேன்.. அவள் இப்போது உனக்கு எட்டாத தொலைவிற்கு சென்று விட்டாள் அண்ணா..! நீ நினைத்தாலும் அவளை நெருங்க இயலாது..."

"ஏன்..? இந்த சோழர் குலத்தின் பட்டத்து இளவரசனால் எட்ட முடியாத தொலைவில் அவள் இருக்கிறாளா..? எவ்விதம்..?"

"அவள் உனது பாட்டன் உறவுமுறையைக் கொண்ட பெரிய பழுவேட்டரையரை மணந்து அவரது மனைவியாகி விட்டாளே.. அவ்விதத்தில்தான் அவள் உனக்கு எட்டாத தொலைவில் இருக்கிறாள்.."

"என்ன..?"

ஆதித்த கரிகாலனுக்கு அவன் செவிகளையே நம்ப இயலவில்லை.. அவன் செவி மடுக்கும் சேதி மெய்யானதா..? அந்நிகழ்வு நனவில் நிகழ்கிறதா.. அல்லது சொப்பனத்தில் நிகழ்கின்றதா..?

"சுய உணர்வுடன் உரைக்கிறாயா குந்தவை..?"

"எனகு பிரக்ஞை தப்பி விடவில்லை அண்ணா..! தன்னுணர்வுடன்தான் உரைக்கிறேன்.. அவள் பெரிய பழுவேட்டரையாரின் ராணிதான்.. நமது பாட்டன் முறையிலுள்ள கிழவரை மணந்தவள்தான்.. அவள் இப்போது நம்முடைய பாட்டியாவாள்.."

"உரைக்காதே.."

"நான் உரைக்காமல் விடுத்தால் மட்டும் மெய்யானது பொய்யாகி விடுமா அண்ணா..? இதுவே மெய்.. அறுபத்தி நான்கு போர்க்களங்களைக் கண்ட வீராதி வீரரான நமது பாட்டனார்.. தமது தள்ளாத வயதில்.. வயோதிகராக இருந்த போதும் நந்தினியை மணந்து பழுவூர் இளைய ராணியாக அவளை அழைத்து வந்துள்ளார்.."

"இதற்கு நந்தினி எவ்விதம் ஒப்புதல் அளித்தாள்..?"

"அவள் ஒப்புதல் அளிக்காமலா பழுவூரின் இளைய ராணியாக மாறியிருக்கிறாள்..? என்னவோ போ அண்ணா..!

நடைபெறும் எச்செயல்களும் உகந்த செயல்களாக என் மனதிற்குப் படவில்லை.. பழுவேட்டரையர்களின் மனதில் சமீப காலமாக பேதம் மேலோங்கத் தொடங்கியிருக்கிறது.. என்று பெரிய பழுவேட்டரையரின் இளைய சகோதரரான சின்னப் பழுவேட்டரையரின் புதல்வியை மதுராந்தக சோழர் மணம் புரிந்து கொண்டாரோ.. அன்றே இந்த பேதம் ஆரம்பமாகியிருக்க வேண்டும்.. அப்படியல்லாமல் என்று நந்தினி பழுவூரின் இளையராணியாக பழையாறையில் அடியெடுத்து வைத்தாளோ அன்றிலிருந்துதான் இந்த பேதம் ஆரம்பமாகியுள்ளது.. பழுவேட்டரையர் இருவரும் மிகப்பெரும் சக்திகள்.. சோழர்குல அரசாங்கத்தைக் கட்டிக் காக்கும் தூண்கள்.. இவர்கள் பேதம் கொண்டால் சோழ அரசகுலத்தின் எதிர்காலம் எத்தகையதாக மாறிப்போகுமோ என என்மனம் அச்சம் கொள்கிறது.."

"நந்தினி பழிவாங்க வந்திருக்கிறாள் என்று நீ எண்ணுகிறாயா..?"

"திடமாக நம்புகிறேன்.. நமது தந்தை.. சோழர்குல சக்கரவர்த்தி அவளைக் கண்ட மாத்திரத்தில் ஏன் மூர்ச்சையாக வேண்டும்..? எவருக்கும் அஞ்சாத அந்த வீராதி வீரரின் தேகநிலை ஆரோக்கியம் கொள்ளாமல் ஏன் படுத்த படுக்கையாக ஆக வேண்டும்..?"

"குந்தவை..!"

"என்கொரு வாக்களிப்பாயா அண்ணா..?"

"கேள் தங்காய்..!"

"ஒரு காலத்தில் நந்தினியை உன்னிடமிருந்து பிரித்த பாவி நான்.. என்னை மன்னிப்பாயா..?"

குந்தவையின் கண்ணீரில் ஆதித்த கரிகாலனின் மனம் இளகியது.. எவருக்கும் தலை வணங்காத குந்தவை அவனிடம் மன்னிப்புக் கோருகிறாளா..?

"பொற்காசுகளுக்கு இருபுறங்கள் உண்டு குந்தவை.. நான் கண்ட காட்சியையே நீ காண முடியாது.. உன் தரப்பில் நந்தினியை என்னிடமிருந்து பிரித்ததிற்கான நியாயங்கள் இருக்கலாம்.."

"எவ்விதம் என் மனதை கண்டறிந்தாய் அண்ணா..?"

குந்தவை விம்மினாள்.. அநிருத்த பிரம்மராயரின் வாக்குப்படி உரைப்பதனால் நந்தினி சுந்தர சோழருக்கு மகளாக இருக்கக் கூடுமோ என்ற அச்சம் குந்தவையின் மனதில் இருந்தது.. அந்த எண்ணத்தினாலேயே அநிருத்த பிரம்மராயரும் மதுராந்தகனை செம்பியன் மாதேவிக்கு வளர்ப்பு மகளாக்கினார்..

உண்மையென்று ஊர்ஜிதம் பண்ணிக் கொள்ளாத நிலையில் இச்செய்தியை நிச்சயத்துடன் எவ்வாறு அவள் ஆதித்த கரிகாலனிடம் தெரிவிப்பாள்..?

"எனது தங்கை காருண்யம் கொண்டவளாயிற்றே குந்தவை.."

"நீ அறியாத சில சேதிகளை நான் அறிய நேர்ந்தது.. நீ போர்க்களங்களில் சுற்றிக் கொண்டிருந்தாய்.. பழையாறை அரண்மனையில் சுற்றி வரும் பல மர்மச்

செய்திகளைப் பற்றி நீ அறிய மாட்டாய்.. அந்தச் சேதிகளின்படி நான் நந்தினியை உன் மனைவியாக எண்ணிப் பார்க்கவும் அச்சம் கொண்டேன்.."

"தற்போது அதைப்பற்றி விவாதித்து என்ன பயன்..? நீ கேட்ட வாக்கு யாதென்று இன்னமும் நீ உரைக்கவில்லையே குந்தவை.."

"நந்தினியை நான் அறிவேன் அண்ணா..! அவள் வெஞ்சினம் கொண்டவள்.. என் மனதிலிருந்த கோபத்தால் அவளை நான் தாழ்வாகப் பேசியதை மனதில் வைத்திருப்பாள்.. எனது இகழ்ச்சியான உரைகளை மறக்க மாட்டாள்.. அதைப்பற்றி நான் கவலையேதும் கொள்ளவில்லை.. எனது கவலை உன்னைப் பற்றியது.."

"எனக்கா..? எனக்கு எந்தவிதமான ஆபத்து நேரப் போகிறது..?" ஆதித்தன் புஜங்களைக் குலுக்கினான்..

"அல்ல அண்ணா..! எனது அடிமனது இயம்புகிறது.. உனக்கு நந்தினியால் ஆபத்து நேரக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன்.."

"நகைச்சுவையாய் பேசாதே குந்தவை.. ஒரு பெண்ணால் எனக்கு ஆபத்து நேருமா..?"

"அவள் சாதாரணப் பெண்ணல்லவே.."

"அது என்னவோ மெய்தான்.."

"வாக்குக் கொடு அண்ணா..! அவளிடமிருந்து விலகியே நிற்பாய் என்று வாக்குக்கொடு.. அவள் அழைத்தாலும் அவளைச் சந்திக்கச் சென்று விடாதே..

உன் காதலின் ஆழத்தை அறிந்தவள் நான்.. அவள் உன் கையில் வாளைக் கொடுத்து உன்னை நீயே குத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் நீ அதை செய்து வைத்து விடுவாய்.. அதனால்.. அவளிடமிருந்து விலகியே நிற்பாயென்ற வாக்கை எனக்குக் கொடு.."

குந்தவை தனது மதி நுட்பத்தை நிருபணம் செய்தாள்.. ஆதித்த கரிகாலனைப் பற்றிய அவளது கணக்கீடு கோடி சதவிகிதம் சரியானது என்பதை அறிந்து வைத்திருந்த ஆதித்த கரிகாலன் வியப்படைந்தான்..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 15

## உன் புன்னகையே போர்க்களமா..? உன் மைவிழியே.. வாள் முனையா..?

அனுராதா பயந்திருக்கிறாள்.. அடிமேல் அடியெடுத்து வைத்து மகளின் அறையை நெருங்கியிருக் கிறாள்..

'உள்ளே என் மக தனியா படுத்திருக்காளே.. பயந்து போயிட்டா என்ன செய்யறது..?'

பெற்ற மனம் அடித்துக் கொள்ள அவள் யாமினியின் அறைக்கதவைத் திறந்து பார்த்தால்.. அங்கே யாமினிதான் விளக்கைக் கூடப் போடாமல் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருப்பாள்.. சில சமயங்களில்

அவள் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி இருளில் தெரியும் வான்வெளியைப் பார்த்துக் கொண்டிருந்ததும் உண்டு..

'இருட்டுக்குள்ளே என்ன பண்றா..?'

அனுராதா கவலையுடன் விளக்கைப் போடுவாள்.. வெளிச்சவெள்ளத்தில் கனவு கலைந்தவளாக திரும்பிப் பார்க்கும் மகளைப் பார்க்கும்போது அனுராதாவின் அடி வயிற்றில் பயம் சூழும்..

'இவ ஏன் இப்படி இருக்கா..?'

தாயின் திகில் பார்வையை லட்சியம் செய்யாமல் யாமினி வெகு இயல்பாக.. என்னவோ பகல் வேளையில் அவள் ஜன்னலின் அருகே நின்று வான்வெளியை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்ததைப் போல முகத்தை வைத்துக்கொண்டு..

"என்னம்மா..?" என்று வினவி வைப்பாள்..

'என்னவா..? ஏண்டி... கொள்ளிவாய் பிசாசுகளோட கூட்டணி போட்டிருக்கதைப் போல நட்டநடு ஜாமத்தில.. மோகினிப் பேய் போல உலாத்திக்கிட்டு.. போதாக்குறைக்கு ஜன்னல்கிட்டப் போய் இருட்டை உத்து உத்துப் பார்த்துக்கிட்டு நிக்கிறவ நீ..! என்னைப்பாத்து எதுவுமே நடக்காததைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு என்னன்னா கேட்கிற..?' அனுராதா மனதுக்குள் புலம்பித் தள்ளுவாள்..

அவற்றை மகளிடம் ஒர்நாளும் கேட்டுவிட மாட்டாள்.. அந்த விசயத்தில் அவள் சாதுர்யம் கொண்டவள்.. சராசரி அல்ல..

"என்ன யாமுக்குட்டி..! தூக்கம் வரலையா..?" என்றுதான் இதமாக கேட்டு வைப்பாள்..

"உம்..!"

யாமினியின் நெடுமூச்சு எதற்கானது என்று அனுராதாவுக்கு பிடிபட்டதே இல்லை..

'இவளுக்கு என்ன குறை..?'

அவர்கள் மிடில் கிளாஸ்தான் என்றாலும்.. அப்பர் மிடில்கிளாஸ் வகையைச் சேர்ந்தவர்கள்..

யாமினியின் அப்பா பிரதாப் நடத்திக் கொண்டிருக்கும் கடை லாபகரமாக இயங்கிக் கொண்டிருந்தது.. அண்ணன் யதுநந்தனோ கைநிறைய மாதச் சம்பளம் வாங்கி.. அதை அப்படியே தங்கையின் திருமணத்துக்கென்று பேங்கில் போட்டு வருபவன்..

"அழகான பொண்ணுடா.. கைநிறைய சம்பாதிக்குது.. ஜாதகமும் பொருந்தியிருக்கு.. என்ன சொல்ற..?" என்று கேட்டால்..

"தங்கையோட கல்யாணம் முதலில் முடியட்டும்மா.. அதுக்குப்புறம்தான் எனக்கு.." என்று சொல்லிவிடும் பாசமலர் ரகத்தைச் சேர்ந்தான்..

தினந்தோறும் கனவில் வெவ்வேறு கனவுக் கன்னிகளுடன் டூயட் பாடுவான் என்பது வேறு விவரம்..

அம்மா அனுராதா அவளுடைய பிறந்த வீட்டுச் சீதனமாக வந்த அறுபது பவுன் நகைகளுடன்.. சேமிப்புப் பணத்தை நகைச்சீட்டுக் கட்டி சேர்த்து வாங்கி

வைத்திருக்கும் எழுபது பவுன் நகைகளையும் சேர்த்து மகளுக்கே தாய்வீட்டுச் சீராக அளித்துவிடும் முடிவுடன் இருப்பவள்..

இப்பேற்பட்ட குடும்பத்தில் பிறந்த யாமினியின் மனதை அரிக்கும் கவலை எதுவாக இருக்கக் கூடும்..?

இதைத் தவிர்த்த கவலைகளும் ஒரு பெண்ணுக்கு வரக்கூடுமோ என்றிருந்தது அனுராதாவுக்கு..

ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்..? குறைவில்லாமல் நிரக்கச் சீர் செய்யும் தாய் வீடு வேண்டும்.. அனுராதாவின் பிறந்தவீடு அத்தகையதாகத்தான் இருந்தது.. அவர்களை விடவும் அனுராதா அவள் மகளுக்கு அதிமாக சீர் செய்வாளே.. அவளாவது நான்கு பெண்களில் ஒருத்தியாக பிறந்து வைத்தாள்.. யாமினி அவ்வாறு இல்லையே.. ஒரே அண்ணனுடன் பிறந்திருக்கும் ஒற்றைப் பெண்ணாயிற்றே.. அவளுக்காக தனது சம்பளப் பணத்தை சேமித்து.. தனது திருமணத்தையும் தள்ளிப் போடும் பாசமலர் அண்ணனின் உடன் பிறப்பாயிற்றே என்று அனுராதாவுக்கு குழப்பமான குழப்பமாக இருந்தது..

'படிச்சிருக்கா.. அழகா இருக்கா.. பணம் காசு இருக்கிற குடும்பத்தில பிறந்திருக்கா.. கலகலன்னு சிரிச்சுக்கிட்டு இருக்கிறதை விட்டுட்டு எதுக்காக மோட்டு வளையைப் பார்த்துக்கிட்டு இருக்கா..? அதையும் பகல் நேரத்தில் பார்க்காம ஜாமத்தில இல்ல பார்த்து வைக்கிறா..?'

அனுராதாவுக்கு தீராத தலைவேதனையாக இது மட்டுமே இருந்தது..



## 16

### உடன்பிறப்பின் உயிர் காக்க..
### பரிதவிக்கும் பாவை மனது..!

குந்தவை கேட்ட வாக்கை ஆதித்த கரிகாலன் அளிக்கவே இல்லை.. அவள் மன்றாடினாள்..

"நந்தினி உனது கடந்த காலம் அண்ணா..! தற்காலத்தில் நீ சோழ தேசத்தின் பட்டத்து இளவரசன்..! பிற்காலத்தில் சோழச் சக்கரவர்த்தி..! சோழ தேசத்தைக் காக்கும் பொறுப்பில் உள்ள காவலன் நீயென்பதை ஒருபோதும் மறந்து விடாதே.."

"ஆகட்டும்.."

"அதன் பொருட்டுத்தான் உன்னை வேண்டுகிறேன் அண்ணா..! மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.. நான் கேட்ட வாக்கை அளித்து விடு.."

"இயலாதே குந்தவை..!"

பரிதவிப்புடன் உரைத்தான் ஆதித்த கரிகாலன்..

"அண்ணா..!" என்று விதிர்த்து வாய் பொத்தினாள் குந்தவை..

"தயை கூர்ந்து என்னை மன்னித்தருள்வாய் குந்தவை..! நீ கேட்ட வாக்கை நான் அளித்தாலும் ஒரு போதும் அதைக் காப்பாற்ற மாட்டேன்.. அதைப் பற்றிய

பிரக்ஞைகூட எனக்கு இருக்காது.. நந்தினியைப் பற்றிய நினைவு வந்தால் எனக்கு அனைத்தும் மறந்து விடும்.. என்னை வாக்குத் தவறியவனாக ஆக்கி விடாதே குந்தவை..!"

தமையனையே இமைக்காமல் பார்த்தபடி அசைவற்று நின்றிருந்த குந்தவையின் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்தது..

உள்ளதை உள்ளபடி உரைக்கும் தமையனை அவள் வெறித்து நோக்கினாள்.. மனதில் மலையளவு கனமிருக்க விழிநீரை துடைத்துக் கொண்டாள்.. அவள் வதனத்தில் சஞ்சலம் நிறைந்திருந்தது..

"என் செய்வேன் நான்..? நந்தினியின் பிறப்பு, ரகசியத்தை உள்ளடக்கியதாக உள்ளதே அண்ணா..? ஒருவேளை.. நான் யூகிப்பதைப் போல இருந்து விட்டால்..? நினைக்கவே நெஞ்சம் நடுங்குகின்றது.. நீ தீராத பழிக்கு ஆளாகி விடுவாய் அண்ணா..!"

"தற்போது மட்டும் என்ன குந்தவை..? நான் தீராத பழிக்குத்தான் ஆளாகி விட்டேன்.. நந்தினி அவளது வாழ்நாளில் என்னை மன்னிக்கவே மாட்டாள்.."

வீரபாண்டியனின் நினைவில் துக்கத்துடன் இமைகளை மூடிக்கொண்டான் ஆதித்த கரிகாலன்.. நடந்த நிகழ்வைப் பற்றி அறிந்திராத குந்தவை நெடும் மூச்சை விட்டாள்..

"நீ மனம் தளர்ந்து மொழிகின்றாய்.. தந்தை நோய்வாய் பட்டிருக்கும் இந்நிலையில் நீ தெம்புடன்

நடமாட வேண்டும்.. கூடுமான வரை தலைநகரை விட்டு அகலாதே..."

குந்தவையின் அந்த அறிவுரையையும் மீற வேண்டிய இன்னலுக்கு ஆளானான் ஆதித்த கரிகாலன்..

பழுவூர் அரண்மனைக்கு நந்தினியைச் சந்திக்க வருகை தரும்படி தூது வந்து விட்டது.. செய்தியை கொணர்ந்தவள் நந்தினியின் அந்தரங்கத் தாதிப் பெண்..! எவரும் அறியாமல் ஆதித்த கரிகாலனிடம் சேதியை உரைத்து விட்டாள்..

'குந்தவை இதை அறிந்தால்..?'

ஆதித்த கரிகாலன் விரக்தியுடன் புன்னகைத்துக் கொண்டான்.. செல்லாதே அண்ணா என்று பதறியிருப்பாள்..

'நீ தீர்க்கதரிசி குந்தவை..!'

தங்கையின் மீதான பிரியம் மேலோங்கியது ஆதித்த கரிகாலனுக்கு..

'வாக்குக் கேட்டாயே.. நீ கேட்டு ஓர் நாழிகை கூட ஆகவில்லை.. அவளிடமிருந்து எனக்கு அழைப்பு வந்து விட்டது.. இந்த அழைப்பை மறுக்க என்னால் இயலுமா..? இதன் பொருட்டுத்தான் நான் உனக்கு வாக்களிக்க மறுத்தேன்.. எழுத்தாணியில் பொறித்து வைத்துக்கொள் குந்தவை..! இந்த ஆதித்த கரிகாலனின் இதயம் நந்தினிக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டது... அவள் கேட்டு நான் மறுத்தது ஒன்றே ஒன்றைத்தான்...

அந்நினைவே என்னை ஆயுளுக்கும் துன்புறுத்தப் போகிறது.. இதற்கு மேலும் அவள் கேட்டதை மறுக்கும் திறன் எனக்கில்லை தங்காய்..!'

ஆதித்த கரிகாலன் நந்தினியை சந்திக்க சித்தம் கொண்டான்.. அல்லும் பகலும் இடைவிடாமல் துன்புறுத்தும் அவளது நினைவுகளின் கனம் தாளாமல் அவளிடமே சென்று..

'அடி ராட்சசி..! ஏன் இவ்வாறு என்னை துன்புறுத்துகிறாய்..?' என்று வினவி விட முடிவு செய்தான்.

அவள்மீதான வெறிகொண்ட காதல் அவளது அழைப்பை நிராகரிக்க மறுத்தது.. அவள் உயிரோடு இருக்கிறாள் என்பதில் ஆனந்தம் கொண்டது.. அவள் வதனம் பார்க்க துடியாய் துடித்தது..

பழுவூர் அரண்மனையின் லதா மண்டபத்தில் அவனுக்காக காத்திருந்த நந்தினியை சந்தித்த போது.. அதற்கு முன்பு அவர்கள் இருவரும் தனிமையில் சந்தித்துக் கொண்ட தருணங்கள் ஆதித்தகரிகாலனின் நினைவுக்கு வந்தன..

'அப்போதும் இவளை பிரிந்து.. பிரிந்துதான் சந்தித்தேன்.. ஆனால் அப்போதைய பிரிவுக்கும்.. இப்போதைய பிரிவுக்கும் இடைடே மாபெரும் அகழி போல எத்துணை பெரிய வித்தியாசம்..! அப்போது அவளை சந்தித்தபோது எனக்குச் சொந்தமாக்கி கொள்ளும் நிலையில் இருந்தாளே.. இப்போது மட்டும் ஏன் இத்தகைய கொடிய உறவு முறையில் விலங்கிட்டு நிற்கிறாள்..?'

எதுவுமே நிகழாததைப் போல இயல்புடன் அவனை எதிர்கொண்ட நந்தினியை உறுத்துப் பார்த்தான் ஆதித்த கரிகாலன்..

எழில் மிக்க பூஞ்சோலையின் மத்தியில் அமைந்திருந்த லதா மண்டபத்தை குளிர் நிரம்பிய காற்று தாலாட்டிக் கொண்டிருந்தது.. நாமம் அறியாத பட்சிகளின் குரலோசை இனிய இசை போல ஒலித்துக் கொண்டிருந்தது.. அம்மாளிகையின் மகாராணியாக.. பட்டும், வைரமுமாக பொழிவுடன் திகழ்ந்தாள் நந்தினி..

இயற்கையிலேயே எழில் மிகுந்த அவளை சர்வ அலங்கார பூஷிதையாக ஒர்தினமும் அவன் கண்டதில்லை.. எளிமையான தோற்றத்துடன் இருப்பவளிடம் பொங்கும் எழிலில் தடுமாறுகிறவன்.. அந்த எழிலை பன்மடங்காய் அதிகப்படுத்திக் காட்டிய அவளது அலங்காரத்தில் பிரமித்து விட்டான்..

அவளைத் தழுவிவிட துடித்தது அவன் தேகம்..

“அமருங்கள்...” ஹம்ச தூளிகா மஞ்சத்தை காட்டினாள் நந்தினி..

ஆதித்தன் சினம் கொண்டான்.. கண்ணுக்கு முன்னால் அவள் இருந்தும் கட்டியணைக்க முடியாத சூழலில் கொந்தளித்தான்..

“பாதகி..! என்னைப் பழிவாங்க உனக்கு வேறு மார்க்கமே கிட்டவில்லையா..? உனது மனமும் தேகமும் எனக்கானது என்று வாக்குக் கொடுத்தாயே.. அந்த வாக்கு

தற்போது எங்கு போனது..? அதன் மென்னியைத் திருகி கொன்று விட்டாயா..?"

"அல்ல இளவரசே..! தாங்கள்தான் தங்களுக்கு நான் நிகரானவளில்லை என்று சொல்லி என் காதலைக் கொன்றீர்கள்.." நந்தினி பதிலுக்கு சீறினாள்..

"நானா அவ்வாறு இயம்பினேன்..?"

"தங்களின் சார்பாக தங்களின் தங்கையும், செம்பியன்மாதேவியும் இயம்பினார்களே.."

"ஓ..! உன் மனதில் ஒளிந்திருக்கும் வன்மம் இதுதானா..? இதன் பொருட்டா இந்தக் கிழவனை மணந்து என் மனதைக் கொன்றாய்..?"

"என் மனதை தாங்கள்தான் கொன்றீர்கள்.. தங்கள் முன் மண்டியிட்டு வீரபாண்டியனைக் கொன்று விட வேண்டாமென்று மன்றாடினேன்.. யாசித்தேன்.. எனது அழுகுரல் தங்களின் செவிகளில் விழுந்ததா..? நான் கதறக்கதற வீரபாண்டியனைக் கொன்றீர்கள்.. என்னை மட்டும் எதன் பொருட்டு விட்டு வைத்துள்ளீர்கள்.. இப்போதே என்னையும் கொன்று விடுங்கள்.. அப்போதாவது தங்களின் குருதிவெறி அடங்கட்டும்.."

நந்தினி இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்து அவனிடம் நீட்டினாள்.. ஆதித்த கரிகாலன் அவளைக் கொன்று விடுவதைப் போல ஆவேசத்துடன் முறைத்து வைத்தான்.. அவள் கிஞ்சித்தும் அச்சம் கொள்ளாமல் அவனையே பார்த்தபடி அசையாமல் நின்றாள்..

"நான் உன்னைக் கொல்ல வேண்டுமா..? என்னால் அது இயலாது என்பதினால்தானே நீ என்னை துன்புறுத்த முனைகிறாய்..?"

"ஏன் இயலாது..? என் கண் முன்னால் வீரபாண்டியனை தாங்கள் வெட்டி வீழ்த்தவில்லையா..? அந்த வீரம் தற்போது எங்கு போனது..?"

"அடி சண்டாளி..! உனக்கு இரக்கமே இல்லையா..?"

"இதை உரைப்பது தாங்கள்தானா..? இரக்கத்தைப் பற்றி தாங்கள் பேசலாகுமா..? அங்காடியில் கிடைக்கும் பொருள் அல்ல அது..! மனிதாபிமானம் கொண்டவர்களின் மனதிலிருப்பது.."

"என்னை உயிருடன் வதைக்கும் சித்தம் கொண்டு விட்டாய்.. ஏனடி என்னைக் கொன்று உண்கிறாய்..?"

"நான் தங்களை கொன்று உண்கிறேனா..? இது என்ன புதிய பழி இளவரசே..? நான் தங்களின் சித்தத்தை அல்லவா நிறைவேற்றினேன்..?" குறு நகையுடன் கூறினாள் நந்தினி..

"எனது சித்தமா..?" கரிகாலனின் புருவங்கள் முடிச்சிட்டன..

"ஆம் அரசகுமாரரே..! நீ சோழதேசத்தின் ராணியாக மட்டுமே வாழவேண்டும் என்று.. அன்றொர் தினத்தில் தாங்கள் அறிவுறுத்தவில்லையா..?"

"அதற்கு..?"

"அதன் பொருட்டே நான் பெரிய பழுவேட்டரையரை மணந்தேன் இளவரசே..! தங்களின் சித்தப்படியே தற்போது சோழதேசத்தின் பழுவூர் இளையராணியாக மாறி விட்டேன்.. மகிழ்ச்சிதானே இளவரசே..?"

"உன்னை...!..."

ஆதித்த கரிகாலன் வெறியுடன் அவளை அணுக யத்தனித்தான்.. அவள் பழுவூரின் இளையராணி என்ற நினைவு வந்ததில் தேங்கி நின்றான்..

"ச்சே.."

அவன் கரம் முஷ்டி போல மடங்கி.. காற்றின் பரந்த வெளியில் ஆக்ரோசமாக குத்தியது..

அவனது கோபத்தை குரூர திருப்தியுடன் கண்டு களித்தாள் நந்தினி.. ஏனோ தெரியவில்லை.. அவள் மனது இளகத் தொடங்கியது.. அவள் காதலித்த ஆண்மகனின் ரௌத்ரத்தில் அவள் மனம் மயங்க யத்தனித்தது.. அவள் பார்வை ஆதித்த கரிகாலனை அள்ளிப் பருகியது..

அவள் பார்வையிலே அவன் மூச்சுத் திணறினான்..

"வந்து விடு நந்தினி..!" தற்போது அவன் இறைஞ்சினான்..

"எங்கே..?" அவள் அமைதியாக அவன் போக்கிலேயே வினவினாள்..

"கடல் கடந்து தூர தேசத்திற்குச் சென்று விடலாம்.. மனிதர்கள் அற்ற தீவில் உனக்கு நான்.. எனக்கு நீயென்று

வசிக்கலாம்.. இந்தக் கிழவனை விட்டு விட்டு வா.. நான் எனது பட்டத்து இளவரசன் பதவியை துறந்து விட்டு வருகிறேன்.. நாம் சென்று விடலாம்.."

ஆதித்த கரிகாலன் வெறி தலைக்கு ஏறியவனாக பிதற்றினான்.. அவளை அவனுடன் வந்து விடும்படி மன்றாடினான்..

நந்தினி பயங்கரமாக நகைத்தாள்.. அவளது நகைப்பில் பூஞ்சோலையிலிருந்த பட்சிகள் சிறகடித்து பறந்தன..

"எதன் பொருட்டு இந்த நகைப்பு...?" கரிகாலன் சீற்றம் கொண்டான்..

நகைப்பை நிறுத்திய நந்தினிக்கு அவன்மீது கனிவு வந்தது.. ஓர்நொடி அவன் அழைப்பை ஏற்று.. அவனுடன் போய்விட அவள் மனம் துடித்தது..

அந்நினைவு வந்த மறுகணம் வீரபாண்டியனின் வெட்டப்பட்ட தலை அவள் மனதில் சுழன்று வந்து அவள் மனதை இரும்பு மனமாக்கியது..

நந்தினி மனதுக்குள் தவித்தாள்.. பகை முடிக்க வேண்டிய பகைவனாக அவள் காதலன் எதிரில் நிற்கிறானே.. அவள் என் செய்வாள்..? அவளால் அவனைக் கொல்ல இயலுமா..?

அவளை விட்டு அவன் வெகு தொலைவில் விலகி இருக்க வேண்டுமெனில் அவளை அவன் வெறுத்தே ஆக வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள் அவள்..

"ஓ..! தங்களுடன் வருகை தர நான் ஆயத்தமாகவே உள்ளேன் இளவரசே..! அதற்கு முன்பு தாங்கள் சில வீரச் செயல்களை புரிய வேண்டியிருக்கும்.. சம்மதமா..?"

"வீரச் செயல்களா..?"

"ஆம்.. வீரச் செயல்கள்தான்.. தாங்கள்தான் வீராதி வீரர் ஆயிற்றே.. வீரச் செயல் புரிய தயக்கம் கொள்ளவா போகிறீர்கள்..?"

"உன் விருப்பம் அதுவென்றால்.. நீ வேண்டுவதை நான் நிறைவேற்றுவேன்.. என்ன செய்ய வேண்டும் என்பதனை எடுத்துரைப்பாயாக.."

"அவ்விதமே இளவரசே..! முதலில் தாங்கள் பழுவேட்டரையர்களைக் கொல்ல வேண்டும்.."

"அடிப்பாவி..! இதன் பொருட்டா அந்தக் கிழவனை மணந்து வந்தாய்..?"

"இதற்கே சினம் கொண்டால் எப்படி..? அடுத்ததாக தாங்கள் சுந்தரசோழரை சிறையில் போடவேண்டும்.."

"வஞ்சகி..! உன்னைக் கொன்று புதைத்தால்தான் என் மனம் ஆறும்.."

"பொறுமை இளவரசே.. பொறுமை..! எனது அடுத்த நிபந்தனையையும் செவி கொடுத்துக் கேளுங்கள்.."

"உனது திருவாயை மூடுகிறாயா..?"

"இயலாதே இளவரசே..! தாங்கள்தானே ஆரம்பித்து வைத்தவர்.. என் தரப்பு நிபந்தனைகளை செவி மடுக்க மறுத்தல் தகுமா..?"

"தகுகின்ற வார்த்தைகளைத்தான் நீ உச்சரிக்கிறாயா..?"

"யாது செய்வேன் இளவரசே..? பிறப்பினிலே ஏழையாக பிறந்து தொலைத்து விட்டேன்.. என் எழிலில் மயங்கிய பட்டத்து இளவரசன் ஒருவன் என்னிடம் காதல் சொன்னான்.. அவனை நம்பினால் அவன் என்னை நிர்கதியாக விட்டு விட்டு போர் புரிய சென்று விட்டான்.. அவன் இல்லாத தினங்களில் அரசகுலத்தை சேர்ந்தவர்கள் என்னை விரட்டி விட்டார்கள்.. அவர்களது கண் முன்பு நான் பட்டத்து மகிஷியாக சோழர்குல அரியணையில் அமர விரும்புவது தவறா..?"

நந்தினி இமை கொட்டி ஒன்றும் அறியாத பச்சிளம் பாலகியைப் போல வினவியதில் ஆதித்த கரிகாலன் அவளையே இமைக்காமல் பார்த்து வைத்தான்..

"ஹீம்..! அர்ச்சகர் வீட்டில் நான் அன்று கண்ட நந்தினியா நீ..? அல்ல.. நீ பொருள் வேண்டும் கூட்டத்தைச் சேர்ந்தவளாகி விட்டாய்.. பழுவூர் இளைய ராணியாக மாறி விட்டாய் அல்லவா..? இந்த பட்டோடபமான வாழ்வை விட்டு வர உனக்கு மனம் வரவில்லை.. பொற்காசுகள்தான் உனக்கு உயர்வு.."

"ஆம்..! அதிலென்ன தவறு..? இவை தேவைக்கு அதிகமாக அரசர் குலத்தில் இருப்பதினால் அல்லவா நீங்கள் எளியோரை அவமதிக்கிறீர்கள்..?"

நந்தனி இதழ்களைச் சுழித்தாள்.. அந்தச் சுழிப்பில் கரிகாலனின் இதயம் நர்த்தனமாடியது.. அவளைத்

தொட்டு அணைத்து விட அவன் கரங்கள் பரபரத்தன.. நாழிகை ஆக.. ஆக.. அவள் மீதான அவனது வெறி அதிகரித்துக் கொண்டே இருந்தது..

'இது கூடாது..'

ஆதித்த கரிகாலன் அவனது மனதிற்குள் போராடினான்.. மயக்கும் மோகினியாக அவனெதிரே எழிலே வடிவாக நின்று கொண்டிருந்தவளைத் தொட்டு ஆண்டு விடுவானோ என்று மனதுக்குள் அஞ்சினான்...

'அகன்றுவிடு கரிகாலா.. இந்த இடத்தை விட்டு விரைந்து அகன்று விடு.. இன்னமும் அரை நாழிகை இங்கே நீ நின்றாலும்.. நீ.. நீயாக இருக்க மாட்டாய்.. அகன்று விடு..'

அவனது மனதில் ஒட்டிக் கொண்டிருந்த சோழர் குல கௌரவத்தின் கண்ணியம் அவனை எச்சரித்தது.. பூதம் துரத்துவதைப் போல விரைந்து விட்டான் கரிகாலன்.. அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் விழிகள் கலங்கின..

அடுத்த சில நாழிகைக்குள் ஆதித்த கரிகாலன் பழையாறையை விட்டு நீங்கி.. காஞ்சியை நோக்கி புரவியில் பறந்து கொண்டிருந்தான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*

# 16

## என் மனப் பெட்டகத்தை..
## இறுக்கமாக மூடி விட்டேன்...

யாமினியைப் பற்றிய கவலையைத் தவிர வேறு கவலை அனுராதாவுக்கு இல்லை.. அவள் யாமினியைப் போல வித்தியாசமான பெண்ணல்ல.. வெகு இயல்பான, சராசரி குணங்களைக் கொண்டவள்.. கணவனை வேலை ஏவுவதில் இன்பம் கொள்ளும் மனைவியாகப் பட்டவள்..

"என்ன ஆச்சு..? செடிகளுக்கு தண்ணி காட்டியாச்சா..?"

"ஏண்டி..! என்னவோ ஆடு, மாடுகளுக்கு தண்ணி காட்டிட்டயான்னு கேட்கிறதைப் போல செடிகளுக்கு தண்ணி காட்டியாச்சான்னு கேட்டு வைக்கிறயே.. உன்னை என்ன செய்தால் தேவலாம்..?"

"ஏன் செய்ய மாட்டிங்க.. உங்களுக்கும் உங்க பிள்ளைகளுக்கும் வாய்க்கு ருசியா வடிச்சுக் கொட்டறேனில்ல..? நீங்க இதுவும் சொல்லுவீங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவீங்க.."

"இதுக்கு மேலே சொன்னா நீ சும்மாதான் விடுவ.."

அலுத்துக் கொண்டே தோட்டத்து செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு.. காய்கறி வாங்க மார்க்கெட்டுக்கு

போய் வருவார் பிரதாப்.. வியர்வை வழியும் முகத்துடன் காய்கறிப்பையை சுமந்து கொண்டு வருபவரிடம் ஐயோ பாவம் பார்க்காமல் அவர் வாங்கி வந்திருக்கும் காய்களில் ஆயிரத்தைந்து நொட்டை சொல்லுவாள் அனுராதா..

"இது என்ன பீர்க்கைங்காயா..? முருங்கைக்காய் போலவே வத்தலும், தொத்தலுமா இருக்கு... உங்களுக்குன்னு காய் கிடைக்குது பாருங்க... எங்கேயிருந்துதான் இதையெல்லாம் தேடிப் பிடிச்சு வாங்கிட்டு வருவீங்களோ.. உங்க மூஞ்சியைக் கண்டதும் கடைக்காரன் ஏமாந்த சோணகிரி எம்புட்டாச்சுன்னு விக்காத காயையெல்லாம் உங்க தலையில கட்டி அனுப்பறான் போல.. ம்ஹீம்..."

"அடி வில்லங்கத்துக்கு பேர் போனவளே.. உன் கையில இருக்கிற காயை உத்துப்பாருடி.."

"அது என்ன தேவைக்கு..?"

"அது முருங்கக்காய்தாண்டி இவளே.. பீர்க்கங்காய் இங்கே இருக்கு.. நொட்டை சொல்லனும்னு முடிவு பண்ணினவ கையில இருக்கிற காய் எதுன்னு பார்க்காமக் கூட நொட்டை சொல்லுவியா..?"

அப்போதுதான் கையில் இருக்கும் முருங்கக்காயை பார்த்து வைப்பாள் அனுராதா.. ஆனாலும் தோல்வியை ஒப்புக்கொள்ளவே மாட்டாள்.. அந்தக் காயிலிருந்து அடுத்த காய்க்கு வெகு இலகுவாக தாவி விடுவாளே..

"வெண்டைக்காயா இது..? முத்தலா இருக்கு.. முனையை உடைச்சுப் பாத்து வாங்க மாட்டிங்களா..?"

"மிளகாயோட முனையை உடைச்சுப் பாத்து வாங்கினேன்னு வைய்யி.. கடைக்காரன் என்னை கொத்து புரோட்டா போட்டிருவான்.. நல்லாப்பாரு.. உன் கையில இருக்கிறது மிளகா.."

அடுத்து தோல்வியைத் தழுவினாலும் அனுராதா அயரமாட்டாள்..

"தக்காளி என்ன இந்த லட்சணமா இருக்கு..?"

"வேற எந்த லட்சணமா இருக்கணும்..?"

"உருளைக்கிழங்கப் பாரு.. உருண்டை சைசா இருக்கு.."

"பின்னே..? தட்டை சைசிலயா இருக்கும்..?"

"வெங்காயம்.."

"புருசனை இப்படித்தான் திட்டுவியா..?"

"அட உங்களைச் சொல்லலைங்க.."

"அப்பாடி..! பிழைச்சேண்டி.."

"இந்த வெங்காயத்தைச் சொன்னேன்.. நன்னி, நன்னியா.. இப்படியா வெங்காயத்தை வாங்குவாங்க..?"

"எப்படி வாங்கினாலும் நீ நொனனாட்டியம் தான் சொல்லப் போற.. இதுக்கெல்லாம் கவலைப்பட்டா நான் விக்கி, விறைச்சு, இளைச்சுத் துரும்பாப் போயிருவேன்.."

நீ பாட்டுக்கு நொட்டை சொல்லிக் கொண்டிரு.. நான் பாட்டுக்கு கடையைத் திறக்கப் போகிறேன் என்று பிரதாப் குளிக்கப் போய் விடுவார்.. காலை

டிபனையும், மகனுக்கான மதிய உணவையும் தயார் பண்ணி பிள்ளைகளையும் கணவரையும் உட்கார வைத்து பரிமாறி அனுப்பி வைத்து விட்டு.. வேலைக்காரப் பெண்ணிடம் வீட்டை சுத்தம் பண்ணச் சொல்லி விட்டு அனுராதா அக்கடா என்று பக்கத்து வீட்டுப் பெண்களிடம் அரட்டை அடிக்கக் கிளம்பி விடுவாள்.. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரின் வீட்டு வாசல்படியை மீட்டிங் நடக்கும் ஸ்தலமாக மாற்றும் பெண்களின் கையில் மதிய உணவுக்கான கீரையும், வெங்காயமும் இருக்கும்..

கீரையை ஆய்ந்து, வெங்காயத்தை உறித்து முடிக்கும் போது காலை அரட்டை முடிந்திருக்கும்.. உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் 12 மணி அளவில் பெண்கள் குழு அவரவரின் வீட்டுக்கு.. மதிய உணவு சோற்றுக்கு என்று பிரிந்து சென்று மதிய உணவை தயாரிக்க ஆரம்பித்து விடும்..




## என்னருகில் நீயிருந்தால்.. எரிதணலை உணர்ந்திருப்பாய்..

"அருமையான யுக்தி தேவி.."

லதா மண்டபத்தின் தூண் மறைவிலிருந்து குரல் கேட்டது.. நந்தினி இமை மூடித் திறந்து தன்னை கட்டுக்குள் கொண்டு வந்தாள்..

"எதை உரைக்கிறாய் ரவிதாஸா..?" என்று வினவினாள்..

ரவிதாஸன் தூண் மறைவிலிருந்து வெளிவந்தான்.. அவனது கோட்டான் போன்ற சாயலைக் கொண்ட வதனத்தில் கொடூரம் கொடி கட்டிப் பறந்தது.. செவ்வண்ணம் கொண்ட விழிகளை உருட்டி விழித்தான்..

'இவன் ஒருவன்..!' நந்தினி அலுப்பாக உணர்ந்தாள்..

'இவ்விதமே செய்து தொலைப்பான்..' எரிச்சலுற்றாள்..

"ஒன்றை நினைவில் கொள் ரவிதாஸா.. உனது வதனம் ஏற்கனெவே கொடூரமாகத்தான் உள்ளது.. அதிக கொடூரத்தை கொண்டுவர வீணாக பிரயத்தனப் பட்டு.. என்னையும் படுத்தி எடுக்காதே.. விவரம் என்னவென்று உரைத்துத் தொலை.."

"எதன் பொருட்டு அவனை வரவழைத்தோம்..?"

"வரவழைத்தது நான்..! நீயல்ல.."

"அவ்வாறே இருக்கட்டும்..."

"அவ்வாறு நீ விட்டுக் கொடுத்து அந்தச் சிறப்பை நான் அடைய வேண்டியதில்லை.. மெய் அதுதான்.. உன்னால் காற்றைக் கரத்தில் பிடித்துவிட இயலுமா..? கரிகாலன் அத்தகையவன்.. அவனை கரம் கொண்டு பிடித்து கட்டுக்குள் நிறுத்திவிட எவராலும் இயலாது.. என்னால் மட்டுமே அது இயலும் என்பதை ஒருபோதும் நீ மறந்து விடாதே.."

"அதில் தங்களது அகத்தில் மகிழ்ச்சி நிலவுகிறது போல.."

"என் அகத்தை அறியும் வித்தையை நீ கற்று வைத்துள்ளாயா..?"

"தங்களது வதனத்திலிருந்து தங்களின் உணர்வுகளை அறியும் வித்தையைக் கற்று வைத்திருக்கிறேன்.."

"அருமையான பணி.."

"குலப்பகைவனின் மீது மையல் கொள்ள வேண்டாம் தேவி..! அது நமது குறிக்கோளுக்கு உகந்ததல்ல.."

நந்தினி நெடும் மூச்சுடன் மௌனமானாள்.. கண்ணுக்கு முன்னால் தெரிந்த இருள் வெளியை வெறித்து நோக்கினாள்..

"தேவையற்ற பழிகளை என்மீது சுமத்த யத்தனிக்க வேண்டாம் ரவிதாஸா..!"

"அல்லவென்பதை தங்களின் மனம் உரைக்கும்.. இன்றைய நமது திட்டத்தின்படி தங்களின் இடையில் செருகியிருந்த கத்தியால் அவனைக் குத்திக் கொண்றிருக்க வேண்டும்.. தாங்கள் அதை நிறைவேற்றினீர்களா..? அதை விடுத்து அந்தக் கத்தியை எடுத்து அவனிடமே கொடுத்து உங்களைக் குத்திக் கொல்லச் சொல்கிறீர்கள்..."

"மறைந்திருந்து வேவு பார்த்தாயா..?"

"அதுதானே எனது பணி..?"

"எப்படியோ தொலை.. தற்போது விலகிச் செல். பெரிய பழுவேட்டரையர் வருகை தரும் பொழுது நெருங்கி விட்டது.."

"நான் வேண்டிய பொற்காசு..?"

"இதோ இருக்கிறது.. எடுத்துச் செல்..."

ரவிதாஸன் குனிந்து கொற்காசுகள் நிரம்பிய பட்டுப் பையை எடுத்துக் கொண்டான்.. நந்தினியின் வதனத்தை தீர்க்கமாக பார்த்தான்..

"என் வதனத்தில் யாது உள்ளது..?" எரிச்சலுடன் வினவினாள் நந்தினி..

"தங்கள் மனதில் உள்ள ஆதித்த கரிகாலனின் நினைவை அகற்றிவிட முயற்சி மேற் கொள்ளுங்கள்.."

"ஆகட்டும்.. தற்போது நீ வந்த வழியில் சென்று விடுகிறாயா..?"

நந்தினி கரத்தை வழிகாட்டும் பாவனையில் நீட்டினாள்.. ஏதோ உரைக்க வாயெடுத்த ரவிதாஸனின் கரத்தில் இருந்த பட்டுப்பை.. நந்தினியை அவன் பகைத்துக் கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தியது..

'சில காலம் பொறுத்திருக்கலாம்..'

அவன் விரைவாக சுவரேறி குதித்துச் சென்று விட்டான்.. நந்தினி இருள்வெளியை வெறித்தபடி ஹம்ச தூளிகா மஞ்சத்தில் அமர்ந்தாள்.. அவளது மனக்கண் முன்பு காட்சி விரிந்தது..

வீரபாண்டியனின் வீர வாளின் மீது ஆணையிட்டவளை ரவிதாஸனும்.. அவனது கூட்டாளிகளும் விட்டு விட்டார்கள்..

"என்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.. எனது சகோதரனை நான் சோழகுல அரியணையில் அமர்த்துவேன்.."

"தாங்கள் உரைத்ததை எவ்விதம் நிறைவேற்று வீர்கள் தேவி..? அதற்கான மார்க்கம் ஏதும் இல்லையே.."

"அதற்கான மார்க்கம் ஒன்று இருக்கிறது.."

கானகத்தில் அந்த மார்க்கத்தை வழி மறித்தாள் நந்தினி.. குதிரையில் தனது படைவீரர்களுடன் வந்து கொண்டிருந்த பழுவேட்டரையர் மோகினி போன்ற எழில் வடிவுடன் இருந்த நந்தினியைக் கண்டவுடன் மோகித்தார்..

"நான் ஓர் அநாதை பழுவூர் மன்னரே..! தாய், தந்தை அற்றவள்.. தங்களின் நிழல் வேண்டி வழி மறித்தேன்.."

தெளிவான அவளின் உரையில் பழுவேட்டரையர் வியப்பில் ஆழ்ந்தார்.. அறுபத்தி நான்கு போர்க்களங்களை கண்ட வீராதி வீரர் அவர்.. சோழர் குலத்துக்கு விசுவாசமானது அவரின் குலம்..! ஆறுதலைமுறையாக சோழ அரச குலத்துடன் பெண் கொடுத்து.. பெண் எடுத்து மண உறவு பூண்ட குலம் பழுவூர் மன்னர்களான பழுவேட்டரையர்களின் குலம்..!

பெரிய பழுவேட்டரையருக்கு மனைவிகள் இருந்தனர்.. எனினும் ஆண் மகவு இல்லாத குறை அவர் மனதின் ஓரத்தில் ஒளிந்திருந்தது.. அவர் நந்தினியை பழுவூர் இளைய ராணியாக்கி.. அழைத்து வந்து விட்டார். அவள் மீது மையலும் கொண்டார்..

எந்த சோழதேசம் நந்தினிக்கு இடமளிக்க மறுத்து நாடு கடத்தியதோ.. அந்த சோழதேசத்தில் சகல விதமான ராஜ மரியாதைகளுடன் பாதம் பதித்தாள் நந்தினி..!

எந்த அரண்மனை வாழ்வை வாழும் ஆணவத்தில் குந்தவை நந்தினியை அவமதித்தாளோ.. அந்த அரண்மனை வாழ்வை.. குந்தவைக்கு சமமாக 'பழுவூர் இளையராணி' என்ற சிறப்புப் பெயருடன் சகலவிதமான அதிகாரங்களுடன் தன் கரம் பற்றிக்காட்டினாள் நந்தினி..!

பழுவேட்டரையரை அவள் உலகறிய மணக்கவில்லை.. பழுவேட்டரையரின் திருவாய் மொழி உரைத்ததை மற்றவர்கள் எவ்வித வினாவுமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்.. முறைப்படி அவளை மணக்க இயலவில்லை என்பதில் பழுவேட்டரையரின் மனதில் மலையளவு ஆதங்கம் குடி கொண்டிருந்தது.. அதுபற்றி அவர் உரையாட முற்பட்டால் நந்தினி வெகு சாமர்த்தியமாக உரையாடலின் போக்கை திசை மாற்றிவிடுவாள்..

அது என்னவோ.. அறுபத்தி நான்கு போர்க்களங்களைக் கண்ட வீராதிவீரரான பழுவேட்டரையருக்கு.. நந்தினியின் வதனம் பார்த்து விட்டால் வார்த்தைகளே வந்து தொலைக்காது..

அவள் எதை உரைத்தாலும்.. ஆமாம், அவ்வாறேதான்.. எனத் தலையைத் தலையை ஆட்டி வைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.. அப்படியொரு மயக்கம் அவருக்கு..

பல மனைவிமார்களைக் கொண்டிருந்தும்.. அவர்களோடு வாழ்ந்திருந்தும்.. அவர்களிடம் இல்லாத ஏதோ ஓர் வசீகரத்தை நந்தினியிடம் அவர் உணர்ந்தார்.. அவளருகில் இருந்தாலே போதும்.. வேறு எதுவும் அவருக்கு தேவையற்றதாக ஆகிவிடும்..

இத்தனைக்கும் நந்தினி அவருடைய சுட்டு விரலின் நகத்தைக் கூட அவளை ஸ்பரிசிக்க அனுமதிக்கவில்லை..

"எனக்கென்று ஓர் குறிக்கோள் உள்ளது.. அது நிறைவேறிய பின்பு.. தங்களது விருப்பப் படியே நாம் முறைப்படி மணம் புரிந்து மணவாழ்வை வாழத் தொடங்கலாம்.. அதுவரை எனக்கு தாங்கள் கால அவகாசத்தை அளித்தல் வேண்டும்.."

நந்தினி வேண்டிக் கொண்ட போது.. இயலாது என மறுக்க பழுவேட்டரையரால் இயலாமல் போனது.. அவர்தான் அவள் எதை உரைத்தாலும் தலையை ஆட்டி விடுவாரே..

இவ்வாறு சிங்கம் போன்ற பழுவேட்டரையரை தனது கடைக்கண் பார்வையிலே கட்டி வைத்திருந்தாள் நந்தினி..

அவளது உரைக்கு மறுப்புச் சொல்லாத பழுவேட்டரையரின் அகத்தில் சுந்தரசோழரைப் பற்றிய அதிருப்தியை நிரப்பி விட்டாள் நந்தினி..

"ஆலோசியுங்கள் நாதா..! தொன்மை வாய்ந்த பழுவூர் அரசகுலம் என்றென்றும் சோழர் குலத்திற்கு சேவகம் செய்து காலங்கழிப்பதா..?"

"அப்பேற்பட்ட பிரதிக்ஞையை எடுத்தவன் நான் தேவி..! சோழர்களின் வேளக்காரப் படையின் தலைவன்..! சோழர்குல அரியணையைக் கட்டிக் காப்பதாக சபதம் கொண்டவன்.."

"அவ்விதமே இருக்கட்டும் நாதா..? எவர் அதை மறுத்தது..? சோழர்குல அரியணை ஒன்றும் சுந்தர சோழ சக்கரவர்த்தியின் பிள்ளைகளுக்கு மட்டும் என்று சாசனம் செய்து தரப்படவில்லையே.. அதில் உரிமை கொண்ட வேறு ஒரு மன்னரும் உள்ளாரே.. இன்னும் உரைப்பதாக இருந்தால்.. சுந்தர சோழரை விட அவருக்குத்தானே சோழர்குல அரியணையின் மீது அதிகமான உரிமை உள்ளது..?"

நந்தினியின் மதிநுட்பம் மிகுந்த கேள்வியில் சிந்தனையில் ஆழ்ந்தார் பழுவேட்டரையர்.. அவரது இளையராணி பேரெழிலுடன்.. அதீத மதிநுட்பம் வாய்ந்தவளாக இருப்பதில் அவர் மனம் கர்வம் கொண்டது..

"மிக ஆழமாக ஆலோசிக்கிறாய் தேவி..! குந்தவை பிராட்டியைப் போன்ற மதிநுட்பம் கொண்ட மங்கையை இன்றுதான் நான் கண்டேன்.."

குந்தவையின் நாமத்தை செவியுற்றதும் நந்தினியின் விழிகளில் தீப்பொறி பறந்தது.. அவள் சினம் கொண்டாள்..

"அவளது நாமத்தை என்னிடம் உச்சரிக்காதீர்கள் நாதா..! அவள் எனக்கு இணையல்ல.. அவளைவிட அதிக மதிநுட்பம் கொண்டவள் நான்.. அவளுடன்

எனை இணைத்து மொழிவதை நான் கிஞ்சித்தும் விரும்பவில்லை.. சுந்தர சோழரின் செல்வ மகளுக்கு மட்டும்தான் மதிநுட்பம் உரிமையானதா..? மற்ற சாமானிய பெண்களிடம் களி மண்தான் சிரத்தில் உள்ளதா..?"

நந்தினியின் சினத்தில் கலக்கம் கொண்டார் பெரிய பழுவேட்ரையர்.. கடல் போன்ற சேனை எதிர்த்து வந்தாலும்.. அஞ்சா நெஞ்சத்துடன் ஒற்றை வீரனாக போர்க்களம் புகும் துணிவு கொண்ட அந்த வீராதிவீரரினால்.. நந்தினியின் சினத்தை எதிர் கொள்ள இயலவில்லை..

"அவ்வாறு அல்ல கண்மணி..! வழக்கமாக சோழ தேசத்தில் செம்பியன் மாதேவி பிராட்டியாரையும், அவருக்கு அடுத்ததாக குந்தவை பிராட்டியாரையும் மதிநுட்பம் வாய்ந்த பெண்மணிகள் என்று போற்றிப் புகழ்வார்கள்.. அந்நினைவில் உரைத்துவிட்டேன்.."

"மக்களுக்கென்ன..? அரசகுலப் பெண்மணிகளை போற்றிப் புகழ்ந்தால்தானே அவர்களால் சோழதேசத்தில் வாழ இயலும்..?"

"தாமும் எனது அரசிதானே தேவி..! சினத்தை தவிர்க்கலாமே.."

பெரிய பழுவேட்டரையரின் கெஞ்சுதலில் நந்தினி மோகனமாக பார்வையைச் சுழற்றி புன்முறுவல் பூத்தாள்.. அதில் கிறங்கிப் போனார் பெரிய பழுவேட்டரையர்..

"ஆம் சுவாமி..! நான் தங்களது அரசிதான்.. அவ்வாறே தாங்களும் எனது அரசர்தான்.."

நந்தனியின் வார்த்தைகளில் காதல் தோய்ந்திருப்பதாக கற்பனை செய்து மகிழ்ந்து போன பெரிய பழுவேட்டரை யாரிடம் உரைக்க நினைத்ததை உரைக்க ஆரம்பித்தாள் நந்தினி..

"நாதா..! கண்டராதித்த சோழரை மறந்து விட்டீர்களா..? அவருடைய குமாரர் மதுராந்தக சோழருக்கும் சோழ அரியணையில் உரிமை உள்ளதல்லவா..?"

அரசாங்க விவகாரங்களை மிக எளிதாக உரைத்து வைக்கும் நந்தினியின் வல்லமையில் வியந்து போனார் பெரிய பழுவேட்டரையர்..

"ஆம் தேவி..! எனினும் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் ஆதித்த கரிகாலருக்கு பட்டத்து இளவரசராக பட்டாபிஷேகம் செய்தாகி விட்டதே.."

"அது குறித்து தங்களிடமோ, தங்களின் இளவளிடமோ அவர்கள் ஆலோசனை பெற முனைந்தார்களா..?"

அல்ல என்பது முதன் முறையாக பழுவேட்டரையரின் மனதில் ஏறியது..

"தங்களின் மௌனமே அல்லவென்பதை உரைக்கிறது.. ஆலோசியுங்கள் சுவாமி..! தாங்களோ வேளக்காரப் படையின் தலைவர்.. தங்களின் இளவலோ கோட்டையின் காவலர்..! சோழர் படையின் தளபதி..! தங்கள் இருவரையும் விடுத்து முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரிடம்தானே முக்கிய ஆசோசனைகளை பகிர்ந்து கொள்கிறார்கள்..? சுந்தரசோழ சக்கரவர்த்தி தமது

நம்பிக்கைக்கு உரியவராக முதன் மந்திரியைத்தானே எண்ணுகிறார்..?"

வெகு சாமர்த்தியமாக பெரிய பழுவேட்டரையரையும், சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் பிரித்து வைத்தாள் நந்தினி.. படு சாதுர்யமாக அவர்கள் இருவருக்கும் இடையே கடக்க இயலாத அகழியைப் பறித்தாள்.. நந்தினி உரைக்க.. உரைக்க.. தாமும், தம் இளவலும் சுந்தரசோழ சக்கரவர்த்தியால் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டோம் என்ற முடிவிற்கே வந்து விட்டார் பெரிய பழுவேட்டரையர்..

"தமது இளவளின் செல்வப் புதல்வியை மணம் புரிந்து கொண்ட மதுராந்தகர் தமக்கு மருமகப் பிள்ளை அல்லவா..? தங்களின் மருமகப் பிள்ளைக்கான உரிமையைப் பெற்றுத்தர வேண்டியது தங்களின் கடமையல்லவா..? மதுராந்தகர் அரியணை ஏறினால் பழுவூர் அரசகுலம் மகிழ்வு கொள்ளுமல்லவா..?"

நந்தினி எடுத்துரைத்த விதத்தில் பெரிய பழுவேட்டரையருக்கு அதுவே நியாயம் என்று தோன்றி விட்டது..

"என்னுடைய ஆசை என்னவென்று அறிவீர்களா சுவாமி..?"

"சொல்தேவி..! தமது ஆசையை நிறைவேற்ற நான் சித்தமாக இருக்கிறேன்.. தமக்கு வேண்டியது யாது..? வினவு.."

"சோழர்குல அரியணையில் தாங்கள் சக்கரவர்த்தியாக அமர வேண்டும்.. தங்களின் அருகாமையில் பட்டத்து மகிஷியாக வெகு பதவிசாக நான் அமர வேண்டும்.."

நந்தினி தலையை சாய்த்து ஒயிலாக பழுவேட்டரையரைப் பார்த்த விதத்தில்.. அந்த நொடியே அவளுக்காக சோழ அரியணையைக் கைப்பற்றி அதில் அவளை பட்டத்து மகிஷியாக அமரவைத்து விடவேண்டும் என்று துடித்துப் போனார் பழுவேட்டரையர்..

"எனக்காக நான் இதை வேண்டவில்லை.. தங்களுக்காகவே வேண்டுகிறேன்.. தாங்கள் தலைமீது ஏற்றிக்கொண்டாடும் அந்தக் குந்தவை பிராட்டியார் என்னைப் பார்த்து என்ன உரைத்து எள்ளி நகைத்தாள் என்று தாங்கள் அறிவீர்களா..?"

நந்தினியின் விழிகள் சொரிந்த கண்ணீரில் கலங்கிப் போனார் பெரிய பழுவேட்டரையர்.. நந்தினியின் விழிகள் கண்ணீரை சுரப்பதா..? அதை கண் கொண்டு அவர் காண்பதா..?

"நந்தினி..! என் கண்மணி..! ஏது விவரம் என்பதை என்னிடம் உரைப்பாய்.. ஏனென்று நான் வினவுகிறேன்.."

"என்னவென்று வினவுவீர்கள் சுவாமி..? தடியூன்றும் குடுகுடு கிழவனை மணம் புரிந்து என்ன சுகத்தைக் காணப் போகிறாய் என்று அந்தக் குந்தவை மற்ற பெண்களின் முன்னால் எள்ளி நகையாடியபோது எனது உயிர் எவ்வாறெல்லாம் துடித்தது என்பதை தாங்கள்

அறிவீர்களா..? என்னை எது வேண்டுமானாலும் உரைக்கட்டும்.. அது பெண்ணுக்கும், பெண்ணுக்கும் இடையினில் நிகழும் மோதல் என்று விட்டு விடலாம்.. அவளது தந்தைக்குச் சமமான உங்களைப் போய்.. 'குடு குடு கிழவன்..' 'தடியூன்றுபவன்..' என்றெல்லாம் அவள் எள்ளி நகையாடலாமா..?"

"என்ன..?"

பெரிய பழுவேட்டரையரின் மனதில் குந்தவையின் மீது துவேசம் தோன்றியது அந்த நொடியில்தான்...

---

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***



# 17

## தொடராமல் உனைத் தொடரும்.. சொந்தமடா.. எனது சொந்தம்..

மதிய உணவை தயாரிக்க ஒரு மணிநேரமே போதும் அனுராதாவுக்கு..

பிரதாப்பும் யாமினியும் சாப்பிட வரும் போது மதிய உணவு சுடச்சுட டைனிங் டேபிளில் இருக்கும்.. மதிய உணவுக்குப் பின்னால் எந்த ராணி எந்தக் கோட்டைக்குப் போனாலும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாள் அனுராதா..!

அவளுடைய படுக்கையறையில் ஏஸியைப் போட்டு விட்டு எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் ஆழ்ந்து

உறங்கி விடுவாள்.. மதியத் தூக்கம் என்பது அந்த அளவுக்கு அவளுக்கு இன்றியமையாதது..

ஆழ்ந்த உறக்கத்துப் பின்னால் அவள் எழுந்து கொள்ளும் போது மணி நான்கு என்று இருக்கும்.. முகம் கழுவி, தலைவாரி.. மாலை காபி டிபனைத் தயாரித்து விட்டு பூஜையறையில் விளக்கை ஏற்றும்போது யதுநந்தன் வேலையிலிருந்து திரும்பியிருப்பான்.. மாலை நேரக் காபி, டிபனுக்காக கடையை உதவியாள்களின் மேற்பார்வையில் விட்டு விட்டு பிரதாப்பும் வந்து சேர்ந்திருப்பார்..

அவர்களுக்கும்.. மொட்டைமாடியில் நின்று வெட்ட வெளியை வெளித்துக் கொண்டிருக்கும் யாமினிக்கும் காபி டிபனைக் கொடுத்து விட்டு டிவியின் முன்னால் உட்கார்ந்து விடுவாள் அனுராதா..

மாலையிலிருந்து.. இரவு எட்டு மணிவரை ஒளிபரப்பாகும் அத்தனை சீரியல்களையும் பார்த்து விட்டு இரவு டிபனுக்காக சமையலறையில் நுழைவாள்..

இரவு உணவுக்குப் பின்னாலும் சில சீரியல்களைப் பார்த்துவிட்டு பத்து பணிக்கெல்லாம் தூங்கப் போய் விடுவாள்.. படுத்த அடுத்த நொடியில் உறங்கியும் விடுவாள்..

யாமினிக்கு அது போன்ற உறக்கம் வாய்த்ததில்லை.. அவள் என்னதான் முயன்றாலும்.. எவ்வளவுதான் அலுப்பாக இருந்தாலும் படுத்தவுடன் உறக்கம் கொள்ள அவளால் முடிந்ததில்லை.. விடியும் வரை அறைக்குள்ளேயே நடந்து கொண்டிருப்பாள்.. சில சமயங்களில் ஜன்னல்

வழி தெரியும் இருளை வெறித்துக் கொண்டிருப்பாள். அவளைச் சுற்றியிருக்கும் நூதனமான வினோதங்களுக்கான விடை தேடி அவள் மனம் தவிக்கும்..

அனுராதாவிற்கு இப்பேற்பட்ட இக்கட்டுக்களெல்லாம் பரிச்சயமானதல்ல.. அவளது உலகமே தனி.. அதில் அவள் எவ்விதமான மனச்சிக்கலும் இல்லாமல் வெகு இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்..

வார இறுதி நாள்களில் சினிமாவுக்கும், கடற்கரைக்கும் போயாக வேண்டும் என்பாள்.. வெள்ளிக்கிழமை கோவிலுக்கானது.. மாத இறுதியில் வெளியூர் பயணம்..

அனுராதாவின் இந்த விருப்பங்களை தட்டாமல் நிறைவேற்றி வைப்பார் பிரதாப்.. அவற்றில் யாமினி பங்கு பெற விரும்புவதில்லை என்பதில்தான் அனுராதா பயம் கொண்டாள்..

'இவ ஏன் இப்படி இருக்கா..?'

இந்தக் கேள்வியை அவள் மனதுக்குள் கேட்காத நாளில்லை.. மற்ற பெண்கள் குதூகலம் கொள்ளும் விசயங்களில் மனதைச் செலுத்தாமல்.. சதா சர்வ காலமும் மகாபலிபுரத்தின் சிற்பக் கோவில்களிலும்.. கடற்கரையோரத்திலும் சுற்றி வருபவளை நினைத்து அவளது பயம் அதிகரித்தது.. பிரதாப்பிடம் அவற்றை பகிர்ந்து கொண்டால், அவர் அவளை...

"ஞான சூன்யம்.." என்றார்..

"சான்ஸ் கிடைச்சுருச்சுன்னு பேசிப் பாக்கறிங்களா..? நீங்களும் உங்க பரம்பரையும் ஞானத்தில பொங்கல் வைச்சவங்க.. நாங்க மட்டும் ஞான சூன்யமா..? நினைப்புத்தான்.."

"ஏய்ய்..! என் பொண்ணு கலா ரசிகைடி.."

"அப்படின்னா.. 'மானாட.. மயிலாட..' பாத்துக்கிட்டு வீட்டுக்குள்ளேயே அடங்கி இருக்க வேண்டியதுதான..?"

"அடிப்பாவி..! நான் சொன்ன கலா ரசிகைங்கிறது வேறடி.. நீ உடனே டான்ஸ் மாஸ்டர் கலாவோட ரசிகைன்னு நினைச்சுட்டியா..?"

"ஹலோ..! உடனே வானத்துக்கும் பூமிக்குமா எம்பி எம்பி குதிக்க வேணாம்.. சின்ன 'மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்..' அதுக்குப் போய் இத்தன பில்ட்-அப்பா..?"

"நான் சிற்பக் கலைக்கூடம்ன்னு கலை நுணுக்கத் தோட வாழறவன்... என் பெண்ணும் என்னைப் போல கலைகளை ரசிக்கிறவளா இருக்கான்னு சொல்ல வந்தேன்.."

"இப்பச் சொன்னதைப் போலவே அப்பவும் தெளிவாச் சொல்லியிருக்க வேண்டியதுதானே..?"

அதற்கும் பிரதாப்பை காரணம்காட்டி நொடித்து வைத்தாள் அனுராதா..



## 18

**உன் கண்வீச்சின் முன்னிலையில்**
**என் வாள்வீச்சு மலைத்ததடி..**

நந்தினி யௌவனம் பொங்கும் எழில் கொண்ட வடிவுடையவள்.. இளமையின் தலைவாசலில் நிற்பவள்.. பெரிய பழுவேட்டரையரோ முதிய பிராயத்தார்.. அதை நினைவுறுத்தும் விதத்தில் நந்தினியிடம் குந்தவை உரைத்த மொழிகளை பெரிய பழுவேட்டரையரால் மன்னிக்க இயலவில்லை.. அவ்வாறு அவர் கொதிக்க வேண்டும் என்பதற்காகத்தானே நந்தினி அவ்விதம் கதை புனைந்து கூறினாள்..!

"ஆம் சுவாமி..! அவளைச் சுற்றியிருந்த மற்ற அரசகுல மாதர்கள் என்னை ஏளனமாக நோக்கினார்கள்.. அதுவரை தங்களின் இளையராணி என்ற இறுமாப்பில் இருந்து வந்த எனக்கு கசையடியைப் பெற்றதைப் போல இருந்தது.."

அவரை மணம் செய்து கொண்டதைக் குறித்து.. கசையடியில் வேதனை கொண்டதைப் போல நந்தினி துடித்துப் போக வேண்டுமா..?

அது பழுவேட்டரையருக்கான இழுக்கல்லவா..?

"கவலை கொள்ளாதே கண்மணி...! அந்தக் குந்தவையின் கொட்டம் அடங்கும் தினம் வெகு

தொலைவில் இல்லை.. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வி என்ற இறுமாப்பில் அவள் ஆணவம் கொள்கிறாள்... அந்த சக்கரவர்த்திப் பீடத்தில் மதுராந்தகனை நான் அமர்த்திவைப்பேன்.. அப்போது அந்தக் குந்தவையின் இறுமாப்பும், எள்ளி நகையாடலும் எங்கே ஓய்வெடுக்கப் போய் ஒளிந்து கொள்கிறது என்பதினை நாம் காணத்தானே போகிறோம்..?"

நந்தினி மூட்டி விட்ட நெருப்பு பற்றியெரிய ஆரம்பித்து விட்டது.. அன்றைய தினமே சின்னப் பழுவேட்டரையாரான காலாந்தகண்டரிடம் அது குறித்து கலந்தாலோசித்து விட்டார் பெரிய பழுவேட்டரையர்.. சோழகுல சக்கரவர்த்தியாகும் வாய்ப்பு தனது மருமகப் பிள்ளைக்கு வருகிறது.. அவனருகில் பட்ட மகிஷியாக அமரப் போகும் வாய்ப்பு தனது புதல்விக்கு வரப் போகிறது என்பதை அறிந்தால் எவர்தான் அதை வேண்டாம் என்று மறுப்பார்கள்..?

"தங்களது சித்தப்படியே நடக்கட்டும் அண்ணா.."

சின்னப் பழுவேட்டரையர் சம்மதம் தெரிவித்து விட்டார்.. பெரிய பழுவேட்டரையர் சடுதியில் சதி வேலைகளில் மும்முரமாக இறங்கி விட்டார்.. அவருடன் நட்புறவு கொண்டிருந்த சிற்றரசர்களுக்கு ரகசிய ஓலை பறந்தது.. அவர்களுள் செல்வந்தரும், அதிமுக்கியமானவருமாக இருந்த 'கடம்பூர் சம்புவரையர்' கடையெழு வள்ளல்களில் ஒருவரான 'வல்வில் ஓரி'யின் வம்சத்தில் வந்தவர்.. அவருக்கு 'கந்தமாறன்' என்ற புதல்வனும்..

'மணிமேகலை' என்ற புதல்வியும் இருந்தார்கள்.. கடம்பூர் சம்புவரையரின் அரண்மனையில் ரகசியக் கூட்டம் நடைபெறப் போவதாக முடிவானது..

"அனைத்தும் தெளிவான திசையிலேயே பயணிக்கின்றன.. ஆனால் அந்தக் கூட்டத்தில் மதுராந்தகன் கலந்து கொண்டு தனது ஒப்புதலைத் தெரிவிக்க வேண்டுமே.. அவனது ஒப்புதல் இல்லையெனில் நமது அனைத்துத் திட்டங்களும் பாழாகி விட நேருமே.. ஏனெனில் செம்பியன் மாதேவியின் புதல்வனான மதுராந்தகன் இறைப் பணியில் நாட்டம் கொண்டு அரசுரிமையை மறுத்து விட்டான் என்று நாடு முழுவதும் சேதி பரவியுள்ளதே.. அதை இல்லையென்று மறுப்பது எங்ஙனம்..? மதுராந்தகன்தான் அதை செயல்படுத்த வேண்டும்.." பழுவேட்டரையர் கவலை கொண்ட போது..

"இதைக் குறித்துக் கவலை கொள்வானேன்..? தாங்கள் கலந்து கொள்ளும் கூட்டத்திற்கு மதுராந்தகனையும் தம்முடன் அழைத்துச் செல்லலாமே.." என்று மிக எளிதாக உரைத்தாள் நந்தினி..

"அது இயலாது தேவி..! பகிரங்கமாக மதுராந்தகன் கடம்பூர் வர இயலாது.. அது பல வினாக்களை தோற்றுவித்து விடும்.. சோழர்களின் ஒற்றர் படையானது திறமை வாய்ந்தது.."

"பகிரங்கமாக எவர் அழைத்துச் செல்ல மொழிந்ததாம்..? தாங்கள் செல்லுமிடமெல்லாம் எனது சிவிகையும் தங்களுடன் வரும் என்பதை இந்த சோழ தேசம் அறியுமே.."

நந்தினி பழுவேட்டரையரை நோக்கி இமைசிமிட்டி நகைத்தாள்.. பழுவேட்டரையரின் விழிகள் விரிந்தன.. அவர் நந்தினியின் உரையில் இருந்த உள்பொருளை கண்டு கொண்டார்..

"தேவி..!" வியப்புடன் அழைத்தார்..

"ஆம் சுவாமி..! மூடப்பட்ட சிவிகையில் எனக்குப் பதிலாக மதுராந்தகனை அழைத்துச் செல்லுங்கள்.."

"இந்த யோசனையே உசிதமானது.."

செய்தியை பகிர்ந்து கொள்ள சின்னப் பழுவேட்டரையரைத் தேடிச் சென்றார் பெரிய பழுவேட்டரையர்.. இடைவிடாமல் அனுதினமும் மற்றவர் அறியாத வகையில் சுந்தரசோழ சக்கரவர்த்தியின் முன்னிலையில் தோன்றி அவரை படுக்கையில் விழச் செய்து விட்டாள் நந்தினி.. அவளை மந்தாகினியின் ஆவி என்று நினைத்து குற்ற உணர்வில் அமிழ்ந்த சுந்தரசோழர்.. குணப்படுத்த முடியாத நோயில் அமிழ்ந்தார்.. அரசாங்க காரியங்களை முன்னிட்டும்.. சுந்தரசோழரின் வைத்தியத்தின் பொருட்டும் சோழர்களின் தலைநகரமாக தஞ்சாவூர் மாறியது.. சுந்தரசோழரும், வானமா தேவியும் தஞ்சையின் அரண்மனைக்கு இடம் பெயர்ந்தனர்.. குந்தவை பழையாறை அரண்மனையிலும்.. தஞ்சை அரண்மனையிலுமாக மாறி மாறி வசித்து வந்தாள்.

நந்தினி பழுவூர் இளைய ராணியாக வருகை தந்த சிலதினங்களிலேயே சுந்தரசோழ சக்கரவர்த்தியின் குடும்பம் திசைக்கொருவராக பிரிந்து நின்றது.. இளவரசன்

அருள்மொழிவர்மன் இலங்கைக்கு படையெடுத்து சென்று விட்டான்.. ஆதித்த கரிகாலனோ நந்தினி வசிக்குமிடத்தில் அவனும் இருந்தால் எங்கே அவனது கட்டுப்பாட்டை மீறி அவளைத் தொட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் காஞ்சி புரத்திலேயே வாசம் செய்ய ஆரம்பித்து விட்டான்.. குந்தவை பழையாறையில் இருக்க.. சுந்தரசோழ சக்கரவர்த்தியும், அவரது பட்ட மகிஷியான வானமா தேவியும் தஞ்சையை தலைநகரமாக்க அங்குள்ள அரண்மனைக்கு சென்று விட்டனர்..

குந்தவை மருகினாள்.. அவள் அஞ்சியதைப் போலவே அனைத்தும் நிகழ்வதில் அவள் மனம் நடுங்கியது.. நோய்வாய்பட்ட சக்கரவர்த்தியின் தேகநிலை தேறாமல் தினத்துக்கு தினம் சீர்குலைந்ததில் அவளது இதயம் பதட்டம் கொண்டது.. அத்தகைய சூழலில் அவளது தமையனும்.. இளவலும் தந்தைக்கு அருகில் இருப்பது அவசியம் என்று அவள் கருதினாள்.. தஞ்சையின் அதிகாரம் மொத்தமும் பழுவேட்டரையர்களின் கரங்களுக்குப் போய் விட்டதை அவளது மதிநுட்பம் கணித்து விட்டது.. சுந்தரசோழரும், வானமாதேவியும் சிறைக் கைதிகள் போல பழுவேட்டரையர்களின் பாதுகாவலில் இருப்பதாக வதந்தி பரவத் தொடங்கியது..

இத்தகைய சூழலில்தான் தனக்கு பணி புரிய நம்பிக்கைக்குரிய ஒருவன் தேவை என்று தனது தமையனான ஆதித்த கரிகாலனுக்கு செய்தி அனுப்பினாள் குந்தவை..

நந்தினியின் வதனத்தைக் காண வேண்டிய கொடிய நிலையில் இருந்து தப்பிக்கும் பொருட்டு காஞ்சியையே தனது வாசஸ்தலமாக மாற்றிக் கொண்ட கரிகாலனுடன் அவனுடைய தாய் வழிப் பாட்டனான திருக்கோவிலூர் மலையமானும், நண்பர்களான பார்த்திபேந்திரனும், வந்திய தேவனும் இருந்தனர்.. காஞ்சி மாநகரத்தை கைப்பற்றியிருந்த ஆதித்த கரிகாலன் அங்கே பொன் மாளிகை ஒன்றைக் கட்டியிருந்தான்..

குந்தவை அனுப்பிய செய்தி கிடைத்ததும் ஆதித்த கரிகாலன்.. அவனுடைய நண்பனான வந்தியதேவனை அழைத்தான்.. வந்தியதேவன் வாணவராய குலத்தைச் சேர்ந்தவன்.. அவனுக்கும் பார்த்திபேந்திரனிற்கும் இடையே பனிப்போர் இருந்து.. ஆதித்த கரிகாலன் தனது அந்தரங்க நண்பனாக வந்தியதேவனை கருதுவதில் பார்த்திபேந்திரன் மலையளவு பொறாமை கொண்டான்..

மாமல்லபுரத்தில் கடலோரமாக அமர்ந்து..

'இந்த ஓலையைக் கொண்டு வரும் வந்தியதேவன் எனது அந்தரங்கத் தோழன்.. நீ வேண்டிய நம்பகமான ஆளாக இவன் என்றும் இருப்பான்..' என்ற ரகசிய ஓலையை குந்தவைக்கும்..

'காஞ்சியில் நான் கட்டியுள்ள பொன் மாளிகையில் ஓய்வெடுக்க சக்கரவர்த்தியும், எனது தாயாரும் வந்து செல்ல வேண்டுகிறேன்..' என்ற வெளிப்படையான ஓலையை சுந்தர சோழ சக்கரவர்த்திக்கும் எழுதிய கரிகாலன் அவற்றை வந்திய தேவனிடம் கொடுத்து அனுப்பி வைத்தான்..

தஞ்சையை நோக்கிச் சென்ற வந்தியதேவனுக்கு வழியில் இருந்த கடம்பூரின் சம்புவரையரின் திருப்புதல்வன் கந்த மாறனைச் சந்தித்து விட்டுச் செல்ல வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது..

அவனும் கடம்பூர் சம்புவரையரின் புதல்வன் கந்த மாறனும் நெருங்கிய தோழமை பூண்டவர்கள்.. கடம்பூர் செல்லும் வழியில் வந்தியதேவன் ஆழ்வார்க்கடியானை சந்தித்தான்.. அவனுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுதில் பழுவேட்டரையரின் பரிவாரம் அவர்களைக் கடந்து சென்றது.. மூடிய சிவிகையின் திரை விலக்கி நோக்கிய நந்தினி வந்திய தேவனின் அருகே இருந்த ஆழ்வார்க்கடியானைக் கண்டதும் 'கிறிச்' சென்ற சப்தத்துடன் திரையை மூடிக் கொண்டாள்..

"அவள் எனது சகோதரி.. பெருமாளின் நாமத்தை உரைத்தபடி இறைப்பணியில் காலம் கழிக்கப் போவதாக உறுதி பூண்டவள் பழுவேட்டரையரை மணந்து பழுவூர் இளையராணியாக மாறி விட்டாள்.." விளக்கம் சொன்னான் ஆழ்வார்க்கடியான்..

'இவ்விளக்கத்தை நான் வினவினேனா..?' என்னும் பாவனையில் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து வைத்த வந்தியதேவன் நெடிய கொட்டாவியை விடுத்து.. ஆழ்வார்க்கடியானின் உரையை நிறுத்தி வைத்தான்..

"தம்பிக்கு எந்த ஊரோ..?" ஆழ்வார்க்கடியான் வினவினான்..

"யாதும் ஊரே.. யாவரும் கேளிர்.." என்றான் வந்தியதேவன்..

"அவ்வாறெனில்.. தம்பி இதற்கு முன்பு இருந்த ஊர் எந்த ஊர்..?" ஆழ்வார்க்கடியான் விடாக்கண்டனாக இருந்தான்..

"வானத்தில் இருந்து குதித்து வந்தேன் ஐயா.." வந்தியதேவன் ஆழ்வார்க்கடியானை விடவும் கொடாக் கண்டனாக இருந்தான்..

"ஆஹா..! அவ்வாறெனில் தம்பி.. பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமாள் மகாவிஷ்ணுவை தரிசனம் செய்திருப்பாயே.." ஆழ்வார்க்கடியான் பரவசம் கொண்டான்..

"ஆம் வைஷ்ணவரே..! அவர் ஓய்வாக மகாலட்சுமியுடன் உரையாடிக் கொண்டிருப்பதால் அடிக்கடி தாம் அவரை அழைத்துக் கூப்பாடு போட வேண்டாமென்று தங்களிடம் இயம்பச் சொன்னார்.." நகைக்காமல் உரைத்தான் வந்தியதேவன்..

"அவ்வாறா தம்பி..?"

அவனை விட நகைக்காமல் வெகு தீவிரமாக அதைக் கேட்டுக் கொண்ட ஆழ்வார்க்கடியான் வந்தியதேவனை உச்சி முதல் பாதாதிகேசம் வரை பார்வையிட்டு வைத்தான்..

அந்தப் பார்வையைக் கண்ணுற்ற வந்தியதேவன்..

"ஏன் ஐயா..? என்னவோ தமது இல்லத்தில் எமக்குத் தோதான பெண்ணிருப்பதைப் போல அல்லவா பார்வையிட்டு வைக்கின்றீர்..? தாங்கள் என்ன எனக்குப் பெண் கொடுக்க விழையும் மைத்துனன் முறையைச் சேர்ந்தவரோ..?" என்று வினவி வைத்தான்..

"எம் இல்லத்தில் பெண் ஏது தம்பி..? இருந்த ஒரு பெண்ணையும் பழுவேட்டரையர் கடத்திக் கொண்டு போய் அவருடைய இளையராணியாக ஆக்கிக் கொண்டு விட்டாரே.. அவள் இருந்திருந்தால் தமக்குத் தோதாக இருந்திருப்பாள்.." சோகமாக வதனத்தை வைத்துக் கொண்டான் ஆழ்வார்க்கடியான்..

"தாம் வில்லங்கம் பிடித்த வைஷ்ணவர் என்று யாம் கணக்கிட்டது சரிதான்.. நானுண்டு.. என் வேலையுண்டு என்று வழியோடு செல்கிறவனை பழுவேட்டரையரிடம் கோர்த்து விட முயல்கின்றீரே.. தம் அருகில் நின்று உரையாடுவது கூட ஆபத்தான ஒன்றுதான்.." வந்தியதேவன் விலகி நடந்தான்..

"பொறு தம்பி.." ஆழ்வார்க்கடியான் தொடுத்து வந்தான்..

"என்ன ஐயா.. உம்முடன் பெருத்த தொந்தரவாக போய் விட்டது.. எதற்காக என்னைத் தடுத்து நிறுத்துகிறீர்..?" வந்தியதேவன் எரிச்சலுற்றான்..

"கடம்பூருக்கு செல்வது போல உள்ளதே தம்பி..?"

"எவரை உரைக்கின்றீர்..?"

"தம்மைத்தான்.."

"நான் எந்த ஊருக்குச் சென்றால் தமக்கு என்ன..?"

"கோபம் கொள்ள வேண்டாம் தம்பி.. கடம்பூரில் தமக்குத் தெரிந்தவர் எவரேனும் உள்ளனரா..?"

"ஒருவரையும் அறியேன்.."

"அறியாமல் எவ்வாறு அவ்வூருக்குச் செல்கின்றாய்..?"

"எம்மை வினவுவது இருக்கட்டும்.. தமக்கு அவ்வூரில் தெரிந்தவர் உள்ளனரா..?"

"எவரும் இல்லை தம்பி.."

"பின் என்ன அலுவலுக்காக அவ்வூருக்குத் தாம் செல்கின்றீர்..?"

வந்தியதேவன் மடக்கியதில் ஆழ்வார்க்கடியான் அயரவில்லை..

"தம்முடன் செல்லலாம் என்ற எண்ணம் கொண்டேன் தம்பி.."

"எதற்காக வைஷ்ணவரே..? எம்முடன் சேர்ந்து தாமும் எனது மாமனாரின் இல்லத்தில் விருந்துண்ணலாம் என்றா ஒட்டிக் கொள்ள விழைகின்றீர்..? கவனியுங்கள் வைஷ்ணவரே..! கடம்பூர் ஒன்றும் எனது மாமனாரின் ஊரல்ல.. நான் ஒரு வழிப்போக்கன்..! தேசாந்தரி..! எதிர் படும் ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதில் விருப்பம் உள்ளவன்.. இவ்வூருக்கும் அவ்விதமே வந்துள்ளேன்.."

"அடடா..!"

"எதற்கு இந்த 'அடடா..'?"

"தம்பியும் என்னைப் போலவே தேசாந்திரிதானா..?"

"ஆக.. தாமும் தேசாந்திரி வேடம் புனைந்தாகி விட்டது..?"

"அட, மெய்யாலுமே நான் தேசாந்திரிதான் தம்பி.."

"அதற்கு..?"

"தேசாந்திரிக்கு தேசாந்திரிதான் உறவு..!"

"அவ்வாறு எவர் சொன்னது..?"

"நான்தான்.."

"உமது உறவை நீரே வைத்துக் கொள்ளும்.. நான் வீர சைவ குல தேசாந்திரி..! வைஷ்ணவருக்கும் எனக்கும் ஆகவே ஆகாது.."

வந்தியதேவன் ஆழ்வார்க்கடியானை கழற்றி விட்டு நகர முனைந்தான்..

"பொறு அப்பா..! விரைவதிலேயே குறியாக இருக்கிறாயே.." அப்போதும் ஆழ்வார்க்கடியான் அவனை தடுத்து நிறுத்தினான்..

"அதைப்பற்றி உமக்கென்ன..?" வந்தியதேவன் முறைத்தான்..

"எமக்கொன்றும் இல்லை.. ஒருவேளை கடம்பூரின் சம்புவரையர் மாளிகையில் பழுவேட்டரையரின் இளைய ராணியை நீ சந்திக்க நேர்ந்தால் திருமலை என்ற அவளுடைய சகோதரன் அவளை கண்ணன் வழிபாட்டிற்கு அழைத்தாக கூறிவிடு.." என்றான் ஆழ்வார்க்கடியான்..

"ஏன் ஐயா..? நான் தமக்கு என்ன கெடுதல் புரிந்தேன்..? பெரிய பழுவேட்டரையரிடம் தர்ம அடியைப் பெற்றுத் தருவதிலேயே குறியாய் உள்ளீரே.. பழுவூர் இளையராணியிடம் தூது உரைக்க உமக்கு நான்தான் அகப்பட்டடேனா..? அதற்கு வேறு ஆளைப் பாரும்.."

வந்தியதேவன் ஆழ்வார்கடியானிடமிருந்து கழன்று கொண்டு தனது சிநேகிதனான கந்தமாறனைத் தேடிச் சென்றான்.. அன்றைய இரவில் கடம்பூரின் சம்புவரையர் மாளிகையில் விருந்துண்ட பின்னர் அவனைத் தனித்து துயில வைத்து விட்டு கந்தமாறன் சென்ற சற்றுப் பொழுதில் உறக்கம் கலைந்து எழுந்து சென்ற வந்திய தேவன் அங்கு நடந்த சதி ஆலோசனைக் கூட்டத்தைக் கவனித்து விட்டான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 18

## *கண்முன்னே தோன்றும் காட்சி.. கனவா..? இல்லை.. நனவா..?*

ஊரில்.. உலகத்தில் உள்ள மற்ற பெண்களைப் போல தமது பெண்ணும் இளமைப் பருவத்துக்கேயுரிய துடிப்போடும், கலகலப்போடும் இல்லையே என்று கவலைப் பட்டாள் அனுராதா..

அதைப்பற்றி பிரதாப்பிடம் அவள் பேச முனைந்தாள்

"என் பெண் வித்தியாசமானவடி.." என்று அவர் கொண்டாடி வைத்தார்..

"என்ன கழுதைக்கு வித்தியாசமா இருந்து தொலைக்கனும்..? ஊரைப்போல நாட்டைப் போல இருந்து தொலைச்சா ஆகாதா..?" அனுராதாவுக்கு கோபம் கோபமாக வந்தது..

ஒரு டிவி உண்டா..? சினிமா உண்டா..? ஊர்சுற்றல் உண்டா..? தோழிகளுடன் வம்பு பேசுதல் உண்டா..? லேப்டாப்பை நோண்டி பேஸ்புக்கே கதியென்று இருத்தல் உண்டா...? முகமறியாத தோழமைகளுடன் மணிக் கணக்கில் சாட் பண்ணுவது உண்டா..? செல்போனை காதோடு பசை போட்டு ஒட்டிக் கொண்டு இருபத்தி நான்கு மணிநேரமும் யாரோ ஒருவருடன் பேசுதல் உண்டா..? அதிலிருக்கும் மெஸேஜ் பகுதியை தூங்க விடாமல் தொந்தரவு செய்தல் உண்டா..?

ஊஹீம்.. இவை எதுவும் இல்லாமல்.. சதா.. மாமல்லபுர சிற்பங்களும்.. கடலோரமுமாக காலம் கழிக்கும் விசித்திர குணம் வாய்ந்த மகளைப் பெற்றிருப்பதில் நொந்து போனாள் அனுராதா..

"அக்கம் பக்கத்தில இருக்கிற டீன்-ஏஜ் பொண்ணுகள்ளாம் உன்னைப் போலவா இருந்து வைக்குதுக..?" மகளிடம் பொருமினாள்..

"அறிவு கெட்டவளே..! அதுக கெட்டழியறதைப் போல என் மகளையும் இருக்கச் சொல்றியா..?" கடிந்து கொண்டார் பிரதாப்..

மகளின் வித்தியாசமான தன்மையில் அவர் பெருமை கொண்டிருப்பது அனுராதாவின் தலைவேதனையை அதிகரித்தது..

"ம்ஹீம்...! இப்படியாப்பட்ட பொண்ணுக்கு இப்படியாப்பட்ட அப்பா.." என்று தலையில் அடித்துக் கொண்டாள்..

"நாங்கள்ளாம் சரியாத்தான் இருக்கோம்.. நீ முதல்ல உன் வம்பு மடத்தில அக்கப்போர் பேசறதை குறை.." என்றார் பிரதாப்..

"குறைச்சுட்டு.. நானும் உங்க மக கூட ஜோடி போட்டுக்கிட்டு கடலோரமா அலையட்டுமா..?" இடக்காக கேட்டு வைத்தாள் அனுராதா..

"அதுக்கெல்லாம் ஓர் மனசு வேணும்டி.."

"என்ன மனசு..?"

"ரெக்கை கட்டி பறக்கற மனசு..!"

"அதாவது பாரதியாரோட கவிதையில வர்றதைப் போல விட்டுச் சிறகடிக்கனும்னு சொல்கிறீங்க..?"

"அட..! உனக்கு பாரதியாரோட கவிதை கூடத் தெரியுமா அனு..?"

"ஏன் தெரியாது..? அவர்தானே இந்தப் பாட்டைப் பாடினவர்..?"

"எதைடி சொல்ற..?"

பிரதாப் என்னவோ.. 'பாரதியார்' சினிமாவில் வரும் குயிலப் போல பொண்ணு ஒன்னுன்னு அனுராதா பாடி வைப்பாள் என்ற நினைவில்தான் கேட்டு வைத்தார் அவளோ..

*"மாட்டை வசக்கித்..*
*தொழுவினில் மாட்டும்*
*வழக்கத்தைக் கொண்ட வந்தே..*
*வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்..*
*அதை வெட்டி விட்டோமென்று கும்மியடி.."*

என்று பாடி வைத்தாள்..

'பாருடா.. இவ கூட பாரதியார் கவிதை சொல்கிறா..'

பிரதாப் அனுரதாவை ஏற இறங்க பார்த்து வைத்து விட்டு..

"அருமையான பாட்டு.." என்று சொல்லி வைத்தார்.

"இதுக்கே பாராட்ட ஆரம்பிச்சா எப்படி..? இன்னும் இருக்கு கேளுங்க.."

அனுராதா கிடைத்தது வாய்ப்பு என்று இன்னும் கொஞ்சம் கொட்டி முழக்கினாள்..

*"ஏட்டையும் பெண்கள் தொடுவது..*
*தீமையென்றெண்ணியிருந்தவர்*
*மாண்டுவிட்டார்*
*வீட்டுக்குள்ளே பெண்ணை*

*பூட்டி வைப்போமென்ற*
*மிந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்..."*

அனுராதாவின் விழிகள் ஜ்வலித்த ஜ்வலிப்பை தாங்க மாட்டாத பிரதாப்..

"உன்னைப் போய் வீட்டுக்குள்ள பூட்டி வைக்க முடியுமாடி..? யாரு நீ..? சுனாமியாச்சே.. கதவை உடைச்சு எறிஞ்சுற மாட்ட..? வீணாய் புதுக்கதவை போடற வேலையை நான் ஏண்டி பார்க்கப் போறேன்..?" என்று சொல்லி விட்டார்..

அவ்வளவுதான்.. அனுராதா அவரை பிலுபிலு வென்று பிடித்து உலுக்கி எடுத்து துவைத்து தோரணம் கட்டி விட்டாள்..

"நான் சுனாமியா..? உங்க அம்மா சுனாமி..! அக்கா சுனாமி..! ஏன் அண்ணன் பெண்டாட்டியும் சுனாமி..! உங்க பாட்டி சுனாமி..! பூட்டி சுனாமி..! உங்க பரம்பரையே சுனாமி..! நீங்க என்னைப் பார்த்து சுனாமி பட்டம் கொடுக்கறிங்களா..?"

அவள் போட்ட போட்டிற்கு சுனாமியே தேவலை என்று பிரதாப்புக்குத் தோன்றி விட்டது.. தெரியாமல் வாய்விட்டு வாங்கிக் கட்டிக் கொள்வது ஒருரகம்.. தெரிந்தே வாய்விட்டு வாங்கிக் கட்டிக் கொள்வது பிரதாப் போன்றோரின் ரகம்..



# 19

## உனது நினைவு துரத்தும் போது.. உறக்கம் என்பது எனக்கு ஏது..?

மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் இடிந்து விழுந்து பாழடைந்த நிலையில் உள்ள மகாபலிபுரக் கடற்கரையில் அலைகள் பாதம் நனைக்க, கடலோர பாறையில் அமர்ந்திருந்தான் கரிகாலன்..

பல்லவர்களின் தலைநகரமாக இருந்த காஞ்சி தற்போது அவன் வசமாகி இருந்தது.. வீதிகளிலும், துறைமுகத்திலும் முன்போல அத்தனை ஜனக்கூட்ட மில்லை.. வர்த்தகப் பெருக்கமும் அவ்வளவாக இல்லை.. பெரிய.. பெரிய பண்டகசாலைகள் இல்லை.. ஏற்றுமதி, இறக்குமதி பண்டங்க்ள் குவிந்திருக்கவில்லை.. ஆழமற்ற கடற்பகுதியில் சிறிய படகுகளும், ஓடங்களும் தான் வரக்கூடும்.. நாவாய்களும், மரக்கலங்களும் சற்றுத் தூரத்தில் கடலிலேதான் நிற்க வேண்டும்.. படகுகளில் வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் சென்று அந்த மரக்கலங்களில் சேர்ப்பிக்க வேண்டும்..

கடலோரமாக குன்றுகளில் இருந்து கற்கோவில் களைப் பெயர்த்துக் கொண்டு வந்து கட்டப்பட்ட கற்கோவில் இருந்தது.. நகரத்தின் நடுவே மூவுலகையும் அளந்த விண்ணகரப் பெருமாளின் கோவில் காட்சி

தந்தது.. சைவத்தையும், வைணவத்தையும் இருகண்களாக பாவித்த பரமேசுவர பல்லவன்.. காஞ்சியின் ஏகாம்பரேசுவர ஆலயத்தில் ஈசனை வழிபட்டதைப் போல.. மகாபலி புரத்தின் விண்ணகரப் பெருமாளையும் வழிபட்டான் என்பதை உணர்த்தும் தலம் அது.. திருமங்கை ஆழ்வார் அந்தத் தலத்துக்கு வந்து தலசயனப் பெருமாளை தரிசித்து பக்தியுடன் பாடியிருக்கிறார்..

கலங்கள் இயங்கும் கடல் மல்லை, தனது முந்தய சிறப்புக்களை பல்லவர் காலத்துடன் இழந்து வெறுமையாக காட்சியளித்தது..

நரசிம்ம பல்லவனின் காலத்தில் உருவாகப்பட்ட ஐந்து ரதக் கோவில்கள் கம்பீரமாய் காட்சியளித்தன.. அவனது பேரன் பரமேசுவர பல்லவன் கட்டி வைத்த சிற்பக் கோவில்கள் எழில் ததும்ப நின்று கொண்டிருந்தன.. பரமேசுவரனின் பேரனாகப் பட்ட இரண்டாம் நரசிம்மன் என்னும் சிறப்புப் பெயரை உடைய ராஜசிம்மன் கட்டிய கணேச ரதத்தின் மீதும், கடற்கரை கோவில்களின் மீதும் ஆதித்த கரிகாலனின் பார்வை படிந்தது..

மாலை மயங்கும் அவ்வேளையில் அந்தக் கடற்கரை கோவில்களுக்கு இடையே நந்தினியின் எழில் ரூபம் அவன் கண்களுக்கு புலப்பட்டது..

'எவர் அது..? நந்தினியா..? எனைத் தேடி மல்லைக்கே அவள் வருகை தந்து விட்டாளா..?'

ஆவலுடன் அவன் எழுந்து கொள்ள முனைந்தான்.. அவன் கண்டு கொண்டிருந்தபோதே நந்தினியின் உருவம் மறைந்து விட்டது..

'பிரமை..!'

ஆதித்த கரிகாலன் பித்துப் பிடித்தவனைப் போல ஆனான்.. இரவும் பகலும் அவனைத் துன்புறுத்தும் அவளின் மோக அலைகளிலிருந்து தப்பிக்கும் மார்க்கம் புலப்படாமல் தவித்தான்.. இமை மூடினால் துயில் வர வேண்டும்.. எங்கே..? மற்றவர்களுக்கு வேண்டுமானால் இந்நியதி பொருந்தி வரக்கூடும்.. ஆதித்த கரிகாலனின் வாழ்வில்தான் நியதிகள் இடம் மாறி கண்ணாமூச்சி விளையாட்டை விளையாடுகின்றனே.. அவன் இமை மூடினால் துயிலோடு சொப்பனமும் இணை சேர்ந்து வருகை தந்து தொலைக்கின்றதே.. சொப்பனத்தில் நந்தினி வருகிறாள்.. அவன்

'உனக்கு யாது தேவை..?' என்கிறான்.. அவளோ..

'தாங்கள்தான் தேவை..' என்று அவன் மார்பில் சாய்கிறாள்..

'என் தேகம் உனக்கானது.. எடுத்துக் கொள் நீதான் தயக்கம் காட்டுகிறாய்...' என்று ஆதித்த கரிகாலன் மூர்க்கத் தனத்துடன் அவளைக் கட்டியணைக்கிறான்..

அவளது அதரங்களோடு, அவனது அதரங்கள் பொருந்திய இன்பத்தை மெய் போல அவன் தேகம் உணரும் போது துயில் கலைந்து விழிப்பு வந்து விட்டது.. கண்டது சொப்பனம் என்பதில் அவன் கொலைவெறி கொண்டான்..

'அடி வஞ்சகி..! உன்னைக் காதலித்த பாவத்திற்காக என்னை உயிருடன் வதைக்கிறாயே.. ஒன்று நீ சாக வேண்டும்.. இல்லையென்றால் நான் சாக வேண்டும்..'

வெறி கொள்ளும் அவன் மனதில் உலகையே அழித்து துவம்சம் பண்ணிவிடும் ஆவேசம் மிகுந்தது..

"வருகை தருவேன் நந்தினி..! ஓர்தினம் வரும்.. அத்தினத்தில் உன்னைக் கொன்று விட்டு நானும் சாவேன்.. அதுவரை என் மனதில் நிம்மதி வருகை தராது.. பாதகி..! எனது நிம்மதியைப் பறிப்பதற்காகவே பிறப்பெடுத்தாயா..?"

உரத்த குரலில் ஆதித்த கரிகாலன் மொழிந்ததை செவி மடுத்த வண்ணம் அங்கு வந்த பார்த்திபேந்திரன்.. ஆதரவுடன் தோழனின் வதனம் நோக்கினான்..

"அமைதி கொள்ளுங்கள் இளவரசே..! தாங்கள் சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர்..! அவருக்குப் பின்னால் சோழ சாம்ராஜ்யத்தை ஆளப்போகும் பட்டத்து இளவரசர்..! பட்டாபிஷேகம் செய்யப்பட்டவர்.. 'பரகேசரி' பட்டம் பெற்றவர்.. கல்வெட்டுக்களில் தங்களின் பெயரைப் பொறித்து சாசனம் அளிக்கும் உரிமை பெற்றவர்.. இந்தக் காஞ்சியை வென்றவர்.. வட திசையில் படையெடுத்துச் சென்று நாடுகளை வெல்லும் குறிக்கோள் கொண்டவர்.. அதன் பொருட்டு படை திரட்டிக் கொண்டிருப்பவர்.. இத்தகைய பெருமைகள் பல கொண்ட தங்களின் மனதை ஓர் சாமானியப் பெண் சலனப் படுத்துவதா..? அலையடிக்கும் ஆழ்மனதை அமைதிப் படுத்துங்கள்.."

"என்னால் அது இயலாது பார்த்திபேந்திரா..! அவள் சாமானியப் பெண்ணல்ல.. நானும் எவ்வெவ்வாறோ முயற்சித்துப் பார்த்து விட்டேன்.. அவளை மறந்து என்னால் வாழ இயலவில்லை.."

"சோழர் குலத்தின் பட்டத்து இளவரசரா இதை உரைப்பது..?"

"பட்டத்து இளவரசனும் மனிதப் பிறவிதானே..? அவனுக்கும் மனம் உண்டு.. காதல் போன்ற உணர்வுகள் உண்டு.."

துயரம் தோய்ந்த ஆதித்த கரிகாலனின் குரலில் பார்த்திபேந்திரன் சங்கடம் கொண்டான்.. அவன் பல்லவர் குலத்தில் கிளைவழி தோன்றியவன்.. ஆதித்த கரிகாலனின் அருகாமையை விரும்புகிறவன்.. அதை பகிர்ந்து கொள்ள வந்தியதேவன் இல்லாத அந்த தினங்களில் ஆதித்த கரிகாலனுடனான அவனது நட்பை வலுப்படுத்த முயன்றான்..

மாமல்லபுரத்தின் கடலோர பாறையில் அமர்ந்திருந்த கரிகாலனின் முழங்காலை நனைத்துச் சென்றது கடலலை.. கடல்நீர் திவலைகள் அவன் மீது சிதறியதில் கொதித்துக் கொண்டிருந்த அவனது தேகமும், மனமும் குளிர்ந்து விடவில்லை..

"உன்னை எங்கெல்லாம் தேடுவது..?" என்றபடி அங்கே வந்தார் திருக்கோவிலூர் மலையமான்..

"இளவரசர் வெகு நாழிகைகளாக இங்குதான் அமர்ந்திருக்கிறார் பாட்டா..! தாங்கள் இளவரசர் இருக்குமிடத்தை விட்டு அவரில்லாத இடங்களில் தேடியிருக்கிறீர்கள்.." பார்த்திபேந்திர பல்லவன் சூழ்நிலையை இலகுவாக்க முயன்றான்..

"அதைக் கூறு.." மலையமான் எதிரிலிருந்த பாறையில் அமர்ந்து கொண்டார்..

அவரின் பார்வை கடலோரச் சிற்பக் கோவில்களின் மீது படிந்தது..

"பார்த்திபா..! உன் முன்னோர்களில் பரமேசுவர பல்லவன் வாள் முனையை கூர்மையாக்கி யுத்தகளம் புகுவதை விடுத்து.. கலையே கதியென இந்தக் கடற்கரை கோவில்களில் வாசம் செய்தான்.. அதன் பலனாக நாட்டை இழந்தான்.. அவன் மட்டும் கலைகளை விடுத்து யுத்தகளங்களை நேசித்திருந்தால் இந்நாழிகையில் பல்லவதேசம் சோழர்களின் சாம்ராஜ்யமாக ஆகியிருக்காது.. அவனுடைய குலத் தோன்றல்களிடமே தங்கியிருக்கும்.." என்று கூறினார்..

"தங்களின் கூற்று மெய்யானதே பாட்டா..! ஆனால்.. காலங்கள் கடந்தும் இந்த கடல்மல்லையின் சிற்பக் கோவில்கள் பல்லவர்களின் நாமம் உரைத்து நிலைத்து நிற்குமே.. யுத்தகளங்கள் அவற்றை செய்திட இயலுமா..?" என்று மொழிந்தான் பார்த்திபேந்திரன்..

"நன்றாகவே உரைத்தாய்.." அவனை பாராட்டிய மலையமான் பேரனின் வதனம் கண்டு விட்டு..

"என்ன சிந்தனை ஆதித்தா..?" என்று வினவினார்..

"சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசன் என்ற நாமம் மட்டும்தான் எனக்குச் சொந்தமாக உள்ளது பாட்டா..! அதிகாரத்தை அந்தப் பழுவேட்டரையர்கள்

கரத்தில் வைத்துள்ளனர்.. அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் எனது தந்தை இருப்பது போதாதென்று.. என்னையும் என் இளவள் அருள்மொழிவர்மனையும் கட்டுப்படுத்த முனைந்துள்ளனர்.. ஈழத்துக்கு படையெடுத்துப் போன அருள்மொழிவர்மனின் படைகளுக்கு தொண்டை மண்டலத்திலிருந்து உணவுப் பொருள்களை அனுப்ப எனக்கே உத்தரவு பிறப்பித்துள்ளனர்.. தஞ்சையின் நெற்களஞ்சியம் என்ன ஆனது..? ராஜ்யத்தின் பொற்களஞ்சியம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.. பொக்கிச அதிகாரி.. தஞ்சை கோட்டையின் காவலர் படை தளபதி போன்ற அதிமுக்கிய பொறுப்புக்கள் அவர்களின் வசத்தில் உள்ளன.. வடதிசைக்கு நான் படையெடுத்துச் செல்ல உத்தேசித்துள்ளேன்.. அதற்கு பெரும்படை தேவை.. பழுவேட்டரையர் என்னை செயல்பட விடாமல் தடங்கல் செய்கின்றனரே பாட்டா.. 'தஞ்சை சோற்றுக்கு உடைத்து..' என்ற பெருமை வாய்ந்த நமது சோழ தேசத்திலிருந்து ஈழத்தில் இருக்கும் எனது இளவல் அருள்மொழி வர்மனின் படைக்கு போதிய உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.. எவர் உணவை எவர் தடுப்பது..? இப்படியே காலம் செல்வது சோழதேசத்தின் எதிர்கால நலனுக்கு உகந்ததல்ல பாட்டா..!"

ஆயிரம் வருடப் பழங்குடியைச் சேர்ந்த மலையமான் ஆதித்த கரிகாலனின் கோபத்தில் நெடும் மூச்சை விட்டார்.. அவரது வதனத்தில் சினம் தாண்டவமாடியது.. அவரது செல்லப் புதல்வியும், சுந்தரசோழ சக்கரவர்த்தியின்

இரண்டாவது பத்தினியும்.. சோழ தேசத்தின் சக்கரவர்த்தினியுமனா 'வானமாதேவி' ஈன்றெடுத்த அவளின் மூத்த முதல்வனை மிகுந்த பிரியத்துடன் நோக்கினார்..

"ஒரு பட்டத்து இளவரசனுக்குரிய ஆதங்கத்துடன் மொழிந்தாய் கரிகாலா..! அனைத்தையும் நான் அறிவேன்.. பழுவேட்டரையர்களின் மனதில் சதித்திட்டம் உருவாகி விட்டது.. அவர்கள் சோழ சாம்ராஜ்யத்துக்கு எதிரான சூழ்ச்சி வலைகளை பின்ன ஆரம்பித்து விட்டார்கள்.. கடம்பூர் சம்புவராயர் மாளிகையில் 'அர்த்த ஜாமக் கூட்டம்' ஒன்று நடந்ததை நீ அறிவாயா..?"

"அறிவேன் பாட்டா..! என்ன கூட்டம் அது..? எதன் பொருட்டு அது நடந்தது..? கலந்து கொண்டவர்கள் எவர்.. எவர்..?"

"பெரிய பழுவேட்டரையர், தென்னவன் மழவராயர், குன்றத்தூர் கிழார், வணங்காமுடி முனையரையர், இரட்டைக்குடை ராஜகாளியார், அஞ்சாத சிங்க முத்தரையர், மதுராந்தகன் என்று மற்றும் பலர் ஒன்று சேர்ந்து.. சோழசாம்ராஜத்தின் அரியணையில் சக்கரவர்த்திக்கு அடுத்து எவர் ஏறி அமர்வது என்பதைக் குறித்து சதித்திட்டம் தீட்டினார்களாம்.."

"இதுபற்றி தமக்கு எவ்விதம் தெரிந்தது பாட்டா..?"

"அக் கூடத்தில் கலந்து கொண்டு.. திரும்பி வந்த கிழார் ஒருவனை கடத்தி மடக்கி.. என் கட்டுக் காவலில் வைத்து விசாரணை புரிந்தேன்.."

வயோதிகத்திலும் சிங்கம் போல சிலிர்த்து செயல் புரிந்த தனது தாய்வழிப் பாட்டனாரை பெருமிதத்துடன் நோக்கினான் ஆதித்த கரிகாலன்.. அவனை வாஞ்சையுடன் நோக்கினார் மலையமான்..

"கடந்த காலத்தில் அடங்கிக் கிடந்த கடம்பூர் சம்புவரையனிடம் தற்போது செல்வம் கொழிக்கிறது கரிகாலா..! அந்தச் செருக்கில் அவன் சோழதேசத்தின் அரியணைக்குரியர் எவர் என்பதை நிர்ணயம் செய்யும் ஆணவத்தில் இறங்கியுள்ளான்.. பழுவேட்டரையர்களுக்கு இவன் பெரும்பக்கபலம்.. இவனை பழுவேட்டரையர் களிடமிருந்து பிரித்து விட்டால்.. இவன் பக்கமிருக்கும் மற்ற குறுநில மன்னர்களும் பழுவேட்டரையர்களிடமிருந்து பிரிந்து விடுவார்கள்.."

"அவன் எக்கேடோ கெட்டு ஒழியட்டும் பாட்டா.. எனக்கு எவர் உதவியும் தேவையில்லை.. எனது கவலையெல்லாம் எனது தந்தையைப் பற்றியதே.. பழையாறை அரண்மனையில் அவர் பத்திரமாக இருந்தார்.. அவரை தஞ்சைக்கு கடத்திச் சென்று அரண்மனை சிறையில்.. வைத்துள்ளனர்.. படையெடுத்து சென்று தந்தையை சிறை மீட்கலாம் என்றால், என் தந்தைக்கு எதிராக நான் போர் தொடுத்து விட்டேன் என்று வதந்தியை பரப்பி விடுவார்கள்.. தந்தைக்காக அந்த அவப்பெயரைக் கூட ஏற்றுக் கொள்ளலாம்.. அத்துடன் விட்டு வைக்காமல் பெற்ற மகன் தமக்கெதிராக படையெடுத்து வந்து விட்டானே என்ற அதிர்ச்சியில் எமது தந்தை இறந்து

போனதாக பழியை என்மீது தூக்கிப் போட்டுவிட்டு என் தந்தையை கொன்று விடுவார்கள்.."

"எத்தகைய சூழ்ச்சி வலை..!"

மலையமான் துயரம் கொண்டார்.. மல்லையின் இல்லங்களில் தீபம் ஏற்றப்பட்டிருந்தன.. கோவில்களில் அர்த்தஜாம பூஜை ஆரம்பமாகியிருந்தது.. தீவர்த்திகளின் ஒலியில் நடக்கும் கூத்தைக் கண்டாலாவது மனம் ஆறும் என்று மலையமான் எழுந்து செல்ல எண்ணம் கொண்டார்..

"எனக்கென்னவோ.. இத்தகைய சுழலில் நீ தஞ்சையில் இருத்தலே உசிதமென்று தோன்றுகிறது.."

ஆதித்த கரிகாலன் பாட்டனாரின் உரைக்குப் பதில் சொல்லாமல் மௌனித்தான்.. அவர் கூத்துப் பார்க்கச் சென்று விட்டார்..

"பாட்டனின் ஆலோசனை உகந்தது என்றே எனக்கும் தோன்றுகிறது இளவரசே.." என்றான் பார்த்திபேந்திரன்..

"எவ்வாறு நான் அங்கு செல்ல இயலும் பார்த்திபா..? அங்கேதான் அந்த ராட்சசி வசிக்கிறாளே.."

"இளவரசே..!"

"அவளிருக்கும் இடத்தில் இருந்தால் நான்.. நானாக இருக்க மாட்டேன் பார்த்திபா..! என்மீது எனக்கு நம்பிக்கை இல்லை.. நிச்சயமாக அவளை நெருங்கி விடுவேன்.. ஒன்று கொன்று விடுவேன்.. இல்லாவிடில் அவளை குண்டுக்கட்டாகக் கட்டி என் புரவியில் தூக்கிச் சென்று

விடுவேன்.. இவை இரண்டையும் தவிர்க்க வேண்டு மென்றால்.. அவளிருக்கும் இடத்திற்கு நான் செல்லவே கூடாது.."

ஆதித்த கரிகாலனின் சிவந்த விழிகளில் பார்த்தி பேந்திரன் வாயடைத்துப் போனான்.. அதே நாழிகையில் தஞ்சையில் பழுவேட்டரையரின் அரண்மனையில் லதா மண்டபத்தின் ஹம்சதூளிகா மஞ்சத்தில் சாய்ந்திருந்த நந்தினி ஆதித்த கரிகாலனின் நினைவில் கண்ணீரை உகுத்துக் கொண்டிருந்தாள்..

'நான் இருக்குமிடத்திற்கு அவன் வரமாட்டான்.. காஞ்சியை விட்டு நகர யத்தனிக்க மாட்டான்.. தஞ்சையில் பாதம் பதிக்க மாட்டான்.. நோய்வாய்பட்ட தந்தையைக் காணவும் எண்ண மாட்டான்.. என்னே கொடுமை இது..! ஆதித்தா..! உன்னை உயிரோடு நான் வதைக்கும் இந்நிலைக்கு என்னை ஆளாக்கி விட்டாயே.. வீரபாண்டியனின் உயிருக்காக உன்னிடம் நான் மன்றாடிய போது.. ஓர்நொடி... ஒரேயொரு நொடி மட்டும் நான் என்ன சொல்ல வருகிறேன் என்று நீ செவி மடுத்திருந்தால் இந்நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்குமா..?'

பஞ்சணையின் இதம் அவளது மேனியை அணுகவில்லை.. முள்ளாக குத்திய ஹம்சதூளிகா மஞ்சத்திலிருந்து எழுந்து ஆதித்த கரிகாலன் அன்று நின்றிருந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தாள்.. அவள் விழிகள் பனித்தன.. இதயம் அன்று சொன்ன அவனது வார்த்தைகளை நினைவுகூர்ந்து நடுங்கியது..

'உன்னைக் கொன்று விட்டு நானும் சாவேண்டி..'

என்ன ஒரு ஆவேசக்காதல்..! அத்தகைய காதல் வாய்த்திருந்தும் அதை அனுபவிக்க முடியாத வறியவளாக தன்னை ஆக்கிவிட்ட விதியின் கொடுமையை எண்ணி மனம் நைந்தாள் நந்தினி...

ஆதித்த கரிகாலனின் நினைவில் அவள் மனம் இளகும் போதெல்லாம்... வருகை தந்து விடும் வீரபாண்டியனின் தலை.. அப்போதும் அவள் முன் வந்து பேயாட்டம் ஆடி விட்டத்தில் சுழன்றது..

“ஐயோ..” நந்தினி அலறி கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள்..

“நான் பகை முடிப்பேன் தந்தையே..! என்ன விட்டு விலகிச் செல்லுங்கள்..”

துடித்துக் கதறியவளின் மனக் கண்ணில் அவள் மன்றாடி யாசித்தும் ஆதித்த கரிகாலன் உடைவாளை ஓங்கி வீரபாண்டியனின் தலையை வெட்டிய காட்சி வந்து நின்றது.. இரவும் பகலும் வீரபாண்டியனின் குருதிபடிந்த தலை அவளைச் சுற்றி வந்து பழிவாங்கச் சொன்னது..

### ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



## 19

### வாழ்க்கை வகுக்கும் கணக்குகளை.. வாழ்ந்து பார்த்து அறிந்தவர் யார்..?

விடியாத கருக்கல்கொண்ட அந்த வேளையில் பட்சிகளின் கூச்சலில் கண் விழித்தாள் யாமினி.. இருளிலும் அவள் உணர்ந்த வெளிச்சத்தில் எழுந்து ஜன்னலோரமாக சென்று தோட்டத்தை ரசித்தாள்.. பனி படர்ந்த புல்வெளியும், செடிகளின் இலைகளும் அவளை 'வா'வென்று அழைத்ததில் அறையை விட்டு வெளியே வந்து ஹாலைக் கடந்து வாசல் கதவை விரியத் திறந்து தோட்டத்தின் படிகளில் இறங்கினாள்.. இருளின் போர்வையில் பனிபடர்ந்த செடிகளையும், புல்வெளியையும் தேடி நடந்தாள்..

குளிர் காற்றோடு கடல்காற்றும் இணைந்து வந்ததில் அவளது உடலில் புத்துணர்ச்சி பரவியது.. செடிகளில் பூத்திருந்த மலர்களை வருடிப் பார்த்தவள்.. இருள் வெளியில் புல்வெளியில் ஓடிய முயல் குட்டியுடன் ஓடி விளையாடினாள்.. பொழுது நகர்ந்தது.. லேசான வெளிச்சம் பரவியது..

"குக்கூ.." என்று கூவிய குயிலுக்கு இசைப்பாட்டாய்..

"குக்கூ.." என்று பதிலுக்கு கூவினாள் யாமினி..

இங்கே இவள் குயிலுடன் இசைப்பாட்டு படித்துக் கொண்டிருந்தபோது.. "ஹாவ்" என்ற கொட்டாவியுடன் கண் விழித்தாள் அனுராதா.. ஜன்னல் வழி தெரிந்த வெளிச்சகீற்றில் எழுந்து கொள்ள வேண்டுமே என்ற அலுப்புடன் எழுந்தவள்.. பாத்ரூமுக்குள் புகுந்தாள்.. முகம் கழுவி.. பிரஷ் பண்ணி.. உடை திருத்தி அறைக் கதவை திறந்து.. அன்னநடை போட்டு ஹாலைக் கடந்து வாசல் கதவை அணுகப் போனவள் அரண்டு போய் நின்று விட்டாள்..

வாசல்கதவு.. விரிய திறந்து கிடந்தது..

வழக்கமாக காம்பவுண்டு கேட்டில் கட்டித் தொங்க விடப் பட்டிருக்கும் பையிலிருக்கும் பால் பாக்கெட்டை எடுப்பதற்காக அவள் தான் கதவைத் திறப்பாள்.. அவளுக்கு முன்னரே அந்த வீட்டில் எவரும் கண்விழித்துத் தொலைக்க மாட்டார்கள்..

அப்படியிருக்கையில் அவள் வீட்டு வாசல் கதவு எப்படி விரியத் திறந்து கிடக்கிறது..?

"திருடன்..! திருடன்..!"

அவள் போட்ட சப்தத்தில் பிரதாப்பும், யதுநந்தனும் அலறியடித்துக் கொண்டு கண்விழித்து ஆளுக்கொரு ஆயுதத்தை கையில் பிடித்தபடி ஓடி வந்தார்கள்..

யதுநந்தனின் கையில் கிரிக்கெட் பேட் இருந்தது.. பிரதாப்பின் கையில் ஒட்டடைக் கொம்பு இருந்தது.. அதைப் பார்த்த அனுராதா அந்தநிலையிலும் வாய் விட்டு வைத்தாள்..

"யாராருக்கு எது சொந்தமோ.. அதைத் தூக்கிக்கிட்டு ஓடி வந்திருக்கீங்க.. வெரிகுட்..!"

மனைவி சொன்ன பின்புதான் தன் கையில் இருந்த ஒட்டடைக் குச்சியைக் கவனித்தார் பிரதாப்..

சிற்பக் கலைக்கூடம் வைத்திருப்பவருக்கு ஒட்டடைக் குச்சிதான் சொந்தமானதா..?

திருடனை விட்டுவிட்டு மனைவியின் தலையில் அந்தக் குச்சியை வைத்து மடேர், மடேர் எனப் போடும் ஆவேசம் அவருக்குள் வந்தது..

அப்படி அடித்து வைத்து அவள் விழுக நேர்ந்தால் ஹாஸ்பிடலுக்கு அவளை அவர்தான் அள்ளிக் கொண்டு போக வேண்டும் என்ற நினைவில் நிதானித்தார் அவர்..

"எங்கேடி திருடன்..?"

"அவனை என்ன நான் கர்ச்சீப்பிலா முடிஞ்சு வைச்சிருக்கேன்..?"

"அப்புறம் ஏண்டி திருடனை எதிர்க்க நிற்க வைத்திருக்கிறதைப் போலவே கத்தித் தொலைச்ச..?"

"நீங்க வேற என் வாயைப் பிடுங்கி வனவாசம் போக வைக்காதீங்க.."

"நீ வனவாசம் போனா வனமெல்லாம் உருப்பட்ட மாதிரிதான்.. அது பிழைச்சுப் போகட்டும் விட்டுவிடு.."

"சோக்கு..?"

"இல்லடி.. ஜோக்கு.."

"ஊக்கு..? எனக்குச் சிரிப்புத்தான் வரலை.."

"என்னைக்குத்தான் அது உனக்கு வந்துச்சு..? ...பாரு உன் வாயில கூப்பாடுதான் வரும்.. எதுக்காகடி ...டன்.. திருடன்னு கத்தி வைச்ச..?"

"எப்பவும் நான்தானேங்க வந்து வாசக் கதவை ...ப்பேன்..?"

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"இன்னைக்கு என்னடான்னா நான் வருகிறப்பவே ...க்கதவு விரியத் திறந்து கிடக்கு.."

அனுராதாவின் வார்த்தைகளில் பிரதாப்பும், யது ...னும் உஷாரானார்கள்.. அந்த வீட்டில் சேவலுக்கு ...த்தபடி விழித்துக் கொள்வது அனுராதா மட்டும்தான்.. ...று யாரும் அந்த அதிகாலையில் கண்விழிக்க ...டார்கள்.. அவள் வரும் போது கதவு திறந்திருந்தால் ...ற்கான பொருள் ஒன்றே.. ஒன்றாகத்தான் இருக்க முடியும்..

"யது..! திருடன்தான் வந்திருக்காண்டா.."

"ஆமாம்ப்பா.."

தகப்பனும், மகனும் வந்திருக்கும் திருடன் எவனாக ...ருக்கக் கூடும் என்று தங்களுக்குள் பேசியபடியே வீட்டின் ...லை முடுக்குகளை அலசி ஓய்ந்தார்கள்.. மொட்டை ...டியில் தேடினார்கள்.. வாட்டர் டேங்கைக் கூட அவர்கள் ...ட்டு வைக்கவில்லை..

அனைத்து இடங்களிலும் தேடி முடித்து அலுத்துக் ...ளைத்து இறங்கி வந்தவர்கள் அப்போதுதான் யாமினியை ...தோட்டத்தில் பார்த்து வைத்தார்கள்..



# 20

## பகை முடிக்க நினைத்திட்ட பைங்கிளியே..! நான் உனது உயிர்..!

அமைதியான பொன்னி நதியில் அன்னப்பறவை போல வடிவமைக்கப்பட்ட அந்த ஓடம் மிதந்து சென்று கொண்டிருந்தது.. அதில் வீற்றிருந்த குந்தவை... அவளுக்கு எதிரே வீற்றிருந்த வந்தியதேவன் அளித்த ஓலையைப் படித்தாள்.. ஆதித்த கரிகாலனின் வாசகங்கள் அவன் அருகே இருந்து அவளிடம் பேசுவதைப் போல இருந்தது குந்தவைக்கு.. நெடுமூச்சுடன் வந்தியதேவனை ஏறிட்டவள்..

"தமையன் எவ்வாறு உள்ளார்..?" என்று வினவினாள்..

"நலமே இளவரசி..! அவர் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும் வந்து ஓய்வெடுக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்.."

"தமையனின் விருப்பத்தை சக்கரவர்த்தியிடம் உரைத்தீர்களா..?"

"உரைத்தேன்.. இளவரசி..! சக்கரவர்த்தி இளவரசரின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்.."

குந்தவையின் வதனத்தில் சோகம் கவிந்தது.. கரையோர நாணல்களை துயரத்துடன் பார்த்தாள்..

காவேரியாறு துடுப்புக்களின் இடையூறினால் 'சளக் சளக்..' என்ற ஆட்சேபக் குரலை எழுப்பியவாறு தன் வழியில் ஓடிக் கொண்டிருந்தது.. வானில் பறந்த பறவைகளின் கூட்டம் அந்திவேளை நெருங்கி விட்டதை அறிவுறுத்தியது.. கதிரவனின் அஸ்தமனம் உலகிற்கா.. இல்லை.. சோழர் குலத்திற்கா என்ற அச்சத்தில் குந்தவையின் உயிர் துடித்தது..

"தமையனின் உசிதத்தை நானறிவேன்.. அவர் காஞ்சியின் பொன் மாளிகையில் ஓய்வெடுக்கும் நாமத்தில் தந்தையையும், தாயையும், தஞ்சையை விட்டு அப்புறப்படுத்தி.. காஞ்சியில், அவரருகில் பத்திரப்படுத்திக் கொள்ள விழைகிறார்.."

"அவ்விதமே நானும் யூகிக்கிறேன் இளவரசி..! நான் கண்டவையும் கேட்டவையும் சோழநாட்டை சதிச் செயல்கள் சூழ்ந்திருப்பதை வலியுறுத்துகின்றன.. எதிர் நின்று போர் புரிபவனை வெல்லலாம்.. முதுகிற்குப் பின்னால் கத்தியால் குத்துபவர்களை யாது செய்வது..?"

"தாங்கள் கண்ட சதிச்செயல் பற்றி உரையுங்கள்.."

"தங்கள் சித்தம் இளவரசி..!"

வந்தியதேவன், தஞ்சைக்கு வரும் வழியில் கடம்பூரின் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்த தினத்தை நினைவு கூர்ந்தான்..

"யாமம் தாண்டிய வேளை.. கந்தமாறன் என்னுடன் இல்லை.. தனித்துத் துயில் கொண்டவன் கலவையான பேச்சுக் குரல்களில் கண் விழித்தேன்.. கந்தமாறனைத்

தேடிச் சென்றேன்.. நானிருந்த மேன் மாடத்தின் அருகிலிருந்த முற்றத்தில் அந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.. சோழ தேசத்தின் முக்கியமான சிற்றரசர்கள் சிலர் அங்கே வருகை புரிந்திருந்தனர்.. பழுவேட்டரையர் அக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.. ஈழத்துப் படையெடுப்பால் தஞ்சையின் பொக்கிசம் குறைவதாகக் குற்றம் சாட்டினார்.. ஆதித்த கரிகாலருக்கு இளவரசப் பட்டம் சூட்டியதற்கு எந்தச் சிற்றரசரிடம் சக்கரவர்த்தி ஆலோசனை கேட்டார் என்ற வினாவினை எழுப்பினார்.. இளவரசுப் பட்டத்திற்கு உரியவர் மதுராந்தகச் சோழரே என்று உரைத்தார்.. கூட்டத்தில் இருந்தவர்கள்.. மதுராந்தக சோழர் இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்டு விட்டார், அரியணையை விரும்பவில்லை என்று அவர்கள் செவி மடுத்ததாக கேள்வி எழுப்பினார்கள்.. அவ்வாறு இல்லையென்று மதுராந்தனே இவ்விடம் வந்து உரைப்பான் என்று பழுவேட்டரையர் உரைத்தார்.. அதன்பின் நடந்ததுதான் விந்தையிலும் விந்தை இளவரசி..!"

"வாணர்குல இளவரசருக்கு கற்பனை ஆற்றல் அபரிதமாக உள்ளது போலும்.. அதிலும் மர்மத்துடன் உரைப்பதில் ஆர்வம் கொண்டவராகத் திகழ்கிறீர்கள்.. அடுத்தது என்ன என்று யாம் வினா எழுப்ப வேண்டுமென்று தாங்கள் விழைகின்றீர்களா..?"

"அல்ல இளவரசி..! எங்களின் வாணர்குலம் கற்பனை சக்திக்கான சாசனம் பெற்றது.. கவிதை புனையும்

ஆற்றல் எமது குருதியில் ஊறியது.. ஆயினும் இளவரசி.. தங்கள் முன் அவ்வாற்றல் விடைபெறாமல் விரைந்தோடி விடுகின்றதே.. யாம் என்ன செய்வோம்.."

வாணர்குல வீரனான வந்தியதேவனின் வருத்தத்தில் தனது துயரங்களை மறந்து மனம் விட்டு நகைத்தாள் குந்தவை.. அவனருகில் வீற்றிருக்கும் போது அவள் மனதில் உவகை பொங்குவதை வியப்புடன் அவள் உணர்ந்தாள்.. அவளது கம்பீரமான விழிகள் முதன் முதலாக ஓர் ஆண்மகனை நாணத்துடன் பார்த்து வைத்தன..

"தங்கள்மீது அனுதாபம் கொண்டோம்.. சதிக் கூட்டத்தின் விந்தையான அந்நிகழ்வை தாங்கள் விவரிக்க இயலுமா..?"

"இயலாது என்ற சொல்லை தங்களிடம் உதிர்க்க என்னால் இயலாது இளவரசி..! கேளுங்கள்.. பெரிய பழுவேட்டரையர் செல்கின்ற இடமெல்லாம்.. பட்டுத் திரைகளால் மூடிய சிவிகையொன்றும் அவருடன் பயணிக்கிறது அல்லவா.."

வந்தியதேவனின் அந்த வார்த்தைகளில் வதனம் களித்தாள் குந்தவை..

"வயோதிக காலத்தில் மணம் புரிந்தால் இந்நிலைதான்.. அவர் செல்லுமிடமெல்லாம் அவர் புதிதாக மணந்த பழுவூர் இளைய ராணியை மூடுபல்லக்கில் அழைத்துச் செல்வதாக.. சோழ தேசத்தில் பரிகாசப் பேச்சு

எழுந்துள்ளதே.. ம்ஹீம்.. இந்த சோழதேசம் இன்னமும் எத்தனை இடர்களை எதிர் நோக்க வேண்டியிருக்குமோ.."

"அந்தக் கணிப்புத்தான் தவறானது இளவரசி..! கடம்பூரில் மூடு பல்லக்கிலிருந்து வெளி வந்தது பழுவூர் இளைய ராணியல்ல.."

"பின்னே..?"

"கண்டராதித்த சோழரின் புதல்வர் மதுராந்தகச் சோழர்..!"

"என்ன..?!!..."

குந்தவை திகைத்தாள்.. இது போலவும் நிகழக் கூடுமோ..?

"நிகழ்ந்துள்ளதே இளவரசி..! மதுராந்தக சோழரைக் கண்டதும் அக்கூட்டத்தில் இருந்தவர்கள் வாழ்த்தொலியை எழுப்பினார்கள்.."

"அடுத்து என்ன நிகழ்ந்தது..?"

"கூட்டம் கலைந்தது.. எனக்குத் துயிலும் வந்தது.."

அக்கூட்டத்தை வந்தியதேவனைப் போலவே கண்காணித்துக் கொண்டிருந்த ஆழ்வார்கடியானைப் பற்றி வந்தியதேவன் கூறவில்லை.. குந்தவை அவள் எழுதிக் கொணர்ந்திருந்த ஓலையை வந்தியதேவனிடம் நீட்டினாள்.. அவள் விழிகள் பிரியத்தைப் பொழிந்தன..

"ஐயா.. தாங்கள் நம்பிக்கை உரியவர் என்று என் தமையனே கூறியுள்ளான்.. தாங்களும் அதை

மெய்ப்பித்துள்ளீர்கள்.. சோழதேசத்தின் தற்போதைய சூழலில் எனது தந்தை, தாயருகே எனது சகோதரர்கள் இருந்திட வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.. எனது தமையன் என் வேண்டுகோளுக்கு செவி சாய்க்க மாட்டார்.. அருள்மொழி அவ்விதமல்ல.. யாம் இட்ட கட்டளையை சிரமேற் கொள்ளுவான்.. அவனை ஈழத்திலிருந்து அழைத்து வந்து விடுங்கள்.."

"நானா இளவரசி..?"

"தாங்களேதான்.. இந்த அதி முக்கிய பொறுப்பை தங்களிடம் அல்லாமல் வேறு எவரிடம் நான் ஒப்படைப்பேன்..?"

தழதழத்த குந்தவையின் குரலொலியில் வந்தியதேவன் விண்ணில் சிறகடித்தான்.. சோழர்குல இளவரசியின் மலர்மனதில் அவனுக்கென ஓர் இடம் உளதா..?

குந்தவையின் பார்வை 'ஆம்' என்று அதை ஊர்ஜிதம் செய்தது...

காஞ்சியில் மலையமான் பதட்டத்துடன் இருந்தார்.. கரிகாலன் அவருக்கு சமாதானம் சொன்னான்..

"அருள்மொழிவர்மனுக்கு யாதொரு ஆபத்தும் நேர்ந்திராது பாட்டா.."

"அல்ல கரிகாலா..! ஈழத்திலிருந்து திரும்பி வந்தவனின் மரக்கலம் கடும் மழையிலும், புயலிலும் சிக்கிக் கவிழ்ந்து விட்டதாமே.. பார்த்திபேந்திரனும் இதையே உரைக்கிறான்.."

"வந்தியதேவன் உரைக்கவில்லையே.. நினைவில் கொள்ளுங்கள் பாட்டா.. அவன்தான் சக்கரவர்த்தியின் நோயைக் குணப்படுத்த மூலிகை கொண்டு வரும் பாவனையில் ஈழத்துக்கு அருள்மொழியைத் தேடிச் சென்றவன்.."

இவ்வுரையை அருகிலிருந்து செவி மடுத்த பார்த்திபேந்திரனின் மனதில் வந்தியதேவனின் மீதான துவேசம் அதிகரித்தது..

"தாங்கள் வந்தியதேவனின் மீது அளவுக்கு அதிகமாக நம்பிக்கை கொண்டுள்ளீர்கள் இளவரசே.. அவன் இத்தகைய நம்பிக்கைக்குத் தகுதியானவனல்ல.." அவன் குரலில் துவேசம் அப்பட்டமாக ஒலித்தது..

"அவ்வாறா..?" ஆதித்தன் பலமாக நகைத்தான்..

"இது நகைப்பதற்கான நேரமல்ல ஆதித்தா..! பழுவேட்டரையர்களின் சூழ்ச்சி இதிலிருக்கக் கூடுமோ என நான் அஞ்சுகிறேன்.. நீ தஞ்சைக்கு திரும்ப வேண்டிய வேளை நெருங்கி விட்டது.. பட்டத்து இளவரசனான நீ.. இதுபோன்ற பரபரப்பான சூழலில் சக்கரவர்த்திக்கு அருகில் இருந்தாக வேண்டும் கரிகாலா..!"

ஆதித்த கரிகாலன் பதிலுரைக்கவில்லை.. இது குறித்த அவனது விடை யாதாக இருக்கக் கூடும் என்பதனை அறிந்து வைத்திருந்த பார்த்திபேந்திரனும் செய்வதறியாதவனாக.. அதரங்களில், ஆள்காட்டி விரலை வைத்து அழுத்தாத குறையாக வாய் மூடி மௌனித்தான்..

நந்தினி மனச் சாந்தியின்றி துடித்துக் கொண்டிருந்தாள்.. ரவிதாஸன் அவளுக்கு பலத்த எச்சரிக்கையை விடுத்துப் போயிருந்தான்..

"இதுபோன்ற சூழலை.. இனி வரும் தினங்களில் நாம் உருவாக்குவது கடினம்.. அருள்மொழிவர்மன் காற்றில் கரைந்த கற்பூரம் போல தொலைந்து போய் விட்டதாக நாட்டில் செய்தி பரவியுள்ளது.. ஆனால்.. அவன் தொலையவில்லை.. புத்த விஹாரத்தில் பத்திரமாக உள்ளான்.. நமக்குத் தெரிந்தது மற்றவர்க்குத் தெரிய வரும்போது அவன் உயிருடன் இருக்க மாட்டான்.. சுந்தர சோழனுக்கான தினத்தையும் குறித்து விட்டோம்.. மிஞ்சியிருப்பது தமது காதலன் ஆதித்த கரிகாலன் மட்டும் தான்.. அவனைக் கொல்லும் பொறுப்பை தங்களிடம் ஒப்படைக்கிறோம்.. எதிர் வரும் தினங்களில்.. குறிப்பிட்ட ஓர் தினத்தில்.. வெவ்வேறு இடங்களில்.. சுந்தரசோழனும்.. அவன் பெற்ற புதல்வர்கள் இருவரும் மடிய வேண்டும்.. இதுவே நாம் பெறப் போகும் வெற்றி.."

நந்தினியின் மனம் கனத்தது.. என்றேனும் ஓர் தினத்தில் இதுபோன்றதொரு சூழலை அவள் எதிர்கொள்ள நேரிடும் என்பதை அறிவாள்தான்.. ஆயினும் அத்தினம் எதிர் வந்து நின்றபோது துக்கம் அவளை கொன்று தின்றது..

"வரும் காலத்தில் பாண்டியர்களின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.. தங்களால் சில தினங்களுக்கு முன்னர்.. யாமத்தில் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட

வீரபாண்டியரின் மகவு அரியணையில் ஏற வேண்டும்.. தமது விருப்பம் போல சோழதேசத்தின் அரியணையில் வீரபாண்டியரின் புதல்வரும் தங்களின் உடன் பிறந்த சகோதரனுமான மதுராந்தக பாண்டியர்.. மதுராந்தகச் சோழராக பட்டாபிஷேகம் செய்யப்படவேண்டும்.. இவ்வாறெல்லாம் நிகழ்ந்து விட்டால்.. சோழதேசத்தையும், பாண்டிய தேசத்தையும் வீரபாண்டியர் பெற்ற புதல்வர்கள் ஆள்வார்கள்.."

'ஊம்' என்று கூட உரைக்க வில்லை நந்தினி.. உரையாற்றிக் கொண்டே போன ரவிதாஸன் உரையை நிறுத்தி விட்டு அவளை உற்று.. உறுத்துப் பார்த்தான்.. நந்தினி வதனத்தை திருப்பிக் கொண்டாள்..

"வேண்டாம் தேவி..! தங்களது அகத்தில் உள்ள ஆதித்த கரிகாலனின் மீதான காதலை வேரோடு பிடுங்கி எறிந்து விடுங்கள்.. தாம் பகை முடிக்க வாழ்பவர்.. அதை நினைவில் கொள்ளுங்கள்.. மறந்து விட்டதா..! தங்களின் கண் முன்னே அந்த ஆதித்த கரிகாலன் தங்களின் தந்தையான வீரபாண்டியனின் சிரத்தை வெட்டி எறிந்தான்.."

"போதும்.."

நந்தினி செவிகளை இருகரங்களைக் கொண்டு மூடியபடி அலறினாள்.. அவளது தேகம் நடுங்கியது.. அவளது நிலைகண்டு ரவிதாஸன் துளிக்கூட இரக்கம் கொள்ளவில்லை..

"நமது போராட்டத்தில் காதலுக்கு இடமில்லை.. கடமை ஆற்றுவதை மட்டுமே நினைவில் நிறுத்துங்கள்.. தாங்கள்தான் ஆதித்த கரிகாலனை எவ்விதமாவது கடம்பூரின் சம்புவரையர் அரண்மனைக்கு வருகை புரியச் செய்ய வேண்டும்.. நினைவிருக்கிறதா தேவி..? தாங்கள் உரைத்த மொழிதான்.. ஆதித்த கரிகாலனை கட்டுப் படுத்த உங்களைத் தவிர எவராலும் இயலாது.. காதலின் கர்வத்துடன் தாம் இதை மொழிந்தீர்கள்.. அது உண்மையும் கூட.. எனவே தங்களால் கட்டுப்படுத்த முடிந்த ஆதித்த கரிகாலனை தாங்கள் தான் கடம்பூருக்கு வரவழைக்க வேண்டும்.."

"சிரத்திற்கும், பாதத்திற்கும் முடிச்சுப் போட வேண்டியதன் அவசியம்தான் என்ன...? ஆதித்த கரிகாலனை தஞ்சைக்கு வரச் செய்யலாம் அல்லது.. அவன் இருக்குமிடமான காஞ்சிக்கு தேடிச் செல்லலாம்.. இவை இரண்டையும் விடுத்து.. எங்கோ இருக்கும் கடம்பூருக்கு அவனை நான் எதன் பொருட்டு வரவழைக்க வேண்டும்..?"

"கடம்பூரில்தான் எனக்கான உதவி உள்ளது தேவி..! தஞ்சையில் எனக்குத் தங்களின் சகாயம் தேவைப்படும்.. காஞ்சியில் எவராலும் எனக்குச் சகாயம் செய்ய இயலாது.. கடம்பூரில் அப்படியல்ல.. அங்கே 'இடும்பன்காரி' என்ற ஒருவன் எங்களது உதவிக்கரமாக உள்ளான்.. நாங்கள் பாதங்களால் இடும் பணிகளை சிரமேற்கொண்டு செய்து முடிப்பான்.. தவிரவும்.. கடம்பூர் அரண்மனையின் வேட்டைக்கார மண்டபத்திற்கு ஐயனார் கோவில் வாயிலில்

உள்ள துவாரம்வழியாக நிலவறை படிக்கட்டுகள் அமைந்துள்ளன.. படிக்கட்டுகள் முடியும் இடத்தில் வேட்டைக்கார மண்டபம் உள்ளது.. அங்கிருக்கும் யானையின் துதிக்கையைப் பற்றித் திருகினால் வேட்டைக்கார மண்டபத்தை ஒட்டியிருக்கும் விருந்தினர் அறை வெளிப்படும்.. அவ்வறையை தாங்கள் தங்கும் அறையாக தேர்ந்தெடுத்தல் அவசியமானது தேவி..!"

இனித் தப்பிப்பதற்கான மார்க்கமே இல்லை என்பதனை உணர்ந்தாள் நந்தினி.. வரும் விதியை அவள் எதிர் கொள்ளத்தான் வேண்டும்.. அவளது இதயத்தில் குருதிப்புனல் பெருக்கெடுத்தது.. அதை உணர்ந்தும் உணராதவனைப் போல உணர்வுகள் துடைக்கப்பட்ட குரலுடன் உரைத்துக் கொண்டிருந்தான் ரவிதாஸன்..

"கடம்பூர் அரண்மனைக்கு உள்ளே எவரும் அறியாமல் நாங்கள் பிரவேசிக்க ஏதுவாக அந்த நிலவறைப் படிக்கட்டுக்கள் அமைந்துள்ளன தேவி..! இதுபோன்ற அனுகூலம் வேறு எங்கும் நமக்குக் கிட்டாது... ஆதலால் தாங்கள் ஆதித்த கரிகாலனை கடம்பூரின் சம்புவரையரின் மாளிகைக்கு அழைப்பது மிக அவசியமான ஒன்று தேவி..!"

ரவிதாஸன் கண்டிப்பான குரலில் கட்டளை மறைந்திருந்தது..

"அழைத்துத் தொலைக்கிறேன்.." அலுப்புடன் கூறினாள் நந்தினி..

"நன்று தேவி..! தாங்கள் வீரபாண்டியரின் வீரப் புதல்வி என்பதனை மெய்ப்பித்து விட்டீர்கள்.. தங்களின் சொல் கேட்டு.. அவரின் ஆன்மா சாந்தியடையும்.."

வீரபாண்டியனை நினைவுறுத்தி நந்தினியை ரவிதாஸன் ஆட்டுவிக்க முனைவதை அவள் புரிந்து கொண்டாள்..

"இதைத் தவிர்த்த வேறு எந்த மொழியையும் நீ உரைக்க மாட்டாயா..?" சினத்துடன் வினவினாள்..

"நிதரிசனம் எதுவோ.. அதையே யாம் உரைக்க இயலும்.. தாங்கள்தான் ஆதித்த கரிகாலரின் பட்டமகிஷி என்று உரைக்க எமக்கும் விருப்பம்தான்.. நான் உரைத்தால் மட்டும் அது நிகழ்ந்து விடுமா..?"

ரவிதாஸனின் வினாவிற்கான விடை நந்தினியிடம் இல்லை..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 20

*கொதிக்கின்ற கொதிகலனாய்..*
*கொந்தளிக்கும் எனது வாழ்க்கை..*

"அப்பா..! அது யாமினிதானே..?"

தோட்டத்துப் புல்வெளியில் மண்டியிட்டு முயல் குட்டியைத் தூக்கி மடியில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த யாமினியைக் காட்டினான் யதுநந்தன்..

"யாமினிதாண்டா.."

பிரதாப் கோபத்துடன் அனுராதாவை பார்த்தார்..

"ஏண்டி.. வீட்டுக்குள்ள திருடன் வந்திட்டான்னு அலறினயே.. வீட்டுக்குள் இருந்த யாமினி எங்கே போனான்னு முதல்ல பார்த்தியா..?"

"என்னைக் கேட்கிறது இருக்கட்டும்.. யாமினியோட ரூமை நீங்களும், உங்க மகனும் அக்கு வேறு, ஆணி வேறா அலசி ஆராய்ஞ்சீங்களே.. அவ ரூமில் இல்லைன்னு உங்க ரெண்டு பேரோட மரமண்டையிலயும் ஏறலையா..?"

"அம்மா..!"

"என்னடா..?"

"அப்பாவை என்ன வேணும்னாலும் சொல்லிக்கங்க.. ஐ டோன்ட் கேர்.."

"அருமையான பிள்ளை..! ஏங்க.. உங்களைத்தானே.. உங்க புத்திரசிகாமணி சொன்னது உங்க காதில விழுந்ததா..?"

"விழுந்துச்சு.. விழுந்துச்சு.. இப்பேர்பட்ட பிள்ளையைப் பெற நான் என்ன தவம் செய்தேன்..!"

"ம்ப்ச்.. தேவையில்லாம டயலாக் பேசி சோதிக்காதீங்கப்பா.. ஹஸ்பெண்ட் அண்ட் வொய்புக்குள்ள ஆயிரம் பேசிக்குவீங்க.."

"இந்த ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ப்தான் உன்னோட பேரண்ட்ஸ்.. மனசில இருக்காடா என் மகனே..?"

"ம்மா.."

"கன்னுக்குட்டியப் போல கத்தி வைக்காதே.. என்னன்னு சொல்லு.."

"அதெப்படி என்னைப் பாத்து நீங்க மரமண்டைன்னு சொல்லி வைக்கலாம்.. ஐ அப்ஜெக்ட் இட்.."

"அதுக்கு மரமண்டைதான் அப்ஜெக்ட் பண்ணனும்.. நீயேன் பண்ற..?"

அனுராதா போட்டுத் தாக்கியதில் கோபம் கொண்ட யதுநந்தன் யாமினியை எரிச்சலுடன் பார்த்து வைத்தான்..

அவளால் அல்லவா அவனது விடிகாலைத் தூக்கம் வீணாகப் போனது..?

"ஏய்ய்.. யாமினி..!" அதட்டல் போட்டான்..

முயல்குட்டியைக் கொஞ்சிக் கொண்டிருந்த யாமினி நிமிர்ந்து மொத்தக் குடும்பத்தையும் பார்த்து விட்டு..

"ஹாய்..! குட் மார்னிங் ஆல் ஆஃப் யூ.." என்று சொல்லி வைத்தாள்..

"காலங்காத்தால கட்டையைத் தூக்கிக்கிட்டு திருடனை தேட வைச்சிட்டு எவ்வளவு ஈஸியா குட்மார்னிங் சொல்றான்னு பார்த்தீங்களாப்பா..?" பல்லைக் கடித்தான் யதுநந்தன்..

எப்போதும் மகளின் பக்கமே நியாயம் பேசும் பிரதாப் அன்று மௌனம் சாதித்தார்.. அவர் விழிகள் யோசனையுடன் யாமினியைப் பார்த்தன.. அவர் மனதில் ஓர் கணக்கீடு ஓடியது..

'அனுராதா எழுந்திருக்கும் போதே லேசாத்தான் விடிஞ்சிருக்கும்.. அவ வந்து பார்த்தப்பவே கதவு திறந்து கிடந்ததுன்னா.. இவ எத்தனை மணிக்கு எழுந்திருச்சிப்பா..?'

ஏனோ.. அவர் மனதில் மெலிதான பயம் எழுந்தது..

"யாமினி..?" கனிவுடன் அழைத்தார்..

"அப்பா.." அவள் விழிகளை உயர்த்தி அவர் முகம் பார்த்தாள்..

"இங்கே என்னம்மா பண்ற..?"

அவரின் இதமான கேள்வியில் யதுநந்தன் கோபம் கொண்டான்..

"ஊம்..? பார்த்தாத் தெரியலை..? முயல்குட்டிகூட கொஞ்சிக்கிட்டு உட்கார்ந்திருக்காப்பா.."

"பொறு யது.. நீ எப்பம்மா எழுந்த..?"

"அப்பவே எழுந்துட்டேன்ப்பா.."

யாமினியின் பதிலில் அவருக்கு 'திக்' கென்று இருந்தது.. அவர் விழிகளும், அனுராதாவின் விழிகளும் சந்தித்துக் கொண்டன..

"அப்பவேன்னா..?"

"டைம் தெரியலைப்பா.. முழிப்பு வந்தது.. தோட்டத்தில குருவியெல்லாம் சத்தம் போட்டுச்சு.. தோட்டத்துக்கு வந்துட்டேன்.."

"விடிஞ்சும் விடியாத பொழுதில தோட்டத்துப் பக்கம் வரலாமாம்மா..?"

"நான் வந்தப்ப விடியலைப்பா.."

இயல்பாக கூறி அனைவரையும் அரள வைத்தாள் யாமினி..

"என்னது.. விடியலையா..?"

"ஆமாம்மா.. இருட்டாத்தான் இருந்துச்சு.. விடியப் போகிற சமயம் போல.. அதனாலதான் குயிலும், குருவியும் கூவுச்சு..?"

"உடனே நீ கதவைத் திறந்து வெளியில வந்துட்டியா..?"

"ம்ம்ம்.. ஆக்சுவலா அப்பா.. விடிகிற பொழுதோட ஒவ்வொரு வினாடியையும் நாம உணர்ந்து ரசிக்கிறதுல உள்ள சுகமே தனிப்பா.."

இப்படிக் கூறும் மகளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்ட அனுராதா.. கணவரிடம் திரும்பி..

"கலாரசிகை சொல்றதை நீங்களே ஊம் கொட்டிக் கேளுங்க.." என்று கோபமாக சொல்லி விட்டு வீட்டுக்குள் போய் விட்டாள்..



## 21

*விடையற்ற கேள்விகளை*
*முன்னிறுத்தும் வாழ்வின் குரூரம்..*

விடையற்ற வினாக்களை எதிர்கொள்ள முடியாமல் மனம் நைந்து குற்றுயிராக ஆனாள் நந்தினி..

"சொல்லுங்கள் தேவி..! இந்த சோழதேசம் உங்களை பட்டமகிஷியாக ஏற்றுக் கொள்ளுமா..? நினைவிருக்கட்டும்.. தாங்கள் இப்போது பழுவூரின் இளையராணி..!"

ரவிதாஸன் சென்று விட்டான்.. நந்தினி மனதின் குமுறல்களோடு ஹம்ச தூளிகா மஞ்சத்தில் சுருண்டு விட்டாள்.. அவளது பால்யகாலம் முதல் பழகிய ஆதித்த கரிகாலனை அணுக விடாமல் இடையில் நின்ற பெரும் நெருப்பைக் கடக்கும் சக்தியற்றவளாக தொய்ந்து சரிந்தாள்.. அப்படியே பூமி பிளந்து அவளை விழுங்கி விடாதா என்று ஏக்கம் கொண்டாள்..

லதா மண்டபத்தின் ஹம்ச தூளிகா மஞ்சம் கண்ணீர் விட்டது.. அது அறிந்த ராணிகளைப் போல உல்லாசமாக துயில் கொள்ளாமல் மனச்சாந்தியின்றி போராடும் நந்தினியின் நிலையை எண்ணி துயர் கொண்டது..

நந்தினி எழுந்தாள்.. நடுங்கும் உடலுடன் ஹம்ச தூளிகா மஞ்சத்தில் அமர்ந்து நிருபம் எழுதினாள்.. அவள் உடல் புயலில் சிக்கிய தளிர்கொடியாய் நடுநடுங்கியது. குளிர்காற்று வீசிய அந்த குளிர்ந்த வேளையில் அவளது வதனத்தில் வியர்வைக் கடல் பொங்கி வழிந்தது.. சுழல் காற்றில் சிக்கிய பூங்கொடியாய் அவள் நெடும் மூச்சுக்களை வெளியேற்றினாள்.. ஒருவழியாய் பல நாழிகைகளைக் கரைத்து ஆதித்த கரிகாலனை கடம்பூரின் சம்புவரையர் மாளிகைக்கு அவளைச் சந்திக்க வரும்படி நிருபம் வரைந்து முடித்து விட்டாள்..

"யாரங்கே.." சேடிப் பெண்ணை அழைத்தாள்..

"மகாராணி..?" சேடிப் பெண் ஓடோடி வந்து நின்றாள்..

"கடம்பூரின் சம்புவரையரின் புதல்வர் கந்தமாறனை வருகை தரும்படி உரைப்பாயாக.."

"அவ்விதமே மகாராணி.."

சேடிப்பெண் அகன்ற சில மணித்துளிகளில் கந்தமாறன் அங்கு வந்து சேர்ந்தான்.. நந்தினியை கண்டதும் அவன் விழிகள் தெறித்து விடும் போல விரிந்து வைத்தன.. அவளது எழிலைக் கண்ணுற்று மலைத்துப் போனவனாக 'ஆ'வென்று வாய் பிளந்தவனின்.. திருவாய்க்குள்.. லதாமண்டபத்தின் பூஞ்சோலையில் வசித்து வந்த 'கொசு' முதல் 'ஈ' வரையிலான சிறிய இறகுகளைக் கொண்ட உயிரினங்கள் உலாச்சென்று திரும்பி வந்தன.. திறந்த அவன் வாயிலிருந்து வழிந்த 'ஜொள்..' எனப்படும் ரசிப்பு மழையில் லதா மண்டபத்தின் தரைப்பகுதி முழுவதும் கழுவி விடப்பட்டது..

பார்த்த பார்வை பார்வையாக இருக்க.. 'ஈ..'யென்ற இளிப்பு வதனத்தில் அப்பியிருக்க... சிலை போல நின்றவனின் நிலை கண்டு தலையில் அடித்துக் கொண்ட நந்தினி.. அவன் முன்பு விரல் சொடுக்கி அவனது கவனத்தை ஈர்த்து வைத்தாள்..

"கட்டளையிடுங்கள் ராணி..! தமக்காக நான் புரிய வேண்டிய பணி யாது..? இமய மலையிலிருந்து கங்கையை

தமக்காக கொணர வேண்டுமா..? சிங்கத்தின் பிடறி கேசத்திற்கு சிடுக்கெடுத்து விட்டு... தங்களின் அந்தப்புரத்தில் தாங்கள் பார்வையிட்டு களிப்பதற்காக அதை அடைத்து வைக்கட்டுமா..? அல்லது.. வானத்தை வில்லாக வளைத்து தாங்கள் விளையாட வளையமாக்கித் தரையில் போடட்டுமா..?"

விட்டால் அன்றைய தினம் முழுதும் இது போன்ற வீர வசனங்களைப் பேசி அவளை கந்தமாறன் சோதித்து விடுவான் என்பதில் நந்தினி ஊடாகப் பாய்ந்து அவன் உரையை நிறுத்தினாள்..

"அவற்றையெல்லாம் அடுத்துப் பார்ப்போம்.. முதலில் தங்களின் புற முதுகில் பட்ட விழுப்புண் ஆறி விட்டதா என்று நான் அறிய விழைகிறேன் ஐயா.."

நந்தினியின் குறும்புப் பார்வையும், பரிகாசப் பேச்சும் கந்தமாறனை சீண்டி விட்டன..

"புறமுதுகு காட்டும் வழக்கம் வீர சம்புவரையரின் புதல்வனுக்கு என்றுமே இருந்ததில்லை இளையராணி..!" என்று வேகத்துடன் உரைத்தான்..

"பின் எவ்வாறு இந்த காயம் வந்தது..?"

"அது என் தோழன் என்று நான் நம்பிக் கொண்டிருந்த துரோகி ஒருவன் கொடுத்த பரிசு ராணி..!"

"அவ்வாறா ஐயா..? த்ச்சு..த்ச்சு.. அவர் கத்தியெடுத்துக் குத்துவதற்காக தாங்கள் புறமுதுகு காட்டினீரோ.."

'மறுபடியும் புறமுதுகா..?' கந்தமாறன் பற்களை நறநறத்தான்..

"அல்ல ராணி..! அந்தத் துரோகிதான் என் புற முதுகிற்குப் பின்னால் வந்து கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டான்.."

"அப்பேற்பட்ட துரோக சிந்தை கொண்ட நண்பனைப் பெற்ற துர்பாக்கியசாலியா தாங்கள்..?"

"ஆம் ராணி.."

"போகட்டும் விடுங்கள்.. தற்போது நான் அளிக்கும் நிருபத்தை எடுத்துச் சென்று காஞ்சியிலிருக்கும் ஆதித்த கரிகாலனின் வசம் சேர்ப்பித்து விட இயலுமா..?"

"இயலாது என்ற சொல்லை தங்களிடம் கூற என்னால் இயலுமா இளையராணி..?"

கந்தமாறன் புளகாங்கிதப்பட்டுக் கொண்டிருந்த போது அங்கு பழுவேட்டரையர் வந்து விட்டார்.. அவர் அங்கு இல்லையென்ற மனோ தைரியத்தில் விருப்பம் போல நந்தினியை பார்வையிட்டபடி.. மனதில் தோன்றிய மயக்கங்களையெல்லாம் உளறிக் கொட்டி, கிளறி மூடிக் கொண்டிருந்த கந்தமாறன் அவரைக் கண்டதும் திணறிப் போய் பேச்சை நிறுத்தி விட்டான்..

நந்தினியோ பழுவேட்டரையரை மோகனப் புன்னகையுடன் வரவேற்றாள்.. அவளின் பார்வையில் கிறங்கிப் போன பழுவேட்டரையரை அறுபத்தி நான்கு போர்க்களங்களைக் கண்ட வீராதி வீரர் இவர்தானா என்ற வியப்புடன் பார்த்து வைத்தான் கந்தமாறன்..

"கடம்பூரின் சம்புவரையரின் புதல்வரிடம் காஞ்சிக்கு ஓலை கொடுத்து அனுப்ப உத்தேசித்துள்ளேன்.."

'எதன் பொருட்டு..?' என்று வினவ வாயெடுத்த பழுவேட்டரையரை சுழன்று விழித்த நந்தினியின் பார்வை தாக்கியது.. அவரது மதிமயங்கியது.. அந்த மயக்கத்துடன் அவர் தலையை ஆட்டி வைத்தார்..

"கடம்பூருக்கு இளவரசரை விருந்தினராக அழைக்கும்படி பழுவூர் மன்னர் உரைத்ததாக எனது தந்தையிடம் உரைத்து விடவா..?" கந்தமாறன் வினவினான்..

"உரைத்து விடலாமே.." என்ற நந்தினி பழுவேட்டரையரைப் பார்த்து..

"என்ன..? உரைத்து விடலாம்தானே..?" என்று கொஞ்சலாக வினவினாள்..

கிறக்கத்திலிருந்த பழுவேட்டரையர் அவள் எதை உரைக்கச் சொன்னாள் என்பதை உனராத மயக்கத்துடன்..

"உரைக்கலாம்.. உரைக்கலாம்.." என்று குழறி வைத்தார்..

நந்தினி மந்தகாச சிரிப்புடன் பழுவேட்டரையருக்கு பரிசாக ஓர் பார்வையினை அளித்து விட்டு கந்தமாறனிடம் திரும்பி

"தங்களின் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டதல்லவா..? பழுவூர் மன்னர்தான் ஆதித்த கரிகாலரை விருந்துக்கு கடம்பூருக்கு வருகை தரும்படி தங்களது தந்தையை அழைக்கச் சொல்கிறார்.. போதுமா..?" என்றாள்..

அதைக் குறித்த எந்தவித பிரக்ஞையும் இல்லாமல்.. அந்தப்புரத்திற்கு இளையராணியுடன் அளவளாவலாம் என்ற ஆசையுடன் வந்த பழுவேட்டரையரை சிலந்தி வலைக்குள் சிக்க வைத்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

பழுவேட்டரையர் ஆதித்த கரிகாலனைப் பற்றி எண்ணிக்கூடப் பார்க்கவில்லை.. அவனை கடம்பூரின் சம்புவரையரின் மாளிகைக்கு விருந்துண்ண வரச் சொல்லி சம்புவரையருக்கு செய்தி அனுப்ப வேண்டும் என்று அவர் சொப்பனத்திலும் நினைத்ததில்லை.. எனினும்.. இவை இரண்டையும் அவரின் எண்ணப்படியும், வார்த்தைப் படியும் செய்து முடிப்பதைப் போல சித்தரித்து விட்டாள் நந்தினி.. அவரும் அதை ஆட்சேபிக்காமல் பூம் பூம் மாட்டைப் போல தலையைத் தலையை ஆட்டி விட்டார்..

அவர்தான் அவ்விதம் என்றால்.. சோழதேசத்தின் பட்டத்து இளவரசனை எவ்வித முகாந்திரமுமின்றி தமது ஊரின் மாளிகையில் விருந்துண்ண அழைக்கப் போகிறோமே.. அதனால் ஏதும் விபரீதங்கள் நேர்ந்து விட்டால் அதற்கான பதிலை கடம்பூரின் சம்புவரையர் தானே உரைத்தாக வேண்டும் என்ற எண்ணமின்றி நந்தினி இட்ட பணியை கந்தமாறன் சிரமேற்கொண்டு ஏற்றுக் கொண்டான்..

இவ்விரு ஆண்களும் புத்திசாலிகள்தான்.. எனினும் அவர்களின் மூளையையும், புத்தி கூர்மையையும் மழுங்கடித்து அடிமைகளாக்கியது நந்தினியின் எழில்..!

அவள் மீதிருந்த மயக்கத்தில் விபரீதத்தை விருந்துண்ண அழைக்கக் கிளம்பினான் கந்தமாறன்..

ஓர்நொடி தயங்கி நின்றவனை கேள்வியுடன் நோக்கினாள் நந்தினி.. அவள் மனதில் சந்தேகம் துளிர்த்தது..

'அஞ்சுகிறானோ.. இப்பணியில் ஈடுபட மறுத்து விடுவானோ..'

இல்லையென்பதை கந்தமாறனின் சந்தேகம் மெய்ப்பித்தது..

"சோழர்குல இளவரசர் ஆதித்த கரிகாலர் எவரையும் பொருட்படுத்தாதவர்.. எமது தந்தையின் அழைப்பை ஏற்று கடம்பூருக்கு விருந்துண்ண வருகை தருவாரா..?"

"கட்டாயம் வருகை தருவார்.."

உறுதியுடன் உரைத்தாள் நந்தினி.. அவளது உறுதியில் பழுவேட்டரையரின் புருவங்கள் முடிச்சிட்டன.. நந்தினியின் குரல் துயரத்தில் தோய்ந்திருந்ததை அவரது அறிவு கண்டு கொண்டது..

"நான் அழைத்தால் கண்டிப்பாக அவர் வருவார்.."

தேம்பலுடன் ஒலித்த நந்தினியின் குரலில் அவளைக் கேள்வியுடன் ஏறிட்டான் கந்தமாறன்.. பழுவேட்டரையரும் அவனை பின்பற்றினார்.. நந்தினி தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு மோகனமாக நகைத்து வைத்தாள்..

"பழுவூரின் இளையராணி அழைத்தால் வரமறுக்க இந்த சோழதேசத்தில் எவருக்கு துணிவுண்டு..?

எமது பழுவூர் மன்னரின் கீர்த்தி அப்பெருமையைக் கொண்டதாயிற்றே..! அவரின் இளையராணி அழைத்தால் வருகைதர இயலாது என்று ஆதித்த கரிகாலர் கூறி விடுவாரா என்ன..? அவர் சக்கரவர்த்தியின் திருக்குமாரராகவே இருக்கட்டும்.. சக்கரவர்த்தியே எமது நாதரின் கரங்களில் எனும்போது சக்கரவர்த்தியின் திருக்குமாரர் எம்மாத்திரம்..?"

பழுவேட்டரையரின் வதனம் மலர்ந்தது.. கந்தமாறன் புறப்படும் தறுவாயில் தேங்கி நின்று நந்தினியை ஓர்முறை பார்த்துக் கொண்டான்.. பழுவேட்டரையர் கோபாவேசமாகி மீசையை முறுக்கி ஓர் கர்ஜனை செய்ததும்.. சர்வாங்கமும் நடுநடுங்க ஓடி விட்டான்..

"சிறு பயல்..." சினத்துடன் கூறினார் பழுவேட்டரையர்..

"அதன் பொருட்டுத்தானே இப்பணிக்கு அவனைத் தேர்ந்தெடுத்தேன்.." என்றாள் நந்தினி..

"தமது எண்ணம்தான் யாதென்று எமக்கு ஓர் மண்ணும் விளங்கவில்லை.. எதன் பொருட்டு அந்த ஆதித்த கரிகாலனை கடம்பூருக்கு விருந்துண்ண வருகை தரும்படி அழைப்பு விடுக்கிறாய்..? அந்த அழைப்பையும் நான்தான் விடுக்கும்படி உரைத்தேனென்று சம்புவரையரிடம் கூற வைக்கிறாய்.. இத்துணைக்கும் மேலே.. அந்த மூர்க்கன் கடம்பூர் வரும் வேளையில் நாமும் அங்கே செல்ல வேண்டும் என்றும் உரைக்கிறாய்..

இவை எவையும் மதிபடைத்த செயல்களாக எமக்குத் தோன்றவில்லை.. அருள்மொழிவர்மனைக் காணவில்லை என்று சோழதேசம் பரபரப்பாக இருக்கும் இச்சூழ்நிலையில் நாம் தஞ்சையை விட்டு அகல்வது உசிதமானதா..? இளவரசு பட்டம் கட்டப்பட்ட ஆதித்த கரிகாலனை தஞ்சைக்கு வரவழைக்காமல் கடம்பூருக்கு வரச் செய்வதும் உசிதமானதா..?"

"இவ்வேளைதான் உசிதமானது என் மன்னவரே..!"

நந்தினியின் 'என் மன்னவரே..!' என்ற அழைப்பில் தெளிந்திருந்த பழுவேட்டரையரின் மதி மறுபடியும் மயங்கி விட்டது..

"என் கண்ணே..!" அவர் குழறினார்..

"உலகறிய தங்களை மணம் புரிந்து.. மணவாழ்வை தொடங்க வேண்டுமென்று அல்லும் பகலும் நான் கொள்ளும் வேதனையை தாங்கள் அறிய மாட்டீர்கள். தமக்கென்ன.. எனக்கு முன்னரே தங்களுக்கு பல மனைவிகள் உண்டு.. மணவாழ்வை நிறைவுடன் வாழ்ந்த அனுபவங்களும் தமக்குண்டு.. எமக்கு அவ்வாறில்லையே.. தங்களின் சதியாக நானும் அம்மணவாழ்வை வாழ்ந்து பார்க்க வேண்டாமா..?"

நந்தினி சொல்லச் சொல்ல.. பழுவேட்டரையரின் தேகம் தகிக்க ஆரம்பித்தது.. அவர் பித்தம் தலைக்கேறியவராக பரபரக்க ஆரம்பித்து விட்டார்..

"என் கண்மணி..! தமது அகத்தில் என்மீதான விருப்பம் இத்துணை தீவிரமாக உள்ளதா..? எமது விரல்

துனியைக்கூட தமது தேகத்தை ஸ்பரிக்க அனுமதிக்காததில் என் மனதிலும் சில தருணங்களில் சந்தேகம் எழுந்ததுண்டு.. அவற்றுக்காக தற்போது உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன் கண்மணி.. என்னை மன்னித்து விடு.."

"ஆஹா..! எப்பேற்பட்ட கொடிய வார்த்தைகளை உதிர்த்து விட்டீர்கள் நாதா..! தங்களை நான் மன்னிப்பதா..? இவ்வாறு இயம்பி என் மனதை தாங்கள் புண்படுத்தலாகாது.. வேண்டாம் சுவாமி..! எமது திட்டங்களை நானும் தம்மிடம் முன்னரே தெளிவாக உரைத்திருக்க வேண்டும்.. அது எனது தவறுதான்.. கேளுங்கள் சுவாமி..! எமது திட்டம் இதுதான்.. இந்த குழப்பமான சூழலில் ஆதித்த கரிகாலனை கடம்பூருக்கு வரவழைத்து அவன் வாயாலேயே அவனை இளவரசுப் பட்டம் வேண்டாமென்று துறந்துவிட வைக்க வேண்டும்.."

"என்ன...?" ஆச்சரியத்துடன் வினவினார் பழுவேட்டரையர்..

"ஆம் சுவாமி.. இதுவே எனது திட்டம்.."

"அவன் சொல்வானா..?"

"ஏன் சொல்லமாட்டான்..? அருள்மொழிவர்மனைப் போல காணாமல் போவதைவிட பட்டம் வேண்டாமென்று துறந்து விட்டு அரசகுலத்தைச் சேர்ந்தவன் எனும் மதிப்போடு வாழ்ந்து விட்டுப் போகலாம் என்றுதான் அவன் எண்ணுவான்.. கடம்பூருக்கு வருபவனிடம் சம்புவரையரும், நாமும் உரையாடிப் பார்ப்போம்.. மதுராந்தகன்தான்

அரியணைக்கு உரியவன் என்பதை எடுத்துச் சொல்வோம்.. அவன் செவி சாய்க்காமலா போய்விடுவான்..?"

"அவ்வாறா மொழிகிறாய்..?"

"ஆம் சுவாமி..! என் எண்ணப்படி அவன் பட்டத்தை விட்டுக் கொடுத்து விட்டால்.. தாங்கள் மதுராந்தகனுக்குப் பதிலாக அரியணையில் ஏறுவது மிகவும் எளிதானது.."

எவ்விதம் அது எளிதானதாக ஆகக் கூடும் என்று பழுவேட்டரையருக்குப் பிடிபடவில்லை.. அதை நந்தினியிடம் வினவி வைக்கவும் அவரால் இயலாது.. இருந்திருந்து அன்றுதான் அவள் அத்தி பூத்தாற்போல.. அவருக்கும், அவளுக்குமான மணவாழ்வைக் குறித்துப் பேசியிருக்கிறாள்.. அந்த மயக்க சூழலை கெடுத்துக் கொள்வது உசிதமானதல்ல என்று பழுவேட்டரையரின் மனம் ஜொள்ளியது..

"தாம் உரைத்தால் அது சரியாகத்தான் இருக்கும் தேவி..!" அவர் கிறக்கத்துடன் உரைத்தார்..

"என் மீதான தங்களது நம்பிக்கைக்கு மெத்த வந்தனம் சுவாமி.."

நந்தினி ஒயிலாக தலைசாய்ந்து அவரைப் பார்த்தாள்.. அந்த சிறு பார்வையைத் தாள மாட்டாமல் பழுவேட்டரையரின் இதயம் மத்தளம் வாசித்தது.. அவரைத் துடிக்க வைத்து விட்டு நந்தினி துயில் கொள்ள சென்று விட்டாள்..

காஞ்சியிலிருந்த ஆதித்த கரிகாலனிடம் நந்தினியின் நிருபம் சேர்க்கப்பட்டு விட்டது.. அதைக்

கொணர்ந்து வந்து கொடுத்த கந்தமாறனை ஏற இறங்க பார்வையிட்டான் ஆதித்த கரிகாலன்... அவனிடம் சம்புவரையரின் விருந்து அழைப்பையும் உரைத்தான் கந்தமாறன்.. ஆதித்த கரிகாலனின் இதழோரம் புன்னகை நெளிந்தது.

"உமது இல்ல விருந்துக்கு எனை அழைப்பதைக் குறித்து சம்புவரையர் அறிவார்.. ஏனெனில் விருந்து அழைப்பை அவரே விடுத்துள்ளார்.. ஆனால்.. நந்தினியின் ரகசிய நிருபத்தை நீ கொண்டு வந்திருப்பதைப் பற்றி உன் தந்தை அறிவாரா..?"

கந்தமாறன் அயர்ந்து விட்டான்.. இதுபோன்ற பட்டவர்த்தமான கேள்வியினை ஆதித்த கரிகாலன் வினவி வைப்பான் என்று கிஞ்சித்தும் அவன் எண்ணிப் பார்க்க வில்லை.. அக்கேள்வியினையும் பார்த்திபேந்திரனை உடன் வைத்துக்கொண்டா அவன் கேட்டு வைப்பான்..?

நந்தினியை ஓர்முறை சந்தித்திருந்த பார்த்திபேந்திரன் என்னவோ அவனது உரிமையுள்ள மனையாட்டியின் ரகசிய நிருபத்தை கந்தமாறன் கொண்டு வந்து விட்டதைப் போல கந்தமாறனை அனல் பார்வை பார்த்து வைத்தான்..

'இவன் எதற்காக இப்பார்வை பார்க்கிறான்..?' கந்தமாறன் குழம்பினான்..

அந்தக் குழப்பத்தை அடுத்து தெளிவு படுத்திக் கொள்ளலாம் என்று ஒதுக்கி ஓர் மூலையில் அமர வைத்து விட்டு ஆதித்த கரிகாலனின் வினாவிற்கு விடையளித்தான்.

"இல்லை இளவரசே..! இந்த ரகசிய நிருபத்தை நான் கொண்டு வருவதைப் பற்றி எமது தந்தை அறிய மாட்டார்.."

"பலே..! பலே..! கடம்பூரின் சம்புவரையர் பெற்றிருக்கும் தவப்புதல்வன் மெய்யுரைத்து விட்டான்.. ஏன் இளைஞனே..? அவ்வாறு தமது தந்தைக்கும் தெரியாமல் இந்நிருபத்தை தாம் கொண்டு வர வேண்டிய அவசியம்தான் யாது..?"

ஆதித்த கரிகாலனின் கிடுக்கிப்பிடி வினாவில் திணறிப் போய் விட்டான் கந்தமாறன்.. எதை உரைப்பது என்று தடுமாறி உண்மையை உரைத்து விட்டான்..

"அது... அது.."

"எது..? எது..?"

"பழுவூர் இளைய ராணி.."

"ஆம்.. பழுவூர் இளையராணி நந்தினிதான்.. அதைப்பற்றி இப்போது என்ன..?"

நந்தினியின் நாமத்தை வெகு இயல்பாக உரைக்கும் கரிகாலனின்மீது கந்தமாறனுக்கும், பார்த்திபேந்திரனுக்கும் ஒன்றுபோல பொறாமை வந்தது..

'இளவரசர் மட்டும் நந்தினி என்ற நாமத்தை உரைப்பதா..?'

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"திடீர் தோழமை..?" இடக்காக வினவினான் கரிகாலன்..

"அல்ல இளவரசே..! இவர் யாரோ.. நான் யாரோ.."

"எனையும் எவர் என்று வினவி வைக்க மாட்டாயே..?"

என்னடா இது என்று ஆகி விட்டது கந்தமாறனுக்கு.. இப்படியா ஒரு மனிதன் முன்னால் வந்தால் கடிப்பதும்.. பின்னால் சென்றால் உதைப்பதுமாக இருப்பான்..?

நந்தினியின் ஓர் மோகனப் புன்னகைக்காக.. இப்படியொரு இடக்குப்பிடித்த இளவரசனிடம் மாட்டிக் கொள்ள நேரிட்டு விட்டதே என்ற துயரம் அவனுக்குள் பொங்கியது..

"அல்ல இளவரசே..!"

"இதைத் தவிர்த்த வேறு வார்த்தையை நீ அறிய மாட்டாயா..?"

'விதி..' என்று நொந்து போனான் கந்தமாறன்..

இவ்வாறா தானாக முன் வந்து உரலுக்குள் தலையைக் கொடுத்து வைப்பான்..? இந்த சோழதேச இளவரசன் கந்தமாறனை ஓர்வழி பண்ணாமல் விட மாட்டேன் போல உள்ளதே..

"அறிவேன் இளவரசே..!"

"எவரை அறிவாய்..? பழுவூர் இளையராணி நந்தினி தேவியையா..?"

"அல்ல இளவரசே..!"

"அவ்வாறெனில் நீ நந்தினியை அறியவில்லை என உரைக்கின்றாயா..? அவளை அறியாமலா அவளுடைய ரகசிய நிருபத்தை சுமந்து வந்தாய்..?"

ஆலோசிக்காமல் ஆதித்த கரிகாலனின் பாதம் பற்றிக் கதறி விடலாமா என்று ஆலோசித்தான் கந்தமாறன்..

'போதும் இளவரசே..! இந்த அடி அடித்தால் நான் தாங்க மாட்டேன்..' என்று உண்மையை ஒப்புக் கொண்டு விடலாமா என்றும் நினைத்தான்..

இப்படியொரு மரண மொக்கையுடன் கந்தமாறனை ஆதித்த கரிகாலன் வரவேற்று வைப்பான் என்பதை அறிந்திருந்தால் காஞ்சியின் பக்கம்கூட கந்தமாறன் சிரம் வைத்து துயில் கொண்டிருக்க மாட்டானே..

---

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 21

## *எத்திசையில் திரும்பினாலும்..*
## *நின் முகமே அங்கிருக்கும்..*

ஆனாலும் யாமினி இந்த அளவுக்கு சோதித்து வைக்கக் கூடாது என்று அன்று தோன்றி வைத்தது பிரதாப்புக்கு.. என்றுமே மகளுக்கு சப்போர்ட்டாய் குரல் கொடுப்பவரால் அன்று அந்தக் குரலை எழுப்ப முடிய வில்லை.. இப்படி இருட்டுக்குள் தோட்டத்தில் உலாவும் மகளைப் பெற்று வைத்துவிட்டு எந்த முகத்தோடு அவர் சப்போர்ட்டாய் குரல் எழுப்புவார்..?

அவருடைய சங்கடத்தை உணராதவளாக தன் போக்கில் முயல் குட்டியின் காதுகளை வருடி விளையாடிக்

கொண்டிருந்தாள் யாமினி.. மகளின் விளையாட்டில் மனம் கனிந்து விட்ட பிரதாப்..

"எப்படி விளையாடறான்னு பாரு அனு..! அப்படியே அச்சு அசல் இவ ஆறு வயசுக் குழந்தைதான்.." என்று சொல்லியபடி அருகில் பார்த்தார்..

அங்கே அனுராதா இல்லை.. அவளுக்குப் பதிலாக யதுநந்தன்தான் நின்று கொண்டிருந்தான்..

"அம்மா அப்பவே இவ பண்ணின அழிச் சாட்டியத்தைத் தாங்கிக்க முடியாம வீட்டுக்குள்ளே போயாச்சு.. இந்நேரத்துக்கு எத்தனை பாத்திரம், பண்டம் உடைஞ்சிருக்குதோ.. ம்ஹூம்.. நீங்க என்னடான்னா இவள பச்சைக் குழந்தைங்கறிங்க.. எந்தப் பச்சைக் குழந்தை இருட்டுக்குள்ளே தோட்டத்தில வந்து உக்காந்து கோட்டான் போல கத்திக்கிட்டு இருக்குமாம்..?" யதுநந்தன் எரிந்து விழுந்தான்..

"டேய்..! அது குயில்டா.."

"இருட்டுக்குள்ளே குயில் கத்தினாலும் எனக்கு அது கோட்டான் சத்தம் போலதான் கேட்டு வைக்கும்.."

"நீ இருக்கியே..."

"அப்பா..! முதல்ல இவ எதுக்காக இருட்டுக்குள்ள தோட்டத்துக்கு வந்தான்னு கேளுங்க.. வயசுப் பெண்ணுப்பா.. மகாபலிபுரத்தில உள்ளூர்காரங்களை விட வெளியூர்காரங்க நடமாட்டம்தான் அதிகமா இருக்கு.. இவ இப்படின்னு நமக்குத் தெரியும்.. மத்தவங்களுக்கு என்ன தெரியும்.."

"இது நம்ம வீட்டுத் தோட்டம்டா.. இங்கே யார் வரப் போறா...?"

சொல்லும் போதே அதிலிருந்த அபத்தத்தை உணர்ந்தார் பிரதாப்.. ஒருநாளைப் போல எல்லா நாள்களும் இருக்காது என்பதை அறிந்தவர்தான் அவர்.. யாமினியின் அன்றைய செய்கையில் அவருக்கு துளிக்கூட உடன் பாடில்லை.. ஆனாலும் செல்ல மகளை விட்டுக் கொடுத்துப் பேச அவருக்கு மனம் வரவில்லை..

"உங்ககிட்டச் சொன்னா வேலைக்கு ஆகாதுப்பா.." யதுநந்தன் சீறினான்..

"அப்படியில்லடா யது.."

"என்னத்த நொப்பபடியில்ல..? நீங்க கொஞ்ச நேரம் பேசாம இருங்க சொல்றேன்.. யாமினி..! ஏய்ய் யாமினி..!"

முயல் குட்டியுடன் மும்முரமாக கதை பேசிக் கொண்டிருந்த யாமினி நிமிர்ந்து யதுநந்தனை இயல்பாக பார்த்து வெள்ளையாக சிரித்து வைத்தாள்.. யதுநந்தனின் வேகம் குறைந்தது..

'இவகிட்ட என்னத்தைச் சொல்றது..?'

"என்ன அண்ணா..?"

"உன்னை புத்திசாலின்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன் யாமினி.."

"கூடப் பிறந்த பாசம்.. தெரியாம நினைச்சுட்ட.. நான் சுத்த மக்கு.. உனக்குத்தான் அது தெரியலை.."

யாமினி கலகலத்துச் சிரிக்க.. அவளை விட்டு விட்டு பிரதாப்பை முறைத்து வைத்தான் யதுநந்தன்..

"நான் என்னடா செய்வேன்..?" பரிதாபமாக கேட்டார் அவர்..

"அம்மா இவளைதிட்டறப்பல்லாம் சம்மன் இல்லாம ஆஜராவீங்கள்ல.. இப்ப என்ன சொல்லப் போறிங்க..?"

"எதுவும் சொல்ல மாட்டேண்டா.."

"எப்படிச் சொல்வீங்க..? எனக்கு வர்ற கோபத்துக்கு.."

"கண்ட்ரோல் யுவர் ஷெல்ப் மைடியர் சன்.."

"கண்ட்ரோல் ரூம் சர்விஸை இவகிட்டக் காட்ட வேண்டியது தானே..?"

தகப்பனும் மகனும் வழக்கடித்துக் கொண்டிருப்பதை வியப்புடன் கவனித்த யாமினி முயல்குட்டியை போனால் போகிறது என்று விடுவித்து விட்டு எழுந்தாள்.. அது தப்பித்தேன், பிழைத்தேன் என்று ஓடி மறைந்தது.. அவர்களுக்கு அருகில் வந்தவள்..

"ஏன் அண்ணா அப்பாகிட்ட கோபிச்சுக்கற..?" என்று பச்சிளம் மழலையாக கேட்டு வைத்தாள்..

அதில் யதுநந்தனுக்கு கோபம் தலைக்கேறியது..

"ஊம்..? உன்னைக் கண்ட்ரோல் பண்ணாம வளர்த்து வைச்சிருக்காரில்ல.. அதை ஏன்னு கேட்டுக்கிட்டு இருக்கேன்.." என்று தங்கையிடம் வெடித்தான்..

"என்னை எதுக்கு கண்ட்ரோல் பண்ணனும்..?" யாமினி முகம் மாறினாள்..

"இப்படி இருட்டுக்குள்ளே மோகினிப் பிசாசைப் போல கதவை பப்பரப்பான்னு திறந்து போட்டுட்டு கொஞ்சம்கூட பயம் பத்தில்லாம தோட்டத்துக்குள்ள உலவிக்கிட்டு இருக்கே பாரு.. அதை கண்ட்ரோல் பண்ணனும்னு சொன்னேன்.." யதுநந்தன் பொரிந்து தள்ளி விட்டான்..

அதிகாலைத் தூக்கத்தை தியாகம் செய்யநேர்ந்த கோபம் அவனுக்கு..



## 22

*எதன் பொருட்டு எனை அழைத்தாய்..?*
*எனதுயிர் பறிக்கவா.. அழைத்தாய்..?*

நந்தினியின் ரகசிய நிருபம்.. பகை முடிக்கும் அழைப்பைக் கொண்டது என்பதை ஆதித்தகரிகாலன் அறிந்து விட்டான்.. அவனது நேசக்கரங்களைப் புறக்கணித்து அவன் தொட்டுவிட முடியாத உறவு முறையில் அவன் கண்ணெதிரே வந்து சோதித்த நந்தினியா அவனிடம் நேசக்கரம் நீட்டியிருக்கிறாள்..?

துளியளவும் அதில் மெய்யிருக்கக் கூடும் என ஆதித்தன் நம்பவில்லை.. அவனது ஆழ்மனதில் அதைக் குறித்த போராட்டம் நடந்து கொண்டிருக்க.. வெளிப் பார்வைக்கு ஏதும் நிகழாததைப் போல கந்தமாறனை கேள்வி கேட்டு அலற வைத்துக் கொண்டிருந்தான்..

"ஆக.. பழுவூர் இளையராணி நந்தினிதேவி.. கடைக்கண் பார்வையில் கட்டளையிட்டால் நீ எதை வேண்டுமானாலும் செய்துவிடத் துணிவாய்.. அவ்வாறு தானே கந்தமாறா..?"

இந்த வினாவிற்கு கந்தமாறன் எவ்வாறு 'ஆம்' என்ற பதிலை உரைத்து வைப்பான்..? அவ்வாறு உரைக்க அவனால் இயலுமா..?

"அல்ல இளவரசே.." நாக்குழறினான்..

"அல்லவா..? யாதடா இது..! நந்தினியிடம் உன்னைப் பற்றி உயர்வாக எடுத்துச் சொல்ல எண்ணியிருந்தேன்.. அவள் மீதான உனது விசுவாசம் இவ்வளவுதானா..? இருக்கட்டும்.. நந்தினியை நான் சந்திக்கும்போது இதைப் பற்றி எடுத்துச் சொல்கிறேன்.."

ஆதித்த கரிகாலனின் அச்சுறுத்தலில்..

"இளவரசே..!" என்று அலறி விட்டான் கந்தமாறன்..

"என்ன கந்தமாறா..?" ஒன்றும் அறியாதவனைப் போல வினவி வைத்தான் ஆதித்த கரிகாலன்..

"பழுவூர் இளையராணியின் நம்பிக்கைக்கு உரிய சேவகன் நான்.."

"ஆஹா..! அற்புதம்..! கடம்பூர் பெரும் பேறை பெற்றது.. கடம்பூர் மாளிகையின் சம்புவரையரின் புதல்வன்.. பழுவூர் இளையராணியின் நம்பிக்கைக்கு உரிய சேவகன்..! என்ன ஒரு பெருமிதம்..! உனைப் போன்ற ஓர் புதல்வனைப் பெற உனது தாய், தந்தை தவமிருந்திருக்க வேண்டும்.. உனது உரையில் மகிழ்ந்து போனோம்.."

ஆதித்த கரிகாலன் பாராட்ட, பாராட்ட, மலையமான் இளநகையை கொண்டார்.. அப்போதைய சூழ்நிலையில் கடம்பூரின் சம்புவரையனை பகைத்துக் கொள்வது உசிதமான ஒன்றல்ல என்பது அவரது நினைவு..

பார்த்திபேந்திரன் அப்படியல்ல.. நந்தினியின் நம்பிக்கைக்கு உரிய சேவகனாக.. கந்தமாறன் இருப்பதாக உரைப்பதா என்ற சினத்தில் பலமாக நகைத்து வைத்தான்.. கந்தமாறனின் வதனம் கருத்துவிட்டது..

"அனைத்தும் சரி கந்தமாறா.. தாம் சோழதேசத்தின் நம்பிக்கைக்கு உரிய சேவகனல்ல போலவே.." நிதானமாக கூறினான் ஆதித்தன்..

"இளவரசே..!" கந்தமாறன் பதறினான்..

"இளவரசனேதான்.. அதில் தமக்கு ஏதும் சந்தேகம் உள்ளதா கந்தமாறன் அவர்களே..?"

"எமை சோதிக்க வேண்டாம்.. கடம்பூரின் சம்புவரையரின் குலம் சோழ சக்கரவர்த்தியின் ஆளுகைக்கு உட்பட்டது.."

"எமது ஆளுகையில் இருந்து கொண்டு, நம்பிக்கையையும், விசுவாசத்தையும் பழுவூரின் இளைய ராணியின் மீது தாம் வைப்பீரா..?" ஆதித்த கரிகாலனின் விழிகள் சிவந்தன..

இவ்வாறு போட்டு வாங்கி புதை குழியில் ஆதித்தன் தள்ளி விடுவான் என்பதை முன் கூட்டியே அறிய

நேர்ந்திருந்தால் கந்தமாறன் 'பேசா விரதம்' என்று சைகை செய்து விட்டு பேசாமடந்தையாக நின்று சென்றிருப்பானே..

'இந்த இளவரசனை கடம்பூர் அரண்மனை தாங்குமா..?' அவன் கவலை கொண்டான்..

"அபயம் இளவரசே.." கந்தமாறன் கரம் குவித்து விட்டான்..

"எவரிடமிருந்து உன்னை நான் காக்க வேண்டி அபயம் கேட்கிறாய் இளைஞனே..! நந்தினியின் மோகனப் பார்வையின் வீச்சிலிருந்து உனைக் காக்க வேண்டி அபயம் கேட்கிறாயா..?" ஆதித்தன் வினவி வைத்தான்..

"இந்த விளையாடலுக்கே யாம் வரவில்லை இளவரசே..! தயை கூர்ந்து எனை விடுவித்து.. நான் பிழைத்துப் போக அருள் பாலித்து கடம்பூருக்கு அனுப்பி வைத்து விடுங்கள்.. கோடி புண்ணியம் தமக்குக் கிட்டும்.."

"கோடி புண்ணியத்தை வைத்து யாம் என்ன செய்ய..?"

ஆதித்த கரிகாலன் கந்த மாறனிடம் கேட்டு வைத்தான்.. அது போதாது என்று.. வானத்தை வேறு வெறித்துப் பார்த்து வைத்தான்..

'உன்மத்தம் பிடித்த இளவரசனிடம் மாட்டிக் கொண்டோமே..' உழன்று போனான் கந்தமாறன்..

"அந்தக் கோடிப் புண்ணியமும் என்னை காத்து விடப் போகிறதா..?"

தனக்குள்ளே பேசிக் கொண்ட ஆதித்த கரிகாலன்.. கந்தமாறனை நோக்கி புறப்படும்படி சமிக்ஞை செய்தான்..

விட்டால் போதும் என்று.. முள்ளின் மீது நின்றிருப்பதைப் போல நின்றிருந்த கந்தமாறன்.. புரவியின் மீது பாய்ந்து ஏறி அதை விரட்டு.. விரட்டு என்று விரட்டியபடி ஓடியே போனான்..

"பிசாசு துரத்துவதைப் போல ஓடுகிறானே.." என்றான் பார்த்திபேந்திரன்..

"மோகினிப் பேய் பிடித்திருப்பவனை பிசாசினால் ஏதும் செய்ய இயலாது.." என்றார் மலையமான்..

பார்த்திபேந்திரனுக்கு மலையமான் அவ்விதம் மறைமுகமாக நந்தினியை மோகினிப் பேய் என்று அழைத்தது உடன்பாடாக இல்லை..

இருந்தும் அதைப்பற்றி எதையும் உரைத்துக் கொள்ளாமல் மனதுக்குள் மலையமானை..

'கிழவருக்கு குசும்பு அதிகம்..' என்று திட்டித் தீர்த்தான்..

"முடிந்து விட்டதா...?" வானத்தை வெறித்தபடி வினவினான் ஆதித்தன்..

"எதைப்பற்றி வினவுகிறீர்கள் இளவரசே..?" பார்த்திபேந்திரன் குழம்பினான்..

"எமது பாட்டனை தமது மனதிற்குள் வசைபாடிக் கொண்டிருந்தாயே.. அந்த வசைபாடல் முடிந்தாகி விட்டதா என்று வினவினேன்.." என்ற ஆதித்த கரிகாலன்..

"இளவரசே..!" என்று பார்த்திபேந்திரனை அலற வைத்தான்..

'அடுத்த பலிகடா நானா..? கந்தமாறனுக்காவது தப்பித்துச் செல்ல கடம்பூர் உள்ளது.. எனக்கு எந்த மார்க்கமுள்ளது..?' அரண்டு போன பார்த்திபேந்திரன்..

"பாட்டா..! தங்களைப் போய் நான் மனதுக்குள் வசை பாடுவேனா..?" என்று அழமாட்டாத குறையாய் மலையமானை சரணடைந்தான்..

"விட்டுவிடு பார்த்திபேந்திரா.. நீ சென்று நமது பரிவாரங்களைப் பார்வையிட்டு வா.." மலையமான் அவனை விடுவித்து அனுப்பி வைத்து விட்டார்..

தப்பித்தேன்.. பிழைத்தேன்.. என்று பார்த்தி பேந்திரனும் புரவியில் தாவி ஏறி ஓட்டம் பிடித்தான்..

"எப்படி ஓடுகிறான் என்று பாருங்கள் பாட்டா.." என்றான் ஆதித்தன்..

"இவனையும் அந்த மோகினிப் பேய் பிடித்திருக்கலாம்.." என்ற மலையமான் பேரனின் முகத்தை கூர்ந்து நோக்கியபடி..

"எதன்பொருட்டு இவர்களை கதறடிக்கிறாய் ஆதித்தா..?" என்று வினவினார்..

ஆதித்த கரிகாலன் விடையுரைக்கவில்லை.. மலையமானே தொடர்ந்து பேசலானார்.. அவர் மனதில் ஏதோ ஓர்விதமான அச்ச உணர்வு எழுந்தது.. நிகழக் கூடாத ஏதோ ஒன்று நிகழப் போகிறது என்று அவரது அடிமனதில் ஓர் பட்ஷி கூவியது.. அதில் அவர் சங்கடமடைந்தார்...

"உன்னை எனது மகளான உனது தாய் வானமாதேவி ஈன்றபோது இவ்வுலகிலேயே நான்தான் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்டேன் என்று பெருத்த மகிழ்ச்சியை அடைந்தேன் கரிகாலா...! அனைவருக்கும் விருந்து வைத்து பரிசில்களை வணங்கினேன்.. எனது பொக்கிச அறை காலியானது அத்தருணத்தில்தான் அத்துனை பெருமகிழ்வு கொண்டேன்.. எனக்குப் பிரியமான பேரனே..! என் மனம் அஞ்சுகிறது... இப்போதுள்ள சூழலில் நீ இந்த விருந்து அழைப்பை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டுமா..?"

"ஆம் பாட்டா..! ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்..."

"எதன் பொருட்டு கரிகாலா..?"

"என் மனதிற்கு அமைதி கிட்டி விடாதா என்பதின் பொருட்டு நான் இப்பயணத்தை மேற்கொள்ளப் போகிறேன் பாட்டா..! இரவும் பகலும் என்னைத் துரத்தும் நினைவுகளிடமிருந்து தப்பிக்கும் மார்க்கத்தை அடைவதற்காக இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன்.."

"வேண்டாம் ஆதித்தா..! நீ கடம்பூருக்குச் செல்ல வேண்டாம்.."

"நான் செல்லத்தான் வேண்டும் பாட்டா..! அதில் தீர்மானமாக இருக்கிறேன்.. எனை நீங்கள் தடுத்து நிறுத்த முனைய வேண்டாம்.. அதனால் தங்களுக்கு யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லை.. என் பயணம் உறுதியானது.. எனது முடிவும் இறுதியானது.."

ஆதித்த கரிகாலனின் வார்த்தைகளில் துணுக்குற்றார் மலையமான்.. முடிவு இறுதியானது என்று அவன் உரைத்து விட்டதில் கலக்கம் கொண்டார்.. அந்தச் சொற்றொடர் எந்த துர்நிமித்தத்தைக் குறிக்கிறது என்று சாந்தியில்லாமல் தவித்தார்..

ஆதித்த கரிகாலன் புறப்பட்டு விட்டான்.. எவர் தடுத்தும் கேட்காமல் நந்தினியின் அழைப்பை ஏற்று கடம்பூருக்கு புறப்பட்டு விட்ட மகள்வழிப் பேரனை நினைத்துத் துயரம் கொண்டார் மலையமான்.. பரிவாரங்களுடன் கிளம்பிய ஆதித்த கரிகாலனுடன் கெடிலநதிக்கரை வரை அவரும் சென்றார்.. செல்லும் விழயில் ஆதித்த கரிகாலனுக்கு புத்திமதிகள் உரைத்த வண்ணமிருந்தார்..

"அருள்மொழிவர்மன் தொலைந்து போய் விட்டதாக வதந்தி பரவியிருக்கும் இந்தத் தருணத்தில் நீ தஞ்சைக்கு திரும்ப வேண்டியது அவசியமான ஒன்றாகி விட்டது கரிகாலா..! தஞ்சையோ பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது... அவர்களுடன் இத்தருணத்தில் நீ இணக்கமாக போக வேண்டியது அவசியம் பேரனே..! அதன் பொருட்டே சம்புவரையனின் மாளிகைக்கு நீ விருந்துண்ணப் போவதை நான் அனுமதித்தேன்.. எனக்கும் அவன் அழைப்பு விடுத்திருந்தால் நானும் உன்னுடன் வந்திருப்பேன்.. இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை.. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக்

கொள்வோம்.. சம்புவரையனின் புதல்வியை உனக்கு மணம் முடித்துக் கொடுக்க அவன் திட்டம் தீட்டியிருந்தால் மறுக்காமல் அதற்கு ஒப்புக் கொள்வது உனக்கு நன்மை பயக்கும் கரிகாலா..! சம்புவரையன்தான் பழுவேட்டரையர்களின் வலது கரம்.. அவன் பின்னால் இருக்கும் குறுநில மன்னர்களும் உன்பக்கம் வந்து விட்டால் உனக்கு எதிராக சுண்டு விரலை அசைக்கக் கூட பழுவேட்டரையர்களால் இயலாது.."

"அவர்களின் சுண்டு விரல்களை அவர்களே பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளட்டும்.. இந்த சோழ தேசத்தை தாராளமாக நான் மதுராந்தகனுக்கு தாரை வார்த்துக் கொடுக்கிறேன்.. எனது புஜபல வலிமையினால், காஞ்சியை வென்றதைப்போல.. வடதிசையில் படையெடுத்துச் சென்று தேசங்களை வென்று எனக்கென்று ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்ளும் வலிமை என்னிடம் உள்ளது.. அந்த மதுராந்தகனிடம் யாது உள்ளது..? ராஜ்யத்திற்காக பெண்களின் சிவிகையில் ஒளிந்து மறைந்து வந்து பக்கபலம் தேடும் குள்ள நரித்தனம்தானே உள்ளது..?"

"சில தருணங்களில் சிங்கத்தைவிட குள்ளநரியிடம் நாம் அச்சம் கொண்டாக வேண்டும் பேரனே..! சிங்கம் எதிர் நின்று தாக்கும்.. உன்னைப் போல..! குள்ளநரியோ மறைந்திருந்து கவிழ்க்கும்.. மதுராந்தகனைப் போல..! எனவே கடம்பூரில் இருக்கும் தருணங்களில் கவனம் அவசியம் பேரனே...!"

"ஹ..! இந்த ஆதித்த கரிகாலனை அணுக ஆபத்தும் அஞ்சும் பாட்டா..! தாம் அச்சம் கொள்ள வேண்டாம்.."

"தமது வீரத்தில் எமக்கு யாதொரு சந்தேகமுமில்லை கரிகாலா..! வஞ்சகத்தை எண்ணித்தான் அஞ்சுகிறேன்.. வஞ்சகத்திற்கு இரையாகி விடாதே என்னருமை ஆதித்தா..!. நகைப்பதைப் போல வதனம் காட்டி நட்புறவுடன் கரம் நீட்டுவோரின் முதுகிற்குப் பின்னால் கொடுவாள் மறைந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமுண்டு.. நீ வஞ்சகத்திற்குப் பலியாகி விடாதே.."

கலக்கம் கொண்ட அந்த முதியவரின் கவலை சூழ்ந்த வதனத்தை எல்லையற்ற பிரியத்துடன் நோக்கினான் கரிகாலன்..

வரும்முன் காக்க வேண்டும் என்ற மலையமானின் அறிவுரை அவனுக்குப் புரியத்தான் செய்தது, அவன்தான் வரப்போவது எது என்பதை அறிந்திருந்தும் ஆபத்தை சந்திக்க விரைந்து கொண்டிருக்கிறானே..

ஆதித்த கரிகாலனின் துணிவு வியக்கத்தக்கது.. அவன்மீது அவனுடைய தாய்வழிப் பாட்டனான திருக்கோவிலூர் மலையமான் கொண்டிருந்த நேசமும் வியக்கத் தக்கதுதான்..

அந்த முதியவரின் உள்ளுணர்விற்கு கடம்பூரில் பேரனுக்காக காத்துக் கொண்டிருக்கும் ஆபத்து புலப்பட்டு விட்டது... அதுதான் அவர் தனது பேரனின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பாசத்தின் அடையாளம்...

கடம்பூருக்கு ஆதித்தன் தனித்துச் செல்வதை அவர் விரும்பவே இல்லை... சூழ்நிலையின் நிர்பந்தத்தால் கெடில நதிக்கரையில் தமது உயிருக்கும் நிகரான பேரன் ஆதித்த கரிகாலனைப் பிரிந்து திருக்கோவிலூர் நோக்கிப் பயணமானார் மலையமான்..

'மீண்டும் இவரைப் பார்க்கக் கூடுமோ..?'

ஆதித்த கரிகாலனின் மனம் அசைந்தது.. வேதனை கொண்ட உள்ளத்துடன் பிரிய மனமின்றி பிரிந்து சென்ற அந்த முதியவருக்கு விடைகொடுத்து அனுப்பி வைத்தான் ஆதித்த கரிகாலன்..

பரிவாரங்களுடன் அவனது பயணம் தொடர்ந்த வேளையில் புழுதி பறக்க.. புரவியில் விரைந்து வந்து அவன் முன்பு இறங்கினான் வந்தியதேவன்..

"வந்தியதேவனா..? வந்து விட்டாயா..?" மகிழ்வுடன் இருகரம் நீட்டி அவனைத் தழுவிக் கொண்டான் ஆதித்தன்..

"தங்களுக்கு தங்களின் இளைய சகோதரி குந்தவை பிராட்டியிடமிருந்து செய்தி கொண்டு வந்தேன் இளவரசே.." என்றான் வந்தியதேவன்..

"யாது அது..?"

"தங்களை கடம்பூருக்குச் சொல்ல வேண்டாம் என்று இளவரசி குந்தவை கேட்டுக் கொண்டுள்ளார் இளவரசே..! இளவரசர் அருள்மொழிவர்மர் புத்த விஹாரத்தில் பாதுகாப்பாக உள்ளார்.. இச்செய்தியையும்

தங்களிடம் அவர் தெரிவிக்கச் சொன்னார்.. இன்னுமொரு செய்தியும் உண்டு.. அது யாதெனில் பழுவூர் இளையராணி நந்தினி தேவி தங்களுக்கு சகோதரி முறையில் இருப்பவர் என்ற தகவலைதங்களிடம் இளவரசி தெரியப் படுத்தும்படி கூறினார்.. சக்கரவர்த்தியின் இளமைப் பிராயத்தில் நந்தினியின் தாயான மந்தாகினிதேவியை காதலித்தாராம்.. அதன் பின்னர் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக பதவியேற்றவுடன் மந்தாகினியை பிரிந்து விட்டாராம்.. அந்த ஊமை ராணி சக்கரவர்த்தியைத் தேடி பழையாறைக்கு வந்து விட்டாராம்.. சக்கரவர்த்தியை அணுக இயலாமல் கோடிக்கரையின் கலங்கரை விளக்கத்தில் ஏறி தன்னை மாய்த்துக் கொள்ளும் உசிதத்துடன் கடலில் குதித்து விட்டாராம்.. கருத்திருமன் என்பவன் அவரைக் காப்பாற்றினானாம்.. முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயர் அவனிடம் பொற்காசுகளைக் கொடுத்து மந்தாகினியை இலங்கையில் கொண்டு சென்று விட்டு விடும்படி கூறி விட்டு சக்கரவர்த்தியிடம் மந்தாகினி இறந்து விட்டதாக உரைத்து விட்டாராம்.. சிறிது காலம் கழித்து.. செம்பியன் மாதேவியின் பாதுகாப்பில் நிறைமாத கர்ப்பிணியாக ஊமை ராணியான மந்தாகினி இருப்பதைக் கண்டாராம்.. அந்த மந்தாகினிக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஆண்குழந்தை என்ன ஆனது என்று தெரியவில்லையாம்.. பெண் குழந்தைதான் நந்தினியாம்.. அதன் பொருட்டே தங்களின் நந்தினி மீதான காதலை இளவரசி குந்தவைப் பிராட்டி தடுக்க முற்பட்டார்களாம்.."

வந்தியதேவன் கூறியதை கவனமாக செவி மடுத்த ஆதித்த கரிகாலன்..

"நந்தினி.. எனது சகோதரியா..?" என்று வினவி விட்டு உரக்க நகைத்தான்..

'இதற்கு என்ன பொருள்..?' வந்தியதேவனுக்கு கேசத்தைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது..

ஆதித்த கரிகாலன் நெடும் மூச்சுடன் வந்திய தேவனை ஏறிட்டான்..

"அனைவருக்கும் அவரவர் தரப்பில் நியாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.. இல்லையா வந்தியா தேவா..? எமது தங்கை குந்தவை எனது காதலை தடுக்க முற்பட்ட போது நான் அவள்மீது சினம் கொண்டேன்.. தாய், தந்தையற்ற அநாதை என்பதற்காக நந்தினியை குந்தவை வெறுத்து அவமதிக்கிறாள்.. என்னிடமிருந்து பிரித்து வைக்கிறாள் என்று எண்ணினேன்.. தற்போதுதான் அனைத்தும் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.. நந்தினியை அவமதித்து அவளது மனம் புண்படும்படி பேசி வைத்தால்.. அவள் என்னை விட்டு விலகிப் போய் விடுவாள்.. எனக்குப் பழி ஏற்படாது என்று குந்தவை எண்ணியிருக்கிறாள்.. என்னிடம் சொல்ல இயலாத ரகசியத்தை அவள் மனதில் புதைத்து வைத்திருக்கிறாள்.. குந்தவை பத்தரை மாற்றுத் தங்கம் வந்தியதேவா..!"

"ஆம் இளவரசே..! அவ்வாறென்றால் நாம் தஞ்சைக்குச் சென்று விடலாமா..?" தன்மையாக வினவினான் வந்தியதேவன்..

"ஊஹூம்.." என்று அதை மறுத்து வைத்தான் ஆதித்த கரிகாலன்..

'ஏதடா இது.. இந்த இளவரசருடன் மல்லுக்கு நிற்க வேண்டியதாக உள்ளதே.. தற்போதுதான் குந்தவை பத்தரை மாற்றுத்தங்கம் என்று உரைத்தார்.. இவ்வாறு கணப்பொழுதில் சித்தம் மாறும் இளவரசரைக் காத்து தஞ்சைக்கு அழைத்துச் செல்ல என்னவெல்லாம் பாடாய் பட வேண்டி வருமோ.. காஞ்சி ஏகாம்பரேஸ்வரா..! நீயே துணை..! என்னைக் காத்தருள வேண்டும்..' வந்தியதேவன் மனதுக்குள் புலம்பினான்..

"நான் கடம்பூர் செல்ல முடிவெடுத்ததை எவராலும் மாற்ற இயலாது.."

"அவ்வாறெனில் நானும் தங்களுடன் வருவேன் இளவரசே.."

"தாராளமாய் வருகைதரலாம்.. அங்கே உனது உயிர் நண்பன் கந்தமாறன் உனக்காக காத்திருக்கிறான்.. இங்கே உனது இணை பிரியா ஆருயிர் நண்பன் பார்த்திபேந்திரன் உன் வரவில் அகம் மகிழ்ந்து போயிருக்கிறான்.. இவர்களுடன் நீ அளவளாவ விரும்புவதை எதன் பொருட்டு நான் தடை செய்யப் போகிறேன்..?"

ஆதித்த கரிகாலனின் நையாண்டி உரையில் வந்திய தேவனுக்கு புரவியிலேயே முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. அவனருகில் வந்த புரவியில் ஆரோகணித்திருந்த பார்த்திபேந்திரன் வந்தியதேவனை

வெட்டி வீழ்த்தவா.. அல்லது.. கொன்று புதைக்கவா என்ற ரீதியில் வெகு நட்பாக (?) பார்த்து வைத்தான்..

'இவன் எனக்கு இணை பிரியா நண்பனாம்..? ம்ஹீம்..'

வந்தியதேவன் நெடும் மூச்சை வெளியேற்றினான்..

"அனைத்தும் இருக்கட்டும் வந்தியதேவா..!"

"நான் வேண்டாமென்று மறுக்கவில்லையே இளவரசே..? அனைத்தும் முன்னர் இருந்தபடியே இருக்கட்டும்.. எனக்கொன்றும் ஆட்சேபமில்லை.."

"ஏன்..? ஆட்சேபித்துத்தான் பாரேன்.."

"இளவரசே..! தங்கள் மனதில் கோபமிருந்தால்.. புரவியை நிறுத்தி.. என் முதுகில் நான்கு மொத்துக்களை மொத்தி விடுங்கள்.. தயைகூர்ந்து இந்த வார்த்தை விளையாட்டுக்கு என்னை அழைக்காதீர்கள்.. அடியேன் தாங்க மாட்டேன்.. நான் பிழைத்து வாழ தயை காட்டுங்கள்.."

"என்ன அப்பனே இது..? நீயும், உனது உயிர் நண்பன் கந்தமாறனும் ஒன்று சொன்னார் போல.. உங்களை விளையாட்டுக்கு அழைக்க வேண்டாம் என்று கதறுகிறீர்கள்..? அவனும் இவ்வாறுதான் கதறினான்.."

"ஆஹா..! அவனையும் ஒரு கரம் பார்த்து விரட்டி அடித்து விட்டீர்களா இளவரசே..? அலறியடித்து ஓடியிருப்பானே.."

"மிகச் சரியாக உரைத்தாய் தோழனே..! எவ்விதமப்பா அதைக் கண்டுணர்ந்தாய்..? வியப்பாக உள்ளதே.."

"இதற்கென்று குடந்தை ஜோசியரிடம் சென்று ஆருடமா பார்த்து வரவேண்டும்..? எல்லாம் அனுபவ ஞானம்தான் இளவரசே..!"

"அனுபவம் பேசுகிறது..?"

"அல்ல இளவரசே..! அனுபவம் ஓடுகிறது.."

"ஓஹோ..!" ஆதித்த கரிகாலன் தாடையை சொரிந்தான்..

'ஆஹா..! சும்மாவே இந்த இளவரசர் ஒரு மார்க்கமாக பேசி வைப்பாரே.. தற்போது தாடையை வேறு சொரிந்து விட்டாரே.. என்ன நிகழப் போகிறதோ..' வந்தியதேவனின் அடிவயிறு கலங்கியது..

"அவ்வாறென்றால்.. நீ எப்போது ஓடப் போகிறாய் வந்தியதேவா..?"

'அதுதானே பார்த்தேன்.. இளவரசர் என்னைத் துரத்து வதிலேயே குறிக்கோளாய் இருப்பாரே..' தன்னை திடப் படுத்திக் கொண்டான் வந்தியதேவன்..

"நான் ஓடுவதனால் தங்களின் கரம் பிடித்து இழுத்துக் கொண்டுதான் ஓடுவேன் இளவரசே..!" வெகு கவனமாக விடையளித்தான்..

"நான் என்ன காரிகையா..? என் கரம் பற்றி இழுத்துக் கொண்டு நீ ஓட..? இந்நாட்டின் இளவரசன்..! அதை மறந்து விட்டு பேசுகிறாயா..?" ஆதித்த கரிகாலன் விழிகளை உருட்டினான்..

"துயில் கொள்ளும் போதும் அதை நான் மறவேன் இளவரசே..!" வினயமாக பதிலளித்தான் வந்தியதேவன்..

"என்ன நீ.. எதை உரைத்தாலும் சிக்க மறுக்கிறாய்..?" ஆதித்த கரிகாலன் நகைத்தான்..

"தங்களின் பயிற்சி அத்தகையது இளவரசே..." என்றான் வந்தியதேவன்..

"அனைத்தும் இருக்கட்டும் வந்தியதேவா..! உடனே அதற்கு உனக்கு ஆட்சேபணையில்லை என்று அளந்து விடாதே.. இந்த இருக்கட்டும் என்பது வேறு.. புரிந்ததா.."

"புரிந்தது இளவரசே.."

"உனது உயர் தோழன் கந்தமாறனை முதுகில் குத்தினாயாமே.. அது மெய்தானா..? அத்தகைய பரிசை அவனுக்கு அளித்து விட்டு நீ எந்த துணிவுடன் கடம்பூரில் விருந்துண்ண வருகிறாய்..? ஹா.. ஹா..."

"தாங்கள் என் அருகிலிருக்கும் துணிவுதான் இளவரசே..."

"அவ்வாறா..? ஹா.. ஹா.. ஹா.."

"ஆயினும் இளவரசே..! எனது நண்பன் ஒன்றை மறந்து விட்டான்.. எனது பகைவனாக இருந்தாலும் நான் நேருக்கு நேர் நின்றுதான் சந்திப்பேன்.. முதுகில் குத்துவது எனது வழக்கமல்ல.. கந்தமாறன் என்னை தவறாக புரிந்து கொண்டிருக்கிறான்.."

"நான் அறிவேன் நண்பா.." ஆதித்தன் வந்திய தேவனை நட்புடன் அணைத்துக் கொண்டான்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 22

## ஓடும் மேகங்கள் உனது நினைவை தந்து செல்லும்..

யதுநந்தனுக்கு காலைத் தூக்கத்தை மிகவும் பிடிக்கும்.. எதற்காகவும் அவன் அதை விட்டுக் கொடுத்த தில்லை.. அன்று அதைவிட்டுக் கொடுத்து விட்டு வீடு முழுவதும் இல்லாத திருடனை தேட வேண்டி வந்து விட்டதில் எக்கச்சக்க கோபம் கொண்டிருந்தான்.. அந்த கோபத்தில் தங்கைக்கொரு கீதம் இசைக்கவோ.. பாசமலர் வளர்க்கவோ அவன் தயாராக இல்லை.. எனவே எதிரியைப் பார்ப்பதைப் போல யாமினியை பார்த்து வைத்தான்..

"இப்ப எதுக்காக என்கூட மோதற..?" யாமினிக்கும் கோபம் வந்திருந்தது..

"இப்படி யோசிக்காம காரியங்களை செய்துக்கிட்டு இருந்தா உன்மேல கோபப்படாம கொஞ்சவா செய்வாங்க..?"

"இதோ பார்.. நம்ம வீட்டுத் தோட்டத்துக்கு வர நான் எதுக்காக யோசிக்கனும்..? பாருங்கப்பா.."

"அவர் பார்த்துக்கிட்டுத்தான இருக்கார்..? வேற என்னத்தச் செய்றார்..? ஒரு நாளாவது உன்னைத் திட்டி

வளர்த்திருந்தா நீ இப்படி மத்தவங்க தூக்கத்தோடு விளையாட மாட்ட.."

"பாருண்ணா.. எனக்கும் உன் தூக்கத்துக்கும் பேச்சில்லை.."

"பேச்சில்லாதப்பவே அதை துரத்தி அடிக்கிறதிலே குறியாய் இருக்கியே.. பிசாசே..!"

"யார் பிசாசு..?"

"நீதான்.."

"வேணாம் அண்ணா.. பிசாசுன்னு சொன்னே எனக்கு கெட்டகோபம் வந்திரும்.. ஆமாம்.."

"அதுக்கு பிசாசுதான் கோபப்படனும்.. நீயேன் கோபப்படற..?"

"அண்ணா..!"

"சும்மா சவுண்டு விடாதே.. நாள் முழுக்க முதுகொடிய வேலை பார்த்துட்டு அலுத்துக் களைச்சு வீட்டுக்கு வருகிறவனுக்குத்தான் தூக்கத்தோட அருமை தெரியும்.. உன்னைப் போல வீட்டிலே உட்கார்ந்துக் கிட்டு இருக்கிறதுகளுக்கு இப்படித்தான் தூக்கத்தோட அருமையும் தெரியாது.. நேரம் காலமும் தெரியாது.."

"நீ வேலைக்குப் போய் சம்பாதிக்கிற.. நான் வீட்டில வெட்டியா உட்கார்ந்துக்கிட்டு இருக்கேன்னு சொல்லிக் காட்டறியா..? நானும் அப்பாகூட கடைக்குப் போய் ஒத்தாசையாத்தான் இருக்கேன்.."

"உன் ஒத்தாசையை வெளியில சொல்லிராதே.. சும்மா சிலைகளைச் சுத்திச் சுத்தி வந்து அதுகளையே மணிக்கணக்கா பார்த்துக்கிட்டு நீ நிக்கிறதில வெளிநாட்டு டூரிஸ்டுக பயந்து போயிடறாங்களாம்.."

"நீ கண்ட...."

"நான் காணலை.. கண்டு வந்த பக்கத்து வீட்டு ஆண்ட்டி நம்ம அம்மாகிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தத காதால கேட்டேன்.."

"உன்னோட தூங்குமூஞ்சித் தனத்துக்கு என்னோட சிற்பங்கள ரசிக்கிற குணம் மேலானதுதான்.."

"வேலைக்குப் போய் பாரு.. அப்ப நீயும் தூங்கு மூஞ்சியாத்தான் மாறிருவ.. வெட்டியா வீட்டில இருந்தா இப்படித்தான் தோணிவைக்கும்.."

எப்படித்தான் என்று யாமினி கேட்கவில்லை... எக்கச்சக்க கோபத்துடன் இருக்கும் யதுநந்தன் அது குறித்த கேள்வியைக் கேட்டால் அவளை இன்னமும் அதிகமாக தாளித்து வைத்து விடுவான் என்பதினால் அடக்கி வாசிக்க முடிவு செய்து மௌனமானாள்..

"காபியை குடிச்சுத் தொலைங்க.."

காபி கப்புகள் அடங்கிய டிரேயுடன் அங்கே வந்து சேர்ந்தாள் அனுராதா.. வியப்புடன் மனைவியை பார்த்தார் பிரதாப்..

'இவ எப்ப பால்பாக்கெட்டை எடுத்துக்கிட்டுப் போனா..? இன்னைக்கு இருக்கிற கோபத்தில நாள் முழுக்க

ஹோட்டல் சாப்பாடுதான்னு நினைச்சுக்கிட்டு இருந்தா இவ காலைக் காபியோட வந்து கலக்கறாளே..'

நினைத்ததை அவர்தான் வாய்விட்டுச் சொல்ல வில்லை.. யதுநந்தன் சொல்லி விட்டான்..

"என்னம்மா இது..? இன்னைக்கு பூராவும் கொலை பட்டினி போடுவீங்கன்னு பார்த்தா காபியோட வந்து நிக்கறிங்க..? ஆக்சுவலா நீங்க பச்சைத் தண்ணியைக் கூட இவங்க கண்ணில காட்டக் கூடாதும்மா.."

அவன் ஏற்றி விட்ட ஸ்குருவில்.. பிரதாப் அரண்டு போனார்..

"ஏண்டா..?" என்றார்..

"என்னத்தை ஏண்டான்னு கேட்டு வைக்கறிங்க.. இந்த அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டு இருக்கா.. இவளை ஏன்னு கேட்க மாட்டேங்கறிங்க.. என்னை மட்டும் ஏண்டாவாம்.. நீங்க ஒரு கண்ணில வெண்ணையும் இன்னொரு கண்ணில விளக்கெண்ணையும் விடறதில கில்லாடிப்பா.."

யாமினி புருவங்களைச் சுருக்கி யதுநந்தனைப் பார்த்த பார்வையில் யார் வெண்ணெய்..? யார் விளக்கெண்ணை..? என்ற கேள்வி இருந்தத..

மகனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனுக்கு புறமுதுகு காட்டி நின்று கொண்ட பிரதாப் வெற்றிகரமாக முதல் காபிக் கோப்பையை கைப்பற்றி உறிஞ்ச ஆரம்பித்தார்..



# 23

## எவர் தடுத்தும் கேளாமல் என்னவளே.. உனைக்காண வந்தேன்..

கடம்பூர் அரண்மனை விழாக் கோலம் பூண்டிருந்தது.. சோழ தேசத்தின் பட்டத்து இளவரசன் அங்கே வருகை தருவதில் சம்புவரையரின் மனது மாறி விட்டிருந்தது.. தமது புதல்வி மணிமேகலையை சோழ நாட்டின் இளவரசனுக்கு மணம் செய்து கொடுக்கும் நல்வாய்ப்பு கிட்டியிருந்ததில் அவர் மகிழ்ந்து போயிருந்தார்.. மதுராந்தகனுக்கு மணிமேகலையை மணம் முடித்து வைக்கும் திட்டத் தோடுதான் சம்புவரையரின் ஒத்துழைப்பை பெற்றிருந்தார் பழுவேட்டரையர்.. மதுராந்தகனுக்கு ஏற்கனெவே சின்னப்பழுவேட்டரையரின் புதல்வியுடன் மணமாகி ஆண்மகவும் பிறந்திருந்தது... அவ்வாறிருக்க மதுராந்தகனுக்கு மணிமேகலை மாலை சூட்டினாலும்.. அவன் அரியணை ஏறினால் பட்ட மகிஷியாக சின்னப் பழுவேட்டரையரின் புதல்விதான் அருகில் அவர்வாள்.. மணிமேகலைக்கு மதுராந்தகனின் அந்தப் புரத்தில்தான் சிறு இடம் கிட்டும்..

ஆதித்த கரிகாலனுக்கு மாலை சூட்டினால்.. சோழ அரியணையில் அவனருகில் பட்ட மகிஷியாக மணிமேகலை அமர முடியும்.. கிடைப்பதற்கரிய இவ்வாய்ப்பை சம்புவரையர் எவ்வாறு நழுவ விடுவார்..?

ஆதித்த கரிகாலனை வரவேற்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.. முதல் தினம்தான் பழுவூரின் இளையராணியான நந்தினிதேவி பகிரங்கமாக கடம்பூருக்கு வருகை தந்திருந்தாள்.. அவள் தங்குவதற்கான விருந்தினர் அறையாக வேட்டை மண்டபத்தின் அருகிலிருந்த அறையையே தேர்ந்தெடுத்திருந்தாள்..

"எனக்கு இந்த அறையை மிகவும் பிடித்திருக்கிறது சுவாமி..! நாம் இந்த அறையிலேயே தங்கிக் கொள்ளலாம் அல்லவா..?"

மாளிகையை சுற்றிப் பார்த்தவள் விழி விரிய வினவினால், பழுவேட்டரையர் என்ன மறுத்தா உரைக்கப் போகிறார்..?

"தமது விருப்பம் போலவே ஆகட்டும் தேவி.." என்று உரைத்து விட்டார்..

ஆதித்த கரிகாலனும்.. அவனுடைய பரிவாரமும் கடம்பூரின் அரண்மனை வாயிலில் வந்து இறங்கினர்.. தீப ஆராதனையுடன் கரிகாலன் நடந்து வரும் பாதையில் மலர் தூவி அவனை உரிய மரியாதைகளுடன் வரவேற்றார் சம்புவரையர்.. உடன் பழுவேட்டரையரும் இருந்தார்..

"பயணம் சௌகரியமாக அமைந்ததா..?" உபசாரத்தின் பொருட்டு வினவினார் சம்புவரையர்..

"அல்லவென்று கூறினால்.. அப்பயணத்தை ஏனென்று வினவி பாதாளச் சிறையில் அடைத்து விடுவீர்களோ..?" என்று வினவி வைத்தான் ஆதித்த கரிகாலன்..

'ஏதடா இது..!' என்று ஆகிவிட்டது சம்புவரையிருக்கு..

"குதர்க்கம் பிடித்த இளவரசராக உள்ளானே.." பழுவேட்டரையரிடம் கூறினார்..

"சில தினங்கள்தானே..? பொறுத்துக் கொள்ள முனைவோம்.. யாது செய்வது..? விருந்துக்கு அழைப்பு விடுத்து அவனும் வந்து விட்டான்.. இனித் தப்பிக்க மார்க்கம் இல்லை.." என்றார் பெரிய பழுவேட்டரையர்..

'எதன் பொருட்டு தப்பிக்க முனைய வேண்டும்..?' என்று தோன்றினாலும்... ஆதித்த கரிகாலனின் அட்டூழியத்தில் சம்புவரையர் அரண்டு போயிருந்தார்..

மதம் பிடித்த யானை போல தோற்றமளித்தான் கரிகாலன்.. உன்மத்தம் பிடித்தவனைப் போல பேசி வைத்தான்.. எவர் தடுத்தும் கேளாமல் நந்தினியின் அழைப்பை ஏற்று.. அவளைக் காணும் பொருட்டு அவளது நினைவுகளுடன் கடம்பூர் வந்திருந்த ஆதித்த கரிகாலனின் பார்வை நந்தினியைத் தேடி அங்குமிங்கும் அலைந்தது..

விடுவிடு என்று அந்தப் புரத்திற்கு சென்றவனை அங்கிருந்த சம்புவரையரின் இல்லத்துப் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்... அவனைக் கண்டதும் அஞ்சி மறைந்த மணிமேகலையைக் கண்டதும்..

"உனது சகோதரி வெகு அழகு.." என்றான் ஆதித்த கரிகாலன்..

அவ்வார்த்தைகளில் கந்தமாறன் பூரிப்படைந்தான்..

சடுதியில் திரும்பிய கரிகாலன் நந்தினியைக் கண்டதும் அவளையே உண்ணுவதைப் போல பார்த்து வைத்தபடி..

"அட..! பழுவூரின் இளைய பாட்டி மெய்யாகவே கடம்பூருக்கு வருகை தந்திருக்கிறார்களா..? எப்போதும் போல.. தற்போதும் அவர் கண்கட்டு வித்தையை பிரயோகிப்பாரோ என்று நினைத்திருந்தேன்.." என்று நையாண்டியாக உரைத்து வைத்தான்..

நந்தினி ஆதித்த கரிகாலனையே இமைக்காமல் தீர்க்கமாக பார்த்து வைத்தாள்.. அவளது பார்வையின் தீட்சண்யத்தில் ஆதித்த கரிகாலனின் பார்வை விலகியது..

"தங்களின் வசதிக்கு ஏற்ப விருந்தினர் மாளிகைகளை எடுத்துக் கொள்ளலாம்.." பவ்யமாக கூறினார் சம்புவரையர்..

"அவ்வாறா.. சம்புவரையரே..! விருந்தினர் மாளிகைகளை யானைகளில் கட்டி நாங்கள் எடுத்துச் செல்லலாமா..?" என்று வினவினான் கரிகாலன்..

சம்புவரையரின் வதனம் சிவந்தது.. எதைக் கூறினாலும் இடக்கு மடக்காக பேசும் இளவரசனுக்கு விருந்தளித்து நற்பெயர் வாங்குவதற்குள் அவர் விழுந்து விடுவார் போல என்று எண்ணிக்கொண்டார்..

"எதைக் குறித்து ஆலோசிக்கிறீர் சம்புவரையரே..! அடுத்த சதிக்கூட்டத்தை எத்தினத்தில் நடத்துவது என்றா..?" ஆதித்தன் அவரை அரள வைத்தான்..

"இளவரசே..!" சம்புவரையர் திடுக்கிட்டார்..

"எதன் பொருட்டு இப்பதட்டம் சம்புவரையரே..! நான் என்ன இல்லாத ஒன்றையா உரைத்து விட்டேன்..? அனைத்தும் நானறிவேன்.. சோழர்குல சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்கள் ஒன்றுகூடி பட்டத்து இளவரசனுக்கு எதிராக கூட்டங்களை நடத்துக்கிறார்கள்.. வாழிய சோழ தேசம்.."

இவ்வாறே வெகு நாழிகை பேசி பழுவேட்டரையரையும், சம்புவரையரையும் பாடாய் படுத்தி விட்டு..

"எனது பரிவாசங்கள் சரிவரக் கவனிக்கப்பட வேண்டும்.." என்று எச்சரிக்கையும் விடுத்து விட்டு ஒருவழியாக துயில் கொள்ளச் சென்றான் ஆதித்த கரிகாலன்..

"ஹப்பா..!" நிம்மதிப் பெருமூச்சு விட்ட சம்புவரையர்..

"எவ்வாறு இந்த இளவரசனை தாங்கள் அனுதினமும் எதிர் கொள்கிறீர்கள்..?" என்று வினவி வைத்தார்..

"அக்கொடுமை எமக்கில்லை.. இந்த விசமக்கார இளவரசன் காஞ்சியை விட்டு தஞ்சைக்கு வருகை தருவதில்லை.."

"தப்பிப் பிழைத்தீர்.."

இவ்வாறு உரைத்த சம்புவரையரை முறைத்து விட்டு.. நந்தினியைத் தேடிச் சென்றார் பழுவேட்டரையர்.. அவள் அவரை தஞ்சைக்கு அனுப்பிவைக்கும் உத்தேசத்துடன் காத்திருந்தாள்..

"அனைத்தும் நமக்கு அனுகூலமாகவே நடந்து கொண்டிருக்கின்றன சுவாமி.. ஆதித்தனிடம் மதுராந்தனை உரையாட வைக்க இதுவே நல்ல தருணம்.. தாங்கள் உடனடியாக தஞ்சைக்குச் சென்று மதுராந்தகனை அழைத்து வாருங்கள்.."

"அதற்கு நான் எதற்காக செல்ல வேண்டும் தேவி..? காலாந்தனுக்கு செய்தி அனுப்பி வைத்தால் போதுமே.."

"ஒருவேளை செய்தி போய் சேராவிட்டால்.. நாம் பட்டபாடெல்லாம் அனர்த்தமாகி போய்விடக் கூடுமல்லவா..? தாங்களே நேரில் சென்று அழைப்பது தான் உசிதமானது.."

நந்தினியின் வார்த்தைக்கு எதிர்வார்த்தையை என்று உரைத்தார் பழுவேட்டரையர்..? அவர் புறப்பட மனமில்லாமல் புறப்பட்டு தஞ்சைக்கு சென்றார்.. அவரது மனநிலையை அறிந்ததைப் போல மழை கொட்டோ கொட்டென்று கொட்டி ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுத்ததில் அவர் வெள்ளத்தில் சிக்கி.. பாழடைந்த மண்டபத்தில் ஒதுங்கினார்.. அங்குதான் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் சதித் திட்டம் பற்றி அவர் அறிய நேர்ந்தது...

நந்தினி பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளுக்கு ஆதரவாக செயல் படுகிறாள் என்பதை அறிந்ததும் அவருக்கு சர்வாங்கமும் பதறி விட்டது.. குடந்தை சென்று ஜோசியரின் இல்லத்திலிருந்த குந்தவைப் பிராட்டியிடம் நடந்ததை உரைத்து.. சின்னப் பழுவேட்டரையரிடம்

விவரத்தைக் கூறி காவலை பலப்படுத்தும் படி கூறிவிட்டு.. கடம்பூரின் அருகே உள்ள ஐயனார் கோவிலை அணுகினார்.. அதன் வாசலில் இருந்த துவாரத்தின் வழியாக இறங்கிய நிலவறை படிக்கட்டுகள் வழியாக வேட்டை மண்டபத்தை அடைந்தார்.. அங்கே வேறு சிலரும் ஒளிந்திருப்பதைப் போல அவருக்குத் தோன்றியது.. அவரும் ஒளிந்து நின்று கொண்டார்.. அங்கிருந்தபடி நந்தினியின் அறையைக் கவனிக்க அவருக்கு ஏதுவாக இருந்தது..

நந்தினி மற்றவர்கள் அறியாமல் திருக்கோவலூர் மலையமானுக்கு ஓர் ஓலையை அனுப்பி வைத்தாள்..

'இளவரசர் ஆதித்த கரிகாலரின் உயிருக்கு ஆபத்து.. உடனே படைகளுடன் வந்து அவரைக் காப்பாற்றவும்..'

என்ற வாசகங்கள் தாங்கிய ஓலையை எடுத்துக் கொண்டு அவளுக்கு நம்பகமான புரவிவீரன் திருக்கோவிலூருக்கு பறந்து சென்றான்..

அமைதியற்ற மனநிலையுடன் நந்தினி அறைக்குள் வருவதை மறைவிடத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்தார் பழுவேட்டரையர்.. சற்றுப் பொழுதில் மணிமேகலை வந்தாள்.. ஆதித்த கரிகாலனை நந்தினியின் சொல்படி அழைத்து வந்த கந்தமாறன், தங்கையைக் கண்டதும் அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்த அகன்று விட்டான்..

அறையில் ஆதித்த கரிகாலனும், நந்தினியும் தனித்து விடப்பட்டார்கள்.. நந்தினியைப் பார்த்த ஆதித்த

கரிகாலனின் வதனத்தில் உன் மத்தம் திரும்பியிருந்தது நந்தினியின் வதனத்திலோ துயரம் அப்பியிருந்தது..

"என்னைச் சேர்ந்த.. என் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் என்னை எச்சரித்தார்கள்.. அவர்களது அறிவுரைகளையும், அன்பையும் மீறி இங்கு வந்தேன் உன்னால் எனக்கு ஆபத்து நேரக்கூடும் என்று தெரிந்துமே நான் இங்கு வந்தேன்.. சொல்.. எதன் பொருட்டு என்னை இங்கு வரவழைத்தாய்..? பழி தீர்க்க எண்ணினாயா..? அவ்வாறென்றால் உனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்.. நான் உன் முன்னிலையில்தான் உள்ளேன்.. ஏன் தாமதிக்கிறாய்..?" என்றான் ஆதித்த கரிகாலன்..

நந்தினி துயரம் தோய்ந்த முகத்துடன் மண்டியிட்டுக் கதறினாள்.. இரு செவிகளையும் தனது கரங்களினால் மூடிக்கொண்டாள்..

"எதன்பொருட்டு வேடம் புனைகிறாய்..?" என்று கொதித்தான் ஆதித்த கரிகாலன்..

"எதன் பொருட்டு வேடம் புனைய வேண்டும்..? அதற்கான அவசியம்தான் என்ன..?" நந்தினி பதிலுக்கு சீறினாள்..

"எதன் பொருட்டா..? உன் மனதைக் கேள்.. அது சொல்லும்.. உன் பகை முடிக்கும் பொருட்டு வேடம் புனைகிறாய்.. ஓர்முறை என்னிடம் நீ ஓர்வரம் கோரினாய்.. என் கால்களில் விழுந்து மன்றாடினாய்.. கரம் குவித்து யாசகம் கேட்டாய்.. நீ கேட்டதை நான் கொடுக்கவில்லை..

அதை எண்ணி நான் அல்லும் பகலும் கொண்ட துயரை அறிவாயா நீ..? அதற்கான பிரயச்சித்தம் செய்ய வந்திருக்கிறேன்.. எடுத்துக் கொள் எனது உயிரை.." என்றான் கரிகாலன்..

நந்தினி நடுங்கினாள்.. வீரபாண்டியனின் வாளைப் பிடித்திருந்த அவளது கரங்கள் நடுநடுங்கின.. ஆற்றாமையுடன் தனது காதலனை நோக்கிப் பார்வையில் இறைஞ்சினாள்..

"அன்று மன்றாடியதைப் போலவே இன்றும் மன்றாடுகிறேன் கரிகாலரே..! என்மீது இரக்கம் காட்டுங்கள்.. தங்களது வார்த்தைகளால் என்னை வதைக்காதீர்கள்.." நந்தினி விம்மினாள்..

"உன்னை நான் வதைக்கிறேனா..? அடிபாதகி..! உன்மனதில் என்னைத் தவிர வேறு ஒருவருக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று ஆணையிட்டேனே.. அதை ஏற்று வாக்குக் கொடுத்தாயே.. கொடுத்த வாக்கை காற்றில் பறக்க விட்டுவிட்டு எவரிடம் உனது மாய்மால வித்தைகளை புலப்படுத்துகிறாய்..? வஞ்சகி..!" கரிகாலனின் விழிகள் சிவந்தன..

"கொடுத்த வாக்கைக் காப்பாற்ற நான் மறக்க வில்லை.. ஆதித்தரே..! உங்களைத் தவிர வேறொரு ஆண்மகனுக்கு எனது உள்ளத்தில் இடமளித்ததில்லை.." நந்தினி உக்கிரத்துடன் கூறினாள்..

அவர்களின் மோதல்.. ஆண்சிங்கமும், பெண் சிங்கமும் மோதிக் கொள்வதைப் போல இருந்தன..

உன்மத்தம் கொண்ட ஆதித்த கரிகாலனும்.. ஆக்ரோசம் மிகுந்த நந்தினியும் பரஸ்பரம் குற்றம் சாட்டி.. அதற்கான விடைகளையும் உரைத்துக் கொண்டிருந்தார்கள்..

"நீ என்னைத் தவிர வேறு எவரிடம் அன்பு கொண்டாலும் அல்லது.. உன்மீது என்னைத்தவிர வேறு எவர் அன்பு கொண்டாலும்.. அந்த அவன்.. எனக்கு பரம விரோதியாகி விடுவான் என்பதை அறிந்திருந்தும் வீரபாண்டியனின் மீது அன்பு செலுத்த நீ துணிந்தாய்.." சினத்துடன் மூச்சிரைத்தான் ஆதித்த கரிகாலன்..

"உங்களுக்கு இடமளித்த மனதில் வேறு எவருக்கு நான் இடமளித்தேன்..? நான் வீரபாண்டியனின் மீது அன்பு கொண்டிருந்தது உண்மைதான்.. அந்த அன்பை பாசமென்று எண்ணாமல் காதலென்று எண்ணியது தங்களின் பிசகு.. ஒருவரின் உயிரைக் காக்க மன்றாட வேண்டுமானால் அவருக்கு மனைவியாகவோ.. காதலியாகவோதான் இருக்க வேண்டுமா..?" நந்தினி பதிலுக்கு சினம் கொண்டாள்..

"புத்தி கூர்மையுடன் விவாதிப்பதாக எண்ணி விடாதே.. நான் உன்னை அறிவேன்.. அன்று தொட்டு இன்று வரை அடுக்கடுக்காக என்மீது நீ குற்றம் கண்டிருக்கிறாய்.. நான் உன்னைக் காதலித்தவன்.. தற்போதும் காதலிக்கிறேன், இனியும் காதலிப்பேன் என்பது வேறு விவரம்.. அன்றைய நிலை பற்றி மட்டுமே விவாதிக்கலாம்.. உன்னைக் காதலித்தும, உன்னைத் துரத்த முனைந்த என்னைச் சேர்ந்தவர்களிடமிருந்து

உன்னைக் காக்காமல்.. அப்பேற்பட்டவர்களின் மத்தியில் உன்னை தனித்து நிறுத்திவிட்டு போர்க்களம் சென்று விட்டேன்.. அந்தக் காரணத்தினால் உன்மனதில் என்மீது உண்டாகி விட்ட துவேசம் பற்றி அறிவேன்.. என்னைப் பழி வாங்கும் எண்ணம் அன்றே உன் மனதில் துளிர் விட்டு விட்டது.." ஆதித்த கரிகாலன் நந்தினியின் மீது குற்றம் சுமத்தினான்..

"ஆஹா..! உங்களது கற்பனை அற்புதமாக உள்ளது.. அதன் பொருட்டு நான் யாது செய்தேனாம்..?" வினவினாள் நந்தினி..

"எதைக் கூறினால் எனக்குள் கொலைவெறி மிகும் என்பதை அறிந்து வைத்திருந்த நீ.. வீரபாண்டியனின் மீது பிரியம் காட்டி.. அவனுக்காக என்னிடம் பொய்சொல்லி மன்றாடி யாசகம் கேட்டு என்னை ஆத்திரப்படுத்தினாய்.. என்னை விடுத்து இன்னொருவனின் மீது உன்மனது செல்வதா என்ற வெறியும்.. அவனுக்காக என்னிடமே நீ உயிர் பிச்சைக் கேட்பதா என்ற சினமும் சேர்ந்து வீரபாண்டியனை உன் கண்முன்பே வெட்டிக் கொன்று விடும் நீசத்தனமான காரியத்தை செய்ய வைத்து விட்டன.. நீ கேட்டதை கொடுக்காமல் போனேனே என்ற சித்திரவதைக்கு என்னை ஆளாக்கி விட்டு நீ மட்டும் மகிழ்வு கொண்டாய்.. அத்தோடு விட்டாயா..?"

"விடாமல் என் செய்தேன்..?"

"எனக்கு வெகு அருகாமையில் இருந்தும்.. நான் உன்னைத் தொட்டு விடமுடியாத உறவிலிருந்து

என்னை வதைக்க வேண்டும் என்பதற்காகவே பெரிய பழுவேட்டரையரின் மனைவியென்ற உறவில் வந்து என்னைக் கொன்று உண்டாய்.. அடி பாதகி..! இன்னுமா உனது வஞ்சம் அடங்கவில்லை..?" ஆதித்தன் ரௌத்ரம் கொண்டான்..

"வஞ்சம் கொண்டது நானல்ல கரிகாலரே..! விதி..! அதுதான் என்னை வஞ்சித்தது.. காலம் என்னைக் கொண்டு அலங்கோலமான கோலங்களை இட்டது.. வாழ்க்கை என்னை வாழ விடாமல் அலைகடலின் மீதுள்ள துரும்பாக அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.. நான் வஞ்சிக்கப் பட்டவள்.. ஆதித்தரே..! வஞ்சம் கொள்ள என்னால் இயலாது.." நந்தினி விம்மினாள்..

"துரோகி..! தஞ்சையில் இருந்தால் எனது கட்டுப் பாட்டையும் மீறி உன்னைத் தொட்டு விடுவேனோ என்று அஞ்சியதால்தானடி காஞ்சியிலேயே நான் நிலை கொண்டேன்..? அங்கும் என்னை நிலைகொள்ள விடாமல் கடம்பூர் அரண்மனைக்கு வந்து உன்னைச் சந்திக்கும் படி நீதானேடி தூது அனுப்பினாய்..? சொல்.. எதன் பொருட்டு எனை வரவழைத்தாய்..?" கரிகாலனின் விழிகளில் அனல் பொறிகள் பறந்தன..

"எதன் பொருட்டா..? தங்களைச் சந்திக்கும் பொருட்டு என்று ஏன் எண்ண மறுக்கிறீர்கள்.." நந்தினி அவளையுமறியாமல் வீரபாண்டியனின் உடை வாளை எடுத்தபடி கூறினாள்..

அதைக் கண்ணுற்ற கரிகாலன்..

"பலே..!" என்றான்..

"எதன் பொருட்டு இந்த 'பலே..!'" நந்தினி புரியாமல் விழித்தாள்..

"உன் மனது உரைப்பதை உனது கரம் செயல் படுத்துகிறது.. விரைந்து பகை முடி நந்தினி..! உனது கரத்திலிருக்கும் வீரபாண்டியனின் உடைவாளால் என்னைக் கொன்று விட்டால் உன்மனம் ஆறிவிடும் தானே..? அது போதும் எனக்கு.. கொன்று விடு நந்தினி.. உன் காதலனை கொன்று விடு.." கரிகாலன் தூண்டினான்..

"ஐயோ..!" முகம் மூடி அழுதாள் நந்தினி..

"வீரபாண்டியனின் வாளைக் கொண்டே எனது நெஞ்சைப் பிளந்து பாருங்கள் கரிகாலரே.. அங்கே தங்களின் திருவுருவம் மட்டுமே தெரியும்.. தங்களைத் தவிர வேறு எவருக்கும் அங்கே இடமில்லை.."

"என்ன..?" ஆதித்த கரிகாலனின் விழிகள் மின்னின..

"நீ உரைப்பது மெய்யா..? எனையன்றி வேறொருவனை நீ மனதாலும் நினைத்ததில்லையா..?"

"இல்லை.. இல்லை.. இல்லை..."

"அவ்வாறெனில் நீ வீரபாண்டியனின் மீது பிரியம் கொண்டது..? அவனுக்காக என் கால்களில் விழுந்து மன்றாடியது..? உயிர் பிச்சை கேட்டது..? இவை யாவும் பொய்யா..?"

"பொய்யல்ல.. மெய்தான்.."

"அதுவும் மெய்.. தற்போது நீ உரைப்பதும் மெய்யென்றால்.. மெய் என்ற வார்த்தைக்கே பொருளற்றுப் போய் விடும்.."

"தந்தையின் மீது மகள் பிரியம் காட்டுவது தவறாகுமா கரிகாலரே..? அவரின் உயிருக்காக அவள் மன்றாட மாட்டாளா..? உயிர்பிச்சை கேட்க மாட்டாளா..?" நந்தினியின் விழிகளில் நீர் வழிந்தது..

"என்ன..?" அதிர்ந்தான் ஆதித்தன்..

"ஆம் கரிகாலரே..! வீரபாண்டியரே எனது தந்தை..!"

"உன் தந்தையை நீ தடுத்தும் கொன்ற பாவி நான்.. என்னுடன் எப்படி நீ வாழ இயலும்..? ஆத்திரத்தில் மூர்க்கம் கொண்டு அடாத செயல் புரிந்து விட்டேனே.. எனக்கு மன்னிப்பே கிடையாது நந்தினி.." வருந்தினான் ஆதித்த கரிகாலன்..

"விதி ஆடிய விளையாட்டில் நாம் இருவரும் பகடைக் காய்களாக மாறிப் போனோம் கரிகாலரே.." விரக்தியுடன் உரைத்தாள் நந்தினி..

"பழுவூர் இளையராணியாகவும் மாறினாயே நந்தினி..?"

"பெரிய பழுவேட்டரையரின் மனைவி என்ற நாமத்தில் நான் இருந்தேன்தான்.. உலகறிய அவரை மணந்தேனா..? அவரது விரலின் நகம்கூட என் தேகத்தை ஸ்பரிசிக்க விட்டேனா..? நினைவில் கொள்ளுங்கள் ஆதித்த கரிகாலரே..! பழுவூர் இளையராணி என்ற பெயர் கொண்டாலும் இந்த நந்தினி இன்றும் கன்னிகைதான்..

தங்களைப் பிரிந்து பாண்டியதேசம் வர நேர்ந்த போது துறவிக் கோலம் பூண்டு கண்ணனின் சேவையில் தான் மனம் செழுத்தினேன்.. வேறொடு ஆடவனின் மீது மனத்தைச் செழுத்தவில்லை.." நந்தினியின் வதனம் ஜ்வலித்தது..

"அவ்வாறெனில்.. நீ எனைச்சேர தடையேதும் இல்லையே.." ஆதித்தன் பரபரத்தான்..

"தடை இல்லையா..? தடைகள் பல உள்ளன ஆதித்த கரிகாலரே..! தாங்கள்தான் என்மீதுள்ள கண்மூடித்தனமான காதலினால் அதைக் காண மறுக்கின்றீர்கள்.." விரக்தியுடன் உரைத்தாள் நந்தினி..

"எதைப் பற்றி உரைக்கிறாய்..?"

"ஒரு காலத்தில் நீங்கள் என்னை மணம் புரிந்து கொள்வீர்கள் என்று ஆசைக் கனவு கண்டேன்.."

"அந்த ஆசைக் கனவை இன்று நனவாக்கிக் காட்டலாம்.. என்னுடன் புறப்பட்டு வா.. தொலை துரத்தில் தொடுவானின் கீழே.. அலைகடலில் ஓர் தீவில் அமைதியுடன் மணம் புரிந்து கொள்ளலாம்.."

"நடக்காத நிகழ்வு அது..!"

"ஏன் நடக்காது..? எது என்னுடன் வர உன்னைத் தடைசெய்கிறது..?"

சீற்றத்துடன் கேட்ட ஆதித்த கரிகாலனின் வதனத்தை துயர் தோய்ந்த வதனத்துடன் ஏறிட்டு நோக்கி விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள் நந்தினி..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



# 23

## உன் கரம்பிடிக்கும் ஏக்கத்தோடு யுகம், யுகமாய் தொடர்ந்து வந்தேன்..

மகனுக்கு புறமுதுகு காட்டித் திரும்பி நின்றிருந்த கணவரின் தோளில் தட்டித் திருப்பி விட்டாள் அனுராதா..

"உங்க காபி உங்களுக்கேதான்.."

அனுராதாவின் வாக்குறுதியில் குழம்பிப் போனார் பிரதாப்..

"இதையேண்டி எங்கிட்டச் சொல்ற..?"

"இங்கே யாரும் உங்க காபியைப் பிடுங்கிக் குடிச்சிர மாட்டாங்க.. பயப்படாம ஒழுங்கா நின்னு குடிங்க.."

அனுராதாவின் வார்த்தைகளில் பிரதாப்பின் முகத்தில் குடம்.. குடமாக.. அசடு வழிந்தது.. அதற்குள் அடுத்த கப் காபியை கைப்பற்றியிருந்த யதுநந்தன் வண்டி, வண்டியாய் அவன் மனதில் மண்டிய எரிச்சலுடன் தகப்பனை ஜாடையாக பார்த்தபடி..

"சகிக்கலை.." என்றான்..

அனுராதா அவனை நிமிர்ந்து பார்த்ததில் அரண்டு போனவனாக...

"ஐயோ அம்மா.. உங்க காபியைச் சொல்லலை.." என்று அலறினான்..

"எனக்கும் தெரியும்டா.." கணவரின் முகத்தைப் பார்த்தபடியே அனுராதா சொல்லியதில்..

"ஹி.. ஹி.." என்று சிரித்து வைத்தார் பிரதாப்..

"எதுக்கும் காபி டிரேயை இறுக்கிப் பிடிச்சுக்கங்க.. இந்தச் சிரிப்பைப் பாத்து பயந்து டிரேயை நழுவ விட்டுறப் போறிங்க.." கரிசனம் கொண்டான் யதுநந்தன்..

"உங்க அப்பா சிரிக்க ஆரம்பிச்சப்பவே முகத்தைத் திருப்பிக்கிட்டேண்டா.. நீ பயப்படாதே.." மகனுக்கு தைரியம் கொடுத்தாள் அனுராதா..

"ஆனாலும் அம்மா.. வரும் முன் காக்கிறதில உங்களுக்கு ஈக்குவல் நீங்களேதான்.." மெச்சிப் போனான் யதுநந்தன்..

இவை எவற்றையும் கவனிக்காமல்.. செடியில் படிந்திருந்த பனித்துளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மகளின் முதுகில் ஓங்கி ஒருபோடு போட்டாள் அனுராதா..

"அம்மா.." புல்வெளியில் போய் விழுந்தாள் யாமினி..

"எதுக்குடி குழந்தையை அடிக்கிற..?" பிரதாப் உடனடியாக சிபாரிசுக்கு வந்தார்..

"யது..! உங்க அப்பாகிட்ட சொல்லி வை.."

"அதெல்லாம் நிறையச் சொல்லியாச்சும்மா.. இவர்தான் அடங்குவேனான்னு அடம் பிடிக்கிறாரே.."

"ஏண்டா..? உனக்கு நான் அப்பாவா..? இல்ல எனக்கு நீ அப்பாவா..?"

"இந்த ரோசத்துக்கொன்னும் குறைச்சல் இல்லேடா யதுநந்தா..? சும்மா அப்பா.. அப்பான்னு சொல்லிக்

கிட்டு இருந்தா மட்டும் போதாது.. அதுக்கேத்தபடி நடந்துக்கணும்.."

"என்னத்தடி நடந்துக்கலை..? ஒரு அப்பனா லட்சணமா இந்தக் குடும்பத்துக்கும் உனக்கும் உழைச்சுக் கொட்டலையா..?"

"இங்கே யாரும் ஊஞ்சலாடிக்கிட்டு இல்லை யது..! இதையும் அவங்க காதில ஓதிரு.."

"எவங்க காதிலடி..? அதோ அங்கே ரோட்டில போய்க்கிட்டு இருக்கானே.. அவன் காதில ஓதச் சொல்றயா..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.."

"அதைத்தான் தினமும் கேட்டுக்கிட்டு இருக்கோமே.. விதி வலியதுடா யது..!"

"இப்ப என்னத்துக்கு உங்க கூட்டணியில என்னை இழுக்கறிங்க..? அதுக்கு உங்க மகளைக் கூப்பிட்டுக்கங்க.. நான் அம்மா கட்சிதான்.."

யதுநந்தன் கறார்ராக சொல்லி விட்டான்.. பலமான கூட்டணியின் பக்கம் தயவுதாட்சண்யம் காட்டாமல் போய் விட்ட மகனிடம்..

"யு டூ யது..?" என்று நியாயம் கேட்டார் பிரதாப்..

"யெஸ் டாட்.. ஐ டூ இட்.." என்று அவன் அறிவித்து விட்டதில் நொந்து நூடுல்ஸானார்..

புல்வெளியில் கிடந்த யாமினியின் தலையில் தட்டி அவள் கையில் காபிக் கப்பை கொடுத்தாள் அனுராதா.. அவள் தோதாக புல்வெளியில் காலை மடித்து வைத்து உட்கார்ந்தபடி காபியை சப்புக் கொட்டி குடிக்க ஆரம்பித்தாள்..

"செய்கிறதையெல்லாம் செய்து வைத்துட்டு எதுவுமே நடக்காததைப் போல காபியை மொக்கிறா பாருங்கம்மா.." என்றான் யதுநந்தன்..

"விடுடா.. அவளே குழந்தை..! உன் அம்மா காபியை கொடுத்ததும்தான் கொடுத்தா... அதை அடிக்காம கொடுத்திருக்கக் கூடாதோ..?" பிரதாப் கேள்வி கேட்டார்..

"ஏம்மா.. நீங்க காபியை அடிச்சீங்க..?" என்றான் யதுநந்தன்..

"இல்லவே இல்லைடா யது..! வேற ஒரு ஆளைத்தான் அடிக கை வைக்கனும்னு ரொம்ப நாளா பிளான் போடறேன்.. என் கழுத்தில கிடக்கிற மஞ்சள் கயிறு தமிழ் பண்பாடு, அது, இதுன்னு சொல்லி என் கையைக் கட்டிப் போட்டு வைச்சிருக்குடா.." கண்சிவந்தாள் அனுராதா..

மகளின் மீதுள்ள பாசத்தினால் மனைவியிடம் வன் முறையைத் தூண்டிவிடக்கூடாது என்ற ஞானோதயத்தில் பிரதாப் வாயை மூடிக்கொண்டார்..



## 24

*விதி வழியே செல்லும் போது..*
*மகிழ்வுதனை காண்பதேது..?*

"தாங்களோ சோழ நாட்டின் இளவரசர்.."

"ஆயினும் உனது காதலன்..!"

"அதை உணர்பவர் எவர்..? உலகறிய நான் பழுவேட்டரையரை மணம் புரியவில்லை.. அவரின்

விரல் நகம்கூட எனது தேகத்தை ஸ்பரிசிக்கவில்லை.. இருப்பினும் இந்த உலகம் என்ன கூறும்..? பழுவூரின் இளைய ராணியை ஆதித்த கரிகாலன் மறுமணம் புரிந்து கொண்டான் என்றுதானே கூறும்..?"

"நந்தினி..!"

"இன்னமும் உள்ளது இளவரசே..! அவற்றையும் செவி மடுத்துவிட்டு தங்களின் சித்தத்தை தெரியப் படுத்துங்கள்.. என் பிறப்பைப் பற்றி எவருக்குத் தெரியும்..? நான் வீரபாண்டியனின் மகளாக இருந்தபோதிலும், சுந்தரசோழரின் மகளாகவும் இருக்கக் கூடுமோ என்ற சந்தேகத்தை சோழ அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் உருவாக்கி விட்டனரே.. அதைப் பொய்யென்று எப்படி நிரூபிப்பேன்..?"

"நந்தினி..!"

"என்னைத் தொட்டுவிடக் கூடாது என்றே நான் திட்டம் தீட்டி பழுவேட்டரையரின் மனைவியாக வந்தேனென்று உரைத்தீர்களே.. உண்மையில் நான் உங்களைத் தொட்டுவிடக் கூடாது என்பதற்காக உங்களின் தந்தைக்கு நான் பிறந்தவள் என்று குந்தவையும், முதன் மந்திரி அநிருத்த பிரம்மராயரும் கதை கட்டி விட்டிருப்பதை தாங்கள் அறிவீர்களா..? தங்கையென்ற உறவு முறையை அவர்கள் கூறிவிட்ட பின்பு.. அதை மீறி எவ்வாறு நான் உங்களைத் தொட்டுத் தழுவுவேன் கரிகாலரே...?"

"நந்தினி..!"

"உங்களை நான் மணந்து விடாமலிருக்கும் பொருட்டு.. சோழஅரசகுலம் கட்டி விட்டிருக்கும் கட்டுக்

கதைகள் உங்களையும் என்னையும் இரும்புத்திரை போட்டு பிரிக்கும் போது என்காதல் எவ்விதம் நிறைவேறும் கரிகாலரே..?"

"நந்தினி..!"

"நான் தங்களது பகைவனின் மகள்..! உங்களை மனதாரக் காதலித்தவள்.. காதலிப்பவள்.. இனியும் காதலிக்கப் போகிறவள்.. ஆயினும்.. வாழ்வில் உங்களுடன் ஒன்று சேர இயலாதவள்.. இதை மனதில் கொள்ளுங்கள் கரிகாலரே..!"

"நந்தினி..!"

"வீரபாண்டியனின் மகளாக இருந்தால் என்ன..? நான் உன்னை மணம் புரிந்து காட்டுகிறேன் என்று தாங்கள் சொல்லலாம்.. ஆனால்.. சோழ அரசர்குலத்தவர் என்ன சொல்வார்கள் என்று தெரியுமா..? நான் வீரபாண்டியரின் மகளா.. அல்லது.. சுந்தர சோழரின் மகளா என்பது கடவுளுக்கு மட்டும்தான் தெரியும் என்பார்கள்.."

"நந்தினி..!"

"சொல்லுங்கள் கரிகாலரே..! விதி எனது பிறப்பை நிரூபிக்க முடியாத சதி வலைக்குள் என்னை சிக்க வைத்திருக்கிறது.. காலம் என்னைத் தனது கரங்களினால் பிசைந்து எறிகின்றது.. வாழ்க்கை எனது வாழ்க்கையை வாழ விடாமல் வஞ்சகம் செய்கிறது.. இப்பேற்பட்ட பிறவியெடுத்த நான் எவ்வாறு உங்களின் கரம் பிடிப்பேன்..? எவ்விதம் தங்களுக்கு மாலை சூடுவேன்..?"

"நந்தினி..!"

"எனது நெஞ்சத்தில் நீங்கள் மட்டும்தான்.. கரிகாலரே..! இதை தாங்கள் உணர்ந்து கொண்டால் அது போதும் எனக்கு.."

"என்னுடன் வந்து விடு நந்தினி.."

"வந்து..?"

"தொலைதூரம் சென்று விடுவோம்.."

"எங்கு சென்றாலும்.. எனைச் சூழ்ந்திருக்கும் இந்தப் பழி நீங்குமா..? அதற்கு ஏற்றாற்போல தங்களின் தந்தையான சுந்தரசோழர் எனது தாயான மந்தாகினியை ஒரு காலத்தில் காதலித்து தொலைத்திருக்கிறாரே.."

"நந்தினி..!"

"வீரபாண்டியரின் குழந்தைகளை பழையாறை அரண்மனையில் பெற்று விட்டுச் செல்லும் அளவிற்கு எனது தாயின் மனதில் தங்களின் தந்தையின் மீதான கனிவு இருந்திருக்கிறது.."

"நந்தினி..!"

"வீரபாண்டியரும் உலகறிய எனது தாயை மணந்து தொலைக்கவில்லை.. அனைத்துத் திசைகளிலிருந்தும் என்மீது அம்புகள் பாய்ந்த வண்ணம் உள்ளன.."

"முடிவாக என்னதான் உரைக்கிறாய்..?"

"இப்பிறவியில் நாம் ஒன்று சேர முடியாது.."

"அவ்வாறெனில் இப்போதே உன் கரத்திலிருக்கும் வீரபாண்டியனின் வாளைக் கொண்டு என்னைக் கொன்று விடு.."

"தாங்கள் சென்று விடுங்கள் கரிகாலரே..! கணப் பொழுதும் இங்கு தாமதிக்க வேண்டாம்.."

நந்தினி பதறினாள்.. எங்கிருந்தோ வேல் ஒன்று பறந்து வந்து அறையின் மூலையில் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கின் மீது பட்டு அதைக் குப்புறக்

கவிழ்த்தியது.. விளக்கின் திரி அணைந்து அறையில் இருள் சூழ்ந்தது.. எவரோ "ஐயோ" என்று அலறிய சப்தம் கேட்டது.. நந்தினியின் 'கிறிச்' என்ற சப்தமும் கேட்டது.. சற்றும் பொறுத்து அங்கே நிசப்தம் மட்டுமே நிலவியது..

நந்தினி இருள் வெளிக்குள் தனது காதலனைத் துழாவினாள்.. பகை முடிக்க அழைக்கிறாள் என்பதை அறிந்தும்.. தன்னை அவளிடம் ஒப்புக் கொடுக்க வந்த அவளுடைய ஆருயிர் காதலனைத் துழாவினாள்.. சோழ தேசத்தின் இளவரசனுக்கு பெண் கொடுத்து விட மாட்டோமா என.. பேரெழில் பெட்டகங்களை புதல்வியாகப் பெற்ற அரசர்கள் பலரும் தவமிருந்த போது.. தாய், தந்தை எவரென்று தெரியாத அநாதைச் சிறுமியாக நின்ற நந்தினியின் மீது நேசம் கொண்ட தன்னிரகற்ற அந்தத் தலைவனைத் துழாவினாள்.. பட்டாடையின்றி, பொன் ஆபரணங்களின்றி, எளிய மேலாடையும், அணிகலனற்ற தேகமுமாக நின்ற ஏழ்மை நிலை கொண்டவளைக் காதலித்த அந்த பட்டத்து இளவரசனைத் துழாவினாள்.. கண்மறைந்து சென்றவளை கானகம் தோறும் தேடி, அவளிருக்குமிடம் அறிந்து, மீண்டும், மீண்டும் தொடர்ந்து வந்தவனைத் துழாவினாள்.. உலகமே எதிர்த்தாலும் உன்னோடுதான் வாழ்வேனென்று, வளைக்கரம் கொண்ட இளவரசி எவரையும் திரும்பியும் நோக்காமல் போர்க்களமே கதியென்று அலைந்த, அந்த அமைதியைத் தொலைத்த ஆண்மகனைத் துழாவினாள்..

துழாவிய அவள் கரங்களில் ஆதித்த கரிகாலனின் உடல் கிடைத்தது..

"அன்பே..!" அவள் கதறினாள்..

அவளது வாயை ஓர் கரம் பொத்தியது.. அகல் விளக்கொன்று ஏற்றப்பட.. அதன் மெல்லிய வெளிச்சத்தில் அறைக்குள் இருந்தவர்களை அவளால் பார்க்க முடிந்தது..

"சப்தம் எழுப்பாதீர்கள் தேவி..! நாம் இனி ஒரு கணமும் தாமதிக்காமல் இந்த கடம்பூரை விட்டு விரைந்தாக வேண்டும்.. புறப்படுங்கள்.. எக்கணமும் இந்த கரிகாலனை தேடி காவலர் இங்கு வரலாம்.." என்றான் அவளது வாயை மூடியிருந்த ரவிதாஸன்..

"எவர் கொன்றது..?"

இறந்து கிடந்த ஆதித்த கரிகாலனின் வதனத்தில் வதனம் வைத்து கண்ணீர் உகுத்தாள் நந்தினி..

"நான்தான் கொன்றேன்.."

"என் அனுமதியின்றி எவ்வாறு நீ கத்தியை வீசி எறியலாம்..?"

"ஆஹா..! தாங்கள் அனுமதி வழங்கி விட்டுத்தான் வேறு பணி புரிவீர்கள்.. இதுபோன்ற தருணத்தில் நகைச்சுவையைத் தவிர்த்தல் நலம் தேவி..! தாங்களாவது ஆதித்த கரிகாலனை கொல்வதற்கான அனுமதியை வழங்குவதாவது.. செவி மடுத்தேனே.. அவன்மீது உயிராக தாங்கள் மொழிந்த அனைத்தையும் செவி மடுத்தேனே.. செவி மடுத்த பின்புதானே அனைத்தும் புரிந்தது.. எக்காலத்திலும் தாங்கள் ஆதித்த கரிகாலனை கொல்லவும் மாட்டீர்கள்.. கொல்ல முனைவோரை அனுமதிக்கவும் மாட்டீர்கள்.. அந்த உண்மை புரிந்த பின்பும் இது போன்ற அரிய தருணத்தை நழுவ விட நானென்ன அறிவிலியா..?"

"மூர்க்கனே..!"

"அவ்விதமாகவே இருந்து விட்டுப் போகிறேன்.. அதில் எமக்கொன்றும் குறைவில்லை.. எமக்கு சோழகுல இளவரசனின் மீது எவ்விதமான அபிமானமும் கிடையாது.. எமது அபிமானமெல்லாம் எங்களது அரசர் வீரபாண்டிய மன்னரின் மீதுதான்.."

வீரபாண்டியனைப் பற்றிய உரை வந்ததில் நந்தினி மௌனம் காத்தாள்.. அவளது விசனம் தோய்ந்த விழிகளில் இருந்த கண்ணீர் தாரை, தாரையாய் பெருகி வழிந்து.. அவள் மடியில் கிடந்த ஆதித்த கரிகாலனின் தேகத்தின் மீது வீழ்ந்து தெறித்தது..

"பாவி..! இவர் என்னை நம்பி வருகை தந்தவரடா.." தாள முடியாத சோகத்தில் அவள் பொருமினாள்..

"எம்மை நம்பி வரவில்லையே..? கவனியுங்கள் தேவி.. நம்பியவர்க்கு கேடு விளைவிப்பவன் அல்ல இந்த ரவிதாஸன்.. தாங்களும் அவ்விதம்தான்.. வீரபாண்டியர் அவருடைய சாவுக்கு நான் பழிவாங்குவேனென்று நம்பினார்.. ஆதித்த கரிகாலன் உங்களால் அவனுக்கு எவ்விதமான ஆபத்தும் நேராது என்று நம்பி கடம்பூருக்கு வருகை தந்தான்.. நான் என்னை நம்பிய எனது மன்னவரின் சாவுக்கான பகை முடித்தேன்.. தாங்களும் தங்களை நம்பி வந்த கரிகாலனுக்கு தீங்கு விளைவிக்காமல் திருப்பி அனுப்ப அரும்பாடு பட்டீர்கள்.. இருவருமே நம்பியவர்களின் நம்பிக்கைக்கு குந்தகம் விளைவிக்கவில்லை தேவி.."

நந்தினி பொங்கி அழுதாள்.. ஆதித்த கரிகாலனை விட்டு அகல மறுத்தாள்.. ரவிதாஸன் வலுக்கட்டாயமாக அவளை விலக்கி இழுத்தான்..

"பிடிவாதம் வேண்டாம் தேவி.. தங்களை இவ்விடத்தில் விட்டுவிட்டு நாங்கள் மட்டும் தப்பிக்க இயலாது.. தங்கள் எங்களின் தேவி..! வீரபாண்டியரின் புதல்வி..!"

"இவன் எனது காதலன்..!"

"அது விதி ஆடிய விளையாட்டு.. நீங்கள் ஓர் கரையில்..! நாங்கள் ஓர் கரையில்..! இடையினில் ஆதித்த கரிகாலன்..! நம்மிருவரின் பார்வையும் வேறுவேறு..! ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள்.. எமது பக்கமும் நியாயம் உள்ளது.."

பலவந்தமாக நந்தினியை அவர்கள் இழுத்த போது அங்கே மூர்ச்சையாகிக் கிடந்த வந்தியதேவனையும், பழுவேட்டரையரையும் அவள் கண்டாள்..

"இவர்கள்..?" பதறினாள்..

"வந்தியதேவன் எங்களுக்குப் பகைவன்... பழுவேட்டரையரை வேண்டுமானால் தங்களின் மன அமைதிக்காக காக்க முயல்கிறோம்.. இவரால் அல்லவோ சோழ நாட்டின் பொக்கிசம் எங்களுக்கு குறைவின்றி கிடைத்தது.."

ஆதித்த கரிகாலனுக்கு ஆபத்து வரப் போகிறது என்ற உள்ளுணர்வில் வேட்டைக்கார மண்டபத்தில் பதுங்கியிருந்த வந்தியதேவன் மூர்ச்சையாகி கீழே விழுந்திருந்தான்.. அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்து பார்த்த போது.. எங்கும் தீயின் ஜ்வாலை தெரிந்தது.. ஆம்.. கடம்பூரின் சம்புவரையர் ஆதித்த கரிகாலனை கொன்று விட்டதாக அவர்மீது பழிவந்து விடாமலிருக்க அரண்மனைக்கே தீ வைத்து விட்டார்.. சுற்றி வளைத்த தீயின் கோர நாக்குகள் அவனை நெருங்கிக் கொண்டிருந்த

போது.. அருகில் கிடந்த ஆதித்த கரிகாலனின் உயிரற்ற சடலத்தை கண்டு விட்டான்..

"ஐயோ.." மனம் பதறினான்..

எவர் தடுத்தும் கேளாமல்.. தன் உயிருக்கு ஆபத்து நேரும் என்பதை அறிந்திருந்தும் காதலியைத் தேடி வந்து தன்னுயிரை விட்டு விட்ட அந்த பட்டத்து இளவரசனின் உயிரற்ற சடலத்தை தூக்கித் தோள்களில் போட்டுக் கொண்டு தள்ளாடிய படி தீயை விட்டு வெளியேறிய வந்திய தேவனை படையுடன் வந்த திருக்கோவிலூர் மலையமான் எதிர்கொண்டார்..

"இளவரசரை உயிருடன் காப்பாற்ற முடியவில்லை பாட்டா..! அவருடைய சடலத்தைத்தான் தீயிடமிருந்து காத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.."

மலையமானின் முன்பு ஆதித்த கரிகாலனின் சடலத்தை கிடத்தி விட்டு மீண்டும் மூர்ச்சையானான் வந்தியதேவன்..

"நான் வளர்த்த கண்ணே..!"

மலையமானின் கதறல் ஒலி எட்டுத்திக்கும் எதிரொலித்தது..

"வஞ்சகத்திற்குப் பலியாகி விடாதே என்று எச்சரித்தேனே.. அதையும் மீறிக் கிளம்பிவந்தாயே.. இதன் பொருட்டா இங்கு வந்தாய்..? வஞ்சகம் வென்று விட்டதே.."

ஆதித்த கரிகாலனின் சடலம் தஞ்சைக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.. சம்புவரையர் கைது செய்யப் பட்டு ஆதித்த கரிகாலனின் சடலத்துடன் அழைத்துச்

செல்லப்பட்டார்.. தஞ்சையே துக்கத்தில் மூழ்கியது.. வந்தியதேவன் சிறையில் அடைக்கப்பட்டான்.. ஆதித்த கரிகாலனின் இளையசகோதரன் அருள்மொழி வர்மன் தஞ்சைக்கு திரும்பி விட்டான்..

சுந்தரசோழ சக்கரவர்த்தியை கொல்ல எறியப்பட்ட விசம் தடவப் பட்ட வேலைதன் மார்பில் ஏந்தி.. நந்தினியின் தாய் மந்தாகினி.. உயிரை விட்டு விட்டாள்.. அவளைக் கொன்ற கொலைகாரனை ஆழ்வார்கடியான் துரத்திச் சென்றான்.. அவர்கள் சென்ற மலையின் குகைகளில் ஒன்றில் பெரிய பழுவேட்டரையர் படுத்திருந்தார்.. அவரருகே.. கருணையே வடிவாக கஞ்சி காய்ச்சி அவருக்குப் புகட்டி விட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி..

"எங்குள்ளேன்..?" என்றபடி இமைதிறந்தார் பெரிய பழுவேட்டரையர்..

"இத்தனை தினங்களாக எனது பராமரிப்பில் தான் விழிதிறக்காமல் காய்ச்சலுடன் இருந்தீர்கள்.. ஐயா.." என்றாள் நந்தினி..

"நாதா என்ற அழைப்பு ஐயா என மாறிவிட்டதா..?"

"வேட்டை மண்டபத்தில் தாங்கள் இருந்துள்ளீர்கள்.. எனக்கும் ஆதித்த கரிகாலருக்குமான அனைத்து உரையாடல்களையும் செவி மடுத்திருப்பீர்கள்.. இதற்கு மேலும் தங்களை நாதா என்று அழைப்பது தவறு ஐயா.." அமைதியுன் கூறினாள் நந்தினி..

"பாதகி..! இளவரசருக்கு யாது ஆனது..?"

"அவர் இறந்து விட்டார்.." நந்தினியின் விழிகளில் கண்ணீர் ததும்பியது..

"உன்னைக் குறி பார்த்து நான் எறிந்த கத்தி இளவரசனின் உயிரைக் குடித்து விட்டதா..? என்ன பாதகம் புரிந்து விட்டேன்..?"

"அல்ல பெருமகனே..! தாங்கள் குற்றம் இழைக்க வில்லை.. ரவிதாஸன் எறிந்த கத்திதான் எனது ஆதித்தனின் உயிர் குடித்தது.." நந்தினியின் விழிகள் கண்ணீர் மழையைப் பொழிந்தன..

"நந்தினி..! நீ செய்த அடாத செயல்களை அறிந்தும் உன்மீது எனக்கு கோபம் வர மறுக்கிறது.."

"தங்களின் பெருந்தன்மை அதுவாகும்.. தங்களை அங்கேயே விட்டுவிட்டு வரும்படி இவர்கள் என்னை வற்புறுத்தினார்கள்.. நான் மறுத்துவிட்டேன்.. இவர்களைக் கொண்டே தங்களைத் தூக்கி வரச் செய்தேன்.. இரவு பகலாக தங்களுக்கு பணிவிடைகளை புரிந்தேன்.."

"எதன் பொருட்டு நந்தினி..?"

"தங்களுக்கு நான் பட்டிருக்கும் நன்றிக் கடனுக்காக ஐயா.. தங்களுக்கு எனது வந்தனம்.. எனைத் துரத்தியடித்த சோழ தேசம் என்னை தீபஒளியுடன் ஆரத்தி எடுத்து அழைத்துக் கொள்ள வைத்தீர்கள்.. எந்த அரண்மனை வாழ்வு எனக்கு மறுக்கப்பட்டதோ.. அந்த அரண்மனை வாழ்வை எனக்கு அளித்தீர்கள்.. எனை அவமதித்த குந்தவைக்கு சமமாக என்னை நிறுத்தி வைத்தீர்கள்.. சோழர்குல ராணிகளில் பழுவூர் இளைய ராணியாக அதிகாரத்துடன் என்னை வீற்றிருக்க வைத்தீர்கள்.. மறுக்கப்பட்ட அனைத்தும் இப்பிறவியிலேயே எனக்குக் கிடைக்கப் பெற்றது தங்களால்தான்.. அவை அனைத்திற்கும் எனது வந்தனம்.. எனக்குக் கிட்டாத

ஒன்று ஆதித்தனுடன் நான் வாழாத வாழ்வு மட்டும்தான்.. அதுவும் எனக்குக் கிட்டியிருக்கும்.. அவன் அழைப்பை ஏற்று அவனை நான்பின் பற்றியிருந்தால் அவனுடன் நான் இப்பிறவியிலேயே வாழ்ந்திருப்பேன்.. இப்பிறவியில் கிட்டாத அவ்வாழ்வு.. அடுத்த பிறவியிலாவது எனக்குக் கிட்ட ஆசிர்வதித்து விடை கொடுங்கள்.."

"எங்கே செல்லப் போகிறாய்..?"

"எனது ஆதித்த கரிகாலனைத் தேடிச் செல்லப் போகிறேன்.."

"நில் நந்தினி.. என்னுடன் வந்துவிடு.."

"அது இயலாது ஐயா..! நான் பகை முடிக்க அவனை அழைக்கிறேன் என்று அறிந்திருந்தும் தனது உயிரை என்னிடம் ஒப்புக் கொடுக்க என்னைத் தேடி வந்தானே ஆதித்த கரிகாலன்..! அவனுடைய காதலுக்கு நிகர் இந்த உலகில் ஏது..? நான் அவனைத் தேடிச் செல்கிறேன் என்னைத் தடுக்க வேண்டாம்.."

அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போதே அந்த மலைப்பகுதிக்கு சின்னப் பழுவேட்டரையரும், கந்தமாறனும் வந்து விட்டனர்.. ஆழ்வார்க்கடியானும் அம்மலைமீது இருந்தான்.. மந்தாகினி இறந்து விட்டதை நந்தினியிடம் தெரிவித்தான் ஆழ்வார்க்கடியான்..

"போய் விட்டாளா..? என்னை ஈன்றவள் எனை விட்டுச் சென்று விட்டாளா..? பெற்றெடுத்த எங்களின் மீது பாசம் வைக்காமல் அந்த சுந்தரசோழரின் மகன் அருள்மொழிவர்மன் மீது பாசம் வைத்த விநோதப் பிறவியான அவள் போய் விட்டாளா..? தனது வாழ்நாளில்

ஓர்முறைகூட என்னைச் சந்திக்காமல் சென்று விட்டாளா..?" நந்தினி அழுதாள்..

"மனதை அமைதிப் படுத்திக் கொண்டு என்னுடன் வந்து விடு நந்தினி.. நாம் கண்ணனின் தொண்டினில் காலம் கழிப்போம்.." பாசத்துடன் அழைத்தான் ஆழ்வார்க்கடியான்..

"விதி என்னை வேறு திசையில் திருப்பி விட்டு விட்டது திருமலை அண்ணா..! வீணாக என் மனதை மாற்றப் பிரயத்தனம் மேற்கொள்ளாதே.."

நந்தினி அங்கிருந்த புரவியின் மீது ஏறி அமர்ந்து அதைத் தட்டி விட்டாள்.. குதிரை புயல் வேகத்தில் விரைந்து.. மலை முகட்டிலிருந்து அதல பாதாளத்திற்கு தலைகீழாக பாய்ந்து விட்டது..

ஆம்.. நந்தினி சென்று விட்டாள்.. அவளை உயிரினும் மேலாக காதலித்து.. அவளுக்காக தனது உயிரையும் கொடுத்த காதலனிடம் அவள் சென்று விட்டாள்.. இனி அவளைப் பற்றிய கவலையின்றி சோழ குலத்தவர் நிம்மதியாக வாழலாம்..

நந்தினி..! அகல் விளக்கைப் போன்ற அழகைக் கொண்டவள்..! கண்டவர் மனம் மயங்கும் எழிலைக் கொண்டவள்..! மன்னரின் மகளாகப் பிறந்தும் ஓர் அநாதை போல அடுத்தவரை அண்டி வாழ்ந்தவள்..!

அவளை உயிருக்குயிராக நேசித்த ஆதித்த கரிகாலனின் காதல் கிடைத்தும்.. அவனுடன் வாழ முடியாத சாபம் பெற்றவள்..!

மர்மங்களின் மத்தியில் வாழ்ந்த அவள் ஒரு அபலை..! அவளையும்.. ஆதித்தனையும் வாழ்வின்

இறுதிக்கு துரத்திய சோழ அரச குலத்தில் அரியணைக்கு உரியவனாக போட்டியிட்ட நந்தினியின் சகோதரன் மதுராந்தகனிடம் அவன் வளர்ப்பு மகன்தான்.. தான் பெற்ற மகன்.. 'சேந்தன் அமுதன்..'தான் என்பதைக் கூறி விடுகிறாள் செம்பியன் மாதேவி..

உரிமையில்லாத தேசத்திலும், அரண்மனையிலும் இருக்கப் பிடிக்காத மதுராந்தகன் பாண்டவ ஆபத்துதவிப் படையுடன் இணைந்து விடுகிறான்.. சின்னப் பழுவேட்டரையரின் மகளும்.. மதுராந்தகனின் மனைவியுமான அந்தக் காரிகை அவனைத் தேடிச் சென்று விடுகிறாள்.. மகளைத் தேடிச் சென்ற சின்னப்பழுவேட்டரையர் மதுராந்தகனிடம் போரிட்டு. அருவியில் சறுக்கி விழுந்து இறந்து விடுகிறார்..

குந்தவையின் மனம் வந்தியதேவனை நாடுகிறது.. அவனோ ஆதித்த கரிகாலனின் கொலையில் குற்றவாளியாக கருதப் படுகிறான்.. அதை நினைத்துப் பார்க்கும் பெரிய பழுவேட்டரையர் விசாரணை மண்டபத்தில் பழியை தானே ஏற்றுக் கொண்டு தன்னைத் தானேக் குத்திக் கொண்டு இறந்து விடுகிறார்.. வந்திய தேவன் கொலைப் பழியிலிருந்து விடுபடுகிறான்..

இவ்வாறு தஞ்சையை தம் வசத்தில் வைத்திருந்த பழுவேட்டரைய சகோதரர்கள் இருவரும் மறைந்து விடுகிறார்கள்..

சேந்தன் அமுதன்.. செம்பியன் மாதேவியின் மகனாக சுந்தரசோழ சக்கரவர்த்திக்கு அடுத்ததாக அரியணை ஏறுகிறான்..

உத்தக சோழரான சேந்தன் அமுதனின் பதவிக்காலத்திற்கு பின்னர் ஆதித்த கரிகாலனின்

இளைய சகோதரன் அருள்மொழிவர்மன் ராஜராஜ சோழனாக பதவி ஏற்கிறான்.. இவனது காலம் சோழர்குல வரலாற்றில் பொன்னேடுகளால் பொறிக்கப் படும் காலமாக போற்றப் படுகிறது.. தஞ்சை பிரகதீஸ்வரக் கோவிலைக் கட்டியவனும் ராஜராஜனே..

ஆதித்த கரிகாலனின் நண்பனான வந்திய தேவன், அருள்மொழி வர்மனுக்கு நண்பனாகிறான்.. குந்தவையின் மனம் அவனை விரும்புவதை உணர்ந்திருந்த சுந்தர சோழர் வந்திய தேவனுக்கே குந்தவையை மணம் முடித்துத் தருகிறார்..

இத்துடன் 'ரிதம் அற்ற ஸ்வரம்..' இசைத்து ஆதித்த கரிகாலனும், நந்தினியும்.. அமைதியின்றி வாழ்ந்து முடித்த இரண்டாவது ஸ்வரம் முடிவுற்றது..

சோழர்களுக்கு விடைகொடுத்து அனுப்புங்கள்.. அடுத்ததாக 'கடல் கடந்த வணிகம்' புரியும் பாண்டியர்கள் காஞ்சியில் வாசம் செய்து மூன்றாவது ஸ்வரத்தை இசைக்க வந்து கொண்டே உள்ளனர்..

<u>பின்னுரை :</u>

இக்கதையின் அனைத்து சம்பவங்களையும் 'கல்கி' அவர்களின் எழுத்தின்படியே வடித்துள்ளேன்.. அவர் படைத்திருந்த கதாபாத்திரங்களை சிதைத்து விடாமல் எனது பார்வையில் உலாவ விட்டுள்ளேன்.. இக்கதை 'கல்கி' சொல்லியதே.. அதிலிருந்து மாற்றவில்லை.. அவர் உரைக்காத சம்பவங்களை.. நிழல் போர்வையில் கதையில் கொடுத்திருப்பார்.. அந்த நிழல் வடிவின் உள்ளே புகுந்து அது என்னவாக இருக்கக் கூடும் என்று ஆராய்ந்து.. உங்கள் முன் நான் கதை சொல்லியிருக்கிறேன்..

'பொன்னியின் செல்வன்..' என்ற அழகான காவியம்.. மிகப் பெரிய பெரும் வெற்றியைக் கண்ட புதினம்.. அதை படித்துணர ரசிக மனம் இருந்தால் போதும்.. எடுத்துக் கையாள அதீத தைரியம் இருத்தல் வேண்டும்..

என்னிடம் துளியளவும் தைரியமில்லை.. நான் முன்னரே சொல்லியிருந்ததைப் போல 'கல்கி' எங்கே..! நான் எங்கே..? அவர் கதையைப் படித்ததினால் கிடைத்த தகுதியை வைத்து அவர் கதையை நான் எடுத்துக் கையாள்வதா..?

இருந்தும் நான் அம்முயற்சியில் இறங்கியதற்கான அதி முக்கிய காரணிகள்.. நந்தினியும், ஆதித்த கரிகாலனும்தான்..

அவர்கள் இருவருக்கும் இடையே நடக்கும் உணர்வுப் பேராட்டங்களை என்னவென்று நான் சொல்வேன்..?

அப்பப்பா..! என் மனம் இப்போதும் ஆதித்த கரிகாலன் கொலையுண்டு இறந்து போனதில் அதிர்ந்து போகிறது.. அவன் வாழ்வு முழுவதும் அனுபவித்த மனவேதனைகளில் கரைந்து போகிறது..

எனது இரண்டாவது ஸ்வரமான ரிதம் அற்ற ஸ்வரத்தை இசைக்க இவனை அழைக்காமல் வேறு எவரை நான் அழைப்பேன்..?

நந்தினியின் பாத்திரப்படைப்பை 'கல்கி' அவர்களே உருவகப் படுத்தி அளித்துள்ளார்.. அவளைச் சுற்றியிருக்கும் மர்ம வலைகளை அவர் மர்மமாகவே கொண்டு சென்றுள்ளார்.. கதையின் இறுதிவரை அவை தெளிவாக உரைக்கப்படவில்லையெனினும்.. அவற்றைப்

பற்றிய யூகங்களை மற்ற கதாபாத்திரங்களின் வாய் மொழியில் வெளிப்படுத்தியிருப்பார்.. நான் அவற்றை விடுவித்து வெளிப்படையாக உரைத்திருக்கிறேன்.. அவ்வளவேதான்.. இதில் எனது திறமையென்று எதுவும் இல்லை..

குந்தவை தனது வாய்மொழியாக நந்தினி வந்திய தேவனை காதலித்ததாகக் கூறுவாள்.. ஆனால்.. கதையில் எவ்விடத்திலும் நந்தினி அதை வாய்மொழியாகவோ.. குறிப்பாகவோ உணர்த்தவில்லை.. அதே சமயத்தில் ஆதித்த கரிகாலனை பகை முடிக்கும் வன்மத்துடன் வர வைத்த போதும் 'என் இதயத்தைக் கிழித்துப் பார்.. அதில் உன் உருவம் மட்டும்தான் தெரியும்..' என்று கதறுகிறாள்.. அந்த இடத்தை விட்டுப் போய் விடும்படி கூறுகிறாள்.. அவளுடைய தந்தை எவர் என்பதை தாழ்ந்த குரலில் ஆதித்த கரிகாலனுக்குத் தெரிவிக்கிறாள்.. ஆதித்தன் இறந்தபின்பு நன்றியுணர்வின் மேலிட்டால் பழுவேட்டரையரைத் தூக்கி வரச் சொல்பவள்.. வந்திய தேவனை அவ்விடத்திலேயே விட்டுச் செல்கிறாள்..

இவையே நந்தினி ஆதித்தகரிகாலனை மட்டுமே காதலித்தாள்.. வந்திய தேவனை ஒருபோதும் காதலிக்க வில்லை என்பதற்கான ஆதாரங்கள்..

வந்தனம்..! கல்கி அவர்களின் மாபெரும் இரு காவியங்களுடன் உங்கள் முன் இரண்டு ஸ்வரங்களையும் இசைத்து முடித்து விட்டேன்.. மூன்றாவது ஸ்வரத்தில் எனது கற்பனை மட்டுமே ஸ்வரமாக வெளிப்படும்..

*ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'*



## 24

## *சுற்றுகிற சிலந்திவலை..!*
## *சுழற்றுகின்ற சூழ்ச்சிவலை..*

"எனக்கு வாய்ச்சதும் சரியில்லை.. பிறந்ததும் சரியில்லை.."

கோபம் வந்து விட்டால் பிரயோகிக்கும் வழக்கமான வார்த்தைகளை பிரயோகித்தாள் அனுராதா..

"அம்மா..!" யதுநந்தன் ஆட்சேபக்குரல் எழுப்பினான்..

"உன்னைச் சொல்லலைடா... ஒன்னைத்தான் சொன்னேன்.." என்றாள் அனுராதா..

"ஒன்னையா..? அப்படின்னா..?" பிரதாப்புக்கு ஒன்றும் புரியவில்லை..

"உங்களுக்கு புளிப்போட்டுத் தேய்த்து விளக்கிச் சொல்ல முடியாதுப்பா.. ரெண்டு பிள்ளைகள்ல ஒன்னைச் சொன்னாங்களாம்.." என்றான் யதுநந்தன்..

"ஓ.. அந்த ஒன்னு, இந்த ஒன்னா..?"

"ஆமாம்ப்பா.. ஆமாம்.."

"ஏண்டி அனு.."

"என்ன..?"

"அதையேண்டி எதிர்க்காரன்கிட்டக் கேட்கிறதைப் போல கேட்டு வைக்கிற..?"

"இருட்டுக்குள்ள உலாத்தற மகளுக்கு சப்போர்ட் பண்றவங்கள்ளாம் எனக்கு எதிர்க்காரங்கதான்.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க...?"

"ஒன்னும் சொல்லலை.."

"இதையே மெயின்டெயின் பண்ணுங்க.."

"வாய்ச்சது சரியில்லைன்னு ஏண்டி சொல்ற..? அப்படி என்ன நான் சரியில்லாம போயிட்டேன்..? குடிக்கிறேனா..? ஊர் சுத்தறேனா..? இல்லை.. சின்ன வீடு ஏதாவது செட்டப் பண்ணி வைச்சிருக்கேனா..?"

பிரதாப் நியாயம் கேட்ட விதத்தில் கையிலிருந்த கரண்டியை சமையலறை மேடையின் மீது விசிறி யெறிந்தாள் அனுராதா.. அது 'ணங்'கென்ற சப்தத்துடன் மோதி விழுந்தது.. பிரதாப் வாயை மூடிக் கொண்டார்..

"இப்ப மூடி என்ன செய்ய..?" என்று கேட்டான் யதுநந்தன்..

உக்கிரமாக சமையலறையை விட்டு வெளியே வந்த அனுராதா..

"டேய் யது..! நீ இன்னைக்கு ஆபிஸ் போக வேண்டாம்.." என்று மகனுக்கு உத்தரவிட்டாள்..

"ஏம்மா..?"

"நான் எங்க அம்மா வீட்டுக்கு பெட்டியைக் கட்டறேன்.. பிள்ளையாய் லட்சணமாய் என்கூட துணைக்கு வா.."

"ஏம்மா.. பிறந்த வீட்டுக்கு பெட்டியைக் கட்டற வயசா உங்களுக்கு..?"

"இதை உங்க அப்பாகிட்டக் கேளு.. சின்னவீடு செட்டப் பண்றதைப் பத்திப் பேசற வயசா அவருக்கு..?"

"கேட்கிறாங்கள்ல.. பதில் சொல்லுங்க.."

"டேய்.. வாய்ச்சது சரியில்லன்னு சொல்றாளேங்கிற ஆதங்கத்தில நியாயம் கேட்டுட்டேண்டா யது.."

"இந்த லட்சணமாவா நியாயம் கேட்டுத் தொலைப்பீங்க..?"

"இல்லைடா யது..! இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்திருப்பேனான்னுதான் கேட்டேண்டா.."

"ப்பா..! இதையெல்லாம் யோசிச்சுப் பார்க்கிற வயசையெல்லாம் நீங்க தாண்டிட்டீங்க.. இதையெல்லாம் யோசிக்கனும்னா நான்தான் யோசிச்சாகனும்.. யோசிக்கட்டுமா..?"

"டேய்.."

பிரதாப் பதறிவிட்டார்.. அனுராதாவின் சுடுகின்ற விழிச்சுடர்களை பார்க்க அவரால் முடியவில்லை..

"போதுமா..?" அவள் கேட்டாள்..

"அனு.."

"என்னத்த நொனு..? வயசுக்கு வந்துட்ட பிள்ளைகளை வளர்த்து விட்டா மட்டும் பத்தாது.. அதுக முன்னாடி கண்டதையும் பேசாம இருக்கனும்.."

"இல்லடி அனு.."

"என்னத்த நொல்லடி..? செஞ்சேனா.. செஞ்சேனான்னு நியாயம் கேட்டீங்க.. நான் செய்யட்டுமான்னு அவன் கேட்கிறான்.. போங்க.. போயி பதிலைச் சொல்லுங்க.."

"தெரியாமப் பேசிட்டேண்டி.."

"தெரிஞ்சுதான் பேசினீங்க.."

"இவன் இப்படிப் பேசுவான்னு தெரியாம பேசிட்டேண்டி.."

"அதானே பார்த்தேன்... நீங்களாவது... திருந்தராவது.. உங்களுக்கெல்லாம் இவன்தான் சரி.."

அனுராதா சமையலறையை விட்டு வெளிநடப்பு செய்து விட்டாள்.. அவள் படுக்கையறைக் கதவை ஓங்கி அடித்த விதத்தில் வீடே கிடுகிடுத்தது..

'ஓட்டல் சாப்பாடு நிச்சயம்தான்..' பிரதாப் தலைமேல் கைவைத்தார்..

"இப்ப எதுக்கு போஸ் கொடுக்கறிங்க.. அவங்க பாட்டுக்கு எதையும் மனசில வைச்சுக்காம காபிய போட்டு வேலையை ஆரம்பிச்சாங்க.. சின்னவீடு செட்டப் பண்ணனும்கிற உங்க அடிமனசு ஆசையைச் சொல்லி அவங்க கையில இருந்த கரண்டிய கீழே போட வைச்சுட்டிங்களேப்பா.."

"அடிமனசு ஆசையா..?" அலறினார் பிரதாப்..

"பின்னே..? அடிமனசில அந்த ஆசை இல்லாமலா வாயில வருது.." இரக்கமில்லாமல் கேட்டான் யதுநந்தன்..

"நீ ஒருத்தன் போதும்டா.. உங்கம்மாவ மலையிறங்க விடாம மந்திரிச்சு வைக்கிறதுக்க.."

"போங்கப்பா.. போயி.. டிபனுக்கு ஏற்பாடு பண்ணுங்க.. நான் ஆபிஸ் போயாகனும்.."

"நீ ஆபிஸிக்குப் போகனுமா..?"

"பின்னே..? வேணாம்ன்னா சொல்கிறிங்க..? அம்மா கேட்டுக்கிட்டதைப் போல அவங்களைக் கொண்டு போயி பாட்டி வீட்டில விட்டுட்டு வரனுமா..?"

"நீ அதிலேயே குறியாய் இரு.."

"அதுக்குத்தானேப்பா லீவு போடச் சொன்னாங்க..?"

"யது..! நான் பெத்த மகனே..! நீ குளிச்சுட்டு வாடா.. உனக்கு ஒட்டலில இருந்து வாங்கிட்டு வந்த டிபன் ரெடியா இருக்கும்.."

"அஃது.."

"மதியத்துக்கு என்ன பண்ணுவ..?"

"ஆபிஸ்கேண்டின் இருக்கே.."

"நைட்டுக்கு..?"

"உங்களுக்கானது.. எனக்கும்.."

"தெளிவாத்தான் இருக்கேடா.."

"நான் அம்மா பிள்ளைப்பா.. தெளிவோட ஒட்டிப் பிறந்த ரெட்டைப் பிறவி நான்.. உங்க பொண்ணுதான் அதை கிலோ என்ன விலைன்னு கேட்பா.."

"இப்ப ஏண்டா அவ பேச்சை இழுக்கிற..?"

"அவளால்தான் இன்னைக்கான சண்டை ஆரம்பிச்சது.."

"யது.."

"சொல்லுங்க.."

"உங்கம்மா நாளைக்கும் மலையிறங்கலைன்னா என்னடா பண்றது..?"

"வேற வழியில்லேப்பா.. யாமினிக்கு கல்யாணம் பண்ணி வைச்சிட்டுத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கு வேன்கிற என் தீர்மானத்தை மாத்தி அமைச்சுக்க வேண்டியதுதான்.."

"அமைச்சு..?"

"அவசரக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான்.."

"ஏண்டா... அடுப்படி பிரச்னைக்கு அவசரக் கல்யாணமா..?"

"அதென்னப்பா அடுப்படி பிரச்னைன்னு ரொம்பச் சாதாரணமா சொல்லிட்டிங்க.. அதாம்ப்பா இருக்கிற பிரச்னைகளிலேயே பெரிய பிரச்னை.."

தகப்பனும், மகனும் வழக்கடித்துக் கொண்டிருக்கும் போதே அவர்களின் நாசியை சுவையான உணவின் வாசம் துளைத்தது..

'நம்ம வீட்டிலே இப்படியொரு வாசனையா..?'

இதை வாய் விட்டுச் சொல்லி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக மனதுக்குள் நினைத்தபடி தகப்பனும், மகனும் திரும்பிப் பார்த்தார்கள்..

யாமினி டைனிங் டேபிளில் பாத்திரங்களை பரப்பிக் கொண்டிருந்தாள்..

"என்னம்மா பண்ற..?" வியப்புடன் கேட்டார் பிரதாப்..

"சப்பாத்தி, குருமா பண்ணியிருக்கேன்ப்பா.. அண்ணனுக்கு லன்ச் பாக்ஸில லெமன் ரைஸ் வைச்சிருக் கேன்.. நமக்கு மதியத்தில ரெடி பண்ணிக்கலாம்.."

அவ்வளவுதான்.. வேலை முடிந்தது என்ற பாவனையில் யாமினி அகன்றுவிட... பிரதாப் ஆச்சரியத்துடன் டைனிங் டேபிளைப் பார்த்தார்..

"இவ எப்படா சமைக்கக் கத்துக்கிட்டா..?"

"யாருக்குத் தெரியும்..? அவளுக்கு என்ன தெரியும்.. என்ன தெரியாதுன்னு அவளுக்கே தெரியாதுன்னு நினைக்கறேம்ப்பா.."

"இந்த ஆராய்ச்சியை விட்டுட்டு ஆபிஸ்க்கு கிளம்பற வழியைப் பாரு.. அதான் சாப்பாட்டு பிரச்னை தீர்ந்திருச்சே.."

"ஆமாமில்ல.. அப்புறம் இன்னொன்னுப்பா.."

"என்னடா..?"

"அவசரக் கல்யாணத்தை கேன்சல் பண்ணிட்டேன்.."

என்னவோ அதி முக்கிய விவரத்தைக் கூறுவதைப் போல முகத்தை தீவிரமாக் வைத்துக் கொண்டு சொன்ன யதுநந்தன் இமை சிமிட்டினான்.. பிரதாப்புக்கு சிரிப்பு வந்தது..

"போடா.." என்றார்.

பிரதாப்பும், யதுநந்தனும் கிளம்பிப் போன பின்பு யாமினி அனுராதாவைத் தேடிப் போய் தோப்புக்கரணம் போட்டு சாப்பிட வைத்தாள்.. வாசலில் காலிங் பெல் ஒலித்தது.. கதவைத் திறந்தாள்.. அவளுக்கான கொரியரைக் கொடுத்து விட்டுப் போனான் கொரியர் பாய்..

'என்னவா இருக்கும்..?'

யாமினி யோசனையுடன் கவரைப் பிரித்தாள்..

***ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'***

மூன்றாம் ஸ்வரத்தில் தொடர்ந்து வரும்..